சித்திரை	பே.போ.ர.ரி	
சுவாதி	ரு.ரே.ரோ.த	துலாம்
விசாகம்	த.தி.தே.தோ	

அசுவி பரணி கிருத்திகை மேஷ

[illegible]

உ

பரமபதிதுணை.

விதானமாலையுரை.

இது

யாழ்ப்பாணத்து நல்லூர்:

இரகுநாதையரவர்கள்

பரிசோதித்துவைத்த பிரதியையநுசரித்து,

அவரது தத்தபுத்திரர்

சிவராமலிங்கையரால்

சோதிடப்பிரகாசயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

விரோதிகிருதுஹூ ஐப்பசிமீ.

1911.

இதன் விலை ரூபா - க௰

21. VI. 30

ஆக்கியோன் பெயர்.

பாரார்புகழும்பரிசார்விதானமாலைப்பனுவல்

பேரார்விதானம்பிழையாதுரைத்தனன்பேருலகிற்

காரார்பொழிற்கடுவைக்கிறை * பாற்கடலான்பயந்த

நாராயணன்பொன்னிநாடன்மறைதெரிநாவினனே.

* அமிர்தசாகரன்.

பண்டிட் சிவஞான கர்தஸ்வாமி
ணவிமந்திர ஔஷத
சோதிடக்கணிதர்,
பழைய வண்ணாரப்பேட்டை
சென்னை.

படல அகராதி.

படலம்.	பக்கம்.	படலம்.	பக்கம்.
அரசர்வினைப்படலம்	௧௨௭	தீவினைப்படலம்	௧௩௫
உதயாரூடக்கவிப்புப்படலம்	௫௯	தெருட்சிப்படலம்	௮௩
உற்பாதப்படலம்	௧௪௦	தேவப்பிரதிட்டைப்படலம்	௧௧௪
எச்சவினைப்படலம்	௧௪௫	தேவவழிபாட்டுப்படலம்	௧௧௮
ஏர்மங்கலப்படலம்	௧௧௦	நட்பாட்சியுச்சபகைநீசப்படலம்	௬௧
கடிமணப்படலம்	௭௩	நல்வினைப்படலம்	௧௨௯
கர்ப்பாதானப்படலம்	௮௫	பஞ்சாங்கப்படலம்	௮
காலசக்கரப்படலம்	௬௬	பதிகம்	௨
குணாகுணப்படலம்	௧௮	மகளிர்வினைப்படலம்	௯௦
கோசரப்படலம்	௫௪	மகாதெசைப்படலம்	௬௪
சட்டுவர்க்கப்படலம்	௬௩	மரபியற்படலம்	௬
சந்திரகெதிப்படலம்	௫௨	மைந்தர்வினைப்படலம்	௯௯
சாதகப்படலம்	௯௨	யாத்திரைப்படலம்	௧௨௧

விஷய அகராதி.

அ.

விஷயம்.	பக்கம்.
அங்கச்சந்திரன்பல	௧௫௭
அங்கச்சனிபலன்	௧௫௯
அங்கச்செவ்வாய்ப	௧௫௭
அங்கப்புதன்பலன்	௧௫௮
அங்கவியாழன்பல	௧௫௮
அங்கவெள்ளிபல	௧௫௮
அங்காதித்தன்பல	௧௫௭
அங்குரவிதி	௭௯
அசுவசாந்தி	௧௨௯
அட்டகை	௧௪௦
அட்டம ராசி யாதி யபவாதம்	௪௨
அதிகமாதம்	௪௦
அதிகமாதநிஷித்தம்	௪௧
அத்தமனவக்கிரநட் சத்திர தோஷா பவாதம்	௪௬
அநுகூலப் பிரதிகூ லநட்சத்திரம்	௪௧
அந்தகராசித் தோ ஷாபவாதம்	௩௫
அந்தரதெசை	௬௫
அபிசித்துமுகூர்த்த	௩௭
அமுதகடிகை	௨௪
அரிட்டம்	௯௨
அரிட்டாபவாதம்	௯௭
அர்த்தோதயம்	௧௨௦
அவயோகம்	௧௮
அவையடக்கம்	௨
அனபாயாதியோக	௯௮
அனலாதிகிரகதோ	௨௮
அன்னப்பிராசனம்	௧௦௨
அக்ஷராரம்பம்	௧௦௪

ஆ.

விஷயம்.	பக்கம்.
ஆசீவிஷம்	௨௭
ஆசீவிஷாபவாதம்	௨௭
ஆடல்பாடலரங்கே ற்றல்	௧௫௭
ஆடிப்பஞ்சமிபலன்	௧௪௬
ஆண்டுநிறைவு	௧௦௩
ஆண், பெண், அலி	௯௩
ஆயுதம்பயிலல்	௧௨௭
ஆரூடசக்கரம்	௬௦
ஆர்செளரியோகம்	௧௪௮

இ.

விஷயம்.	பக்கம்.
இரச்சு	௭௭
இரச்சுமிப்புடம்	௩௪
இரத்ததூணம்	௨௮
இராசபிரபுதரிசன	௧௨௬
இராசயோகம்	௯௮
இராசாபிஷேகம்	௧௨௭
இராசிநாழிகை	௫௯
இராசி	௭௬
இராசியதியதி	௭௬
இராப் பகற்கொள் ளும் விரதம்	௧௨௦
இருணமோசனம்	௧௩௫
இலக்கினதெசை	௬௭
இலக்கினபலன்	௮௪
இலக்கினமிருத்து	௪௩
இலக்கின விஷாதி நிஷித்தாபவாதம்	௩௬

உ.

விஷயம்.	பக்கம்.
உச்சம் அத்யுச்சம் நீ சம் அதிநீசம்	௬௧
உஷ்ணசிகை	௪௩
உதயபெலம்	௫௧
உத்தராயணம்	௩௮
உபசயம்	௭
உபநயனம்	௧௦௬
உபாகன்மம்	௧௦௯
உற்பாதம் (சுபகரு)	௪௮

ஊ.

விஷயம்.	பக்கம்.
ஊர்த்துவமுகாதி நாள்களிற்செய்வ	௧௩
ஊர்த்துவா தோ திரயமுகம்	௧௩
ஊர்த்து வாதோ திரயமுகவிராசி	௩௭

ஏ.

விஷயம்.	பக்கம்.
ஏகதினகுணாகுணம்	௭௮
ஏகாதசிவிரதம்	௧௧௯
ஏகார்க்களம்	௧௬
ஏகார்க்களசக்கரம்	௧௬
ஏர்ப்பூட்டல்	௧௧௦

ஐ.

விஷயம்.	பக்கம்.
ஐவகைப்பலன் (கா)	௭௦

ஔ.

விஷயம்.	பக்கம்.
ஔஷதமுண்ணல்	௧௩௫

க.

விஷயம்.	பக்கம்.
கடவுள்வாழ்த்து	௧
கணம்	௭௪
கண்டகம், தூணம், கண்டகத்தூணம்	௨௭
கண்டகாதியபவாத	௨௯
கதிரறுத்தல்	௧௧௩
கத்திரிதோஷம்	௩௦
கர்ப்பா தானத்துக் குநாள்	௮௫
கர்ப்பம்மூன்றுவரு ஷம் பன்னிரண் டுவருஷஞ்சென் றுபிறத்தல்	௮௮
கர்ப்பாரிட்டம்	௮௭
கர்ப்போற்பத்திமு தற் செனனமள வுமுண்டாகுமங் கம்	௮௯

க.

விஷயம். பக்கம்.

கலப்பைச்சக்கரம் ௧௯
கவிப்பு ௬௧
கன்னவேதை ௧0௧

கா.

காலபலன் ௧௪௮
காலவோரை ௩௨
காற்றுக்குறி ௧௫௩

கி.

கிரகசாந்தி ௧௩௯
கிரகசாரசங்கியை ௫௮
கிரகணசூலம் ௪௫
கிரகணதோஷம் ௩0
கிரகணபலன் ௧௪௭
கிரகநோக்கு ௭
கிரகபலிதம் ௭௨
கிரகபெலம் ௪௭
கிரகவீதி ௫௯
கிரகதீமையைக்கிர
கங்கெடுக்குமெனடு௫௮
கிரயவிக்கிரயம் ௧௨௬
கிருகசத்தமவர்க்கம்௧௩0
கிருகப்பிரவேசம் ௧௩௨
கிருகாரம்பம் ௧௩௧
கிருத்திகாதீபம் ௧௧௯

கு.

குருசுக்கிரவத்தமய ௪௫
குருடு,செவிடு,முடம்௩௬
குருடு, செவிடு, மு
டாபவாதம் ௩௬
குரு சுக்கிர பாலவி
ருத்த தினசங்கி ௪௫
குருசௌரி ௧௪௮
குளிகாதிதோஷம் ௩௧
குளிகாதி தோஷா
பவாதம் ௩௧

கூ.

கூபதடாகாரம்பம் ௧௨௫

கெ.

கெஜசாந்தி ௧௨௮
கெர்ப்பக்குறி ௮௫
கெவுளி ௮0

கே.

கேந்திரபெலம் ௪௬

கோ.

விஷயம். பக்கம்.

கோசக்கிரகம் ௧0௫
கோசரபலன் ௫௫
கோசரவேதை ௫௭
கோட்கதிர் ௬௭
கோமூத்திரிசக்கரம் ௯௧
கோயாத்திரை ௧௨௪

ச.

சகடதோஷம் ௩0
சகடதோஷாபவாத ௩0
சகஸ்திரசந்திரதரி ௧௩௪
சகலப்பிரதிட்டை ௧௧௬
சங்கிரமபலன் ௧௪௫
சங்கற்ப வசங்கற்ப
வதிகமாதம் ௪0
சங்கற்ப வசங்கற்ப
வதிகமாதநிஷித்
தாபவாதம் ௪௧
சடசீதி ௨௬
சதாபிஷேகம் ௧௩௪
சத்துருவர்க்கினம் ௧௪
சத்திரவயித்தியம் ௧௩௬
சத்துருவசியம் ௧௫௪
சந்திரகோதரிசன ௧0௨
சந்திரதரிசனம் ௧௪௭
சந்திராட்டமம் ௪௧
சமதிருட்டிதோஷ
மும் அபவாதமும் ௩௧
சமாவர்த்தனம் ௧0௯
சரசுவதியோகம் ௧0௫
சர திர உபயம் ௭
சர்வதோஷாபவாத ௫௨
சலயாத்திரை ௧௨௪

சா.

சாதகன்மம் ௯௨
சாந்திரமாதாதி ௪0
சாமுகூர்த்தம் ௪௩

சி.

சித்தாமிர்தநாசயோ ௨௩
சிராத்தவிதி ௧௩௭
சிரோதயாதி லக்கி
ன திவாநிசிபெல ௩௬
சிவப்பிரதிட்டை ௧௧௫
சிறீதிவசாதி ௩௯
ஸ்ரீஜயந்தி ௧௧௯

சீ.

விஷயம். பக்கம்.

சீமந்தம் ௯0

சு.

சுபமுகூர்த்தம் ௪௯
சுபயோகம் ௨0
சுபயோகமான்மியம்௨௨
சுபராசி, அசுபராசி ௧௨
சுபாசுபகரணம் ௧௭
சுபாசுபக்கிரகம் ௬
சுவாதிசம்பாத
யோகம் ௧௨௫

சூ.

சூதிகாக்கிருகம் ௯0

செ.

செக்கர்மேகக்குறி ௧௫௨
சென்ம நட்சத்திர
நிஷித்தம் ௩௯
சென்ம விலக்கின
நிஷித்தம் ௪௨

சே.

சேஷ்டமாதசென்ம
மாதாதிவற்சியம் ௩௮

சோ.

சோதிடனிலக்கண ௭௩

சௌ.

சௌளம் ௧0௩

த.

தசப்பொருத்தம் ௭௩
தம்பத்தாபனம்,
கதவு ௧௩௧
தற்கால சத்துரு
மித்துரு ௬௨
தனுசுக்குறி ௧௪௪

தா.

தானசுத்தி ௧௫௫
தானியப்பிரவேசம்௧௧௩
தானியசங்கிரகம் ௧௧௩

தி.

திசையாத்திரை ௧௨௧
திசையிற்கழிக்குநாக௨௧
திதித்திரய தினத்
திரய உற்சவ தி
ஞதி நிஷித்தம் ௪௮

தி.

விஷயம். பக்கம்.

திதிப்பிரசங்கை ௯
திதியாதி ௬
திதியாதிபெலம் ௪௭
திதி, நட்சத்திரப்பி
ரதானம் ௧௨0
திதிராசிதோஷம் ௨௯
திதிராசிதோஷாப
வாதம் ௩0
தியாச்சியம் ௨௪
தியாச்சியாபவாதம் ௨௪
திரசரலகு முதலிய
நட்சத்திரங்கள் ௧௪
திரிபுட்கரயோகம் ௧௩௭
திருப்பிரவேசமுகூ
ர்த்தம் ௫௧
திருவாண்டெழுத் ௧௨௭
திவாநிசிகன்மம் ௩௭
திவாநிசிபெலக்கிரக ௪௭
திவாநிசிமுகூர்த்தம் ௩௮
திவாநிசி விழிக்கு
மிராசி ௩௫
திவாரோகம் ௨௩
தினமிருத்து ௨௩
தினமிருத்து.திவா
ரோகாபவாதம் ௨௩
தினம் ௭௪

து.

துவசாரோகணம் ௧௧௮
துவாதசபாவநாமம் ௭

தூ.

தூமாதிபுடம் ௩௨

தெ.

தெசாபலன் (மகா) ௬௫
தெசாபலன் (கால) ௭௧
தெத்த சுவாலா தூ
மதோஷாபவாதம்௪௪

தே.

தேவகிருகாரம்பம் ௧௩௨

தை.

தைலாப்பியங்கம் ௧௩௫

தொ.

தொட்டிலேற்றல் ௧00

ந.

விஷயம். பக்கம்.

நட்சத்திரதிருட்டி ௩௫
நட்சத்திரபலன் ௮௩
நட்சத்திரபாதாங்கி ௪௨
நவபூஷணதாரண ௧௩௩
நவவஸ்திரதாரண ௧௩௩
நவாங்கிச கடிகாதி
ஆட்சி ௬௧

நா.

நாசயோகநிஷித்தம் ௨0
நாசயோகாபவாதம் ௨0
நாமகரணம் ௧00
நாராயணபலி ௧௩௯
நாலாநீர் ௮௩
நாற்றுநடுதல் ௧௧௨

நூ.

நூற்பயன் ௬

நே.

நேரபலனுந் திதிப
லனும் (தெருட்) ௮௩

நோ.

நோய்மிருத்துநாள்௧௩௬
நோய்மாறிக்குளித்௧௩௬

ப.

பக்கச்சித்திரை ௮
பஞ்சதெசை ௬௭
பஞ்சமிருத்திகை ௮0
பஞ்சாங்ககுணம் ௫௧
பஞ்சாங்கயோகபெ ௮0
பஞ்சாயுதம் ௧0௧
பஞ்சார்க்கதோஷம்௩௩
பஞ்சார்க்கதோ
ஷாபவாதம் ௩௩
பரிவேடம் ௧௪௨
பரிவேடக்குறி ௧௫௨
பர்வதபாதாளயோ
கம் ௧௨௫
பலநூல்கற்றல் ௧0௪
பலபயிரிடல் ௧௧௨
பவாதிகரணம் ௧௬
பவித்திரதமனகம் ௧௧௮

பா.

பாபக்கிரகராசி ௪௪
பாபநட்சத்திரம் ௧௨

பா.

விஷயம். பக்கம்.

பாபாங்கிச தோ
ஷாபவாதம் ௫0
பாபவோராதிவற்சி ௩௨
பால்பருக்குதல் ௧0௧
பாஷாணத்தாபன
ம்,உத்தியாபன ௧௩௭

பி.

பிரதமெட்டிகை ௧௩௧

பு.

புங்ஸவனம் ௯0
புடவேதை ௩௪
புட்கரபாகம் ௫0
புட்கரபாதம் ௪௯
புதிதுண்ணல் ௧௧௪

பூ.

பூகம்பாதிதோஷம் ௨௭
பூகம்பாதிதோஷா
பவாதம் ௨௮
பூமிக்கிரகணம் ௧௫௩
பூமிப்பிரவேசம் ௧௧0
பூருவான்ன மத்தி
யான்ன அபரா
ணவிதி ௩௭

பொ.

பொருத்தவிசேஷம் ௭௮
பொல்லா விடங்க
ளினிற்குங் கிரக
தோஷாபவாதம் ௮௧

போ.

போககாமியபிரியம் ௪௪

ம.

மகக்குறி ௧௪௯
மகரசங்கிரமபலன் ௧௪௬
மகோதயம் ௧௨0
மணப்பொருத்தம் ௭௩
மழைக்குறி ௧௪௯
மனைப்பொருத்தம் ௧௩0

மா.

மாகேந்திரமும், ஸ்
திரீதீர்க்கமும் ௭௫
மாதருனியம் ௨௫
மாதருனியாபவாதம்௨௬

மா.

விஷயம்.	பக்கம்.
மாதமழைக்குறி	க௱க
மாததினம்	சகூ
மாணவி	க௱அ
மு.	
முன்னூலாசிரியர்	உ
மூ.	
மூலத்திரிகோணம்	சுஉ
மே.	
மேடசங்கிரமபலன்	கசசு
மேடமுதலிய ராசிகளின்கூறு	ருங
யா.	
யாத்திரைக்காகாதநாள்	க௱க
யாத்திரைக்குச்சர	க௱ங
யாத்திரைக்குக் காலநிர்ணயம்	க௱ச
யாத்திரைக்குத் திதிவாரபட்சணம்	க௱ங
யாத்திரைக்குநட்சத்திரபட்சணம்	க௱ங
யு.	
யுத்தஞ்செய்தல்	க௱அ
யுத்தயாத்திரை	க௱அ
யோ.	
யோகஉற்பவம்	கரு
யோகங்கட்குப்புறனடை	உஉ
யோகவற்சியம்	கரு

யோ.

விஷயம்.	பக்கம்.
யோகினிதிசை	கருசு
யோகினிவடிவம்	கருசு
யோனி	எரு
வ.	
வக்கிராதிசாரம்	ருகூ
வசந்தோற்சவம்	கககூ
வசியம்	எசு
வருஷகெர்ப்பம்	கருக
வருணாக்கினி பிருதிவி வாயுமண்டலநாட்கள்	கசஎ
வர்க்கோத்தமம்	ரு
வலநாளிடநாள்	சுசு
வலநாளிடநாள்தத்துவ	எ௰
வா.	
வாகனமேறல்	க௱எ
வாஸ்துகன்மம்	க௱கூ
வாயசபெலி	அ௰
வாயிற்பொருத்தம்	க௲உ
வாரதிருட்டி	ஙரு
வாரநயம்	க௰
வாரபலன்	ருச
வாரப்பிரசங்கை	கக
வாரயோக மான்மியம்	ரு௰
வாரவர்க்கம்	கரு
வி.	
விஷுவயன தோஷ தின சங்கியை	கசரு

வி.

விஷயம்.	பக்கம்.
விஷுவயனசங்கிரமசூலம்	சசு
விசேஷகோசரம்	ருசு
விட்டிக்கரணம்	க௱
விட்டியபவாதம்	க௱
விஷ்ணுபெலி	கூ௰
விஷ்ணுப்பிரதிட்	ககச
வித்தியாரம்பம்	க௰ச
வித்தக்கோட்கள்	ருஅ
விரதம்	க௰கூ
விருக்ஷசேதனம்	கருரு
விவாகத்துக் காகாத நாள்	அஉ
விவாகமாதம்	அ௰
விவாககாலநியதி	அ௰
விற்குறி பரிவேடக்குறி	கருஉ
வீ.	
வீடுகெட்டக் குடிபுகவிலக்கியகாலம்	கஙௗ
வே.	
வேதாரம்பம்	க௰அ
வேதை	எஅ
வேதைச்சக்கரம்	ஙங
வேதைச்சக்கரநிஷித்தம்	ஙச
வை.	
வைநாசிகம்	சக
வைநாசிகதோஷாபவாதம்	க௱உ

உ

சிறப்புப்பாயிரம்.

வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாசவித்தியாசாலைச்

சம்ஸ்கிருதபண்டிதரும்,

தமிழ்ச்சங்கப்புலவருள் ஒருவருமாகிய

வடலியடைப்பு

பிரமஸ்ரீ. அ. அருணாசலசாஸ்திரிகளவர்கள்

இயற்றியது.

ஆசிரியவிருத்தம்.

க. மண்ணாளுந் திறம்பூண்டான் மறங்குலவு மயிற்படையான்
வளவ னாட்டிற்
கண்ணாக வமர்கடுவை நகருறைவா னிருமொழியுங்
கற்று வல்லோன்
உண்ணாடும் புகழ்நாரா யணபுலவன் சோதிட நூ
லொன்று தன்னைப்
பண்ணாருந் தமிழ்ப்பாவா லுரைத்திட்டா னதன்பெருமை
பகர்தற் பாற்றே.

உ. அந்நூல்போற் சோதிடநூல் பிறிதில்லை யதன்பெயர்தான்
விதான மாலை
அந்நூல்சோ திடவிஞ்சை கற்போருக் கெளிதென்ப
தகத்துட் கொண்டு

முந்நூலன் முதுமறைகள் பயில்வோன்விப் பிரர்தமக்கோர்
முதல்வ ளுனோன்
எந்நூலு நன்குணர்ந்தா னிணையில்லான் றனக்கொருவ
ரென்ப மாதோ.

௩. திங்களணி சடையவனுக் கன்புள்ளா னிருள்கடியுந்
தினகரன் போற்
பங்கமுள பரசமயங் கடிந்துவளர் சைவநிலை
பரப்புங் கோமான்
இங்குலக முறுதிபெறப் பஞ்சாங்கங் கணித்திட்டோன்
இரகு நாதன்
அங்கதனை யுரையினொடு பரிசோதித் தானுலகம்
அடைந்தா னன்றே.

௪. பொருணிரந்த வப்பிரதி தனைப்பெரிது மனுசரித்துப்
புவியின் மாக்கள்
மருணிரந்த வறிவகல வச்சிட்டுப் பிரசரித்தான்
மற்றந் நூலைத்
தெருணிரந்த வுணர்வுடையா னவன்தத்த புத்திரனைச்
சிறந்தோன் ஞாலத்
துருணிரந்த தேர்வெய்யோன் வெயில்போலத் தன்கீர்த்தி
யுலவு நின்றோன்.

௫. இக்குவளர் நல்லையெனு நகருறைவான் கணிதத்தில்
எவர்க்கு மேலோன்
அக்குரிசில் சிவலோக மடைந்தபினர்ப் பஞ்சாங்க
மமைக்குந் தூயோன்
அக்குமணி மாலைபுனை யரன்பாத மிருபோது
மகத்துள் வைப்போன்
திக்குவளர் புகழ்த்தீரன் சிவராம லிங்கனெனுஞ்
செம்ம லானே.

வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாசவித்தியாசாலைத்

தலைமை உபாத்தியாயரும்,

தமிழ்ச்சங்கப்புலவருள் ஒருவருமாகிய

சுன்னாகம்

ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்புலவரவர்கள்

இயற்றியது.

எண்சீர்விருத்தம்.

சோதிடநூற் றுறைவல்லோ னிரகு நாதத்
தூமறையோன் றிருத்திவைத்த பிரதி கொண்டு
பேதமிலா தினிதாய்ந்து விதான மாலைப்
பெயர்பெறுசோ திடநூலை யச்சிற் றந்தான்
ஓதியவம் மறையோற்குத் தத்த மைந்தன்
உரியசோ திடதருமம் வளர்க்குஞ் சீலன்
சாதுரியன் சிவராம லிங்க நாமத்
தனிமறையோன் புவியறிஞர் விரும்பத் தானே.

பண்டிட் சிவஞான கந்தஸ்வாமி
மணிமந்திர ஔஷத
ஜோதிடக்கணிதர்,
பழைய வண்ணாரப்பேட்டை
சென்னை.

ஓம்.

பண்டிட்
சிவஞான கந்தஸ்வாமி
சித்தவைத்திய அமைச்சர்.
சென்னை.

26-6-30

உ

கடவுள் துணை.

விதானமாலையுரை.

கடவுள் வாழ்த்து.

பூமகள் கேள்வன்பொன் னாடையன் புட்கொடி யோன்புனித
னாமகள் கோனைத்தன் னாபியிற் றந்தவ னான்மறையின்
*பாமய னச்சுதன் பங்கயக் கண்ணன்பஞ் சாயுதன்றாள்[னே.
சேமமென் றெண்ணியென் சிந்தையிற் சென்னியிற் சேர்த்துவ

(இதன்பொருள்.) இலக்குமிக்கு நாயகரும், பீதாம்பரத்தையுடையவரும், கருடக்கொடியை யுடையவரும், பரிசுத்தரும், பிரமனைப்பெற்றவரும், சதுர்வேதங்களின் சந்தசுவடிவாயுள்ளவரும், அழிவில்லாதவரும், செந்தாமரைமலர்போலுங் கண்களையுடையவரும், சங்கு சக்கரம் தண்டு வில்லு வாள் என்னும் பஞ்சாயுதங்களை யுடையவருமாகிய நாராயணமூர்த்தியினுடைய திருவடிகளே காவலென்று மனத்தினும் சிரத்தினும் இருத்துவேன். என்றவாறு. * பா = சந்தம். (க)

இதுவுமது.

ஒன்றாய்ப்பலவாய்ச்சுடரிரண்டாயொளிர்மூன்றுருவா
யன்றாயவையிற்றினாருயிராயயனாதியும்பர்
சென்றாசொழித்திடச்சங்காழியேந்தித்திருவினொடுங்
குன்றாதுநின்றகுணன்சரணாம்புயங்கூறுவனே.

(இ-ள்.) ஏகமாய் அனேகமாய்ச் சூரியன் சந்திரனென்னும் இருசுடர்களாய் விளங்காநின்ற சங்கரிடணன் பிரத்தியுமிநன் அநிருத்தனென்னுந் திரிமூர்த்திகளாய் அவைகளல்லவாய் அவைகளை அதிட்டித்து நிற்கும் பரமான்மாவாய்ப் பிரமன்முதலிய தேவர்கள்சென்று வணங்கித் தங்கள்குற்றங்கள் தீர்தற்பொருட்டுச் சங்கையுஞ் சக்கரத்தையுந் தரித்து இலக்குமியோடுங் குறைவின்றி நிலைபெற்ற விஷ்ணுவினுடைய திருவடித்தாமரைகளை யான் றுதிப்பேன். எ-று. (உ)

முன்னூலாசிரியர்.

பார்க்கவனை நாரதனைக் குருவைப் பராசரனைக்
கார்க்கியன் பாரத்துவாசன் வசிட்டனைக் கைகுவித்துத்
தீர்க்கவணக்கஞ் செய்தாங்கவர் சொன்ன செஞ்சொற்பனுவ
லேற்கமனங் கொண்டிறைஞ்சியென் னூர்வத் திருத்துவனே.

(இ-ள்.) சுக்கிரனையும் நாரதரையும் பிருகஸ்பதியையும் பராசரரையும் கார்க்கியரையும் பாரத்துவாசரையும் வசிட்டரையும் கைகுவித்துத் தீர்க்கதண்டஞ்செய்து அவர்கள்கூறிய செவ்விய சொற்களையுடைய நூல்களைப் பொருந்தும்படி மனசிலே சிந்தித்து வணங்கி என்னுசையினால் அமைப்பேன். எ-று.

அவையடக்கம்.

முந்நீர்க்கடல்களனைத்தினையுமொருமூர்த்தத்தினிற்
கைந்நீத்துநீந்துவனென்பவன்போலக்கலைவடசொற்
றொன்னூற்பலவிதச்சோதிடமுற்றுமென்புன்சொற்களா
னன்னூலெனச்சொல்லிவந்துநின்றேநகைசெய்குவனே.

(இ-ள்.) மூன்றுநீரையுடைய சமுத்திரங்களெல்லாவற்றையும் ஒரு முகூர்த்தத்தினுள்ளே கைந்நீத்தாக நீந்துவேனென்பவனைப்போலக் கலைகளையுடைய சம்ஸ்கிருதத்திலுள்ள பழைய பலவகைப்பட்ட சோதிட நூல்களின் கருத்தனைத்தையும் என்னுடைய புல்லிய செய்யுட்களினாலே நல்ல நூலெனப்பாடி நின்று (அறிவுடையோர்க்குச்) சிரிப்பினை வருவிப்பேன். எ-று. (ச)

பதிகம்.

குற்றமனைத்துங்குணமனைத்துங்கோளினன்மைதின்மை
யுற்றநிலையுமுதயவாரூடக்கவிப்புமுச்சச்
சுற்றமுதலைந்தும்வர்க்கங்களாறுந்தொன்மாதெசையும்
பற்றியதற்காலசக்கரத்தாண்டும்பகர்குவனே.

(இ-ள்.) திதி வாரம் நட்சத்திரம் யோகம் கரணம் மாதம் இராசி முதலியனவும், சுபாசுபக்கிரகமும், உபசய கேந்திரங்களும், சென்மராசியாதி துவாதசபாவநாமமும், சரதிரவுபயராசியும், ஸ்திரீராசியும், புருஷராசியும், குரூரராசியும், சௌமியராசியும், வர்க்கோத்தமமும், கிரகநோக்கும், திதியும், திதிப்பிரசங்கையும், வாரமும், வாரப்பிரசங்கையும், சுபராசி பாபராசியும், இராசியதிபதிபலமும், பாபநட்சத்திரமும், ஸ்திரீபுருஷ நபும்சக நட்சத்திரமும், ஊர்த்துவமுக அதோமுக திரயமுக நட்சத்திரமும், திர சர மிருது லகு குரூர தாரண சாதாரண நட்சத்திரமும், நட்சத்திரவிதியும், யோகவற்சியவிதியும், யோகோற்பத்தியும், ஏகார்க்களமும், பவாதிகரண

மும், ஸ்திரகரணமும், விட்டிதோஷமும், விட்டியபவாதமும், நாசயோகமும், நாசயோகநிஷித்தமும், நாசயோகாபவாதமும், சுபயோகமும், சுபயோகமகாத்மியமும், வாரயோகமும், சித்தாமிர்த நாசயோகமும், தினமிருத்துவும், திவாரோகமும், தற்பங்கமும், தியாச்சியமும், தியாச்சியாபவாதமும், அமிர்தகடிகையும், மாதசூனியமும், மாதசூனியாபவாதமும், சடசீதியும், பூகம்பம் உற்கம் பிரமதண்டம் காலத்துவசமும், ஆசீவிஷமும், தற்பங்கமும், கண்டகமும், தூணமும், கண்டகத்தூணமும், இரத்ததூணமும், தற்தோஷபங்கமும், பூகம்பாதிதோஷபங்கமும், அனலாதிகிரகதோஷமும், தற்தோஷாபவாதமும், திதிராசிதோஷமும், தற்பங்கமும், சகடதோஷமும், தற்பங்கமும், கர்த்தரியும், கிரகணதோஷ ஷாண்மாதமும், சமதிருட்டியும், குளிகாதிதோஷமும், தற்பங்கமும், காலவோரையும், பாபவோராதி வற்சியமும், தற்பங்கமும், பஞ்சார்க்கமும், தற்பங்கமும், வேதைச்சக்கரமும், புடவேதையும், கிரகரச்சுமியும், வாரதிருட்டியும், * காணந்தக நட்சத்திரமும், திவாநிசிவிழிக்குமிராசியும், தற்பங்கமும், குருடு செவிடுமுடராசியும், தத்தாபவாதமும், இலக்கினவிஷாதி நிஷித்தாபவாதமும், சிரோதயாதிலக்கின திவாநிசிபெலமும், ஊர்த்துவமுக அதோமுக திரயமுகராசியும், பூருவான்ன மத்தியான்ன அபராணவிதியும், திவாநிசிகன்மமும், அபிசித்துமுகூர்த்தமும், திவாமுகூர்த்தமும், நிசாமுகூர்த்தமும், அயனத்துவயவிதியும், சேஷ்டமாதவற்சியமும், சென்மமாதாதிவற்சியமும், சென்மநட்சத்திரநிஷித்தமும், சிறீதிவசாதியும், சாந்திர சௌர சிராவண நட்சத்திரமாதமும், அதிகமாதமும், அதிகமாத நிஷித்தகாரியமும், தற்பங்கமும், அனுகூலப் பிரதிகூல நட்சத்திரமும், சந்திராட்டமமும், வைநாசிகமும், தற்பங்கமும், சென்மலக்கினநிஷித்தமும், தற்பங்கமும், நட்சத்திரபாதாங்கிசமும், உஷ்ணசிகையும், இலக்கினமிருத்து முகூர்த்தவிதியும், தெத்தசுவாலா தூமநட்சத்திரமும், தற்பங்கமும், போககாமியப்பிரிய நட்சத்திரமும், பாபக்கிரகராசி நட்சத்திரவற்சியமும், குரு சுக்கிராத்தமயனமும், தற்காரியநிஷித்தமும், தற்பாலவிருத்த தினசங்கியையும், கிரகணசூலமும், விஷுவயனசங்கிரமசூலமும், தினாந்தாதிவற்சியமும், அஸ்தமயன நட்சத்திரவற்சியமும், வக்கிரநட்சத்திரவற்சியமும், தற்பங்கமும், கேந்திரபெலமும், கிரகபெலமும், திவாநிசிபெலமும், அன்னியோன்னியபெலமும், திதியாதிபெலமும், உற்பாதமும், திதித்திரய தினத்திரய உற்சவதினநிஷித்தமும், மாததினமும், சுபமுகூர்த்தமும், புட்கரபாதமும், புட்கரபங்கமும், வாரயோகமான்மியமும், பஞ்சாங்கயோகபெலமும், பாபாங்கிச தோஷாபவாதமும், உதயபெலமும், பஞ்சாங்ககுணமும், திருப்பிரவேசமுகூர்த்தமும், சர்வதோஷாபவாதமும், சந்திரகெதியும், கோசரபலமும், கோசரவேதையும், கிரகசாரமும், வக்கிராதிசாரமும், இராசிநாழிகையும், மேஷாதிவிதியும், ஆரூடசக்கரமும், கவிப்பும், நவாங்கிச கடிகாதியாட்சியும், உச்சஸ்தானமும், நீசமும், மூலத்திரிகோணமும், பகையும், நட்பும், தற்கால சத்துரு மித்துருவும், சட்வர்க்கமும், மகாதெசையும், அந்தரதெசையும், அந்தரந்தரத்தெசையும், காலசக்கராதி பஞ்சதெசையும், கிரகபலிதகாலமும், தேவஞ்ஞலட்சணமும் விரித்துச் சொல்லுவேன். எ-று.

---

* காணன் = ஒற்றைக்கண்ணன்.

கடிமணம் பூப்புக் கருப்பெய்தல் புங்சவன கரும
மடவரல் சீமந்த மாயோன்பலி யரிட்டம் மகப்பே [லாய்
ரிடலரை ஞாண்டொட்டில் பாலடைகாது குத்தெண்ணு நல்
முடிநிறை யாண்டு மயிர்வினை கல்வி மொழிகுவனே.

(இ-ள்.) மணப்பொருத்தமும், அங்குரார்ப்பணமும், வாயசாதிநிமித்தமும், விவாககோசரமும், விவாகமாதமும், ருதுவும், கர்ப்பாதானவிதியும், புங்சவனமும், சீமந்தமும், விஷ்ணுபலியும், பிரசூதிகாக்கிருகமும், கோமூத்திரிசக்கரமும், சாதகருமமும், அரிட்டமும், அரிட்டபங்கமும், அனபா சுனபா துருதுராயோகமும், இராசயோகமும், பஞ்சாயுதாதிதாரணமும், நாமகரணமும், தொட்டிலேற்றுதலும், சங்குபாலடையும், கன்னவேதையும், சந்திரகோதரிசனமும், அன்னப்பிராசனமும், ஆண்டுநிறைவும், சௌளமும், அக்ஷராரம்பமும், வித்தியாரம்பமும், சரசுவதியோகமும், கோசக்கிரகமுஞ் சொல்வேன். எ-று. (௨)

வேதியர்நூலிடல்வேதந்தொடங்கல்விரதநன்னீர்
நீதியிலாடலிவைமங்கலவினைநீணிலத்தைச்
சேர்தலுழல்வித்தனட்டலறுத்தனெற்சேரவைத்த
வீதுபுதிதுண்ணலேர்மங்கலமென்றியம்புவனே.

(இ-ள்.) உபநயனமும், வேதாரம்பமும், உபாகருமமும், விரதமும், சமாவர்த்தனமும், பூமிப்பிரவேசமும், கிருஷியாரம்பமும், கலப்பைச்சக்கரமும், பீஜவாபனமும், தானியபேதமும், * நாற்றுநடுதலும், கதிரறுத்தலும், தானியப்பிரவேசமும், தானியசங்கிரகமும், நவபோசனமுஞ் சொல்வேன். எ-று. (௩)

தாவில்பதிட்டைதிருநாட்டமனகஞ்சாத்தறத்தங்
காவில்பவித்திரங்கண்ணன்சயந்திவிற்காமபூசை
மேவும்விளக்கீடுமத்தோதயமுமியாத்திரையுங்
கூபந்தடாகமுங்கொண்டுகொடுத்தலுங்கூறுவனே.

(இ-ள்.) தேவப்பிரதிட்டையும், உற்சவமும், துவசாரோகணமும், தமனகமும், பவித்திராரோகணமும், ஸ்ரீசயந்தியும், கிர்த்திகாதீபமும், வசந்தோற்சவமும், ஏகாதசிவிரதமும், திதிப்பிரதானமும், நட்சத்திரப்பிரதானமும், அர்த்தோதய மகோதயமும், யாத்திரையும், யாத்திராபட்சணமும், ஸ்திரீயாத்திரையும், கோயாத்திரையும், சலயாத்திரையும், கூபதடாகாரம்பமும், பர்வதபாதாளயோகமும், கிரயவிக்கிரயமுஞ் சொல்வேன். எ-று.

மன்முடிசூட்டலெழுத்திடல்வாகனமேறல்வாள்வே
லின்னபயிற்றலிசையாதவர்மேலெடுத்துவிடல்
சொன்னமணிகள்சோதிசம்பாதமிவைதொகுத்துப் [யே.
பன்னுவன்வெண்ணகைச் செவ்வாய்க் கருங்குழற் பைந்தொடி

* விருட்சஸ்தாபனம் என்பது ஈண்டுப் பொருந்தாது.

(இ-ள்.) இராசதரிசனமும், இராசாபிஷேகமும், திருவாண்டெழுத்தும், வாகனமேறலும், அஸ்திர சஸ்திராப்பியாசமும், யுத்தமும், மாணவிகளும், கசசாந்தியும், அசுவசாந்தியும், சுவாதிசம்பாதயோகமுஞ் சொல்வேன். எ-று. (௫)

புத்திலெடுத்தல்குடிபுகல்பொன்பூணல்பட்டுடுத்தல்
சித்தமகிழுமுபதேசமாயிரந்திங்கள்கண்டு
தத்துநீராடறலைக்கெண்ணெய்வார்த்தறனிசுதீர்த்த
லொத்தவிக்காரியம்யாவையுங்கூறுவனெண்ணுதலே.

(இ-ள்.) வாஸ்துகன்மமும், கிருகசத்தமவர்க்கமும், கிருகாரம்பமும், தம்பத்தாபனமும், கதவும், கிருகப்பிரவேசமும், தேவகிருகாரம்பமும், ஆர்த்தவேஷ்டிகைதூபியும், நவபூஷணமும், நவவஸ்திரதாரணமும், மந்திரோபதேசமும், சகஸ்ரசந்திரதரிசனமும், சதாபிஷேகமும், தைலாப்பியங்கமும், இருணமோசனமுஞ் சொல்வேன். எ-று. (௬)

ஒத்தமருந்தூணறுத்தல்சுடல்காரமூட்டலுண்ணோய்
முத்திபிறந்துகுளித்தன்முடிந்தோர்க்குமுற்றுங்கல்லு
வைத்தலெடுத்தல்சிராத்தஞ்செயன்மாயவன்றனக்குச்
சுத்தபலியிடல்சாந்தியோடட்டகைசொல்லுவனே.

(இ-ள்.) ஔஷதசேவையும், சத்திரமிடலும், காரமிடலும், ரோகாரம்பமும், ரோகநீங்கி ஸ்நானமும், திரிபுட்கரயோகமும், வெகுசிரார்த்தவிதியும், பாஷாணஸ்தாபனமும், உத்தியாபனமும், நாராயணபலியும், கிரகசாந்தியும் அட்டகையுஞ் சொல்வேன். எ-று. (௭)

உற்பாதஞ்சங்கிரமஞ்சொற்கிராணம்பிறையுறுதல்
கற்பாருங்கோட்பலன்மாசிமகமழைகாற்றுக்குறி
முற்பார்கொளல்சத்துருவசியமரமூலம்வெட்ட
லற்பிணியோகினியரங்கேறன்மெய்க்கோளுமறைகுவனே.

(இ-ள்.) உற்பாதமும், பரிவேடமும், தனுசுக்குறியும், நட்சத்திரபதனமும், சங்கிரமமும், சங்கிரமபலமும், விஷுவயனதோஷதினசங்கியையும், தற்பலமும், கிரகணமும், வருண அக்கினி பிருதிவி வாயுமண்டலமும், சந்திரதரிசனமும், காலபலமும், குருசௌரியோகமும், ஆர்சௌரியோகமும், மாசிமாதமகக்குறியும், மழைக்குறியும், வருஷகெர்ப்பமும், வாயுக்குறியும், பூமிக்கிரகணவெகுவிதியும், சத்துருவசியமும், மரம்வெட்டுதலும், பாபசுத்தியும், யோகினிதிசையும், ஆடல்பாடலரங்கேற்றலும், அங்கக்கிரகமும் கிரமமாகச் சொல்வேன். எ-று. (௮)

நூற்பயன்.

இத்திறமானவிதியறிந்தோர்களிருநிலத்தின்
முத்தனவெண்ணகைச்செப்பேந்திளமுலைமொய்குழலாய்
சுத்தருமாகியறம்பொருளின்பந்துறக்கமென்ற
வத்திறம்வாழ்குவரென்றுனமரர்புரோகிதனே.

(இ-ள்.) ஜனனமுதலாக மரணாந்தமாகச் சொல்லப்பட்ட இந்த விதானசாஸ்திரத்தை யாரொருவர் அறிந்து செய்கின்றாரோ அவர் இந்தப் பூலோகத்திலே சுத்தான்மாக்களாய்த் தருமார்த்தகாமங்களை அநுபவித்துப் பரலோகத்தினும் சுகங்களை அனுபவிப்பர் என்று வியாழபகவான் கூறினார். எ-று. (கூ)

பதிகம் முற்றிற்று.

ஆ செய்யுள் - கரு.

மரபியற்படலம்.

திதியாதி.

நாட்டுந்திதிக்குப்பிரதமைமுதல்வாரஞாயிறுதி
யீட்டுந்தினமைப்பசிமுதல்யோகம்விட்கம்பமாதி
கூட்டுங்கரணம்பவமுதலோரைகொறியதாதி
தீட்டுங்கதிர்முதற்கோளாதிசித்திரைதிங்களுக்கே.

(இ-ள்.) திதி பிரதமை முதல்; வாரம் ஞாயிறு முதல்; நட்சத்திரம் அச்சுவினி முதல்; யோகம் விட்கம்பமுதல்; கரணம் பவமுதல்; இராசி மேடமுதல்; கிரகம் ஆதித்தன் முதல்; மாதம் சித்திரை முதல்; இப்படியறிக. எ-று. (க)

சுபாசுபக்கிரகம்.

புந்திகுருப்பொலிதிங்கள்புகர்நல்லகோள்கதிர்சேய்
மந்தன்குறைமதிபாம்பினன்கூடியமாலுந்தீக்கோ
ளிந்தவகையன்றியிந்துவும்புந்தியுமேந்திழையாய்
தந்தநிலையினின்மத்திமக்கோளெனச்சாற்றினரே.

(இ-ள்.) புதனும் வியாழனும் பூர்வபக்கத்துச் சந்திரனும் சுக்கிரனும் சுபக்கிரகம்; ஆதித்தியனும் செவ்வாயும் சனியும் அபரபக்கத்துச் சந்திரனும் இராகுகேதுவும் ஆதித்தியனுடன் கூடிநின்ற புதனும் பாபக்கிரகம்; இவ்வாறன்றிச் சந்திரனும் புதனும் சிலநாட் சுபக்கிரகமும் சிலநாட் பாபக்கிரகமுமாதலால் இவர்கள் மத்திமக்கிரகங்களென்று சிலர் கூறினர். எ-று.

உபசயம், கேந்திரம்.

மூன்றாறுபத்துப்பதினொன்றுபசயமென்றிவற்றை
யேன்றோர்கணன்குபத்தேழுதயத்தையுமெண்ணின்மிக்க
சான்றோர்கள்கேந்திரங்கண்டஞ்சதுட்டயமென்றுவைத்தார்
மான்றுவியவிழிமைதாவியகுழல்வாணுதலே.

(இ-ள்.) இலக்கினத்துக்கு மூன்றாமிடம் ஆறாமிடம் பத்தாமிடம் பதினொராமிடம் என்னும் இந்நான்கிடத்துக்கும் உபசயமென்று பெயராம். இலக்கினத்துக்கும் நாலாமிடத்துக்கும் எழாமிடத்துக்கும் பத்தாமிடத்துக்கும் கேந்திரமென்றுங் கண்டமென்றுஞ் சதுட்டயமென்றும் பெயராம். எ-று. இராசிகளுடைய உதயமே இலக்கினமெனப் பெயர்பெறும். (ங)

துவாதச பாவநாமம்.

உதயந்தனமுடனேபிறப்பொண்டேரிழமைமகவு
சிதையும்பகைபெண்டிர்தேய்வுறுஞ்சாவுசெழும்புண்ணிய
மிதமொன்றியகன்மமாயம்வியமெனுமாறிரண்டும்
விதமொன்றியவோரைப்பேரெனச்சான்றோர்விதித்தனரே.

(இ-ள்.) உதயம், தனம், பிராதிரு, பெந்து, புத்திரன், சத்துரு, பாரி, மிருத்தியு, புண்ணியம், கன்மம், ஆயம், வியயம், என்னும் பன்னிரண்டு பாவமும் ஒருவனுக்குச் சென்மவிலக்கினமுதலாகப் பெயராம். எ-று. (ச)

சர திர உபயம், வர்க்கோத்தமம்.

உற்றசரந்திரமோதுபயம்மென்றமாண்பெணென்றுங் [ய்
குற்றங்குணமென்றுங்கொச்சைமுதலெண்ணுங்கொம்பனையா
மற்றுஞ்சராதிமுதலிடையீறுவர்க்கோத்தமமாய்ச்
சொற்றனன்றென்கடுவைக்கிறைசோதிடநூறெருகுத்தே.

(இ-ள்.) மேடமுதல் மீனாந்தமாகப் பன்னிரண்டிராசியும் சரராசி திரராசி உபயராசியென்றெண்ணப்படும். பின்பு மேடமுதலடைவே ஆண்ராசி பெண்ராசி என்றும், குரூரராசி சௌமியராசியென்றும் அடைவே மாறிமாறி எண்ணப்படும். சரராசியின் முற்கூறும் திரராசியின் நடுக்கூறும் உபயராசியின் கடைக்கூறும் வர்க்கோத்தமமெனப் பெயர்பெறும். எ-று.

கிரகநோக்கு.

அருண்மூன்றுபத்துமஞ்சொன்பதுந்நான்கெட்டுமாதியேழுங்
கருதூன்றுகான்முதற்கண்ணுறநோக்கென்பர்காரிகுரு
வருசேயலாதவர்நோக்கின்முறையேவலியரென்று
திருவேபராசரன்செப்பியநூன்முறைதேர்ந்துரையே.

(இ-ள்.) யாதாயினுமொரு கிரகத்தினது நோக்கறியுமிடத்து, அவனின்ற இராசிக்கு மூன்றாமிராசியும் பத்தாமிராசியுங் காலேக்கு; ஐந்தாமிராசியும் ஒன்பதாமிராசியும் அரைநோக்கு; நான்காமிராசியும் எட்டாமிராசியும் முக்காலேக்கு; எழாமிராசியும் தானின்ற இராசியும் முழுநோக்கு. இவற்றுள, காலேக்கிற் சனி வலியன்; அரைநோக்கில் வியாழன்வலியன்; முக்காலேக்கிற் செவ்வாய் வலியன்; முழுநோக்கில் மற்றைக் கிரகங்கள் வலியர். எ-று. பதினொன்றை அரைக்கால் நோக்கென்பாருமுளர். (கூ)

மரபியற்படல முற்றிற்று.

ஆ செய்யுள் - கக.

பஞ்சாங்கப்படலம்.

பக்கச்சித்திரை.

வளர்பிறையுத்தமமற்றைப்பிறைமத்திமமதமந்
தளர்வுறுபொல்லாங்குமென்பர்தடங்கட்டிருவனையா
யளவுறுநான்கொன்பதாறெட்டீராறீரேழானபக்கம்
விளைவுறுதீப்பக்கச்சித்திரையென்றுவிதித்தனரே.

(இ-ள்.) திதிகளுள்ளே பூர்வபக்கம் உத்தமம். அபரபக்கத்திற் பிரதமைமுதலைந்தும் மத்திமம்; சட்டிமுதலைந்தும் அதமம்; ஏகாதசிமுதலைந்தும் அதமாதமம். இவ்விரண்டுபெக்கத்திற் சதுர்த்தியும் நவமியுஞ் சட்டியும் அட்டமியும் துவாதசியும் சதுர்த்தசியும் பக்கச்சித்திரையெனப் பெயர்பெற்றுத் தவிர்க்கப்படும். எ-று. (க)

இதுவுமது.

ஒன்பதிருபத்தைந்தொன்பதுபன்னான்கும்பத்துமைந்தும்
வந்திடுநாழிகைசித்திரைக்காதியில்வாட்டநன்று
நந்தையும்பத்திரைசெயைநல்லிருத்தைவளர்ச்சியென்று
முந்தியபக்கமுதன்முறையேமொழிமொய்குழலே.

(இ-ள்.) பக்கச் சித்திரையென்ற பக்கங்களிலே தோஷமான நாழிகை சதுர்த்திக்கு ஒன்பது; நவமிக்கு இருபத்தைந்து; சட்டிக்கு ஒன்பது; அட்டமிக்குப் பதினான்கு; துவாதசிக்குப் பத்து; சதுர்த்தசிக்கு ஐந்து. இந்நாழிகைகள் கழித்தால் இந்தத் திதிகள் நன்றென்க. பிரதமை சட்டி ஏகாதசி மூன்றும் நந்தையெனவும், துதியை சத்தமி துவாதசி மூன்றும் பத்திரையெனவும், திருதியை அட்டமி திரயோதசி மூன்றும் சயையெனவும், சதுர்த்தி நவமி சதுர்த்தசி மூன்றும் இருத்தையெனவும், பஞ்சமி தசமி பஞ்சதசி மூன்றும் பூரணையெனவும் பெயர்பெறும். எ-று. அமாவாசை பௌர்ணிமையிரண்டும் பஞ்சதசியெனப்படும். (உ)

இதுவுமது.

சிறந்தநன்மங்கலகாரியம்யாவிற்குஞ்சித்திரைநீத்
தறைந்தபக்கத்துநற்பக்கமிடையுவாநன்றதனி
னிறைந்தபக்கத்துமுன்னைந்துநிறைவேல்பொருதகண்ணாய்
குறைந்தபக்கத்துக்கடையுற்றவைந்துங்குணமில்லையே.

(இ-ள்.) சர்வமங்கலகாரியத்துக்கும் பக்கச்சித்திரையொழிந்த திதியும், இடையுவாவெனப்படும் பஞ்சமி தசமிகளும் நன்றாம். பூர்வபக்கத்துப் பிரதமைமுதற் பஞ்சமியிறுதியும், அபரபக்கத்து ஏகாதசிமுதல் அமாவாசையிறுதியுந் தவிர்க்கப்படும். எ-று.

பூர்வபக்கத்துப் பஞ்சமியும், அபரபக்கத்து ஏகாதசியும் முக்கியம் என்பாருமுளர். (ந)

இதுவுமது.

ஒற்றித்தபக்கத்திலாதியுமந்தமுமொன்பதுமே
குற்றமுடைத்தல்லவைநன்றிரட்டையிற்கூறுமீரைந்
துற்றவிரண்டுநன்றல்லவைதீதொள்ளியவினைக்குச்
சொற்றிலர்கல்விக்குப்பன்மூன்றுரேழையுஞ்சோதிடரே.

(இ-ள்.) சிலர் சுபகன்மங்களுக்கு இரண்டுபெக்கத்தும் ஒற்றித்த திதிகளுட் பிரதமையும் பூரணையும் நவமியுமொழிந்த திதி நன்றாம். இரட்டித்த திதிகளுள் தசமியும் துதியையுமொழிந்த திதி தீதாமென்று சொல்வர். அவ்விரண்டுபெக்கத்தும் வந்த சத்தமியும், திரயோதசியும் வித்தியாரம்பத்துக்கு விசேஷமாகத் தவிர்க்கப்படும். எ-று. (ச)

திதிப்பிரசங்கை.

நிலையானகாரியஞ்சாந்திபிரதமைநீடுசுபந்
தலையானமந்திரங்கற்றலிரண்டிற்றம்மில்லெடுத்தல்
கலைபார்மணமுடிபட்டகன்மங்கல்விமூன்றினன்கிற்
கொலையானைகட்டல்விருத்தங்கொளல்போர்தளையிடலே.

(இ-ள்.) பிரதமையிலே திரகன்மங்களான காரியங்களும், சாந்தியும், துதியையிலே சுபகன்மங்களும், மந்திரோபதேசமும், வித்தியாரம்பமும், திருதியையிலே வாஸ்த்துநியாசமும், விவாகமும், இராசாபிஷேகமும், பட்டபந்தனமும், வித்தியாரம்பமும், சதுர்த்தியிலே யானைகட்டலும், விருத்தங்கொள்ளலும், யுத்தஞ்செய்தலும், நிகளபந்தனமும் பண்ணலாம். எ-று. (ரு)

இதுவுமது.

சுடிமணந்தானியம்வைத்தல்குளங்கல்லலைந்தில்வாத்து
விடல்விடவாதமிடர்செய்வினைதளையாறிற்போக்குப்
படியுழல்பூணணிநற்காரியமணம்பன்னுமேழி
லடுவினையட்டகையைம்முகன்பூசையுமட்டமிக்கே.

(இ-ள்.) பஞ்சமியிலே விவாகம், தனதானியசங்கிரகம், குளங் கூபங் கல்லுதலாம். சட்டியிலே வாஸ்த்துவிடுதல், விஷவாதாப்பியாசம், குரூரகன்மம், ஔஷதசத்திரகாரதகனங்கள், சத்துருதரிசனம், நிகளபந்தனம் பண்ணலாம். சத்தமியிலே யாத்திரை, அலப்பிரவாகம், ஆபரணதாரணம், சர்வசுபகன்மம், விவாகம் பண்ணலாம். அட்டமியிலே அறுத்தல், சுடுதல், அட்டைவிடுதல், காரமிடுதல், மருந்துண்ணல், சத்துருவைச்செயிக்கை, அட்டகை உருத்திராபிஷேகம் இவை பண்ணலாம். எ-று. (௬)

இதுவுமது.

நவமியிலட்டகைநாராயணிபூசைநாட்டும்பத்திற்
றவமணமூரிற்புகறனதானியம்வைத்தல்பன்னொன்
றுவநயங்கன்னிபசுத்தானம்பன்னிரண்டுற்றபூங்காப்
புவனியிற்றன்மமலவனரிபூசைபொன்பூணலே.

(இ-ள்.) நவமியிலே அட்டகையும், துர்க்காபூசையும், அட்டமிக்குச்சொன்ன கன்மங்களுமாம். தசமியிலே தவசும், விவாகமும், கிராமப்பிரவேசமும், கிருகப்பிரவேசமும் தனதானியசங்கிரகமுமாம். ஏகாதசியிலே உபநயனம், கன்னியாதானம். கோதானம், பூதானம் பண்ணலாம். துவாதசியிலே சோலைவைத்தல், பூமரம்வைத்தல், தருமஞ்செய்தல், உழல், விதைத்தல், நெல்லறுத்தல், தானியசங்கிரகம், விஷ்ணுவாராதனை, ஆபரணம் பூணுதல் இவையாம். எ-று. (௭)

இதுவுமது.

வாகனநன்மணஞ்சித்திரம்பன்மூன்றின்மந்திரங்க
ளாகமநூன்மருந்தாராய்தல்சாந்திபன்னான்கினுவா
வோகைசேர்மங்கலந்தன்மங்குடிபுகலொண்குருவிற்
சாகரநீராடறர்ப்பணந்தானஞ்சிராத்தமுமே.

(இ-ள்.) திரயோதசியிலே வாகனமேறல், விவாகம், சித்திரகன்மங்கள் பண்ணலாம். சதுர்த்தசியிலே குரூர மந்திராப்பியாசம், ஆகமபடனம், ஔஷதாப்பியாசம், சாந்தி இவையாம். பௌர்ணிமையிலே மங்கலகன்மம், தன்மகாரியம், கிருகப்பிரவேசம் இவையாம். அமாவாசையிலே சமுத்திரஸ்நானம், பிதிர்தர்ப்பணம், தானம், சிராத்தம் இவையாம். எ-று. (௮)

வாரநயம்.

வெள்ளிவியாழம்புதன்றிங்கள்வாரமிகவுநன்றுந்
தெள்ளியஞாயிறுசேய்சனிதீயனசெப்புவரா
முள்ளியவோதும்பலமிரவில்லையோரைச்சனிசேய்க்
கொள்ளியவாட்சியுநல்வினையாவிற்குமோதிலரே.

(இ-ள்.) வாரங்களுள்ளே வெள்ளி, வியாழன், புதன், திங்கள் இவை நல்லன. ஞாயிறு, செவ்வாய், சனி இவை தீயன. இவற்றின் பலம் பகலிலுண்டு; இராத்திரிக்கில்லை. இராசிகளுள்ளே சனி செவ்வாய் ஆட்சியான மகரங் கும்பம் மேடம் விருச்சிகம் இவற்றினுதயங்கள் சுபகாரியங்களுக்கு ஆகாவாம். எ-று. (௯)

வாரப்பிரசங்கை.

மணிமுடிமன்னரைக்காணன்மருந்துண்ணல்காரமிடல்
பணிகரிமாவேறன்மந்திரமாராய்தல்பானுவாரந்
தணிமரம்வைத்தல்வபனங்குடிபுகலாடல்பாடல்
கணிபுதுப்பூமுத்தணிகல்விமுற்றல்கலைமதிக்கே.

(இ-ள்.) ஞாயிற்றுக்கிழமையிலே இராசாபிஷேகமும், இராசதரிசனமும், ஔஷதசேவையும், அறுத்தல் சுடல் காரமிடலும், யானை குதிரையேறலும், ஆயுதாப்பியாசமும், மந்திரோபதேசமும், மந்திரசாதனையும் செய்யலாம். திங்கட்கிழமையிலே நல்ல மரம்வைத்தல், சௌளகன்மம், குடிபுகுதல், ஆடல் பாடல் சாதித்தல், கமலமுதலான புட்பாக்கிராணம், முத்தாரம்பூணல், ஆபரணம்பூணல், வித்தியாப்பியாசசமாப்தி என்ற கன்மங்கள் பண்ணலாம். எ-று. (௧௦)

இதுவுமது.

நிலம்பார்த்தல்பட்டம்பவனம்புனைதனெடும்போர்செய்தல்
கலங்காதுசத்திரங்காரமிடல்செய்யோன்வாரத்திலா
நலந்தூதுபெண்பேசன்ஞானம்பெறலோதல்சாந்திபெண்பாற்
புலந்தேறுபோகநற்காரியங்கேசம்புதனிற்செய்யே.

(இ-ள்.) செவ்வாய்க்கிழமையிலே நிலம்பார்த்தல், உழல், பட்டபந்தனம், பூமிப்பிரவேசம், யுத்தஞ்செய்தல், களப்பலியூட்டுதல், சத்திரங் காரமிடல் இவையாம். புதன்கிழமையிலே தூதுபோதல், பெண்காரியமறுதியிடல், ஞானோபதேசம், வித்தியாப்பியாசம், சாந்திகன்மம், கர்ப்பாதானம், புஞ்சவனம், சீமந்தம், சௌளகன்மம், மற்றுமுள்ள சுபகன்மங்கள் இவை பண்ணலாம். எ-று. (௧௧)

இதுவுமது.

இணங்கல்விபூண்போக்குழன்மணமாதிநூலிட்டன்மருந்
தெனுங்குருவாரத்தெழின்மணங்கல்விபோக்கிராகம்பாடல்
தனந்தானியம்பசுப்பூணணிகாண்டல்சயனமாதி
புனைந்தவைமன்னுதல்போகம்புணர்தல்புகர்தனிலே.

(இ-ள்.) வியாழக்கிழமையிலே பலநூலப்பியாசம், வஸ்திராபரணம்பூணல், யாத்திரை, அலப்பிரவாகம், விவாகம்முதலான மங்கலகாரியங்கள், உபநயனம், தனக்கு இட்டமான காரியங்கள், ஔஷதசேவை இவையாம். வெள்ளிக்கிழமையிலே விவாகம், உழவு, வித்தியாரம்பம், யாத்திரை, இராகம்பாடுதல், தனதானியம் பார்த்தல் வைத்தல், பசுக்காணல், ஆபரணங்காணல் பூணல், நவரத்தினங்கள் பார்த்தல் பூணல், சயனதிசுகங்கள் பரிசித்தல், வஸ்திரதாரணம், ஸ்திரீசங்கமம் இவையாம். எ-று. (௧௨)

இதுவுமது.

நிலையாவனகாண்டலிற்புகனெல்லறுத்தல்செறித்தல்
கொலையானைகட்டலிரணங்கொடுத்திடல்கோம்பிவாரத்
துலையாதுசொன்னவினையனைத்திற்குமொவ்வோருதயந்
தலையாவனவென்றுசான்றோருணர்த்தினர்தார்குழலே.

(இ-ள்.) சனிக்கிழமையிலே திரகன்மங்களும், பந்துக்களைக் காண்டலும், விருந்துண்டல் கொடுத்தலும், குடிபுகுதலும், நெல்லறுத்தலும், சங்கிரகித்தலும், யானைகட்டலும், இருணமோசனமுமாம். இப்படியே வாரத்திற் சொன்னகாரியங்கள் அவரவருதயத்திலுங் கொள்ளலாம். எ-று. (கங)

சுபராசி, அசுபராசி.

அலவன்றடிவிடையாயிழைவிற்றுலைமீனமிவை
நலமுள்ளவோரைநற்கோள்குணமாமேடஞ்சீயநற்றேள்
கலைகுடந்தீக்கோளிலங்கொடிதாங்கருதெட்சியினிற்
சலமுறுதீவினைசத்துருநாசமுந்தான்செயலே.

(இ-ள்) கர்க்கடகம் மிதுனம் இடபம் கன்னி தனு துலாம் மீனம் இவை சௌமியக்கிரகங்களாட்சியாதலிற் குணராசியெனப்படும். மேடம் சிங்கம் விருச்சிகம் மகரம் கும்பம் இவை பாபக்கிரகங்களாட்சியாதலிற் குரூரராசியெனப்படும். குணராசி உதயமாகச் சர்வமங்கலகாரியங்களும் பண்ணலாம். குரூரராசி உதயமாகக் குரூரகன்மங்களும், சத்துருபீடையும் பண்ணலாம். எ-று. (கச)

இதுவுமது.

புண்ணியக்கோளினதோரைநன்றல்லத்தீயோர்பொருந்தி
நண்ணியதீக்கோளினாட்சியினல்லோருறினல்லவாம்
பண்ணியவோரைமுதலிடையீறுபலம்பகரி
னெண்ணினர்தாமதிகஞ்சமமற்பமெனவகுத்தே.

(இ-ள்.) சர்வமங்கலகன்மங்களுஞ் சுபக்கிரகங்களுடைய இராசி உதயமாகிற் சுபமாம். சுபராசியிற் சுபோதயமுண்டாகில் உத்தமம்; சுபராசியில் அசுபோதயமுண்டாகில் அதமம்; அசுபராசியிற் சுபோதயமுண்டாகில் உத்தமம்; அசுபராசியில் அசுபோதயமுண்டாகில் அதமாதமம்; ஆகையால் இதிற் குரூரகன்மங்கள் செய்யலாம். ஒரு ராசியை மூன்றுகூறிட்டால் முதற்கூறு முகூர்த்தம் உத்தமம்; நடுக்கூறு மத்திமம்; கடைக்கூறு அதமமாம். எ-று. (கரு)

பாபநக்ஷத்திரம்.

ஆதிரைகேட்டையரவம்பரணியமுன்முறையே
தீதுமுப்பூரங்கணல்வினைசெய்திடிற்றீவினையா
மோதியநாளுடன்றீயவர்வாரங்களுற்றிரித்தை
மீதுயரோகமிருத்துவென்றோதினர்வித்தகரே.

(இ-ள்.) திருவாதிரை, கேட்டை, ஆயிலியம், பரணி, கார்த்திகை, பூரம், பூராடம், பூரட்டாதி இந்நாட்களிற் சுபகாரியங்கள் பண்ணலாகாது. இந்நாட்களுடனே பாவவாரங்களுற்று இரித்தைகள்கூடின் அவை மிருத்தியுயோகமென்று சொல்லப்படும். இதிற்செய்தகாரியம் நாசமாம். இந்தயோகத்தில் வியாதிகொள்ளின் மிருத்துவாம். எ-று. (கசு)

ஆண், பெண், அலி.

பரணியமற்றோர்பூசங்களத்தம்பனையோணம்பாத
முரசிவையாண்மான்றலைகண்டன்மூலமலியல்லபெண்
டரைமகன்பொன்கதிராண்சனிமாலலிவெள்ளிதிங்கள்
வரியரவம்பெண்ணெனவறிவார்குழன்மாமயிலே.

(இ-ள்.) பரணி, கார்த்திகை, ரோகிணி, புநர்பூசம், பூசம், அத்தம், அனுஷம், திருவோணம், பூரட்டாதி, உத்தரட்டாதி இவை ஆணாள். மிருகசீரிடம், சதயம், மூலம் இவை அலிநாள். ஒழிந்த அச்சுவினி, திருவாதிரை, ஆயிலியம், மகம், பூரம், உத்தரம், சித்திரை, சோதி, விசாகம், கேட்டை, பூராடம், உத்தராடம், அவிட்டம், ரேவதி இவை பெண்ணாள். கிரகங்களுள்ளே செவ்வாய், வியாழன், ஆதித்தியன் இவை ஆண். சனியும் புதனும் அலி. வெள்ளி, சந்திரன், ராகு, கேது இவை பெண். எ-று. (கஎ)

ஊர்த்துவாதோதிரயமுகம்.

சகடங்குருமாயோன்புள்ளுத்தரங்கள்சதயஞ்செங்கை
புகறருமேன்முகமுற்றிலராவமழல்பூரமூன்று
மகம்விற்பரணியதோமுகமல்லன்மானனையாய்
பகரப்படுந்திரயமுகமாகவிப்பாரிடத்தே.

(இ-ள்.) ரோகிணி, பூசம், திருவோணம், அவிட்டம், உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி, சதயம், திருவாதிரை இவை மேனோக்கின முகமான நாள். விசாகம், ஆயிலியம், கார்த்திகை, பூரம், பூராடம், பூரட்டாதி, மகம், மூலம், பரணி இவை கீழ்நோக்கின முகமான நாள். ஒழிந்த அச்சுவினி, மிருகசீரிடம், புநர்பூசம், அத்தம், சித்திரை, சோதி, அனுஷம், கேட்டை, ரேவதி இவை திரயமுகமான நாளாம். எ-று. (கஅ)

ஊர்த்துவமுகாதிநாள்களிற் செய்வன.

வாத்துவிடுதன்முடிசூடல்வாகனமேறல்வித்தல்
கோத்தனமேன்முகத்தாங்குளங்கூபங்குழித்தல்கருச்
சேர்த்தறனதானியங்கள்சேமித்தலதோமுகத்தாம்
யாத்திரைகோடல்கொடைதிரயமுகத்தாமென்பரே.

(இ-ள்.) வாஸ்த்துகன்மமும், இராசாபிஷேகமும், வாகனமேறலும், வித்துவிதைத்தலும், மரங்கள்வைத்தலும் ஊர்த்துவமுகமான நாளொன்பதிலுங் கொள்ளப்படும். குளங் கிணறுகல்லுதல், கருவைத்தல், தனதானிய சங்கிரகம், மூலவித்துவைத்தல், அதோமுகமான நாளொன்பதிலுங் கொள்ளப்படும். யாத்திரைகொள்ளுதல், கொடை, படர்கொடிப்பயிர், திரயமுகமான நாளொன்பதிலுங் கொள்ளப்படும். எ-று. (ககூ)

திர சர லகு முதலிய நட்சத்திரங்கள்.

உருளுத்தரங்கடிரஞ்சோதிவேயோணமூன்றுஞ்சரம்
பரியத்தம்பூசம்லகுமகம்பூரம்பரணியுக்கிரங்
குருகரவங்கேட்டைபாதிரைதாரணந்தாலந்தொழுத்
தருமதிதச்சனெய்தல்லாதநாட்கள்சாதாரணமே.

(இ-ள்.) ரோகிணி, உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி இவை திர நட்சத்திரம். சுவாதி, புநர்பூசம், திருவோணம், அவிட்டம், சதயம் இவை சரநட்சத்திரம். அச்சுவினி, அத்தம், பூசம் இவை லகுநட்சத்திரம். மகம், பூரம், பரணி இவை உக்கிரநட்சத்திரம். மூலம், ஆயிலியம், கேட்டை, திருவாதிரை இவை தாரணநட்சத்திரம். அனுஷம், ரேவதி, மிருகசீரிடம், சித்திரை இவை மிருதுநட்சத்திரம். ஒழிந்த கார்த்திகை, விசாகம், பூராடம், பூரட்டாதி இவை சாதாரண நட்சத்திரமாம். எ-று. (உ0)

ச[illegible]னம்.

நிலையின்முடியறஞ்சாந்[illegible]தனெல்விதைத்தல்
கலைதேர்மருந்தூண்கலனணிபோதல்சிற்பம்லகுவிற்
கொலைசூளிமந்திரந்தாரணத்தானைகுதிரையேற
லலைநீர்க்கரைகட்டல்யாத்திரைபூந்தோட்டமாஞ்சரத்தே.

(இ-ள்.) இராசாபிஷேகம், ஜன்மகாரியம், சாந்தி, மரம்வைத்தல், நெல்விதைத்தல், திரகாரியங்கள் இவை திரநட்சத்திரத்திலே கொள்ளப்படும். வித்தியாப்பியாசம், மருந்துண்ணல், புதிதுண்ணல், ஆடையாபரணம்பூணல், யாத்திரை, சிற்பகன்மங்கள் இவை லகுநட்சத்திரத்திலே கொள்ளப்படும். அபிசாரம், பைசாசமந்திரசாதனை இவை தாரணநட்சத்திரத்திலே கொள்ளப்படும். யானை குதிரையேறுதல், அவைகளைக் கொள்ளுதல், ஆறு குளங் கரைகட்டுதல், யாத்திரைபோதல், தோப்புப் பூந்தோட்டம் வைத்தல் இவை சரநட்சத்திரத்திலே கொள்ளப்படும். எ-று. (உக)

இதுவுமது.

ஆடையும்பூணும்மணிகுதறேவரையாதரித்தல்
பாடுதன்மங்கலகாரியம்நொய்தென்பபன்னுநாளிற்
பீடுறச்சூட்டலறுத்தல்விடபுந்தமுக்கிரத்தாந்
தேடுமவுடதம்வாகடமந்திரந்திட்சணமே.

(இ-ள்.) புடைவையுடுத்தல், ஆபரணம்பூணல், தேவாராதனை, மந்திரோபதேசம், ஆடல்பாடல், மற்றுமுள்ள மங்கல காரியங்கள் மிருதுநட்சத்திரத்திலே கொள்ளப்படும். சத்திரம்வைத்தல், சுடுதல், காரமிடல், விஷகாரணம், விஷமந்திரோபதேசம் இவை உக்கிரநட்சத்திரத்திலே கொள்ளப்படும். வியாதிதீர மருந்துண்ணல், வாகடம், மந்திரசாதனை, தீக்ஷணகன்மங்கள் இவை சாதாரண நட்சத்திரத்திலே கொள்ளப்படும். எ-று. (உஉ)

வாரவர்க்கம்.

சரஞ்சந்திரன்றிரஞாயிறுதாரணஞ்சனி னுக்கிரம்
வருங்குசன்சீவன்லகுநொய்துவெள்ளிமால்சாதாரணந்
திருந்தியநாளின்முறைவினையாவையுஞ்செய்கவென்று
கருந்தடங்கண்ணுய்கடுவைக்குநாதன்கழறினனே.

(இ-ள்.) கிரகங்களில் சந்திரன் சரம்; ஆதித்தியன் திரம்; சனி தாரணம்; செவ்வாய் உக்கிரம்; வியாழன் லகு; வெள்ளி மிருது; புதன் சாதாரணம்; ஆகையால் இவர்கள் வாரோதயங்களும் முன்பு நாளுக்குச் சொன்னபடியே விதிபெறும். எ-று. (உ௩)

யோகவற்சியம்.

ஓதியநித்தியயோகத்தொழிவனவொன்றுமாறுந்
நீதியிலொன்பதும்பத்தும்பன்மூன்றுநிகழ்பதினைந்
தேதமில்பன்னேழும்பத்தொன்பதுமிருபத்தேழுமாய்ச்
சோதிடநூலவர்சொல்லினர்தூயசுரிகுழலே.

(இ-ள்.) நித்தியயோகமாவன:—விட்கம்பம், பிரீதி, ஆயுஷ்மான், சௌபாக்கியம், சோபனம், அதிகண்டம், சுகன்மம், திருதி, சூலம், கண்டம், விருத்தி, துருவம், வியாகாதம், அரிஷணம், வச்சிரம், சித்தி, வியதிபாதம், வரியான், பரிகம், சிவம், சித்தம், சாத்தியம், சுபம், சுப்பிரம், பிராமியம், மாகேந்திரம், வைதிருதி என்னுமிருபத்தேழு. இவைகளுட் சுபகாரியங்களுக்குத் தவிரப்படுவன: விட்கம்பம், அதிகண்டம், சூலம், கண்டம், வியாகாதம், வச்சிரம், வியதிபாதம், பரிகம், வைதிருதி என்றவொன்பதுமாம். எ-று. (உச)

இதுவுமது.

கண்டாதிகண்டத்துக்கேழ்கன்னல்சூலத்தினுக்கெட்டென்ப
ருண்டாயவச்சிரத்திற்கும்வியாகாதத்திற்குமொன்பான்
பண்டாயவிட்கம்பத்தாதியிலைந்துபரிகத்துடன்
விண்டாவும்வைதிருதிவியதிபாதமுற்றும்விடே.

(இ-ள்.) தவிரப்பட்ட நித்தியயோகங்களுள்ளே கண்டத்துக்கும், அதிகண்டத்துக்கும் எவ்வேழுநாழிகையும், சூலத்துக்கு எட்டுநாழிகையும், வச்சிரத்திற்கும், வியாகாதத்திற்கும், ஒன்பதொன்பதுநாழிகையும், விட்கம்பத்துக்கு ஐந்துநாழிகையும், ஆதியிலே கழித்தால், சுபகன்மங்களுக்காம். பரிகம், வைதிருதி, வியதிபாதம் இவை முழுதுங் கழிக்கப்படும். எ-று. (உரு)

யோக உற்பவம்.

ஒத்தகதிர்மதியுற்றவங்நாட்டிரட்டொன்றொழித்தா
னித்தவியோகநிலைபெறுமானீங்கும்யோகங்கடான்
வைத்தகயிற்றெதிர்மாமதிஞாயிறுமன்னிற்றீதாஞ்
சுத்தபரிகத்துப்பின்னரைநன்றெனச்சொல்லினரே.

(இ-ள்.) அச்சுவினி முதல் ஆதித்தனின்ற நாளளவுமெண்ணி அச்சுவினி முதற் சந்திரனின்ற நாளையுங் கூட்டி இத்தொகையி லொன்றுகழித்து நின்றதொகை நித்தியயோகமாம். இதிற்றவிரச்சொன்ன யோகங்களை ஏகார்க்களத்தொருகயிற்றிலே சந்திராதித்தியர்கள் நிற்பிற் றவிரப்படும். பரிகத்திற் பின்னரை சுபகன்மங்களுக்காம். எ-று. (௨௬)

ஏகார்க்களசக்கரம்.

நிலையாகவொன்றும்விலங்குபன்மூன்றுநிலத்தெழுதித்
தலையாமியோகத்துநாள்வைத்துச்சந்திரனின்றநாளும்
வலமாங்கதிரவன்மன்னியநாளொடெதிருறுமேற்
கொலையானவேகார்க்களங்குறுகும்மிதுகுற்றமென்னே.

(இ-ள்.) கீழ்மேலாக ஒரு ரேகையைக் கீறி இதிலே தெற்கு வடக்காகப் பதின்மூன்றுரேகை கீற இது இரண்டுபக்கமும் உச்சியுமாக இருபத்தேழாம். இதில் விட்கம்பமாதியாகக் கழித்த ஒன்பதுயோகங்களுக்குச் சொல்லுகிற நாளை உச்சியில் வைத்துத் தொடங்கி ஆதித்தியனின்ற நாளளவும் வலமாகவெண்ணிக் குறிசெய்து, பின்பும் உச்சியிலே தொடங்கிச் சந்திரனின்ற நாளளவும் வரவெண்ணினால் இருவர்நாளும் ஒருகயிற்றிலேயிருக்குமாகில் இந்தயோகமுற்ற நாள் மிகுதியுஞ் சுபகன்மங்களுக்காகாவாம். எ-று. (௨௭)

ஏகார்க்களம்.

தாலமதிகண்டஞ்சித்திரைவைதிருதிதைவச்சிரஞ்
சூலமதிபரிவிட்கம்பம்பாதமரவுகண்ட
மூலம்பரிகம்மகம்வியாகாதம்வேயிம்முறையே
யேனுங்கதிர்மதிதானெதிர்நோக்கிலேகார்க்களமே.

(இ-ள்.) தோஷமான யோகங்களுக்கு உச்சியிலே வைக்குநாள் அதிகண்டத்திற்கு அனுஷம்; வைதிருதிக்குச் சித்திரை; வச்சிரத்துக்குப் பூசம்; சூலத்துக்கு மிருகசீரிடம்; விட்கம்பத்துக்கு அச்சுவினி; வியதிபாதத்துக்கு ஆயிலியம்; கண்டத்துக்கு மூலம்; பரிகத்துக்கு மகம்; வியாகாதத்துக்குப் புநர்பூசம்; இவற்றை வைத்துச் சந்திராதித்தர் நின்ற நாளளவுந் தனித்தனியே எண்ணிக் காண்பது ஏகார்க்களம். எ-று. (௨௮)

பவாதிகரணம்.

பவமாதியேழெட்டொளிசேர்பிரதமைபிற்கூறுமுதற்
குவைசேரவுற்றுவருங்குறைபக்கச்சதுர்த்தசிபின்
னவைசேர்சகுனஞ்சதுர்ப்பதநாகங்கிந்துக்கினமென்
றவைதீதுமுன்னவற்றேழாவதுந்தீதணிவளையே.

(இ-ள்.) கரணங்களுள் பவம், பாலவம், கௌலவம், தைதிலம், கரசம், வணிசம், விட்டி என்ற ஏழுஞ் சரகரணம்; சகுனம், சதுர்ப்பாதம், நாகவம், கிம்ஸ்துக்கினம் என்றநான்குந் திரகரணம். இவை வருமாறு:— பூருவபக்கத்துப் பிரதமை பிற்கூறுமுதி அபரபக்கத்துச் சதுர்த்தசி முற்கூறந்தம்

௬௬-கரணமும் ஒரு திதிக்கு இரண்டு கரணமாக வரும். அவை வருமாறு:— பூருவபக்கத்துப் பிரதமை பிற்கூறு பவம், துதியை முற்கூறு பாலவம், பிற்கூறு கௌலவம், திருதியை முற்கூறு தைதிலம், பிற்கூறு கரசம், சதுர்த்தி முற்கூறு வணிசம், பிற்கூறு விட்டி, பஞ்சமி முற்கூறுமுதல் அட்டமி முற்கூறளவும், அட்டமி பிற்கூறுமுதல் ஏகாதசி பிற்கூறளவும், துவாதசி முற்கூறுமுதற் பௌரணை முற்கூறளவும், பௌரணை பிற்கூறுமுதல் அபரபக்கத் திரிதியை பிற்கூறளவும், சதுர்த்தி முற்கூறுமுதற் சத்தமி முற்கூறளவும், சத்தமி பிற்கூறுமுதல் தசமி பிற்கூறளவும், ஏகாதசி முற்கூறுமுதல் சதுர்த்தசி முற்கூறளவும், இப்படிச் சரகரணமேழும் வரும். சதுர்த்தசி பிற்கூறு முதலாகத் திரகரணங்கள் நான்கும்வரும். அவை வருமாறு:— சதுர்த்தசி பிற்கூறு சகுனம், அமாவாசை முற்கூறு சதுர்ப்பாதம், பிற்கூறு நாகவம், பிரதமை முற்கூறு கிம்ஸ்த்துக்கினம். இவை நான்குஞ் சரகரணத்தில் ஏழாவதான விட்டியுந் தவிரப்படும். எ-று. (௨௯)

விட்டிக்கரணம்.

எட்டிற்பதினைந்திலாதியாம்பன்னொன்றிலீரிரண்டிற்
பட்டகடைக்கூற்றில்விட்டிமுற்பக்கவிதியதுவாங்
கட்டியவேழிற்பதினொன்கின்முன்கடைமூன்றிற்பத்தில்
விட்டிவருமெட்டிடத்துமென்றோதினர்வித்தகரே.

(இ-ள்.) விட்டி வருமாறு:— அட்டமியினும், பௌரணையினும் முற்கூறு; சதுர்த்தியினும், ஏகாதசியினுங் கடைக்கூறு; இது பூருவபக்கத்துக்கு விதி. அபரபக்கத்துக்குச் சத்தமியினுஞ் சதுர்த்தசியினும் முற்கூறு; திருதியையினுந், தசமியினுங் கடைக்கூறு விட்டி; ஆக ஒரு சாந்திரமானத்துக்கு எட்டு விட்டியாம். எ-று. (௩௦)

விட்டியபவாதம்.

ஒன்றுமிரண்டுமொருமூன்றுநான்குமிரண்டுமூன்று
நின்றுயர்நான்கொன்றுநீத்துறுஞ்சாமத்துவிட்டிநன்றாங்
குன்றாதமுற்கூறிரவுபிற்கூறுபகற்குறுகி
னன்றாகும்விட்டிவிபரிதமானவைநல்வினைக்கே.

(இ-ள்.) எட்டு விட்டிக்கும் அடைவே முதற்சாமம் இரண்டாஞ்சாமம் மூன்றாஞ்சாமம் நான்காஞ்சாமம் இரண்டாஞ்சாமம் மூன்றாஞ்சாமம் நான்காஞ்சாமம் முதற்சாமம் இவற்றையொழிந்த சாமங்களில் விட்டிதோஷமில்லை. ஒருசாமம் மூன்றேமுக்கால் நாழிகையாகக் கொள்க. அன்றி முதற்கூற்றிலே வரும் விட்டி இரவுவரினும், பிற்கூற்றிலே வரும் விட்டி பகல்வரினுங் குற்றமில்லை; சுபகன்மங்கள் செய்யலாம். எ-று. (௩௧)

சுபாசுபகரணம்.

மன்னும்பவம்பாலவங்கௌலவந்தைதிலம்வணிச
மென்னுங்கரணநன்றாங்கரசமத்திமமாகுமென்பர்
முன்னுந்திரமுற்றும்விட்டியிற்சாமமுறையிற்றீதா
மன்னதினந்தத்தினாழிகைமூன்றுறிலாங்குநன்றே.

(இ-ள்.) பவம், பாலவம், கௌலவம், தைதிலம், வணிசம் என்ற ஐந்து கரணமுஞ் சுபகன்மங்களுக்கு உத்தமம்; கரசம் மத்திமம்; திரகரணங்கள் நான்கும் விட்டியில் தோஷாங்கமான சாமங்களுந் தவிரப்படும். விட்டியின் முடிவிலே மூன்றுநாழிகை நன்றாம். எ-று. (௫௨)

பஞ்சாங்கப்படல முற்றிற்று.

ஆ செய்யுள் - ௫௨.

குணாகுணப்படலம்.

அவயோகம்.

ஞாயிறு.

இரவிதன்வாரத்துப்புட்பனையிந்திரனிந்துமுற
மரவமகமடுப்பைப்பசிபக்கத்திலாறேழெட்டுப்
பரவுந்துவாதசியிரித்தைபன்மூன்றுபஞ்சமிநாட்
டரவருங்கார்த்திகைநாசயோகம்மென்றளிரடியே.

(இ-ள்.) ஞாயிற்றுக்கிழமை கூடின அவிட்டம், அனுஷம், கேட்டை, மிருகசீரிடம், விசாகம், ஆயிலியம், மகம், பரணி, அச்சுவினி, சட்டி, சத்தமி, அட்டமி, துவாதசி, இரித்தைகளான சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி, திரயோதசி, பஞ்சமியுடன்கூடின கார்த்திகை இவை நாசயோகம். எ-று.

திங்கள்.

உரைதிங்கள்வாரத்துடைகுளமுத்தரமூன்றுமக
நிரைபனைவைகாசிநீள்கனல்பூசநிறைபரணி
துரைவுறுசட்டியுமேகாதசியுந்துதியையொடு
புரைவுறுசித்திரைசத்தமிநாசமென்பூங்கொடியே.

(இ-ள்.) திங்கட்கிழமை கூடின பூராடம், உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி, மகம், அனுஷம், விசாகம், கார்த்திகை, பூசம், பரணி, சட்டி, ஏகாதசி, சத்தமி, துதியையுடன்கூடின சித்திரை இவை நாசயோகம். எ-று.

செவ்வாய்.

பூமகன்வாரத்துடன்வருபூராடம்பூசமராத்
தாமருள்கேட்டைசதயம்விசாகந்தசமியுடன்
பாமருசெங்கைபுட்சத்தமிபஞ்சமிபங்கயணு
ணமமர்பூரணைநாசயோகமென்னறுநுதலே.

(இ-ள்.) செவ்வாய்க்கிழமை கூடின பூராடம், பூசம், ஆயிலியம், கேட்டை, சதயம், விசாகம், தசமி, திருவாதிரை, அவிட்டம், சத்தமி, பஞ்சமி, ரோகிணியுடன் கூடின பௌரணை இவை நாசயோகம். எ-று. (௫)

புதன்.

மதிமகன்வாரத்துடன்வருமூலம்மகம்பரிபுட்
பதிபெறிரேவதிசத்தமிகூடும்பரணியராப்
பிதிர்தருபாதந்துதியைதிருதியைபிரதமைசட்டி
விதிபெறுமட்டமிநாசயோகம்மென்விளங்கிழையே.

(இ-ள்.) புதன்கிழமை கூடின மூலம், மகம், அச்சுவினி, அவிட்டம், ரேவதி, ஆயிலியம், பூரட்டாதி, துதியை, திருதியை, பிரதமை, சட்டி, அட்டமி, சத்தமியுடன்கூடின பரணி இவை நாசயோகம். எ-று. (௬)

வியாழன்.

குருவுடைவாரத்துச்சித்திரையுத்தரங்கூரெரிநா
ளுருண்முதன்மூன்றுபரணிவிசாகமுலக்கைகேட்டை
தருபனைசேர்திரயோதசிதுவாதசிசட்டியெட்டாய்
வருதிதிநாசஞ்செய்யோகமென்றோதினன்வாசிட்டனே.

(இ-ள்.) வியாழக்கிழமை கூடின சித்திரை, உத்தரம், கார்த்திகை, ரோகிணி, மிருகசீரிடம், திருவாதிரை, பரணி, விசாகம், திருவோணம், கேட்டை, துவாதசி, சட்டி, அட்டமி, அனுஷத்துடன்கூடின திரயோதசி இவை நாசயோகம். எ-று. (௭)

வெள்ளி.

புகருடைவாரத்துப்புட்பனைபூசமுரோகிணியு
நிகரிலறுவைமகமாயில்கேட்டைநெடுஞ்சுளகு
திகழ்தருசட்டிசேரோணந்தசமிமூன்றெட்டிரண்டு
மிகவுறுபன்னொன்றுநாசமென்றோதினரிந்நிலத்தே.

(இ-ள்.) வெள்ளிக்கிழமை கூடின அவிட்டம், அனுஷம், பூசம், ரோகிணி, சித்திரை, மகம், ஆயிலியம், கேட்டை, விசாகம், தசமி, திருதியை, அட்டமி, துதியை, ஏகாதசி, சட்டிகூடின திருவோணம் இவை நாசயோகம். எ-று. (௮)

சனி.

சனிசெறியுத்தரமாதிமூன்றோணஞ்சதயங்கழை
நினைவுறுபூராடமுத்தராடம்பூசநீள்பரணி
நனிவருசத்தமிமூன்றுபன்னொன்றுநவமிகலம்
புனைதருமட்டமிநாசயோகம்மென்புணர்முலையே.

(இ-ள்.) சனிக்கிழமை கூடின உத்தரம், அத்தம், சித்திரை, திருவோணம், சதயம், புநர்பூசம், பூராடம், உத்தராடம், பூசம், பரணி, சத்தமி, திருதியை, ஏகாதசி, நவமி, ரேவதியுடன்கூடின அட்டமி இவை நாசயோகம். எ-று. (எ)

நாசயோக நிஷித்தம்.

நாட்டியநாசயோகத்திடைநல்வினைசெய்யவெண்ணிற்
கூட்டியதென்கடுவைக்குணசீலர்தங்கூடலர்போ
லீட்டியதீவினையாலிடர்கூர்ந்தெழுநல்குரவா
லோட்டிலிரந்துண்பரென்றறிநல்லவொளிவளையே.

(இ-ள்.) சொல்லப்பட்ட நாசயோகத்திலே சுபகன்மங்களைச் செய்பவர்கள் கடுவைக்குவேந்தனுடைய சத்துருக்களைப்போலத் தீவினையால்வருந்தி இடர்ப்பட்டு வறுமையினால் ஓட்டிலே யாசிப்பார்கள். எ-று. (அ)

நாசயோகாபவாதம்.

வளருமதியநட்பெய்திநற்காலின்மகிழ்ந்துநிற்ப
வளவினில்வாரத்திறைவலியின்றியமைந்துசாலத்
தளர்வொன்றிநின்றிடிற்சாற்றியநாசயோகத்திலந்நாள்
வளமுண்டுநல்வினைக்கென்றுநன்மந்திரிவைத்தனனே.

(இ-ள்.) சந்திரன் பூரணனாய் நட்பாட்சியுச்சத்துச் சுபாங்கிசத்து நிற்ப, வாராதிபதி வலியின்றியே பகை நீசத்தில் நிற்பில், சொல்லப்பட்ட நாசயோகங்களெல்லாம் மிக்க சுபயோகமாமென்று வியாழபகவானாற்சொல்லப்பட்டது. எ-று. (௯)

சுபயோகம்.

ஞாயிறு.

பரிதிதருமூலம்பூராடமத்தம்பஞ்சாயுதனா
ளிருவகைப்பூசமூன்றுத்தரநாவாயிவைசுபமாந்
தருநந்தைகூடுஞ்சதயங்கனல்சங்கரனாறுவை
பெருநன்மைசெய்யும்வரயோகநந்தையும்பேரமுதே.

(இ-ள்.) ஞாயிற்றுக்கிழமை கூடின மூலம், பூராடம், அத்தம், திருவோணம், புநர்பூசம், பூசம், உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி, ரேவதி இவை சுபயோகம். நந்தையுடன்கூடின சதயம், கார்த்திகை, திருவாதிரை, சித்திரை இவை வரயோகம். சட்டிதவிர நந்தையுஞ் சுபயோகமாம். எ-று.

திங்கள்.

திங்கடருங்கழைசோணைமகசிரஞ்செக்குருடே
ரங்கியவிட்டம்விளக்குப்பதங்கேட்டையாங்குநல்ல
சங்கச்சயைபத்திரையுடன்கூடிடிற்சாலநன்றாங்
கொங்கைத்தருங்குழலாய்சித்தயோகமெனக்குறியே.

(இ-ள்.) திங்கட்கிழமைகூடின புநர்பூசம், திருவோணம், மிருகசீரிடம், சதயம், ரோகிணி, அத்தம், அவிட்டம், சுவாதி, பூரட்டாதி, கேட்டை இவை சுபயோகமாம். பக்கங்களிற் பத்திரை, சயை கூடிற் சித்தயோகமென்றும், அமிர்தயோகமென்றும், சுபயோகமென்றும் வழங்கப்படும். சத்தமிதவிர. எ-று. (௧௧)

செவ்வாய்.

செய்யவன்வாரஞ்செறியுத்தரமூன்றுசேர்பரணி
வெய்யசகடம்பரிசயைபத்திரைமிக்கசுப
மையகலங்கொக்குச்சோதியரவமணைந்தநந்தை
வையந்தரும்வரயோகமென்றோதினன்வாசிட்டனே.

(இ-ள்.) செவ்வாய்க்கிழமைகூடின உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி, பரணி, ரோகிணி, அச்சுவினி, சயை, பத்திரை இவை சுபயோகமாம். ரேவதி, மூலம், சுவாதி, ஆயிலியம் இவற்றுடன் நந்தைகூடின் வரயோகமாம். சத்தமி தவிரப்படும். நந்தையுஞ் சுபயோகமாம். எ-று. (௧௨)

புதன்.

புந்திதருங்கனன்மான்றலைபெண்ணைமுப்பூரஞ்செங்கை
யுந்துமுருளுத்தரமுத்தராட்டமுயர்ந்தசயை
சுந்தரபத்திரைநித்தஞ்சுபஞ்செயும்யோகமென்றே
மந்திரிநூன்முறைவைத்தனன்விற்பொலிவாணுதலே.

(இ-ள்.) புதன்கிழமைகூடின கார்த்திகை, மிருகசீரிடம், அஷனும், பூரம், பூராடம், பூரட்டாதி, திருவாதிரை, ரோகிணி, உத்தரம், உத்தராடம், சயை, பத்திரை இவை சுபயோகமாம். துதியை திருதியை அட்டமி தவிர. எ-று. (௧௩)

வியாழன்.

வியாழந்தரும்பரிபூசம்புனர்தம்விளக்குமக
நியாயந்தருங்கலம்பூராடஞ்சுண்ணநெறியரவந்
தயாவிலிரித்தைவளர்ச்சியுங்கூடிடிற்சாலநன்றென்
றுயாவிநெறிநின்றுரையிந்துவாணுதலொண்ணகையே.

(இ-ள்.) வியாழக்கிழமைகூடின அச்சுவினி, புநர்பூசம், பூசம், சுவாதி, மகம், ரேவதி, பூராடம், சதயம், ஆயிலியம், இரித்தை, பூரணை இவை சுபயோகம். எ-று. (௧௪)

வெள்ளி.

வெள்ளிதருபூரமூலம்பரணிவிளக்குக்கல
மொள்ளியவுத்தரமத்தமறுவைசதயமோணந்
துள்ளும்பரிசயைபத்திரைநந்தைசுபமனைத்துங்
கொள்ளுங்குணங்கடருஞ்சித்தயோகங்கொடியிடையே.

(இ-ள்.) வெள்ளிக்கிழமைகூடின பூரம், மூலம், பரணி, சுவாதி, ரேவதி, உத்தரம், அத்தம், சித்திரை, சதயம், திருவோணம், அச்சுவினி, சயை, பத்திரை, நந்தை இவை சித்தயோகம். துதியை, திருதியை அட்டமி ஏகாதசி தவிர. எ-று. (௧௫)

சனி.

சனிதருகார்த்திகைகேட்டைசதயஞ்சகடுமுறம்
பனிதருபெண்ணைமரக்கால்பறவையும்பத்திரையு
நனிசேரிருத்தைவளர்ச்சியிவைநல்லயோகமென்றே
கனியிதழ்வாய்மயிலேகலைவல்லவர்காட்டினரே.

(இ-ள்.) சனிக்கிழமைகூடின கார்த்திகை, கேட்டை, சதயம், ரோகிணி, விசாகம், அனுஷம், சுவாதி, அவிட்டம், பத்திரை, இரித்தை, பூரணை இவை சுபயோகம். சத்தமி நவமி தவிர. எ-று. (௧௬)

சுபயோகமான்மியம்.

திருந்தியயோகத்துநல்வினைசெய்திடிற்றென்கடுவைப்
பொருந்தியவேளாண்டலைவரைப்போலப்புகழுடனே
விருந்துடனுண்டலுமெய்யுஞ்சிறப்புமிகவிளங்கி
நிரந்தரஞ்செல்வத்துநீடூழிவாழ்வரிந்நீணிலத்தே.

(இ-ள்.) இந்தச் சுபயோகத்திலே சுபகருமங்களைச் செய்பவர்கள், தென்கடுவைப்பதியைச் சேர்ந்த வேளாளரைப்போல, எந்நாளும் புகழையும், விருந்தினரோடு போசனஞ் செய்தலையும், தேகாரோக்கியத்தையும், சிறப்பையுமுடையராய் விளங்கி, குறையாத செல்வத்தோடு இப்பூமியின் கண்ணே நெடுங்காலம் வாழ்வர்கள். எ-று. (௧௭)

யோகங்கட்குப்புறனடை.

கூவுமோரேழ்கவியாஞ்சுபயோகத்திற்கூறுபக்கஞ்
சாவுண்டதிற்சில்சட்டிவெய்யோன்சத்தமிமதியந்
தாவுசேயேழ்புதன்மூன்றெட்டிரண்டுதருஞ்சல்லிய
னேவுபன்னொன்றிரண்டெட்டுமூன்றந்தகனேழ்நவமே.

(இ-ள்.) வாரமேழுக்குஞ் சுபயோகஞ் சொன்ன செய்யுட்களிலே சுபயோகமென்று கூறிய திதிகளுள் நாசயோகத்துக்கமைந்த திதிகளுஞ் சிலவுள. அவை: ஞாயிற்றுக்கிழமை சட்டியும், திங்கட்கிழமையும், செவ்வாய்க்கிழமையும் சத்தமியும், புதன்கிழமை துதியை, திருதியை, அட்டமியும், வெள்ளிக்கிழமை துதியை, திருதியை, அட்டமி, ஏகாதசியும், சனிக்கிழமை சத்தமி, நவமியுமாம். இவ்வாரங்களில் இத்திதிகள் அவயோகமென்று நீக்கப்படுவனவாம். எ-று. (௧௮)

சித்தாமிர்தநாசயோகம்.

அத்தமகசிரமாதிபனைபூசமந்தம்பண்டி
சித்தங்குருகுமுதலாகநந்நாலுநாட்சேர்ந்தமுதாய்
நித்தம்விசாகமுதனிரைமூன்றுதீதொன்றமிர்தாய்
வைத்தனர்யோகங்கள்ஞாயிறேயாதிவாரத்தடைவே.

(இ-ள்.) ஞாயிற்றுக்கிழமை முதலாக எழுவாரங்களிலும் முறையே அத்தம், மிருகசீரிடம், அச்சுவினி, அனுஷம், பூசம், ரேவதி, ரோகிணி இவை சித்தயோகம். ஞாயிறாதி மூலமுதல் அபிசித்து உட்பட முறையே வாரமொன்றுக்கு நாலுநாள் அமிர்தயோகம்; ஞாயிறாதி விசாகமுதலடைவே மூன்றுநாள் நாசயோகம்: ஒருநாள் அமிர்தயோகம் என்று வாரந்தோறுமறியப்படும். அமிர்தயோகமென்றும், சித்தயோகமென்றும், சுபயோகமென்றும் உத்தம யோகத்துக்குப் பெயராம். எ-று. (௧௯)

தினமிருத்து.

அத்தமவிட்டம்விசாகமொடாதிரையாயிலிய
முத்தரட்டாதிபரணிமூலம்முதற்காலடைவே
வைத்ததினமிரண்டிற்கொருபாதம்வரன்முறையே
சத்தமறிவோர்தினமிருத்தென்றனர்தாழ்குழலே.

(இ-ள்.) அத்தம், அவிட்டம் முதற்கால், விசாகம், திருவாதிரை இரண்டாங்கால், ஆயிலியம், உத்தரட்டாதி மூன்றாங்கால், பரணி, மூலம் நாலாங்கால் இவை தினமிருத்துவாம். எ-று. (௨௦)

திவாரோகம்.

முதற்கால்கவையைப்பசிக்கிரண்டாம்பாதமூலமடுப்
பதற்காலுலக்கையதனொடுபங்குனியந்தத்திற்கு
மதிக்காயநாட்சோதியானதிவாரோகமென்றுதீதாய்
விதித்தார்கணூலின்றிறம்வழுவாதுணர்வித்தகரே.

(இ-ள்.) ஆயிலியம் அச்சுவினி முதற்கால், பரணி மூலம் இரண்டாங்கால், திருவோணம் உத்தரம் மூன்றாங்கால், மிருகசீரிடம் சுவாதி நாலாங்கால் இவை திவாரோகமாம். எ-று. (௨௧)

தினமிருத்து, திவாரோகாபவாதம்.

சொற்றதினமிருத்துந்திவாரோர்கமுஞ்சூழந்தகால்கள்
குற்றம்பகலுளவாமிரவில்லைக்குளிர்மதிய
முற்றும்வளர்வுறுகாலத்துமொண்கோட்கள்சேர்விடத்தும்
விற்றருபூணுதலாய்பகற்காலமிகவுநன்றே.

(இ-ள்.) தினமிருத்துத் திவாரோகங்களில், சுபகன்மங்கள் பண்ணலாகாது. இந்த நாட்களில் இக்கால்களிற் பகற்பண்ணுஞ் சுபகன்மங்கள் தவிரப்படும். இக்கால்கள் இரவுக்காம். சந்திரன் பூரணனாய் ஒரு சுபக்கிரகத்துடன் நிற்பிற் பகலுந் தோஷமில்லை. எ-று. (௨௨)

தியாச்சியம்.

அத்தமிருபத்திரண்டிலரா முப்பத்திரண்டிலீச
னொத்தமுறம்பதினான்கிற்கலையினிற்பாதமுப்பான்
வைத்தகலங்களையாரன்மகமிருபத்துநான்கி
னுத்தரட்டாதிபரணியுடைகுளத்தூண்விடமே.

(இ-ள்.) அத்தத்துக்கு இருபத்திரண்டின்மேல், ஆயிலியத்துக்கு முப்பத்திரண்டின்மேல், திருவாதிரைக்குப் பதினொன்றின்மேல், விசாகத்துக்குப் பதினான்கின்மேல், பூரட்டாதிக்குப் பதினாறின்மேல், ரேவதி, புனர்பூசம், கார்த்திகை, மகம் இவற்றிற்கு முப்பதின்மேல், உத்தரட்டாதி, பரணி, பூராடம் இவற்றிற்கு இருபத்துநாலின்மேல் விஷம். எ-று. (௨௩)

இதுவுமது.

இருபதிற்பூசங்கடைக்குளமூலமெலியறாவை
யொருபதிற்புட்பனையோணமெனைப்பசியைம்பதின்மேன்
வருபதினான்கின்மதிமரக்கால்கேட்டைநாற்பதின்மே
லுருள்பதினெட்டின்மேலுத்தரஞ்சுண்ணநஞ்சூறிடமே.

(இ-ள்.) பூசம், உத்தராடம், மூலம், பூரம், சித்திரை இவற்றுக்கு இருபதின்மேல், அவிட்டம், அனுஷம், திருவோணம் இவற்றுக்குப் பத்தின்மேல், அச்சுவினிக்கு ஐம்பதின்மேல்; மிருகசீரிடம், சுவாதி, கேட்டை இவற்றுக்குப் பதினாலின்மேல், ரோகிணிக்கு நாற்பதின்மேல், உத்தரம், சதயம் இவற்றுக்குப் பதினெட்டின்மேல் விஷம். எ-று. (௨௪)

தியாச்சியாபவாதம்.

முன்னியநாளில்விடமுறுகாலின்முறையில்வைத்த
நன்னெறிநாழிகைமேனான்குகன்னனஞ்சென்பர்நற்கால்
மன்னுமதியைநற்கோனோக்கினுங்கூடிவந்தெழினும்
பொன்னவன்கண்டத்துறினுமமுதெனப்போற்றுவரே.

(இ-ள்.) சொன்ன நாட்களிலே சொன்ன நாழிகைக்குமேல் நாலுநாழிகை விஷம். இதிற் சகல மங்கலகாரியங்களுந் தவிரப்படும். இந்த விஷகடிகை சந்திரன் சுபாங்கிசத்துநிற்பச் சுபக்கிரகத்தாற் பார்க்கப்பெறினும், சுபக்கிரகத்துடன் கூடிநிற்பினும், வியாழன் கேந்திர திரிகோணங்களில் நிற்பினும் விஷகடிகைத் தோஷமில்லை. அப்பொழுது அமுதத்தைப் பண்ணுஞ் சந்திரன். எ-று. (௨௫)

அமுதகடிகை.

பூதமதியெலிமுப்பதிற்பன்னொன்றிற்பூசமூவே
ழாதியைம்பானமழனாற்பதிற்பாம்போடரனமுதாம்
பாதம்புனல்பத்தினேழத்தம்பன்னெட்டினீண்முரசு
சோதியிருபத்திரண்டினிற்றோணியிலாறிரண்டே.

(இ-ள்.) பரணி, மிருகசீரிடம், பூரம் இவற்றுக்கு முப்பதுநாழிகைக்குமேல்; பூசத்துக்குப் பதினொன்றின்மேல்; அச்சுவினிக்கு இருபத்தொன்றின்மேல்; கார்த்திகைக்கு ஐம்பதின்மேல்; திருவாதிரை, ஆயிலியம் இவற்றுக்கு நாற்பதின்மேல்; பூராடம், பூரட்டாதி இவற்றுக்குப் பத்தின்மேல்; அத்தத்துக்கு எழின்மேல்; உத்தரட்டாதிக்குப் பதினெட்டின்மேல்; சுவாதிக்கு இருபத்திரண்டின்மேல்; ரேவதிக்குப் பன்னிரண்டின்மேல் முறையே நாலுநாழிகை அமிர்தகடிகையாம். எ-று. (௨௬)

இதுவுமது.

தாலங்குருகாடிபுள்வேய்சகடமீரேழிற்கலை
மேலுமறுவையிற்கேட்டைமுப்பத்தொன்றின்மேல்விசாகம்
பாலுமரிமருங்குன்றிருபானுத்தரமுப்பதின்
மேலுங்கடிகைமூன்றுங்கதன்மேனான்கமுதமென்னே.

(இ-ள்.) அனுஷம், மூலம், உத்தராடம், அவிட்டம், புனர்பூசம், ரோகிணி இவற்றுக்குப் பதினாலுநாழிகைக்குமேல்; சித்திரைக்குப் பதினாறின்மேல்; கேட்டைக்கு முப்பத்தொன்றின்மேல்; விசாகம், திருவோணம், மகம், சதயம் இவற்றுக்கு இருபதின்மேல்; உத்தரத்துக்கு முப்பத்துமூன்றின்மேல் முறையே நாலுநாழிகை அமிர்தகடிகையாம். எ-று.

முன்சொன்ன விஷகடிகைக்குமேல் நாலுநாழிகை அமிர்தகடிகையென்று கூறுவாருமுளர். (௨௭)

மாதசூனியம்.

சித்திரைக்குப்பரிதேரட்டமிகுடமேகாதசி
சுத்தவைகாசிக்குச்சோதியறுவைதுவாதசியு
முத்தரட்டாதிகுருமீனஞ்சூனியமொண்கழைசே
வைத்ததிரயோதசியானிக்கோதினன்வாசிட்டனே.

(இ-ள்.) சித்திரைமாதத்துக்கு அச்சுவினி, ரோகிணி, அட்டமி, எகாதசி, கும்பம்; வைகாசிமாதத்துக்குச் சித்திரை, சுவாதி, உத்தர்ட்டாதி, பூசம், துவாதசி, மீனம்; ஆனிமாதத்துக்குப் புனர்பூசம், திரயோதசி, இடபம்; சூனியம். எ-று. (௨௮)

இதுவுமது.

விட்டம்புனலுத்தராடம்பன்னான்குமிதுனமாடிக்
கொட்டியவாவணிக்கானிநீர்பூரணையொண்கொறியா
மிட்டகலஞ்செக்குச்சத்தமிகன்னியிவைபுரட்டை
சுட்டொன்பதும்பத்துந்தேளும்பதந்துலைசூனியமே.

(இ-ள்.) ஆடிமாதத்துக்குப் பூராடம், உத்தராடம், அவிட்டம், சதுர்த்தசி, மிதுனம்; ஆவணிமாதத்துக்குப் பூராடம், உத்தராடம், பௌரணை, மேடம்; புரட்டாதிமாதத்துக்குச் சதயம், ரேவதி, சத்தமி, கன்னி; ஐப்பசிமாதத்துக்குப் பூரட்டாதி, நவமி, தசமி, விருச்சிகம்; சூனியம். எ-று. (௨௯)

இதுவுமது.

பூசங்கனன்மகமான்றலைபஞ்சமிபொற்றிருதியை
மூசுந்துலையிவைகார்த்திகைக்காமுறந்தாலந்தனு
மாசின்முரசிரண்டொன்பதுமார்கழிக்காகுமத்த
மீசனரவம்பிரதமைகுளிர்தைக்குச்சூனியமே.

(இ-ள்.) கார்த்திகைமாதத்துக்குப் பூசம், கார்த்திகை, மகம், மிருகசீரிடம், பஞ்சமி, திருதியை, துலாம்; மார்கழிமாதத்துக்கு விசாகம், அனுஷம், உத்தரட்டாதி, துதியை, நவமி, தனு; தைமாதத்துக்கு அத்தம், திருவாதிரை, ஆயிலியம், பிரதமை கர்க்கடகம்; சூனியம். எ-று. (௩௰)

இதுவுமது.

மூலமுகுந்தன்சதுர்த்தியுமுற்றுஞ்சுருத்தசமி
யேனுநன்மாசிக்கெழிலடுப்பிந்திரனோர்கொள்சிங்கஞ்
சானுஞ்சதுர்த்தசிசூனியமாகச்சகலகலை
நூலிங்குணர்ந்தவர்பங்குனிக்கென்றுநுவன்றனரே.

(இ-ள்.) மாசிமாதத்துக்கு மூலம், திருவோணம், சதுர்த்தி, தசமி, மகரம்; பங்குனிமாதத்துக்குப் பரணி, கேட்டை, சதுர்த்தசி, சிங்கம்; இவை சூனியநட்சத்திர திதி ராசியாம். எ-று. (௩௧)

மாதசூனியாபவாதம்.

திங்களிற்சூனியஞ்சாந்திரமாதத்திற்சேர்கைதிடம்
வெங்கதிர்மாதத்தினும்விதியாம்வெண்ணிலாவலவன்
செங்கண்விடையினிற்சேரினுங்கோணகண்டங்களிற்பொன்
றங்குதனேக்குதல்செய்யினுஞ்சூனியஞ்சாலநன்றே.

(இ-ள்.) மாதசூனியங்கள் சாந்திரமாதங்களிலே கொள்ளல்வேண்டும். சௌரமாதத்தினுங் கொள்ளப்படும். சந்திரன் கர்க்கடகத்திலேயாயினும் இடபத்திலேயாயினும் நிற்க, இவனுக்குக் கேந்திரத்திலேயாயினும் திரிகோணத்திலேயாயினும் வியாழன் நின்றாலும், நோக்கினாலும் மாதசூனியமென்கின்ற நட்சத்திர திதி ராசி தோஷமில்லை. எ-று. (௩௨)

சடசீதி.

சரத்தினிலேழுந்திரத்தினிலைந்துந்தடங்கதிரோ
னுரத்துறுபாகமுபயத்துளொன்பதுமுற்றவங்நா
ணிரைத்தசடசீதியென்றெழித்தார்கன்னனீங்குபாகைக்
குரைத்தவறுபதுமாகாதனவென்றெழிவளையே.

(இ-ள்.) ஆதித்தன் சரராசியில் நின்றால் ஏழாம்பாகமும், திரராசியில் நின்றால் ஐந்தாம்பாகமும், உபயராசியில் நின்றால் ஒன்பதாம்பாகமும் சடசீதியென்னுந் தோஷமாம். இந்தப் பாகங்களுற்ற நாளிற் சுபகருமங்கள் செய்யலாகாது. எ-று. (௩௩)

பூகப்பாதிதோஷம்.

பாகஞ்செறிசுடர்மன்னியநாளாதியேழும்பத்து
மோகந்தரும்பதினைந்திருபத்தொன்றுமுன்முறையே
பூகப்பமுற்கம்பிரமதண்டங்கொடியென்றுபொல்லா
யோகங்கனல்வினைக்காகாவெனவுரையொண்ணுதலே.

(இ-ள்.) ஆதித்தனின்றநாளுக்கு ஏழாநாள் பூகம்பம், பத்தாநாள் உற்கம், பதினைந்தாநாள் பிரமதண்டம், இருபத்தொராநாள் காலத்துவசம் என்று பெயராம். இந்த நாலுயோகங்களினுஞ் சுபகாரியஞ் செய்யலாகாது. எ-று. (௩௪)

ஆசீவிஷம்.

வெய்யோன்மதியுடன்சேர்நாட்கிரண்டுவிரோதமொன்பான்
செய்யபரிகம்பதின்மூன்றுவச்சிரமாறுதண்டந்
துய்யபதினாறுகண்டம்பதினெட்டுச்சூலம்பாத
மையபத்தொன்பதுமாசீவிடமென்றறைந்தனரே.

(இ-ள்.) ஆதித்தனுஞ் சந்திரனுங் கூடின நாளான அமாவாசையுற்ற நாளுக்கு இரண்டாநாள் விரோதம், ஒன்பதாநாள் பரிகம், பதின்மூன்றாநாள் வச்சிரம், ஆறாநாள் தண்டம், பதினாறாநாள் கண்டம், பதினெட்டாநாள் சூலம், பத்தொன்பதாநாள் வியதீபாதம் என்று சொல்லப்பட்ட ஏழுயோகத்துக்கும் ஆசீவிஷம் என்று பெயராம். இதிற் சர்வ மங்கலகாரியங்களுந் தவிரப்படும். எ-று. (௩௫)

ஆசீவிஷாபவாதம்.

தேசுறுவெண்மதிவெய்யவனற்கால்சிறந்தடைய
மாசில்குருத்திரிகோணகண்டத்தும்வர்க்கோத்தமத்துங்
காசணிபூண்முலையாய்நிற்பினன்றாட்கணிதம்வல்லோர்
பேசியவாசீவிடந்தானுநன்றெனப்பேசினரே.

(இ-ள்.) பூருவபக்கத்துச் சந்திரன், ஆதித்தியனிவர்கள் சுபாங்கிசத்து நிற்ப, வியாழன் கேந்திரத்திலாதல், திரிகோணத்திலாதல், வர்க்கோத்தமத்திலாதல் நிற்கிற் சொல்லப்பட்ட ஆசீவிஷதோஷமில்லை. எ-று. (௩௬)

கண்டகம், தூணம், கண்டகத்தூணம்.

சுடரவன்செய்யவனின்றநாளாதிமூலாந்தத்தொகை
யடைவுறுமூலாதிநாட்கண்டகந்தூணமாங்கிரண்டின்
படர்தொகைமூலாதிநாட்கண்டகத்தூணம்பான்மொழியா
யடைவிலைநல்வினைக்கென்றமரேசனறைந்தனனே.

(இ-ள்.) ஆதித்தனின்ற நாள்முதல் மூலமிறுதியாக எண்ணி வந்த தொகையை மூலமுதலாகக் கழித்தால் உற்றநாள் கண்டகமென்று பெயராம். செவ்வாய்நின்ற நாள்முதல் மூலமிறுதியாக எண்ணிக் கண்ட தொகையை மூலமுதலாகக் கழித்தால் உற்றநாள் தூணமென்று பெயராம். இவ்விரண்டு தொகையையுங்கூட்டி மூலமுதலாகக் கழித்தால் உற்றநாள் கண்டகத்தூணமென்று பெயராம். இம்மூன்றுவகையிலும் உற்றநாள் சுபகன்மங்களுக்காகாவென்று பிருகஸ்பதிபகவான் கூறினர். எ-று. (௩௭)

இரத்ததூணம்.

கோளரியிற்பதினெட்டாயபாகத்திடைக்குசனை
மீளவெடுத்தநிலையவந்நாளில்விளங்கியெழு
நாளுறுகாலங்கணல்வினைசெய்திடிற்றீவினையாம்
வாளமர்கண்மடவாய்ரத்ததூணமாநாளென்பரே.

(இ-ள்.) நான்கிராசியுமே பதினெட்டுப் பாகையும் வைத்து இதிலே அற்றைச் செவ்வாயுடைய சுத்தப் புடத்தைக் கழித்து நின்றதனை நாள்பார்க்கும்படியே பார்த்தால் அற்றைநாளுறில் அந்நாள் இரத்ததூணமென்று பெயர்பெறும். இந்நாள் சுபகன்மங்களுக்காகாது. எ-று. (௩௮)

பூகம்பாதி தோஷாபவாதம்.

தம்முடையில்லிலுச்சத்திற்குசன்கதிர்சார்வுறுமேல்
விம்முறுகண்டகத்தூணங்கண்மிக்கவிரத்ததூணஞ்
செம்மையினன்றென்பர்செங்கதிரோனாட்சிதுங்கஞ்சேர
விம்முறைநன்னோக்கிற்பூகம்பமாதிகணன்றென்பரே.

(இ-ள்.) ஆதித்தனுஞ் செவ்வாயும் தத்த முச்சத்திலே நிற்றல், ஆட்சியிலே நிற்றல் செய்யின் கண்டகமும், தூணமும், கண்டகத்தூணமும், இரத்ததூணமும் என்ற தோஷங்களில்லை. ஆதித்தன் ஆட்சியுச்சத்திலே நின்று நோக்கின் பூகம்பம், உற்கம், பிரமதண்டம், காலத்துவசமென்ற தோஷங்களில்லையாம். எ-று. (௩௯)

அனலாதிகிரகதோஷம்.

செய்யவனின்றநாட்கேழிருபத்தைந்துசேர்பதினு
றையபன்னான்குமனலமென்றூரணிமானிலைக்குத்
துய்யபதினெட்டுந்தொக்கவிருபத்துநான்கினையும்
வெய்யவென்றூர்குருநின்றநாட்கொன்பதேழ்வெப்பென்பரே.

(இ-ள்.) செவ்வாய் நின்றநாளுக்கு எழாநாள், பதினாலாநாள், பதினாறாநாள், இருபத்தைந்தாநாள் இவை அனலநட்சத்திரமாம். புதனின்ற நாளுக்குப் பதினெட்டாநாள், இருபத்துநாலாநாள் இவை உக்கிரநட்சத்திரமாம். பிருகஸ்பதி நின்ற நாளுக்கு எழாநாள், ஒன்பதாநாள் வெப்புநட்சத்திரமாம். எ-று. (௪௦)

இதுவுமது.

பத்தாஞ் † சிதனிலைநாசமரவைந்தும்பத்தொடொன்றும்
வைத்தார்பதின்மூன்றுமந்தற்கிருபதுமாறும்பன்னொன்
றொத்தானபத்தும்விடமோகயோகமென்றெண்ணுதலா
யித்தாரணியினல்லோர்கண்டகமென்றிசைப்பர்களே.

(இ-ள்.) சுக்கிரனின்ற நாளுக்குப் பத்தாநாள் நாசநட்சத்திரம். இராகு நின்ற நாளுக்கு ஐந்தாநாள், பதினோராநாள், பதின்மூன்றாநாள் விஷநட்சத்திரம். சனிநின்ற நாளுக்கு ஆறாநாள், பத்தாநாள், பதினோராநாள், இருபதாநாள் இவை மோகநட்சத்திரம். இப்படிச் சொல்லப்பட்ட அனலம், உக்கிரம், சுரம், நாசம், விஷம், மோகமென்ற நாட்கள் கண்டகமெனப் பெயர்பெறும். இவற்றிற் சுபகன்மங்கள் தவிரப்படும். எ-று. (௪௧)

இதுவுமது.

வெய்யவனால்வருநாட்கண்டகந்தனக்காமிடுக்கண்
செய்யவனால்வருநாட்டூணகந்தீங்குதான்மிகுதி
பையரவால்வருநாள்விடமாம்பகைவஞ்சங்காரி
யையுறுநாணல்லவர்க்குற்றநாட்கணலமிலவே.

(இ-ள்.) ஆதித்தனால் வருநாள் கண்டகமென்றுங் கர்த்தாவுக்குத் துக்கமென்றும், செவ்வாயால் வருநாள் தூணகமென்றும் மிகுந்த பீடையென்றும், இராகுவால் வருநாள் விஷமென்றும், சனியால் வருநாள் பகையென்றும் வஞ்சநாளென்றும், அல்லாத சுபக்கோள்களால் வந்த நாட்கள் துன்பத்தைச் செய்வனவாதலால் நன்மையுடையனவல்லவென்றும் அறிக. எ-று.

கண்டகாதியபவாதம்.

இயல்பாயவாட்சியிலுச்சத்திலுற்றிடவெய்துநற்கோள்
செயலாயநோக்கொடுவர்க்கோத்தமஞ்சேரல்செம்பொனெழு
லுயர்வாமதியாதலவ்வவர்வாரமதுற்றுளதேற்
கயலாம்விழிமயிலேகண்டகாதிகணன்றென்பரே.

(இ-ள்.) சொல்லப்பட்ட கண்டகாதியான தோஷங்களுக்குரிய கிரகங்கள் ஆட்சியில் உச்சத்தில் நிற்றல், ஒரு சுபக்கோளினாற் பார்க்கப்படுதல், வர்க்கோத்தமத்திலே நிற்றல், பிருகஸ்பதியாயினும் பூரணசந்திரனாயினும் உதயமாதல், தத்தம் வாரோதயமிவையுண்டாகில் இந்தத் தோஷங்களில்லை. எ-று. (௪௩)

திரிராசிதோஷம்.

அரிகலைமூன்றிலலவன்வில்லேழிலரிவைதடி
பரிவுறுமைந்தில்விடைமீன்பதின்மூன்றிற்பான்மொழியாய்
தெரிசிலைமீனம்பதினொன்றிற்றேளரியொன்பதினி
லொருகலைகோன்முதற்பக்கத்தினுங்கழியோரையென்னே.

---

† சிதன் = சுக்கிரன்.

(இ-ள்.) திருதியையிலே சிங்கம் மகரம், சத்தமியிலே கர்க்கடகம் தனு, பஞ்சமியிலே கன்னி மிதுனம், திரயோதசியிலே இடபம் மீனம், ஏகாதசியிலே தனு மீனம், நவமியிலே விருச்சிகம் சிங்கம், பிரதமையிலே மகரம் துலாம், இந்தத் திதிகளிலே இந்த இராசிகளுதயமாகச் சுபகன்மங்கள் பண்ணலாகாது. எ-று. (௪௪)

திதிராசிதோஷாபவாதம்.

மறியரியாறின்மகடடியெட்டில்வரிவின்மீனம்
பெறுதுமிரண்டிற்றுலைகலையிராறிற்பேசுறதேட்
செறியரியீரைந்திற்சால்சேவொருநாலிற்றீதுசீவ
னெறியுதயங்கண்டமில்லுடையோருடனிற்கினன்றே.

(இ-ள்.) சட்டியிலே மேடம் சிங்கம், அட்டமியிலே மிதுனம் கன்னி, துதியையிலே தனு மீனம், துவாதசியிலே துலாம் மகரம், தசமியிலே விருச்சிகம் சிங்கம், சதுர்த்தியிலே இடபம் கும்பம், இந்தத் திதிகளிலே இந்த இராசிகளுதயமாகச் சுபகன்மங்கள்செய்யிற் றீங்குசம்பவிக்கும். வியாழன் உதயத்திலாயினும் கேந்திரங்களிலாயினும் அவ்விராசியதிபதிகளோடு கூடியாயினும் நிற்பிற் சொல்லப்பட்ட திதி ராசி தோஷமில்லை. எ-று. (௪௫)

சகடதோஷம்.

அந்தணனின்றவிராசிதனக்காங்கணிமதியம்
வந்துறுமோரையாறெட்டீராறுமாயிடுமேற்
சந்தமறிபவர்தான்சகடம்மெண்பர்தாழ்ந்திருண்ட
கந்தநறுங்குழற்பூங்கமலக்கட்கனங்குழையே.

(இ-ள்.) விழாழன்நின்ற இராசிக்கு ஆறில், எட்டில், பன்னிரண்டில் சந்திரன்நிற்கிற் சகடதோஷமாம். இதிற் சுபகன்மங்கள் செய்யலாகாது. எ-று. (௪௬)

சகடதோஷாபவாதம்.

தாராபதியுஞ்சுரர்குருவுநற்கால்சாரினற்கோ
ளேராருநோக்குறினுச்சத்துறினியோரொடெழிற்
காராருநெஞ்சத்துக்கஞ்சன்விடுஞ்சகடம்முதைத்த
கூராழிமாயனன்றேன்கூறுநாளிற்குளிர்மதியே.

(இ-ள்.) சந்திரனும் வியாழனுஞ் சுபாங்கிசத்து நிற்பினும், ஒரு சுபக்கோள் சந்திரனைப் பார்ப்பினும், சந்திரன் ஆட்சியுச்சத்திலே நிற்பினும், சுபக்கோளினுடன் நிற்பினும் சகடதோஷம் நீங்கும். எ-று. (௪௭)

கத்திரி, கிரகணதோஷம்.

தீக்கோள்கள்வக்கிரமுற்றவிராசிக்கிருமருங்குங்
காக்குமிராசிநாட்கத்திரியென்றுகழித்தனர்கள்
பூக்குங்கிராணம்பொருந்தியநாடனைநல்வினைக்கு
நீக்கினாராறுபிறைகொடிதெட்சியுநீளரவே.

(இ-ள்.) பாபக்கிரகங்கள் வக்கிரித்த இராசிக்கு இரண்டாமிராசியும், பன்னிரண்டா மிராசியும் உற்றநாள் கத்திரி நாளெனப் பெயர்பெறும். இந்நாளிற் சுபகாரியங்கள் செய்யலாகாது. முழுக்கிரகணம் பற்றினநாள் ஆறுமாதத்துக்கும், முக்காற்கிரகணம் பற்றினநாள் நான்குமாதத்துக்கும், பாதிக்கிரகணம் பற்றினநாள் மூன்றுமாதத்துக்கும், காற்கிரகணம் பற்றின நாள் இரண்டுமாதத்துக்கும் தவிரப்படும். இராகு கேதுக்களுதயமும் இப்படியே நீக்கப்படும். எ-று.

பொருந்தியநாள் என்றதனால் இப்படிச் சொல்லப்பட்ட நாளுக்குள்ளே வேறோர் இராசியிலே கிரகணமுண்டாகிலும், இராகு கேது வேறோர் இராசியிலே போகினும் அவ்வளவு தோஷமென்பாருமுளர். (௪௮)

சமதிருட்டிதோஷமும், அபவாதமும்.

புலரியில்வெள்ளிகிழக்கெழப்பொன்படுநாளனைத்து
நலமிலைநல்வினைக்காங்கொருகோளொடுநண்ணிலிடை
நிலையினற்கோணிற்பினன்றென்பர்நீள்புகர்மாலைபடத்
தலமுறுபொன்னேழுநாட்சமபார்வைதகாதென்பரே.

(இ-ள்.) விடியற்காலத்திற் சுக்கிரன் கிழக்கேயுதிப்ப, அக்காலத்திலே வியாழன் மேற்கே அத்தமிக்கச் சமதிருட்டியென்ற தோஷமுண்டாம். அக்காலத்துச் சுபகன்மஞ் செய்யலாகாது. இருவரிலொருவர் வேறொரு கிரகத்துடன் கூடிநிற்பினும், இருவருக்கும் நடுப்பட்ட இராசிகளில் சுபக்கிரகங்கள் நிற்கினும், சமதிருட்டிதோஷமில்லை. சுக்கிரன் மேற்கேநிற்க வியாழனிவனுக்கு ஏழாமிடத்துக் கிழக்கேநிற்பினும் சமசத்தமதோஷமில்லை. எ-று. (௪௯)

குளிகாதிதோஷம்.

உற்றவாரத்திற்பகலடைவேசனிக்கோதும்யாமம்
பெற்றகுளிகன்யமகண்டகத்துக்குப்பீதகனுர்
பற்றியயாமமெனத்தப்பிரகரன்பகலடைவே
யுற்றிடுநான்கேழிரண்டைந்துமெட்டுமூன்றாறுமென்னே.

(இ-ள்.) பகற்காலவளவை எட்டுச்சாமமாக்கி அற்றை வாரமுதலாகச் சனிக்கிழமைவரையுமெண்ணிக் கண்டசாமங்களிற் சனிக்கிழமைகண்ட சாமங் குளிகனும். அற்றை வாரமுதலெண்ணிக்கண்ட சாமங்களில் வியாழக்கிழமைகடந்த சாமம் யமகண்டகன். அத்தப்பிரகரனறியும்படி:— ஞாயிற்றுக்கிழமை நாலாஞ்சாமம், திங்கட்கிழமை ஏழாஞ்சாமம், செவ்வாய்க்கிழமை இரண்டாஞ்சாமம், புதன்கிழமை ஐந்தாஞ்சாமம், வியாழக்கிழமை எட்டாஞ்சாமம், வெள்ளிக்கிழமை மூன்றாஞ்சாமம், சனிக்கிழமை ஆறாஞ்சாமம். எ-று.

குளிகாதிதோஷாபவாதம்.

காலற்குத்தேண்மறிகன்னிகொறிகுளிர்நண்டுவிடை
மேலுற்றயாமமென்மேவியவாராதிபர்வலியிற்
சாலச்செறிந்தெழிற்றன்னோரையுற்றிடிற்றூனுளதேற்
கோலக்குளிகன்முதலுறுகுற்றங்கள்கூறிலரே.

(இ-ள்.) காலனுணறியும்படி ஞாயிற்றுக்கிழமை எட்டாஞ்சாமம், திங்கட்கிழமை முதற்சாமம், செவ்வாய்க்கிழமை ஆறுஞ்சாமம், புதன்கிழமை முதற்சாமம், வியாழக்கிழமை நாலாஞ்சாமம், வெள்ளிக்கிழமை நாலாஞ்சாமம், சனிக்கிழமை இரண்டாஞ்சாமமெனவறிக. குளிகன், யமகண்டகன், அத்தப்பிரகரன், காலன் என்ற நான்குதோஷமுமுற்ற சாமங்களில் வாராதிபன் வலிபெற்று நிற்பினும், தன்னுடைய ஆட்சியிராசி யுதிப்பினும், உதயலக்கினத்திலே நிற்பினும் இந்தத் தோஷமில்லை. எ-று. (௫௧)

காலவோரை.

வையந்தரும்புதன்வாரத்துக்காதியில்வாட்கணல்லாய்
வெய்யவன்வெள்ளிபுதன்மதிகாரிவியாழன்சேயென்
றையவிரண்டரைநாழிகைகாலவோரையடைவே
யெய்தியவாரத்திற்கைந்ததற்காறெனுமெண்பெறவே.

(இ-ள்.) காலவோரைக்குக் காலம் இரண்டரைநாழிகையாகக் கொண்டு, புதன்கிழமைக்கு அதற்கு ஐந்தாங்கிழமை உதயகாலத்திலே இரண்டரைநாழிகை ஆதித்தனுண். பின்பு அதற்காறுங்கிழமையுடையவன் வெள்ளி இரண்டரைநாழிகை. இப்படி முறையே அருக்கன், புகர், புந்தி, இந்து, மந்தன், அந்தணன், சேய் என்றெண்ணிக் கொள்ளப்படும். இதிற் பாபக்கோளினுணன் நாழிகை சுபகன்மங்களுக்குத் தவிரப்படும். சுபக்கோளினுணன நாழிகை கொள்ளப்படும். எ-று. (௫௨)

பாபவோராதிவர்ச்சியம்.

தீயவர்வாரந்திரேக்காணமங்சங்காலவோரை
யேயகுளிகனவாங்சகமென்றவிவையியைபி
ணுயகனல்லவுயிர்க்குமுடற்குநறுநுதலாய்
தூயபன்னொன்றாறுமூன்றிடநிற்பிற்சுபமென்பரே.

(இ-ள்.) பாபவாரமும், பாபத்திரேக்காணமும், பாபாங்சமும்; பாபகாலவோரையும், குளிகனும், பாபநவாங்சமும் என்ற இவை தவிரப்படும். இவற்றிற்கு அதிபரானவர் உதயத்திற்கும் சந்திரனுக்கும் மூன்றுமிடம், ஆறுமிடம், பதினொராமிடத்து நிற்பராகில் அவ்வவர் தோஷமில்லை. எ-று.

உயிரென்பது உதயலக்கினம். உடலென்பது சந்திரனுற்ற இராசி.

தூமாதிபுடம்.

வெங்கதிர்மேனுன்கிராசிபன்மூன்றுவிளங்குபாகந்
தங்கிடத்தூமமிதனைத்தகுமண்டலத்தெடுப்பச்
செங்கண்வெதிபாதமாறோரைசேரப்பரிவேடமா
மங்கதுமண்டலத்திற்களையத்தனுவாமென்பரே.

(இ-ள்.) சுத்தாதித்தன் புடத்தை வைத்து இதிலே நான்கிராசியும் பதின்மூன்று பாகையுங் கூட்டி நின்றநிலை தூமபுடமாம். இதனை மண்டலராசியிற் களைந்து நின்றது வியதீபாத புடமாம். இதிலே ஆறிராசிகூட்டப் பரிவேடபுடமாம். இதனை மண்டலராசியிற் களைந்து நின்றது இந்திரதனுபுடமாம். எ-று. (௫௪)

பஞ்சார்க்கதோஷம்.

இந்திரவில்லிற்பதினேழுபாகமிசையவிட
வந்திடுங்கேதுவதிலோரையொன்றிடவான்சுடர்க்கு
முந்திவகுத்தநிலையிவைபஞ்சார்க்கன்மொய்யுடற்காஞ்
சிந்தனைநல்லுயிரின்றிறத்துந்தீதெனத்தெளியே.

(இ-ள்.) இந்திரதனுவிலே பதினேழுபாகைகூட்டத் தூமகேதுபுடமாம். இதிலே ஒருராசி கூட்டப் பழைய சுத்தரவிபுடமாம். இந்தப் புடங்களை நாட் பார்க்கும்படியே பார்த்துற்றநாளும் சந்திரனு மொருநாளாக நின்றதாகிற் பஞ்சார்க்க தோஷமுண்டாம். இதிலே சுபகன்மங்கள் தவிரப்படும். இப்படியே இலக்கினமுந் தவிரப்படும். இலக்கினமாவது உற்றநாளுடைய இராசி. எ-று. (௫௫)

பஞ்சார்க்கதோஷாபவாதம்.

விடையேறுநண்டின்மதிவீற்றிருக்குதல்வெங்கதிரோற்
கடையாயவில்லுச்சமாகுதலன்றியுபசயத்திற்
புடையேபொருந்துதல்செய்யிற்பொல்லாதபஞ்சார்க்கமன்ன
நடையேநல்லுடைத்தாம்வார்ஞாயிறுநன்றென்பரே.

(இ-ள்.) சந்திரன் இடப கர்க்கடகத்து நிற்பினும், ஆதித்தன் சிங்க மேஷத்து நிற்பினும், ஆதித்தனுக்குச் சந்திரன் உபசயத்தானத்திலே நிற்பினும் பஞ்சார்க்கதோஷமில்லை. அன்றிப் பஞ்சார்க்கமுற்ற நாள் ஞாயிற்றுக்கிழமையாயினுந் தோஷமில்லை. எ-று.

௩-ம், ௬-ம், ௧௦-ம், ௧௧-ம் இடங்கள் உபசயமெனப்படும். (௫௬)

வேதைச்சக்கரம்.

குணக்குவடக்குறவைந்தைந்துகோணங்களிலிரண்டும்
புணைத்தகயிற்றில்வடகீழிரேகையிற்றேர்பொருந்த
வுணர்த்தும்வலமுத்தராடமபிசித்தமோணமென்று
கணக்குறவைத்தெண்ணவேதைப்பிறப்புக்கடிதுறுமே.

(இ-ள்.) கிழக்குமேற்கில் ஐந்தும், வடக்குத்தெற்கில் ஐந்துமாக ரேகைகீறி, கோணங்களிலே இரண்டிரண்டிரேகைகீற இருபத்தெட்டுக் கயிறும். இதில் வடகிழக்கிலே கோணமான கயிற்றுக்குத் தெற்கிற் செவ்விதான ரேகையின் கீழ்த்தலையிலே ரோகிணியைவைத்துப் பிரதெக்கணமாக எண்ணுக. எண்ணுமிடத்து, உத்தராடம், அபிசித்து, திருவோணமென்றெண்ணுவது. எ-று. இது வேதைச்சக்கரமாம். (௫௭)

வேதைச்சக்கர நிஷித்தம்.

எண்ணியகோணின்றநாளின்கயிற்றுக்கெதிருறுநா
ணண்ணியவேதையெனற்கோளின்வேதைமாநாளதனிற்
பண்ணிடுமங்கலம்பாறிடுமென்பவக்கோளின்வேதை
கண்ணுறிற்செய்வினை தன்னொடுதானுங்கழிவுறுமே.

(இ-ள்.) இந்த வேதைசக்கரத்து நிறுத்தின் நாளில் ரேகையின் தலையிலே யாதாமொரு கோள் நின்றதாகில் அந்நாட் சுபகாரியங்களுக்கு ஆகாது. சுபக்கோள் நின்றதாகிற் செய்தகாரியம் நசியும். பாபக்கோள் நின்றதாகிற் செய்தகாரியமுங் கர்த்தாவும் நசிவர் என்று சொல்லப்படும். எ-று.

மங்கலமென்றதனால் விவாகத்துக்குப் பிரதானமாகப் பார்க்கவேண்டுமென்பாருமுளர். (௫௮)

புடவேதை.

கலைதருபத்தாயபாகத்திடைகண்டகோளனைத்தி
னிலையினைநீக்கிப்பின்னேர்பட்டநாளையும்வேதையென்பர்
சிலைதருபூநுதலாய்செப்பிலுற்றவிரண்டுநாளுங்
கொலைதருமல்லதுநன்மைபயக்குங்குணமிலவே.

(இ-ள்.) ஒன்பது இராசியும் பத்துப்பாகையும் வைத்து, இதில் ஆதித்தன் முதலான கிரகங்களின் புடங்களைக்கூட்டி நின்றது வேதைப்புடமாம். இந்த வேதைப்புடத்தை நாள் பார்க்கும்படியே பார்த்துக் கண்டநாள் தான் கருதின நாளாகில், அந்நாட் புடவேதையென்று தவிரப்படும். எ-று.

நிலவினைநீக்கி என்றுமோர்பாடமாதலால், இவ்விடத்துச் சந்திரனையொழித்துங் கொள்ளப்படும். (௫௯)

இரச்சுமிப்புடம்.

தேளிடைபத்திற்கதிர்குடத்தெட்டிற்பொன்சேய்கலையிற்
சூழ்பதினேழ்மால்புகர்மகளொன்பான்சுன்றேளிலேழில்
யாழ்பதின்மூன்றிற்சிகிமறியெட்டிலரவுபாகை
நீளுடைநீத்தபின்மதிதீதொழிநேரிழையே.

(இ-ள்.) எழு இராசியும் பத்துப்பாகையும் வைத்து இதிலே ஆதித்தன் சுத்தபுடத்தைக் களைவது. பத்து இராசியும் எட்டுப்பாகையும்வைத்து இதிலே செவ்வாய் வியாழனுடைய சுத்தபுடங்களைக் களைவது. ஒன்பது இராசியும் பதினேழுபாகையும் வைத்து இதிலே புதன் சுத்தபுடத்தைக் களைவது. ஐந்து இராசியும் ஒன்பதுபாகையும் வைத்து இதிலே சுக்கிரன் சுத்தபுடத்தைக் களைவது. எழு இராசியும் ஏழுபாகையும் வைத்து இதிலே சனி சுத்தபுடத்தைக் களைவது. இரண்டு இராசியும் பதின்மூன்றுபாகையும் வைத்து இதிலே கேதுவின் சுத்தபுடத்தைக் களைவது. எட்டுப்பாகையை வைத்து இதிலே இராகுவின் சுத்தபுடத்தைக் களைவது. இப்படிக் களைந்து நின்ற சேடம் இரச்சுமிப்புடமென்று சொல்லப்படும். இதனை நாட் பார்க்கும்படியே பார்த்து உற்றநாளிற் சுபகாரியங்கள் தவிரப்படும். எ-று. (௬௰)

வாரதிருட்டி.

பரிதிமுதற்சென்றவாரமூற்றித்தபயனதனைப்
புரவிமுதலாயநாடனைப்போக்கிப்பொருந்துநிலை
வருமொன்பதும்பன்னிரண்டுமொராறும்வரன்முறையே
யொருகணிருகண்குருடென்றறிந்துரையொண்ணுதலே.

(இ-ள்.) ஞாயிற்றுக்கிழமை முதற் சென்றவாரத்தை மூற்றித்து, அத்தொகையை அச்சுவினிமுதலாகவெண்ணிப் போகவிட்டு நின்றதொகையில் ஒன்பதுநாள் ஒருகண்ணென்றும், பன்னிரண்டுநாள் இருகண்ணென்றும், ஆறுநாள் குருடென்றும் அறிவது. எ-று. (௬௧)

நட்சத்திரதிருட்டி.

இரவிநிலைத்திடுநாளும்பின்மூன்றுமுன்மூன்றுடுவுங்
குருடுபின்னாலுமுன்னோர்நாலுமோர்கண்குறிக்குமர்றை
வருதினமீராறுங்நோக்கமிரண்டெனமர்தவர்முன்
கருதியுரைத்தனர்நூலிடைவேல்விழிக்காரிகையே.

(இ-ள்.) ஆதித்தன் நிற்கிற நாளும், அதற்கு முன்மூன்றுநாளும், பின்மூன்றுநாளுங் குருடாம். அதற்கு முன்நாலுநாளும் பின்நாலுநாளும் ஒருகண்ணுள்ளநாளாம். ஒழிந்த பன்னிரண்டுநாளும் இருகண்ணுள்ள நாளாம். எ-று. (௬௨)

திவாநிசிவிழிக்குமிராசி.

வில்லுச்சுறுவலவன்வீணைமேடம்விடைபகற்க
ணில்லையிரவில்விழிக்குமென்சீயமெழிற்கயறே
ணல்லபொற்கும்பந்துலையுடன்கன்னிநாடோறுநாட்ட
மல்லிடையில்லைபகற்கணுண்டென்றுரையாரணங்கே.

(இ-ள்.) தனு, மகரம், கர்க்கடகம், மிதுனம், மேடம், இடபம் இவை சந்திரனுடைய கூறும்; பகற்குருடாய் இரவுவிழிக்கும். சிங்கம், மீனம், விருச்சிகம், கும்பம், துலாம், கன்னி இவை ஆதித்தனுடைய கூறும்; இராக்குருடாய்ப் பகல்விழிக்கும். எ-று. (௬௩)

அந்தகராசித்தோஷாபவாதம்.

உதிப்புறுமோரைக்குபசயத்தேமதியொண்கதியில்
வதிப்பினுமாங்கவன்றன்றோரையுச்சத்துமன்னிடினும்
பதிப்படநற்காலடைந்தபின்னான்குபத்தாமிடத்தும்
விதித்தனவோரைகுருடல்லவென்றுவிளங்கிழையே.

(இ-ள்.) உதயராசிக்கு உபசயத்தானத்திலே சந்திரன் சுபாங்கிசனாய் நிற்பினும், அன்றி, இடப கர்க்கடகத்திலே நிற்பினும், அன்றி, சுபாங்கிசனாய் நின்ற சந்திரன், நாலாமிடமாதல், பத்தாமிடமாதல் நிற்பினுஞ் சொல்லப்பட்ட அந்தகராசித் தோஷமில்லை. எ-று. (௬௪)

குருடு, செவிடு, மூடம்.

அரிகொறிசேச்செவிடல்லிற்றுலைதேள்செவிடுமுன்போ
தெரிசிலைமான்பின்பொழுதாஞ்செவிடிருசந்தியிடை
வருகுடமீன்முடமங்கைதடிகுளிர்மத்தியானந்
தருமுடமென்றுரைதப்பாதவண்ணந்தளிரடியே.

(இ-ள்.) சிங்கம், மேடம், இடபம் இவை இராச்செவிடு. துலாம், விருச்சிகம் பூருவான்னத்திற் செவிடு. தனு, மகரம் அபராணத்திற் செவிடு. உதயகாலத்திற் கும்பம் மூடம். அஸ்தமனகாலத்தில் மீனம் மூடம். கன்னி, மிதுனம், கர்க்கடகம் மத்தியானத்தில் முடம். எ-று. (௫௫)

குருடு, செவிடு, மூடாபவாதம்.

நற்கோளெழினுநற்காலுறுதிங்கட்குநான்கேழ்பத்திற்
பொற்கோளெழினுங்குருடல்லப்பொன்னவன்கோணத்தினுட்
வற்கோத்தமத்தும்வளர்மதியாயினுமானேமுடஞ்
சொற்கொத்தகாலஞ்செவிடுங்குருடுஞ்சுபமென்பரே.

(இ-ள்.) சுபக்கிரகம் உதயமாயினும், அன்றிச் சுபாங்கிசமாகிய சந்திரனுக்குக் கேந்திரங்களிற் சுபக்கிரகங்கள் நிற்பினும் அந்தகராசித்தோஷமில்லை. பிருகஸ்பதி திரிகோணத்திலே நிற்பினும், சந்திரன் வற்கோத்தமத்திலே நிற்பினும், பூரணனாய் நிற்பினும், குருடு செவிடு மூடமென்ற தோஷமுண்டாகாது. எ-று. (௫௬)

இலக்கினவிஷாதி நிஷித்தாபவாதம்.

விடைகொறிவின்மெல்லியன்முதற்கூற்றினரவமுண்ணு
மிடையுறுகும்பந்துலாத்தடிசிங்கத்தெழுங்கழுகு
கடையினிற்றேள்குளிர்மீன்கலையிற்பன்றியாழுமோரை
நடைபெறுபாகங்கடிதுநற்கோளெட்சிநன்றென்பரே.

(இ-ள்.) இடபம், மேடம், தனு, கன்னி இவற்றின் முதற்கூற்றிற் பாம்பு உண்ணும். கும்பம், துலாம், மிதுனம், சிங்கம் இவற்றின் நடுக்கூற்றிற் கழுகு உண்ணும். விருச்சிகம், கர்க்கடகம், மீனம், மகரம் இவற்றின் கடைக்கூற்றிற் பன்றி உண்ணும். இக்கூறுகளிற் சுபகன்மங்கள் செய்யலாகாது. சுபக்கிரகம் உதயமாகில் இந்தத் தோஷமில்லை. எ-று. (௫௭)

சிரோதயாதிலக்கின திவாநிசிபலம்.

தடிகுடஞ்சிங்கந்தேள்கன்னிதுலைதலையான்முளைக்கும்
படுமீனிரண்டின்மிதுனமொழிந்தபகல்வலிதாங்
கடகந்தனுவிடைமேடங்கலைகடையான்முளைக்கு
மிடையுறுயாளுடனுறுமிரவில்வலிபெறுமே.

(இ-ள்.) மிதுனம், கும்பம், சிங்கம், விருச்சிகம், கன்னி, துலாம் இவை ஆறும் தலையாலுதிக்கும். மீனம் இரண்டுபொரிசத்தானு முதிக்கும். ஆகவிவ்வேழிராசியினும் மிதுனமொழிந்த இராசிகள் பகல் வலிதாம். கர்க்கடகம், தனு, இடபம், மேடம், மகரம் இவை கடையாலுதிக்கும். இவையும் மிதுனமும் இரா வலிதாம். எ-று. (௫௮)

ஊர்த்துவாதோ திரயமுகவிராசி.

மேனோக்கியமுகமென்பர்வெய்யோன்விட்டவோரைநின்று
தானோக்குமோரையதோமுகமாகுங்கனதனத்துப்
பானோக்குமென்மொழியாய்பற்றுமிற்றிரயம்முகமா
னோக்கினமேலுளவோரையுமிம்முறைநுவலே.

(இ-ள்.) ஆதித்தன்விட்ட இராசி ஊர்த்துவமுகமென்றும், நிற்கப்பட்ட இராசி அதோமுகமென்றும், பற்றப்பட்டஇராசி திரயமுகமென்றும், மற்றுமுள்ள இராசிகளும் இம்முறையே அறியப்படும். முன்பு நாளுக்குச் சொன்ன காரியங்கள் இவ்விராசியினுங் கொள்ளப்படும். எ-று. (௫௯)

பூருவான்ன, மத்தியான்ன, அபராணவிதி.

பகலினளவினைமூன்றுகப்பண்ணிமுதலிடையு
மிகநன்றுநல்வினையாவினுக்கும்விரும்பாதவந்தம்
புகலுங்குரவர்தம்பூசனைக்குங்காதுகுத்துதற்குந்
தகுமென்றனர்விதிநூலுணர்ந்தோர்கடளிரடியே.

(இ-ள்.) பகல்நாழிகையை மூன்றுகூறாக்கிப் பூருவான்னம், மத்தியான்னம், அபராணமென்று பெயரிட்டுப் பூருவான்னத்திலே தெய்வீகமான கன்மங்களும், மத்தியான்னத்திலே மானுடகன்மங்களும், அபராணத்திலே பிதிர்கன்மமும், காதுகுத்துதலும் பண்ணப்படும். எ-று. (௭௦)

திவாநிசி கன்மம்.

அன்னமருந்தலுமாதானமுமங்குரவிதியு
நன்மணமுநன்றிரவினிலாதானநன்கொழித்துச்
சொன்னவைதானும்பகலினுமாகுஞ்சொலாவினைகள்
பன்னுறுநூலோர்பகலினிற்கொள்ளப்பணித்தனரே.

(இ-ள்.) நவபோசனம், அன்னப்பிராசனம், கெர்ப்பாதானம், அங்குரார்ப்பணம், பாணிக்கிரகணம் இவை இரவிற்செய்யுங் கன்மங்களாம். ஒழிந்தவையெல்லாம் பகற் கொள்ளப்படும். இரவிற்செய்யுங் கன்மங்களிற் கெர்ப்பாதான மொழிந்தவை பகலினுங் கொள்ளப்படும். எ-று. (௭௧)

அபிசித்து முகூர்த்தம்.

பச்சைப்புரவியொரேழுறுதேரோன்பகலளவி
னுச்சிப்படுங்கன்னனன்றபிசித்தென்பரோங்கொலியோன்
மெச்சப்படுங்குற்றநூறுயிரந்தீர்க்கும்வெய்யவாழி
யச்சுதன்றேளரக்கர்க்கொல்லுமாறெனவாயிழையே.

(இ-ள்.) ஒரு முகூர்த்தமாவது இரண்டுநாழிகையாகப் பகலளவில் ஆதித்தன் மத்தியமானகாலத்தில் எட்டாமுகூர்த்தம் அதற்கு உத்தமமான அபிசித்துமுகூர்த்தமென்று பெயராம். இம்முகூர்த்தம் நூறாயிரங்குற்றங்களைக் கெடுக்கும். அஃதென்போலவெனிற் கோடிசூரியப்பிரகாசமுள்ள சக்கராயுதகரனாகிய நாராயணமூர்த்தி புயபலபராக்கிரமத்தையுடைய இராக்கதரைக் கொல்லுமாறுபோல. எ-று. (௭௨)

தினவாநிசி முகூர்த்தம்.

அரன்பாம்பனுடமகம்புட்புனலாடியந்தணன்றே
ருரங்கேட்டைவைகாசிமூலம்செக்குத்தரம்பூரம்பகற்
கரன்புரட்டாசிமுதலெட்டிருபூசமாயனத்த
மூரண்பெறுசித்திரைசோதியென்மூர்த்தமிரவினுக்கே.

(இ-ள்.) ஒரு முகூர்த்தமாவது இரண்டுநாழிகை; உதயமுதலாக இரௌத்திரம், சர்ப்பம், மைத்திரம், பைதிருகம், வாசவம், அப்பு, விசுவதேவம், அபிசித்து, பிரசாபத்தியம், ஐந்திரம், அக்கினி, நிருதி, வாருணம், அக்கியம், பாக்கியம் என்ற பதினைந்தும் பகல் முகூர்த்தம். இரௌத்திரம், அஜேகபாதம், அகிர்ப்புத்தினி, பூஷா, கந்தருவம், இராக்கதம், அக்கினி, பிரசாபத்தியம், சந்திரம், அதிதி, பார்க்கவஸ்பத்தியம், வைஷ்ணவம், சாவித்திரி, துவாட்டிரம், வாயவ்வியம் என்ற பதினைந்தும் இராமுகூர்த்தம். இம்முகூர்த்தங்கள் இன்னுளோடொக்கும். இந்தச் சுபமுகூர்த்தங்களிற் சுபகன்மங்கள் செய்யப்படும். இவற்றில் அச்சுவினியைக் காந்தருவமென்றும், பரணியை இராக்கதமென்றும் பெயரிட்டார்கள். எ-று. (௭௩)

உத்தராயணம்.

உத்தரமாகியவாறுமாதந்துமுபநயனம்
வித்தகமாகியகல்விசமாவர்த்தனம்விரதஞ்
சுத்தமதாயசுரர்தாபனஞ்சௌளகஞ்செய்கையா
மொத்தவசந்தத்தியாகங்கொண்மாசியொழித்தென்பரே.

(இ-ள்.) உத்தராயணமான தைமுதல் ஆறுமாதத்தும் உபநயனம், வித்தியாரம்பம், சமாவர்த்தனம், விரதம், தேவப்பிரதிட்டை, சௌளம் முதலியவை பண்ணலாம். வசந்தகாலமான சித்திரை வைகாசிகளில் யாகம் பண்ணலாம். உத்தராயணமாதங்களில் மாசிமாதந் தவிரப்படும். எ-று.

கொள் என்றதனால் மாசிமாதத்திற் சௌளம், உபநயனஞ் செய்யலாமென்பாருமுளர்.

(௭௪)

சேஷ்டமாத சென்மமாதாதிவற்சியம்.

ஆதியிற்றோன்றியகெர்ப்பந்தனக்கானிமாதந்தனி
லோதிலர்யாகங்குடிபுகனன்மணமொண்ணுதலாய்
தீதென்பரல்லாதகெர்ப்பங்களுக்குத்திகழ்சென்மநாண்
மாதமுதயந்தினநன்மைசெய்யவகுத்திலரே.

(இ-ள்.) முதற்பிள்ளைக்கு, யாகம், குடிபுகல், பாணிக்கிரகணம் இவை ஆனிமாதமொழியக்கொள்வது. சகல புத்திரர்களுக்கும் பிறந்தமாதம், வாரம், நட்சத்திரம், லக்கினம் என்ற அனைத்தும் சுபகன்மங்களுக்குத் தவிரப்படும். எ-று.

சர்வமங்கலகாரியத்துக்கும் ஆனிமாதம் ஆகாதென்பாருமுளர். (௭௫)

சென்மநட்சத்திர நிஷித்தம்.

மயிர்வினைகல்விமணவினைபோக்கும்மருந்தருந்த
லுயர்றுவுநூல்வினையுண்டிசீமந்தஞ்சிராத்தமிவை
யியல்புறத்தீதென்பர்சென்மங்களிலியம்பாதவவை
நியதமுநன்றெனவோர்தினர்நித்திலவொண்ணகையே.

(இ-ள்.) சௌளம், வித்தியாரம்பம், விவாகம், கெர்ப்பாதானம், யாத்திரை, அவுஷதமுண்ணல், உபநயனம், விரதம், சமாவர்த்தனம், அன்னப்பிராசனம், நவபோசனம், புங்சவனம், சீமந்தம், நவசிராத்தம் இவை சென்மத்திரயங்களிற் பண்ணலாகாது. அல்லாத சுபகன்மங்கள் நித்தியமும் சென்மத்திரயங்களிற் செய்யலாம். எ-று.

சென்மத்திரயங்களில் நவபோசனம் பண்ணலாமென்பாருமுளர். (௭௬)

சிறீதிவசாதி.

கழிவுறுதிங்களிரட்டித்ததனிற்கழிந்ததிதி
வழியுறச்சேர்த்திவருந்தொகையேழில்வகிர்ந்தசேடஞ்
செழுநன்றிருவின்றிவசாதியேழுஞ்சிறந்தவென்ப
பழுதில்குருபார்க்கவன்சொன்னபெற்றிபகர்குவனே.

(இ-ள்.) சென்றமாதத்தை இரட்டித்து, இதிலே சென்ற திதியையுங்கூட்டி, எழிற்கழித்து நின்றது சிறிதிவசாதியாம். இந்த எழும்சிறந்தனவென்றறிக. இவ்வாறன்றிப் பிருகஸ்பதியும், பார்க்கவனும் சொன்னபடி மேலே சொல்வேன். எ-று. (௭௭)

இதுவுமது.

திருவின்றிவசங்கலிதிவசநந்தனதிவச்
மருவுங்களகண்டியாவுஞ்செயதினமன்னுதம
வுருவின்றினமொண்டனதினமென்றுரையேழிற்றமங்
கருதுங்கலிகாளகண்டியுந்தீதென்க்காட்டினரே.

(இ-ள்.) சிறீதிவசம், கலிதிவசம், நந்தனதிவசம், காளகண்டிதிவசம், செயதிவசம், தமதிவசம், தனதிவசம் என்ற எழுதிவசங்களில், தமதிவசம், கலிதிவசம், காளகண்டிதிவசமாகிய மூன்றும் சுபகன்மங்களுக்காகாவாம். எ-று. (௭௮)

இதுவுமது.

கலிபதினாறுபின்பத்துத்தமமைம்பத்தொன்றுசெய
நலிவுறுநாற்பதுநந்தனமுப்பத்தொன்றுகுந்திரு
கலையுறுமுப்பதுகாளந்தனமஞ்சுநாட்கலியிற்
செலவுறுமூன்றுடனூற்றெண்பதின்றொகைதேர்ந்துரையே.

(இ-ள்.) கலியுகாதியிலிட்ட சுத்ததினம்வைத்து, நூற்றெண்பத்துமூன்றுக்கீய்ந்து போகவிட்டு நின்றசேஷம், பதினாறுநாள் கலிதிவசம்; பின்பு பத்துநாள் தமதிவசம்; பின்பு ஐம்பத்தொருநாள் செயதிவசம்; பின்பு நாற்பதுநாள் நந்தனதிவசம்; பின்பு முப்பத்தொருநாள் சிறீதிவசம்; பின்பு முப்பதுநாள் காளகண்டிதிவசம்; பின்பு ஐந்துநாள் தனதிவசம் என்றறியப்படும். எ-று. (௭௯)

சாந்திரமாதாதி.

சாந்திரமாதங்குக்குவந்தமாகுஞ்சவுரமாத
மேய்ந்தசுடரந்தநட்சத்திரமிருபத்தேழுநாட்
சேர்ந்துறுசாவணமாதமாறைந்துதினங்களீரா
றுய்ந்தனவாண்டந்தணர்க்குற்றவாண்டுதயாத்தமென்றே.

(இ-ள்.) பூருவபக்கத்துப் பிரதமைமுதல் அமாவாசை இறுதியாக வந்தது சாந்திரமாதம். ஆதித்தியன் மேஷமுதலான இராசிகளிற் சங்கிராந்தி சவுரமாதம். அச்சுவினிமுதல் ரேவதி யந்தம் நட்சத்திரமாதம். முப்பதுநாள் ஒருமாதமாகவந்தது சாவணமாதம். அது செனன மரணாதிகளில் அறியப்படும். இந்தவகையில் மாதங்கள் பன்னிரண்டுகொண்டது அவ்வருஷமாம். வியாழன் நின்றவிராசி உதயமுதலாக உதயாப்தம் என்று பெயராம். எ-று.

சேர்ந்துறு என்றதனாற் சாந்திரமான ஆண்டுக்கு ஆறுமாதம் ௨௯-திவசமும், ஆறுமாதம் ௩௰-திவசமுமாய் வந்தபடியால் ௩௫௪-நாளென்றும்; சவுரமான ஆண்டுக்கு இடபாதி ௫-மூதமும் நாள் அதிகப்பட்டபடியால் ௩௬௫¼-நாளென்றும்; நட்சத்திரமான ஆண்டுக்கு நக்ஷத்திரம் ௨௭-ஆகையால் ௩௨௪-நாளென்றும்; சாவணமான ஆண்டுக்கு மாதம் ௩௰-நாளாகையால் ௩௬௰-நாளென்றும் அறியப்படும். (௮௰)

சங்கற்பவசங்கற்பவதிகமாதம்.

தலையாமுவாவிரண்டுட்பெறச்சங்கிரமித்தலன்றேற்
றலையாமுவாவினிற்சங்கிரமித்தல்பிறையிரண்டாங்
குலையாதுதயம்பெறுதிங்களையொள்ளியகுணிதக்
கலைவாணராதிகமாதமென்றோதிக்கழித்தனரே.

(இ-ள்.) இரண்டு அமாவாசையுட்பட இரவி சங்கிரமமுண்டானமாதஞ் சங்கற்பமாதம். அன்றி, இரண்டுசங்கிரமம் ஆதியந்தங்களில் அமாவாசையாகில் அசங்கற்பமாதம். இரண்டு சங்கிரமத்துக்கு நடுவாக இரண்டு சந்திரோதயமுண்டாகில் அதிகமாதம். இப்படிவந்த மூன்றுவகையானமாதங்களுஞ் சுபகன்மங்களுக்குத் தவிரப்படும். எ-று. (௮௧)

அதிகமாதம்.

அருக்கற்கடைவாயதிங்கண்முப்பத்திரண்டாங்குடனாட்
பெருக்கிற்பதினாறுநாழிகைமுப்பதுபேசுந்துடி
திருக்கறவைம்பதொடைந்துஞ்சென்றாலதிகத்திங்கடான்
வரத்தகுமென்றனரெண்டிறம்வல்லவர்வாணுதலே.

(இ-ள்.) ஆதித்திய கெதியான சௌரமாதம் முப்பத்திரண்டும், பதினாறு நாளும், முப்பதுநாழிகையும், ஐம்பத்தைந்துவினாழிகையுஞ்சென்றால் அதிகமாதமாக வருமென்று கணிதபண்டிதர்கள் சொன்னார்கள். எ-று. (௮௨)

அதிகமாத நிஷித்தம்.

விதிமுற்றம்வல்லவர்யாத்திரை நூல்விதிவேள்விமணம்
பதிபுக்கில்வைத்தல்சிராத்தங்குடிபுகல்பாங்குடைய
துதிமிக்கதேவரைத்தாபித்தனூல்கற்றல்சௌளமுமே
யதிகவத்திங்களிலாகாவலாதனவாமென்பரே.

(இ-ள்.) முன்சொன்ன அதிகமாதங்களில், யாத்திரை, உபநயனம், யாகம், விவாகம், கிருகாரம்பம், கிருகப்பிரவேசம், தேவப்பிரதிட்டை, வித்தியாரம்பம், சௌளம், சிராத்தம் இவை செய்யலாகாது. மற்றுள்ள கன்மங்கள் செய்யலாம். எ-று. (௮௩)

சங்கற்பவசங்கற்பவதிகமாத நிஷித்தாபவாதம்.

விற்குளிர்மீனின்மிகவொளிகூர்ந்துவியாழனிற்ப
நற்கதிரோனுத்தரகெதிநட்பாட்சியுச்சத்துறிற்
சற்பமஞ்சற்பமதிகமெனுந்திங்கள்சாலநன்றாம்
பொற்புறுநல்வினைக்குப்புண்டரீகப்புணர்முலையே.

(இ-ள்.) பிருகஸ்பதி, தனு கர்க்கடக மீனத்து அத்தமயமின்றி நிற்ப, ஆதித்தன் உத்தராயணகெதியாய் நட்பாட்சியுச்சத்துநிற்பிற் சங்கற்பமாதம், அசங்கற்பமாதம், அதிகமாதம் என்ற தோஷமில்லை; சுபகன்மங்கள் செய்யலாம். எ-று. (௮௪)

அநுகூலப்பிரதிகூலம்; சந்திராட்டமம்; வைநாசிகம்.

மூன்றைந்தேழ்நாள்முதலொன்பதிற்றீதாதியந்தமூன்று
மேன்றவிக்காலிடையொன்பதிற்றீதின்பமென்பவல்லா
தான்றமதியட்டமதினமெண்பத்தெட்டாயகாலிற்
றோன்றியவைநாசிகங்கழித்தாற்சுபநாளென்பரே.

(இ-ள்.) நாட்பொருத்தம் பார்க்குமிடத்து, யாவனொருவன் பிறந்தநாள் முதலாக மூவொன்பதிருபத்தேழாக்கி இதின் முதலொன்பதின் மூன்றாநாளும், ஐந்தாநாளும், ஏழாநாளும் பொருந்தாது; இவையல்லாத நாட்கள் பொருந்தும். இரண்டாமொன்பதினும் மூன்றாநாளும், ஐந்தாநாளும், ஏழாநாளும் பொருந்தாது; இதின் மூன்றாநாளின் முதற்காலும், ஐந்தாநாளின் கடைக்காலும், ஏழாநாளின் மூன்றாங்காலுமொழித்து மற்றுள்ள கால்கள் பொருந்தும். பின்பு இரண்டாமொன்பதின் சந்திராட்டமமான இரண்டே கால்நாளும், மூன்றாமொன்பதின் எண்பத்தெட்டாங்கால்கிடந்த வைநாசிக நாளும் பொருந்தாது. தோன்றிய என்றதனால் பிறந்தநாளுக்கு முதல்நாளாகிய இருபத்தேழாநாளும் பொருந்தாது. மற்றுள்ள நாட்கள் பொருந்தும். எ-று. (௮௫)

வைநாசிகதோஷாபவாதம்.

மூன்றைந்துமேழுமுதற்சென்மமுந்தீதிவைநல்லகோ
ளூன்றியெழுமதிநற்கதிமேவிடினுத்தமமாந்
தோன்றியவோரையும்பத்தாயவோரையுந்தூயநட்பேற்
சான்றவர்வைநாசிகங்களியாதெனச்சாற்றினரே.

(இ-ள்.) முன் பொருந்தாதென்ற மூன்றாநாளும், ஐந்தாநாளும், ஏழாநாளும், இருபத்தேழாநாளும், சென்மநாளும், சந்திரன் சுபாங்சகனாய்ச் சுபக்கோளுடனேகூடிச் சுபக்கோள் பார்வையுண்டானபோதே இந்த நாட்கள் பொருந்தும். சென்மவிராசிக்கு வைநாசிகங்கிடந்த பத்தாமிராசி யதிபதியாதல், பதினொராமிராசி யதிபதியாதல் நட்புடையராகில் வைநாசிகதோஷமில்லை. எ-று. (௮௬)

அட்டமராசியாதியபவாதம்.

ஒத்தவுதயத்துக்கட்டமத்தேநிற்குமோரதிபன்
மித்திரனாகின்மிகவுநன்றாம்வெண்மதிக்கும்விதி
யித்திறமாகுமிசைந்தவாறந்தமுமிவ்வகையாய்
வைத்துரைசெய்தனர்வண்டார்கருங்குழல்வாணுதலே.

(இ-ள்.) யாவனொருவன் உதயலக்கினவிராசிக்கு எட்டாமிராசியுடையவன் நட்பாகில் அட்டமராசித்தோஷமில்லை. சந்திராட்டமமும் இப்படியே பார்க்கப்படும். ஆறாமிராசியும், பன்னிரண்டாமிராசியும் இவ்வாறே நட்புப் பார்த்துக் கொள்வது. எ-று. (௮௭)

சென்மவிலக்கினநிஷித்தம்.

பிறந்தவிராசியுமந்தமுமாறெட்டும்பேசலுறார்
சிறந்தநன்மங்கலகாரியம்யாவிற்குஞ்சென்மவோரை
நிறைந்தமணமுண்டிதாபனஞ்சௌளம்போக்காடையேருக்
கறைந்தனரல்லாதவோரைநற்கோளெட்சியாட்சிநன்றே.

(இ-ள்.) உதயலக்கினமாகிய சென்மராசியும், பன்னிரண்டாமிராசியும், ஆறாமிராசியும், எட்டாமிராசியும் சுபகன்மங்களுக்குத் தவிரப்படும். இவற்றிற் சென்மராசி, விவாகம், போசனம், பிரதிட்டை, சௌளம், யாத்திரை, வஸ்திராபரணம், உழவு இவற்றுக்காம். அல்லாதவிராசி சுபக்கோளுதயமாயினும், நட்பாட்சியுச்சமாயினுமாம். எ-று. (௮௮)

நக்ஷத்திரபாதாங்கிசம்.

பரிமுதன்மூன்றுதினத்துறுபன்னிரண்டாயகாற்குப்
பொருகுசன்வெள்ளிபுதன்மதிபானுப்புதன்புகர்சேய்
குருமுடவன்சனிமந்திரியாதியடைவிற்கொண்டே
கருதுறுநாளினிற்கால்கணூற்றெட்டுங்கணித்துரையே.

(இ-ள்.) ஒருநாளுக்கு நாலுகாலாக, அச்சுவினிமுதன் ௩-நாளுக்கு ௧௨-காலாம். அடைவே, மேடச் செவ்வாய், இடப சுக்கிரன், மிதுன புதன், கர்க்கடக சந்திரன், சிங்காதித்தன், கன்னி புதன், துலா சுக்கிரன், விருச்சிகச் செவ்வாய், தனுவியாழன், மகரச்சனி, கும்பச்சனி, மீனவியாழன் என்றெண்ணி, ௨௭-நாளுக்கும் ௧௦௮-காலும் ௯-பரிவிருத்தியாகப் பார்ப்பது. எ-று. (௮௯)

உஷ்ணசிகை.

பாரிற்பரிமுதனாட்களிற்பானுகுசன்சனிக்குச்
சேர்வுற்றவோரையிற்கால்சிகையென்பர்செறியிவற்றி
னேருற்றவாதியில்வெய்யவனுங்கடைநீலனுஞ்சேய்
சார்வுற்றிடையுந்தகாநல்வினைக்குத்தளிரடியே.

(இ-ள்.) ஆதித்தன், செவ்வாய், சனி இவர்கட்கடைத்த விராசிகளிற் கிடந்த நாட்கள், இவர்கள் காலாகிய அங்ஸங்கள் உஷ்ணசிகையென்று பெயராம். இக்கால்களிற் சுபகன்மங்கள் தவிரப்படும். ஓரங்ஸமாவது ௧௫-நாழிகை. இதில் ஆதித்தன் அங்ஸத்தில் முதலைந்தும், செவ்வாயங்ஸத்தில் நடுவில் ஐந்தும், சனியங்ஸத்திற் கடையில் ஐந்துநாழிகையுங் கழித்துக்கொள்வது. எ-று. (௯௦)

சாமுகூர்த்தம்.

மந்தனைந்திற்புகரேளின்மால்பத்திற்சேயொன்பதினி
லந்தணனாறெட்டிலாதித்தன்ராகுவீராறதனிற்
சந்திரனாறெட்டிற்சாருமுகூர்த்தஞ்சாமூர்த்தமென்றே
மந்திரிநூன்முறைவல்லவரோதினர்வாணுதலே.

(இ-ள்.) யாதாமொரு முகூர்த்தத்துக்கு, ௫-ம் இடத்திற் சனியும், ௭-ம் இடத்திற் சுக்கிரனும், ௧௦-ம் இடத்திற் புதனும், ௯-ம் இடத்திற் செவ்வாயும், ௬-ம் இடம், ௮-ம் இடத்தில் வியாழனும், ௧௨-ம் இடத்தில் ஆதித்தனும், இராகுவும், ௬-ம் இடம், ௮-ம் இடத்திற் சந்திரனும், இவற்றினொருவர் இப்படி நிற்பின் மிருத்துமுகூர்த்தமாம். எ-று. (௯௧)

இலக்கினமிருத்து.

உதயத்தினாலிரண்டேழொன்பதைந்தெட்டீராறுபத்திற்
சிதைவிப்பர்நன்மையைத்தீயவர்மூன்றாறுபன்னொன்றினில்
வதிவுற்றிடினல்லமூர்த்தமதாகுமதியெட்சியும்
புதையப்படுங்கதிரும்பொருந்தாவென்பர்பொற்றொடியே.

(இ-ள்.) உதயத்தும், ௪-ம் இடத்தும், ௨-ம் இடத்தும், ௭-ம் இடத்தும், ௯-ம் இடத்தும், ௫-ம் இடத்தும், ௮-ம் இடத்தும், ௧௨-ம் இடத்தும், ௧௦-ம் இடத்தும் பாபக்கிரகங்கள் நின்றால் முகூர்த்தத்துக்குத் தீமையுண்டாக்குவர்; ௩-ம் இடத்தும், ௬-ம் இடத்தும், ௧௧-ம் இடத்தும், இவர்கள் நிற்பின் அம்முகூர்த்தத்துக்கு மிகவும் நன்மை உண்டாக்குவர். இரவு சந்திரோதய காலமும், ஆதித்தன் அத்தமனகாலமுந் தோஷகாலமாம். எ-று. (௯௨)

இதுவுமது.

நற்கோட்களெட்டினிலாறிலீராறினினண்ணிற்றிய
சொற்கோளெனவறிசொன்னவைதானுமொழிவிடத்துப்
பொற்கோளுறிற்புகழ்மாலுடன்பூமகள்சேர்பொழுதாம்
விற்போனுதலாய்வளர்மதியெட்சிமிகவுநன்றே.

(இ-ள்.) சுபக்கிரகங்கள், ௮-ம் இடத்தும், ௯-ம் இடத்தும், ௧௨-ம் இடத்தும் நிற்பின் முகூர்த்தம் தீதாம். இந்த இடங்களும், மிருத்து முகூர்த்தமாகச் சொன்னவிடமு மொழியச் சுபக்கிரகங்கள் நிற்பின் நல்ல முகூர்த்தமாம். அஃதென்போலவென்னில், ஸ்ரீநாராயணமூர்த்தியும் இலட்சுமியும் ஒன்றாயிருக்கப்பட்ட சுபகாலம்போலச் சகல மங்கலமுமுண்டாம். பூரணசந்திரோதயம் மிகவும் நல்லதாம். எ-று.

பொற்கோள் என்பதற்கு வியாழன் என்று கூறுவாருமுளர். (௯௩)

தேத்தசுவாலாதூமதோஷாபவாதம்.

கொடுங்கோள்விடுநாணிலைநாட்டொடரக்குறிக்குமந்நாட்
சுடுங்கரிநாட்கனலுட்புகைநாளெனச்சொல்பவற்றிற்
றிடம்பெறுநல்வினைசெய்யிற்பிழையென்பதிங்கட்புக்குக்
கடந்திடில்வெள்ளிமதியுடன்சேர்வுங்கடிதுநன்றே.

(இ-ள்.) பாபக்கிரகங்கள் நின்று கழிந்தநாளும், நின்றநாளும், நிற்கப்புகுகின்றநாளும், தெத்தசுவாலாதூமமென்று பெயராம். இந்நாட்களிற் சுபகன்மங்கள் செய்யலாகாது. இந்நாட்களுடன் கூடிச் சந்திரன் கடந்துபோதல், சுக்கிரன் கடத்தல், கூடநிற்றல், நோக்குதல்செய்யில், தெத்தசுவாலாதூமதோஷமுண்டாகாது. எ-று. (௯௪)

போககாமியபிரியம்.

நற்கோள்விடுநாணிலைநாணடந்துபோய்ப்பற்றுமந்நாள்
விற்போனுதலாய்விளங்கியபோகநாண்மேதினிமேற்
பொற்போர்பொலிவுநாட்போகங்குறிக்குநாளென்றுநல்லோர்
சொற்போலநன்குரைத்தார்வசிட்டர்சோமசூரியரே.

(இ-ள்.) சுபக்கிரகம் விட்டநாள் போகநாளென்றும், நின்றநாள் பிரியநாளென்றும், பற்றப்படும் நாள் காமியநாளென்றும், சந்திராதித்தர் வசிட்டர்முதலிய பெரியோர்கள் சொன்னார்கள். எ-று. (௯௫)

பாபக்கிரகராசி.

தீயவர்தாநின்றவிற்கொடிதென்பர்சிலைநுதலாய்
தீயவர்நாளுஞ்சிறப்பிலவென்பரிருமருங்குந்
தீயவர்தாநின்றநாட்களுந்தீதென்பர்நல்வினைக்குத்
தீயவர்தாமிருவர்க்கிடையோரையுந்தீதென்பரே.

(இ-ள்.) சுபகன்மங்களுக்குப் பாபக்கிரகங்கள் நின்ற இராசியும், அந்நாளும், இரண்டு பாபக்கிரகங்களுக்கு நடுவுட்பட்டநாளும், பாபக்கிரகங்கள் நடுவுட்பட்ட இராசியும், அந்நாளுந் தவிரப்படும். 'ஓரையென்றதனால் இலக்கினமுந் தவிரப்படும். எ-று. (௯௬)

குருசுக்கிரவத்தமயனம்.

குருவும்புகருங்கதிருடனத்தமங்கூடியநாட்
கருதுங்கடிமணமுந்நூல்வினைசௌளங்கல்வியுடன்
மருவும்விரதநல்வேள்வியியாத்திரைவாத்துவிடல்
சுரர்பிரதிட்டைகுடிபுகல்பொல்லாதென்றாய்நகையே.

(இ-ள்.) ஆதித்தனுடன் பிருகஸ்பதியுஞ் சுக்கிரனுங் கூடில், இவர்களத்தமனமாகின்றகாலத்து விவாகம், உபநயனம், சௌளம், வித்தியாரம்பம், விரதம், சமாவர்த்தனம், உபாகன்மம், யாகம், யாத்திரை, வாத்துநியாசம், தேவப்பிரதிட்டை, உற்சவம், குடிபுகல் முதலிய சுபகன்மங்கள் பண்ணலாகாது. எ-று. (௯௭)

குருசுக்கிரபாலவிருத்ததினசங்கியை.

வெள்ளிதன்பாடுதயத்திற்குமுன்பின்கிழக்குமேற்குத்
தெள்ளியவேழுமூன்றைந்தொடுபத்தென்கசிவனுக்கு
மொள்ளியபாட்டிற்பதினைந்துதபத்தினைந்துமென்று
கள்ளவிழ்பூங்குழலாய்கழித்தார்கள்கணிதர்களே.

(இ-ள்.) சுக்கிரன் கிழக்கே அத்தமித்தால் அக்காலத்து விருத்தசுக்கிரனென்று ஏழுநாளும், இவ்விடத்துதிக்குமிடத்துப் பாலசுக்கிரனென்று மூன்றுநாளும், மேற்கே அத்தமிக்குமிடத்து விருத்தசுக்கிரனென்று ஐந்துநாளும், இவ்விடத்துதிக்குமிடத்துப் பாலசுக்கிரனென்று பத்துநாளுங் கழிக்கப்படும். பிருகஸ்பதி அத்தமனத்துக்குப் பதினைந்து நாளும், உதயத்துக்கு ஐந்துநாளுங் கழிக்கப்படும். எ-று. (௯௮)

கிரகணசூலம்.

பற்றிப்படின்மூன்றுபின்மூன்றுபற்றியுதித்தெழுங்கா
லுற்றபின்மூன்றரைபற்றிடின்முன்மூன்றுற்றினமா
முற்றவிழுங்கிடின்முன்னேழுபின்னேழெனமொழிந்தார்
பெற்றகிராணமிரண்டுக்குந்தீயநாட்பெய்வளையே.

(இ-ள்.) சந்திரகிரகணமுஞ் சூரியகிரகணமும் கிரத்தாத்தமயனமாகில் முன்னே மூன்றுநாட் தோஷமாம். கிரத்தோதயமாகில் பின்னே மூன்றுநாட் தோஷமாம். அரைக்கிரகணமாகில் முன்னே மூன்றுநாளும், பின்னே மூன்றுநாளுந் தோஷமாம். முழுக்கிரகணமாகில் முன் ஏழுநாளும், பின் ஏழுநாளுந் தோஷமாம். எ-று.

இரண்டுக்குமென்றதனாற் பட்சக்கிரகணமாகில், இடையிலுள்ள நாளெல்லாங் கழிக்கப்படும். (௯௯)

விஷுவயனசங்கிரமதூலம்.

அயனமிரண்டிற்குமுன்மூன்றுபின்னிரண்டாகாதநாட்
டெயல்விடுவங்கட்குத்தொண்ணூறுதொண்ணூறுதொல்கடிகை
முயல்வுறுமல்லாததிங்கட்குநாழிகைமுன்னும்பின்னு
நியதமுமுப்பதுமுப்பதுநீத்தனர்நேரிழையே.

(இ-ள்.) இரண்டயனங்களுக்கு முன் மூன்றுநாளும், பின் இரண்டுநாளுங் கழிக்கப்படும். இரண்டுவிஷுவங்களுக்கு முன் ஒன்றரைநாளும், பின் ஒன்றரைநாளுங் கழிக்கப்படும். அல்லாத மாச சங்கிரமங்களுக்கு முன் ௩௦-நாழிகையும் பின் ௩௦-நாழிகையுங் கழிக்கப்படும். எ-று.

நியதமும் என்றமையால், நித்தியமுங் கழிக்கவேண்டுமென்க. (௧௦௦)

தினந்தாதிவற்சியம்.

வருநாளிலந்தத்திற்கன்னலிரண்டுவருந்திதிக்குத்
தருநாழிகைமூன்றுசாவணநட்சத்திரஞ்சவுரங்
குருசாந்திரமெனுமாண்டாதிகூறுமவற்றிரட்டி
யொருநாளிரண்டுமூன்றீரிரண்டாறுமுறுவென்பரே.

(இ-ள்.) நாட்களுக்கு ஆதியந்தங்களில் இவ்விரண்டு நாழிகை கழிக்கப்படும். திதிகளுக்கு ஆதியந்தங்களில் மும்மூன்று நாழிகை கழிக்கப்படும். சாவணவாண்டுக்கு ஒருநாள் தவிரப்படும். நட்சத்திரவாண்டுக்கு இரண்டுநாள் தவிரப்படும். சௌரவாண்டுக்கு மூன்றுநாள் தவிரப்படும். குருவாண்டுக்கு நான்குநாள் தவிரப்படும். சாந்திரவாண்டுக்கு ஆறுநாள் தவிரப்படும். எ-று.

அத்தமயனவக்கிரநட்சத்திரதோஷாபவாதம்.

கோளத்தமித்ததினமூன்றுதிங்கட்குக்குற்றமுண்டாம்
வூளொத்தசுண்ணுய்வலிதுசெருச்செய்நாள்வக்கிரநா
ளாளப்படுமறுதிங்களவற்றிற்புகர்வரினு
மீளப்புகருடன்வெண்டிங்கள்சேரின்மிகவுநன்றே.

(இ-ள்.) கிரகங்கள் அத்தமித்த நட்சத்திரம் மூன்றுமாதஞ் சுபகன்மங்களுக்காகாது. கிரகங்கள் யுத்தஞ்செய்த நாளும், வக்கிரித்த நாளும் ஆறுமாதத்துக்காகாது. இந்நாட்களிற் சுக்கிரன் புக்குப் போகினும், சுக்கிரனுடன் சந்திரன் கூடி நிற்பினுந் தோஷமில்லை. எ-று. (௧௦௨)

கேந்திரபெலம்.

உச்சமுநட்புநிலைவலிமால்பொன்னுதயம்வலி
நிச்சமதிபுகர்நீர்க்கீழ்வலிபாட்டினீலன்பணி
கச்சணிபூண்முலையாய்கதிர்சேயுச்சியில்வலிதாம்
மெச்சிருட்பக்கத்துத்தீக்கோள்வலிதென்விளங்கிழையே.

(இ-ள்.) சுபக்கோளாயினும், பாபக்கோளாயினும், உச்சத்தானத்தும், மித்திரத்தானத்தும், ஆட்சித்தானத்தும் நிற்பராகில் வலியர். புதனும், வியாழனும் உதயத்து வலியர். சந்திரனும், சுக்கிரனும் ௪-ம் இடத்து வலியர். சனியும், ராகுவும், கேதுவும் ௭-ம் இடத்து வலியர். ஆதித்தனும், செவ்வாயும் ௧௦-ம் இடத்து வலியர். பாபக்கோட்கள் அபரபக்கத்துப் பெலவான்கள். எ-று. (௧௦௩)

கிரகபெலம்.

இருசுடருத்தரநோக்கில்வலியியம்பாதவர்க
ளொருவரொருவருடன்கூடில்வக்கிரத்துள்வலியாம்
வருமொளிகூர்தல்பொருதல்வடக்குறச்செய்யில்வலி
தருமொளிபக்கத்துநற்கோள்வலிபெறுந்தாழ்குழலே.

(இ-ள்) ஆதித்தனுஞ் சந்திரனும் உத்தராயணகாலத்துப் பெலவான்கள். அல்லாதவர்கள் ஒருவருடனொருவர் கூடிநிற்பினும், வக்கிரித்திருப்பினும் பெலவான்கள். உதித்துநிற்பினும், யுத்தஞ்செய்யினும், உத்தரகெதியாயினும் பெலவான்களாவர். சுபக்கிரகங்கள் பூருவபக்கத்துப் பெலவான்கள். எ-று. (௧௦௪)

திவாநிசிபெலக்கிரகம்.

மதிசனிசேயிரவில்வலிமாலெப்பொழுதும்வலி
கதிர்புகர்பொன்பகற்காட்டும்வலிதங்கிழமையாண்டு
பதிபெறுமாதமுடையோர்வலிசனிபார்மகன்மால்
விதிபுகரிந்துசுடர்வலிபாம்புமிகவலிதே.

(இ-ள்.) சந்திரனும், சனியும், செவ்வாயும் இரவு பெலமுடையர். புதன் இரவும் பகலும் பெலமுடையன். ஆதித்தனும், வியாழனும், சுக்கிரனும் பகல்வலியுடையர். கிரகங்களெல்லாந் தத்தங் கிழமையினும், தத்தமாண்டினும், தத்தமாதத்தினும் பெலமுடையர். சனியிற் செவ்வாய் பெலவான். இவ்விருவரினும் புதன் பெலவான். இம்மூவரினும் பிருகஸ்பதி பெலவான். இந்நால்வரினும் சுக்கிரன் பெலவான். இவ்வைவரினும் சந்திரன் பெலவான். இவ்வறுவரினும் ஆதித்தன் பெலவான். இவ்வெழுவரினும் இராகு, கேது பெலவான்கள். எ-று. (௧௦௫)

திதியாதிபெலம்.

தன்னுடைநட்பாட்சியுச்சத்தில்வர்க்கத்தில்வக்கிரத்தி
லந்நிலைமும்மடியத்தமநீசத்தரைவலியாம்
பன்னும்பகையினிற்கால்வலிபக்கத்துவாரந்தின
முன்னுதயம்வலிதாம்பொன்னும்வெள்ளியுமுண்டெழிலே.

(இ-ள்.) தத்தமுடைய நட்பாட்சி யுச்சத்தினும், வர்க்கோத்தமத்தினும், வக்கிரித்த காலத்தினும், மும்மடி பெலமுண்டாம். அத்தமித்து நின்றபொழுதும், நீசத்து நின்றபொழுதும், பாதிப் பெலமுண்டாம். சத்துருபவன

த்தினின்றபொழுது காற்பெலமுண்டாம். திதியில், வாரம் பெலம். இவ்விரண்டினும் நட்சத்திரம் பெலம். இம்மூன்றினும் உதயம் பெலம். இந்நான்கினும் உதயத்துநின்ற பிருகஸ்பதியும், சுக்கிரனும் பெலவான்கள். எ-று. ( )

உற்பாதம்.

வெள்ளிடிவெண்மழைசூறுவளிபூமிவிண்ணதிர்தல்
கொள்ளியெரிவிழல்கோட்பரிவேடித்தலோரியிடல்
வள்ளியதாருவிழலெரிமாதிரத்துற்றனுண்டே
லொள்ளியகாரியமேழ்தினத்துக்குளுரைத்திலரே.

(இ-ள்.) மழையின்றி இடிப்பினும், கார்வானமின்றி வெண்மழையாகப் பெய்யினும், சூறைக்காற்றடிப்பினும், பூமி, ஆகாயமதிரினும், எரிகொள்ளிவிழினும், கிரகங்களைப் பரிவேடிக்கினும், பலவிடத்தினு மோரியிரையினும், ஒரு காரணமுமின்றிப் பூமியிற் பிரசித்தமான மரங்கள் சரியினும், முரிந்துவிழினும், திக்குகளெரிந்து புகைந்து கிடப்பினும் உற்பாதங்களாம். இவையுண்டான நாள்முதல் எழு நாளளவுஞ் சுபகன்மங்கள் தவிரப்படும். எ-று. (க0எ)

இதுவுமது.

மன்னரமைச்சர்புரோகிதர்வண்மையர்வான்கணிதர்
பன்னெறிநூலர்பிடகர்பல்வேள்விப்பயன்முடிப்போர்
தன்னகராதிபர்தத்துவஞானிகடாமரித்தாற்
பொன்னவனேழ்தினநல்வினைசெய்யப்புகன்றிலனே.

(இ-ள்.) தானிருந்ததேசத்தரசன், மந்திரி, புரோகிதன், தாதாக்கள், கணிதசாஸ்திரநிரூபணர், பலநூலதிகரித்தவர், வைத்தியர், மந்திரவாதி, யாகஞ்செய்யும் பிராமணர், கிராமத்ததிபதி, ஞானி இவர்களில் ஒருவரிறந்தால் அன்றுமுதல் எழுநாளளவுஞ் சுபகன்மங்கள் பண்ணலாகாதென்று பிருகஸ்பதிபகவான் சொல்லினன். எ-று. (க0அ)

திதித்திரயதினத்திரயஉற்சவதினதிநிஷித்தம்.

தினமொன்றின்மூன்றுதிதிநாள்வருநாளுந்தேவர்கட
மினமென்றிடுநற்றிருநாட்களுள்ளுமிசைந்தொரில்லில்
வினவுங்கருமமிரண்டொருநாளில்விதிக்கவிதி
புனமயிற்சாயனல்லாய்புகலாதெனப்போற்றுவரே.

(இ-ள்.) ஒரு தினத்திலே மூன்று திதியாதல், மூன்று நட்சத்திரமாதல் வருகிறநாளிலும், தேவோற்சவமான தினங்களிலும், ஒரு கிருகத்திலே ஒருநாளிலே ஒரு முகூர்த்தத்திலே இரண்டு சுபகன்மங்கள் செய்யவும் விதியில்லை. எ-று. (க0க)

மாததினம்.

கார்த்திகைக்கார்த்திகையாதியிரண்டுகருத்தடைவே
பார்த்தனமாதத்தினம்புரட்டாதிபகர்துலைசார்
சேர்த்தனர்மூன்றுதினமிவற்றிற்செழுமங்கலங்க
ணீத்தனர்பூரணமாமதிதானுநிகழ்த்திலரே.

(இ-ள்.) மாததினங்களாவன: கார்த்திகைமாதத்துக்குக் கார்த்திகை, ரோகிணி; மார்கழிக்கு மிருகசீரிடம், திருவாதிரை; தைக்குப் புனர்பூசம், பூசம்; மாசிக்கு ஆயிலியம், மகம், பூரம்; பங்குனிக்கு உத்தரம், அத்தம்; சித்திரைக்குச் சித்திரை, சோதி; வைகாசிக்கு விசாகம், அனுஷம்; ஆனிக்குக் கேட்டை, மூலம்; ஆடிக்குப் பூராடம், உத்தராடம்; ஆவணிக்குத் திருவோணம், அவிட்டம்; புரட்டாதிக்குச் சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி; ஐப்பசிக்கு ரேவதி, அச்சுவினி, பரணி; இம்மாதங்களில் இந்நாட்களினும், பூரணையினும் சுபகன்மங்கள் தவிரப்படும். எ-று. (கக0)

சுபமுகூர்த்தம்.

நல்லகோட்பன்னொன்றிரண்டைந்தொடொன்பதுநாற்கண்டத்
செல்லுறுநன்மைசிறப்புடைத்தாமூர்த்தந்தீயகோட்கள் [துஞ்
புல்லுறுமூன்றுறிற்பன்னொன்றினின்றிடினன்றுபுகர்
சொல்லிதருமொழியாய்குற்றமேழெனக்கூறினரே.

(இ-ள்.) சுபக்கிரகங்கள் பதினொராமிடத்தும் இரண்டாமிடத்தும் ஐந்தாமிடத்தும் ஒன்பதாமிடத்தும் கேந்திரத்தானத்தும் நிற்பின் நல்ல முகூர்த்தமாம். பாபக்கிரகங்கள் மூன்றுமிடத்தும் ஆறுமிடத்தும் பதினொராமிடத்தும் நிற்பின் நல்ல முகூர்த்தமாம். சுக்கிரன் எழாமிடத்தையொழியக் கொள்ளப்படும். எ-று. (ககக)

புட்கரபாதம்.

பதினொன்றுநான்கரையொன்பதெட்டேழடிநான்கரையும்
வதிகொண்டநான்கரையுஞாயிறுதியவாரங்களி
லதிநன்மையாம்புட்கரபாதமாமதினன்மைசெய்தா
னிதிதங்குமென்றுவிதிக்குநல்லோர்கணிகழ்த்தினரே.

(இ-ள்.) ஞாயிற்றுக்கிழமைக்குப் பதினொரடி; திங்களுக்கு நாலரையடி; செவ்வாய்க்கு ஒன்பதடி; புதனுக்கு எட்டடி; வியாழனுக்கு எழடி; வெள்ளிக்கு நாலரையடி; சனிக்கு நாலரையடி; இது புட்கரபாதமாம். இவ்வாரங்களில் இவ்வடிகளிலே சுபகாரியங்கள்செய்தால் மிக்க சோபனமாம். எ-று.

இவ்வடி பூர்வான்னத்திலே கொள்ளப்படும். அபராணத்துங் கொள்ளலாமென்பாருமுளர். (ககஉ)

புட்கரபாகம்.

வள்ளன்மனுக்கள்சினவரர்மாமுனியென்றபாகை
தெள்ளியமேடமரிசிலையாதிநான்கோரையினி
லொள்ளியபுட்கரபாகைகளென்றுரைத்தார்கள்பின்னும்
வெள்ளமணியைந்துதண்டைந்துதேட்கனல்வெண்டிங்களே.

(இ-ள்.) மேடத்துக்கு உக-ம் பாகம்; இடபத்துக்கு கசு-ம் பாகம்; மிதுனத்துக்கு உசு-ம் பாகம்; கர்க்கடகத்துக்கு எ-ம் பாகம்; பின்பு சிங்கமுதல் நான்கும் தனுமுதல் நான்கும் இவ்வடைவே புட்கரபாகமாம். இந்தப் பாகங்கள் உதிக்குங்காலத்துச் சுபகன்மங்கள் செய்யலாம். இங்ஙனமன்றிச் சிலர் மேடத்துக்கு ஏழாம்பாகை, ஒன்பதாம்பாகை; இடபத்துக்கு ஐந்தாம்பாகை, மூன்றாம்பாகை; மிதுனத்துக்கு ஐந்தாம்பாகை, எட்டாம்பாகை; கர்க்கடகத்துக்கு மூன்றாம்பாகை, முதற்பாகையைப் புட்கரபாகமாகச் சொல்வர். இப்படியே சிங்கந் தனு முதலாகக் கொள்க. எ-று. (௧௧௩)

வாரயோகமான்மியம்.

ஓதியசித்தஞ்சுபமமிர்தம்வரமுத்தமமாங்
கோதினல்யோகம்வரின்முன்புகூறியகுற்றமெல்லாந்
தீதில்பெரும்புகழ்த்தென்கடவைப்பதிசென்றடைந்த
வேதியர்நல்குரவாமெனநீங்குமென்வேல்விழியே.

(இ-ள்.) முன் சொல்லப்பட்ட சகல தோஷங்களும், சித்தயோகமாதல், சுபயோகமாதல், அமிர்தயோகமாதல், வரயோகமாதல்வந்தால், எல்லாத்தோஷங்களையுங் கெடுத்து, எல்லாவற்புதங்களையுங் கொடுக்கும். அஃதென்போலவெனிற் களங்கமற்ற சிறப்புங் கீர்த்தியுமுடைய தென்கடவை நகரிற் சென்ற பிராமணருடைய தரித்திரம் நீங்குவதுபோல. எ-று. (௧௧௪)

பஞ்சாங்கயோகபெலம்.

வளருமதியினிற்பக்கமும்வாரத்துநல்லவையுங்
களவில்கரணமுநல்லனநாட்களினல்லகாலு
முளநல்லயோகமுமொன்றியபஞ்சாங்கமொள்ளிழையா
யளவின்றிநன்மைமிக்காயிரங்குற்றமகற்றிடுமே.

(இ-ள்.) பூருவபக்கத்து முன்பு சொல்லப்பட்ட நல்ல திதிகளும், நல்ல வாரமும், நல்ல நாட்களில் நல்ல கால்களும், நல்ல கரணமும், நித்தியயோகத்திற் சொல்லப்பட்ட நல்லயோகமுங் கூடின பஞ்சாங்கத்துச் சுபகாரியங்கள் செய்தால், எல்லாத் தோஷத்தையுங் கெடுத்து மிகவும் நன்மையைப் பண்ணும். எ-று. (௧௧௫)

பாபாங்கிசதோஷாபவாதம்.

இரவிதன்னுச்சத்தினாட்சியினிற்பவெழின்மதிய
மருவும்வலிபெறின்வைதிருதிபாதமாபினன்றாம்
பரமொன்றுதீயவர்கால்கண்மூன்றாறுபன்னொன்றதனிற்
றிரமொன்றினிற்பினன்றாமென்றுசான்றவர்செப்பினரே.

(இ-ள்.) ஆதித்தன் உச்சத்தும் ஆட்சியினும் நிற்ப, பூருவபக்கத்துச் சந்திரன் பெலவானாய்ச் சுபாங்கிசத்து நின்றபொழுது, வைதிருதிதோஷமும் வியதீபாத தோஷமுமில்லை. பாபாங்கிச கேதனாய் நின்ற சந்திரனுக்கு அவ்வங்கிசாதிபதி மூன்றாமிடம் ஆறாமிடம் பதினொராமிடத்து நிற்பின் அந்நாளிற் பாபாங்கிச தோஷமில்லை. எ-று. (௧௧௬)

உதயபெலம்.

மதிமகனெட்சியிலைஞ்ஞூறுகுற்றத்தைவாட்டும்புக
ரதிபெறுமெட்சியையாயிரங்குற்றமகற்றுவிக்கும்
பதிபெறுமந்திரிதன்னெட்சியிற்பத்துநூறாயிரம்
விதிபெறுகண்டங்கள்நட்பாட்சியுச்சமிகநல்லரே.

(இ-ள்.) புதன் உதயத்து நின்றால் ஐஞ்ஞூறுகுற்றத்தைப் போக்கும்; சுக்கிரன் உதயத்துநின்றால் ஐயாயிரங்குற்றத்தைப் போக்கும்; வியாழன் உதயத்து நின்றால்'பத்திலட்சங் குற்றத்தைப் போக்கும்; இவர்கள் கேந்திரங்களிலே நின்றாலும் இப்படியே தோஷங்களைக் கெடுப்பர். இதுவெல்லாம் நட்பாட்சி யுச்சமாகிலென்ப; பகை நீசமாகில் ஆகாது. எ-று. (௧௧௭)

பஞ்சாங்ககுணம்.

ஒன்றாந்திதிகரணமிரண்டாம்வாரமெட்டொருநான்
கென்றார்தினத்துக்கெழுபதுமுப்பதுமூர்த்தத்திற்கு
நின்றாளுநித்தியயோகத்துமூன்றுநிரைத்துதயங்
குன்றாதயோகம்பதினாயிரங்கள்குணகுணமே.

(இ-ள்.) திதி ஒரு குணம்; கரணம் இரண்டு குணம்; வாரம் எட்டுக் குணம்; நட்சத்திரம் நாலு குணம்; யோகம் மூன்று குணம்; முகூர்த்தம் நூறாயிரங் குணம்; நட்சத்திரம் திதி கூடின வாரயோகங்கள் பதினாயிரங் குணகுணமாம். இப்படிக் குணமுந் தோஷமும் நிரூபித்துக் கொள்ளப்படும். எ-று. (௧௧௮)

திருப்பிரவேசமுகூர்த்தம்

ஊறும்பிறையினுறுதிதிநாளொருவாரத்தினிற்
கூறுஞ்சுபமமிர்தஞ்சித்தயோகமக்கோட்கிழமைக்
காறண்றனதுச்சவீட்டிலுச்சாங்சங்கண்டலக்கினம்
வீறுந்திருச்செய்தகாரியங்கோடியின்மேற்படுமே.

(இ-ள்.) பூருவபக்கத்து யாதொரு கிழமையுடன் கூடின அன்றையிற் திதியும் நட்சத்திரமும், சுபயோகமாதல் அமிர்தயோகமாதல் சித்தயோகமாதல் வர, அந்த வாராதிபன் உச்சத்தானமேறி உச்சாங்கிசம் பெற, அந்த உச்சவிராசி இலக்கினமாக, அல்லது ஏழாமிராசி இலக்கினமாகப் பூலோகத்திலே புத்திமான்கள் கெர்ப்பாதானம் பண்ணினாற் செனித்தபிள்ளை சக்கிரவர்த்தியாவன்; கிருகாரம்பஞ் செய்யில் ஒருகாலமும் அழியாத மிக்க செல்வமுண்டாம். விவாகஞ் செய்தாற் பூரணாயுசும், பாக்கியமும், புத்திரசம்பத்தும்

உண்டாம். மற்றுஞ் சுபகாரியங்கள்செய்தால் இலக்குமி பூரணகடாட்சமாய் நின்று ஒன்று கோடியாக வர்த்திக்கப்பண்ணும். வேறுகோள் நிற்றல், நோக்குதல்செய்யின் மத்திமம். எ-று. இது திருப்பிரவேசயோகம் என்று பெயர்பெறும். (கககூ)

சர்வதோஷாபவாதம்.

நல்லவுச்சத்துநற்கோளுடனெட்சியுநாளினற்கால்
புல்லுமதியினைப்பொன்புகர்நோக்கினுங்கேந்திரத்து
நல்லவர்நிற்பினுநட்புச்சியாயினுமாட்சிநாலிற்
சொல்லியகுற்றமெல்லாஞ்சுபமாமெனச்சொல்லினரே.

(இ-ள்.) சந்திரன் தன்னுடைய உச்சத்திலே நின்று நோக்கினும், சுபக்கிரகங்களுடனே கூடிநின்று உதிப்பினும், அன்றிச் சுபாங்கிசகேதனனை சந்ரனைப் பிருகஸ்பதி சுக்கிரன் நோக்கினும், இவனுக்குக் கேந்திரத்திலே சுபக்கிரகங்கள்நிற்பினும், ஆதித்தன் மத்தியானத்துஎட்டாம்முகூர்த்தமாகிய அபிசித்துமுகூர்த்தமாயினும் சொல்லப்பட்ட குற்றமெல்லாந் தீர்ந்து செய்யுஞ் சுபகாரியங்கள் மிகவும் நன்ரும். எ-று. (கஉ0)

இதுவுமது.

கூறுங்குணகுணமோர்ந்துற்றநூலிற்குணதிகமா
யேறும்வலியுமறிந்திதயத்தினினிதுவந்து
நாறுந்துழாய்முடிநாய்கன்ருழ்கள்வணங்கிநாளும்
பெறென்றிடவிதிக்கும்விதியேபெருநன்மையதே.

(இ-ள்.) பல சாத்திரங்களினுஞ் சொல்லப்பட்ட குணதோஷங்களை நிரூபித்துக் குணதிகமான நாளின் முகூர்த்தத்திலே பரமான்மாவான நாராயணனைப் பத்தியினலே நமஸ்கரித்துப் பண்ணுகின்ற சுபகன்மங்களினலே சர்வதோஷங்களும் போய்ச் சகல சம்பத்துமுண்டாம். எ-று. (கஉக)

குணகுணப்படலமுற்றிற்று.

ஆ செய்யுள் - களஅ.

சந்திரகெத்திப்படலம்.

துதிகொண்டநான்மலரிட்டெம்மடிகள்கழற்றொழுது
விதியிங்குரைப்பனிம்மேதினிமேல்விண்மதிச்செலவின்
கதியின்றிறமுங்கலைவடநூலின்கருத்தனைத்தும்
பொதியன்றருந்தமிழிற்பொருந்தும்படிபூங்கொடியே.

திருவாதிரை
கேட்டை
ஆயிலியம் 8
பரணி
கார்த்திகை 8
பூரம்
பூராடம்
பூரட்டாதி





(இ-ள்.) எனதாசிரியனுடைய ஸ்ரீபாதகமலங்களிலே தோத்திரஞ்செய்து புட்பாஞ்சலிபண்ணி நமஸ்கரித்து அவனுடைய பிரசாதத்தினுல் வடநூலிற் சொல்லப்பட்ட சந்திரகெதியினைத் தமிழிற் சொல்லுவேன். எ-று.

மேடமுதலிய இராசிகளின்கூறு.

தானநாசந்தவமன்னியபோகங்களவரவா
லீனம்பெறலரியாசனராச்சியமாமரச
ரானந்தசேர்வையடையார்த்தெறலணிமுன்னியுபி
ரீனந்தலைகாலிறல்தளையின்னுயிரின்மைகளே.

(இ-ள்.) தானச்சேதம், தவம்பண்ணுகை, பரதாரபரிக்கிரகம், களவுகாண்டல், பாம்புகடியுண்கை, இவை ஐந்தும் மேடத்தின் கூறு. சிங்காசனத்திருக்கை, இராச்சியம்பண்ணுகை, இராசசேர்வை, சத்துருவைச்செயிக்கை, சேனைத்தலைவனுயிருக்கை, இவை ஐந்தும் இடபத்தின் கூறு. பிராணன்விடல், தலையறுப்புண்ணல், கால்தறியுண்டல், கட்டுண்டல், சரீரசேதம், இவை ஐந்தும் மிதுனத்தின் கூறு. எ-று. (௨)

இதுவுமது.

கோவேதமோதல்கொடைதன்மமோதல்செயல்குலத்திற்
ருவேவரறனந்தேடனிறுத்தனூல்கற்றன்மேவார்
சாவேறல்வெப்புநிலைகெடல்சத்துருநாடழித்த
லாவேபரசேர்வையாங்கடையார்தனமார்ச்சித்தலே.

(இ-ள்.) இராச்சியம்பண்ணுகை, வேதாப்பியாசம், பலர்க்குந் தியாகமிடுகை, தருமஞ்செய்கை, பலசாத்திராப்பியாசம், இவை ஐந்துங் கர்க்கடகத்தின் கூறு. நல்ல குலத்திற்பிறத்தல், தனந்தேடல், துலாக்கோல்கொண்டுநிறுத்தல், வித்தையதிகரித்தல், சத்துருவைச்செயித்தல், இவை ஐந்தும் சிங்கத்தின் கூறு. வெப்புநோய்கொள்ளல், நிலைகுலைதல், சத்துருக்கள் தேசத்தையழித்தல், பரசேர்வைபண்ணுதல், சத்துருக்கள் தனத்தை அபகரித்தல், இவை ஐந்துங் கன்னியின் கூறு. எ-று. (௩)

இதுவுமது.

சவையுறன்மேவார்த்தெறன்மந்திரித்திறன்பெண்டிர்கூட்ட
மவையானைமேற்கொளன்மந்திரியாதலமரிற்கெட
றிவமாயிருத்தன்மறையோரையூட்டறீவேட்டல்பசிக்
குவைசோறுணல்கொடைதானரவூனுதிரமுண்டலே.

(இ-ள்.) ஆஸ்தானமண்டபத்திருத்தல், சத்துருவைச்செயித்தல், மந்திரித்துவம்பண்ணுதல், தன்தேவியுடன் கூடுதல், யானையேறுதல், இவை ஐந்துந் துலாத்தின் கூறு. மந்திரித்துவம்பண்ணுதல், யுத்தத்திற்கெடுதல், பிரசன்னனுயிருத்தல், பிராமணபோசனம் பண்ணுகை, ஓமம்பண்ணுகை, இவை ஐந்தும் விருச்சிகத்தின் கூறு. பசித்தல், உண்டல், தியாகமிடல், சரமாமிசந்தின்னல், உதிரங்குடித்தல், இவை ஐந்தும் தனுவின் கூறு. எ-று.

ருச

இதுவுமது.

பாரிகரம்பற்றல்பந்தாடறாதுவேந்தாகைதுன்பஞ்
சார்தல்கிடத்தலரசர்பகைநட்பிற்சார்தல்யோகங்
கூர்தறுறத்தல்சோறுண்டல்பாற்கூழுணவூட்டுவித்த
லார்வுடனுடலழகுற்றிருத்தலறுபதுமே.

(இ-ள்.) தன்னுடைய ஸ்திரீயைக் கைப்பிடித்தல், பந்தாடல், தூது போதல், இராச்சியம்பண்ணுதல், விதனப்படுதல், இவை ஐந்தும் மகரத்தின் கூறு. கிடத்தல், அரசருடன்பகைத்தல், அரசருடனுறவுசெய்தல், யோகாப்பியாசம்பண்ணுதல், சன்னியாசித்தல், இவை ஐந்துங் கும்பத்தின் கூறு. உண்ணல், பாற்சோறுண்ணல், பலரையுமுண்பித்தல், ஆடுதல், சுகாசனத்திருக்கை, இவை ஐந்தும் மீனத்தின் கூறு. இவ்விராசி வகை பன்னிரண்டால் வந்த அறுபது செய்கையும் முறையே சந்திரகெதியாம். எ-று. (ரு)

இந்துக்கதியென்றநாளுறுகன்னற்கியம்புமில்லிற்
கைந்துகுணமாமறிமுதற்குண்டையந்தத்தளவும்
வந்ததொகையிற்குதயாதியுற்றதுவாமுயிர்க்குச்
சந்திரகெதியென்றுசான்றோருரைப்பர்தளிரடியே.

(இ-ள்.) சொல்லப்பட்ட அறுபது சேட்டையுஞ் சந்திரகெதியென்று பெயராம். யாதாயினுமொருநாளின் முதல்நாழிகை தொடங்கி அடைவே கெதியாம். இராசியில் வந்தால் ஓரிராசிக்கு ஐந்துகெதியாக மேடமுதலாகக் கொண்டு சந்திரன்நின்ற இராசிமுதல் இடபமிறுதியாகக் கொண்டெண்ணிக் கண்டதொகையை உதயவிராசி முதலாக எண்ணி உற்றவிராசியின் கெதி சந்திரகெதியாம். எ-று. இது சாதகத்துக்கும் பார்க்கப்படும். (சு)

சந்திரகெதிப்படல முற்றிற்று.

ஆ செய்யுள் - கஎசு.

கோசரப்படலம்.

பகருவன்சென்மமுதற்பன்னிரண்டந்தமாகவெண்ணிப்
புகறருமாதித்தனுதிபாம்பீருய்ப்பொருந்துகோளின்
வகைபெறுநன்மையுந்தீமையுநாடிவருபலன்கள்
சகலமுஞ்சான்றவர்நூன்முறையாலித்தராதலத்தே.

(இ-ள்.) சென்மவிராசி முதற் பன்னிரண்டாமிடம் இறுதியாகக்கொண்டு, ஆதித்தன்முதற் கேதுவீருய்நின்ற கோசரங்களுக்குப் பலாபலஞ் சொல்வேன். எ-று.

கோசரபலன்.

ஆதித்தன்.

வினைதருந்துன்பமிடிகெடுமேவலரான்மெலிவு
நினைவருநாசநிதிதருநின்றநிலைகுலைக்குங்
கனையுறுநோய்பயங்காட்டுங்கனகந்தருமுவகை
மனையுறுநாசந்தருங்கதிரோனென்பவாணுதலே.

(இ-ள்.) ஆதித்தன்: சென்மத்து வியாதி, உ-ம் இடம் விதனம், ங-ம் இடம் நன்மை, ச-ம் இடம் சத்துருபயம், ரு-ம் இடம் வியாதி, சு-ம் இடம் அத்தலாபம், எ-ம் இடம் சலனம், அ-ம் இடம் சரீரபீடை, கூ-ம் இடம் பயம், க0-ம் இடம் அத்தலாபம், கக-ம் இடம் நன்மை, கஉ-ம் இடம் தனச்சேதம். எ-று. (உ)

சந்திரன்.

மரணந்தரும்பிணிசெய்யுந்தனந்தருமன்னர்பயம்
விரணந்தரும்வினைநீக்கும்விசயந்தருங்கொலையாங்
கரணந்தருந்துன்பங்காட்டுங்கருமநிலைகனகப்
பொருடந்திடுந்தனம்போக்குவிக்குந்திங்கள்பொற்றொடியே.

(இ-ள்.) சந்திரன்: சென்மத்து மரணம், உ-ம் இடம் வியாதி, ங-ம் இடம் அத்தலாபம், ச-ம் இடம் இராசபயம், ரு-ம் இடம் தழும்பு, சு-ம் இடம் பிரியம், எ-ம் இடம் திக்குவிசயம், அ-ம் இடம் மரணம், கூ-ம் இடம் துக்கம், க0-ம் இடம் நிலைபேறு, கக-ம் இடம் அத்தலாபம், கஉ-ம் இடம் அத்தசேதம். எ-று. (ங)

செவ்வாய், சனி, இராகு, கேது.

போதங்கெடுக்கும்வினைதரும்பொன்றரும்போர்கொடுக்குஞ்
சேதந்தருந்திருவெய்துஞ்சிறைசெயுந்திங்குதருங்
கேதந்தரும்பயங்கிட்டுந்தனந்தருங்கேடுபட
வாதந்தருமந்தன்செவ்வாயரவுமதிநுதலே.

(இ-ள்.) செவ்வாயும், சனியும், இராகுவும், கேதுவும்: சென்மத்துப் புத்திசந்தாபம், உ-ம் இடம் வியாதி, ங-ம் இடம் அத்தலாபம், ச-ம் இடம் விரோதம், ரு-ம் இடம் பலசேதம், சு-ம் இடம் இலட்சுமிகடாட்சம், எ-ம் இடம் சிறைப்பாடு, அ-ம் இடம் மரணம், கூ-ம் இடம் சேதம், க0-ம் இடம் பயம், கக-ம் இடம் அத்தலாபம், கஉ-ம் இடம் சத்துருபீடை. எ-று. (ச)

புதன்.

கொல்லுங்குணந்தரும்போதங்கெடுக்கும்பொருள்கொடுக்குஞ்
சொல்லுஞ்சிதைவிக்குமாக்கந்தருஞ்சோகஞ்செய்யுநன்மை
புல்லுந்தொழிறரும்போதங்கெடுக்கும்பொலிந்திருக்கு
நல்லனசெய்யும்விநாசந்தரும்புந்திநன்னுதலே.

(இ-ள்.) புதன்: சென்மத்துப் பிராணசேதம், ௨-ம் இடம் நல்லகுணம், ௩-ம் இடம் புத்திசந்தாபம், ௪-ம் இடம் அத்தலாபம், ௫-ம் இடம் சேதம், ௬-ம் இடம் அத்தலாபம், ௭-ம் இடம் சோகம், ௮-ம் இடம் நன்மை, ௯-ம் இடம் புத்திசந்தாபம், ௰-ம் இடம் நன்மை, ௧௧-ம் இடம் உத்தமம், ௧௨-ம் இடம் பலசேதம். எ-று. (௫)

வியாழன்.

நாசந்தருநன்மைசெய்யும்வினைதருநட்பகற்றுங்
காசணிவிக்குந்துயர்தருங்காரிகைபைப்புணர்க்கு
மேசுமிடர்தருமோர்தருமென்றம்பதியகற்றுந்
தூசுந்தனந்தருந்துன்பந்தருஞ்சீவன்றாநகையே.

(இ-ள்.) வியாழன்: சென்மத்துப் பிராணநாசம், ௨-ம் இடம் நன்மை, ௩-ம் இடம் வியாதி, ௪-ம் இடம் வெந்துநாசம், ௫-ம் இடம் அத்தலாபம், ௬-ம் இடம் வியாதி, ௭-ம் இடம் ஸ்திரீசங்கமம், ௮-ம் இடம் மரணம், ௯-ம் இடம் சம்பத்து, ௰-ம் இடம் நிலைகுலைவு, ௧௧-ம் இடம் பொன், புடைவைப்பேறு, ௧௨-ம் இடம் வியாதி. எ-று. (௬)

சுக்கிரன்.

மிக்கபொருடருமேவுந்திருவினைவீட்டுநன்மை
தக்கனசெய்யுந்தனந்தருந்தானநிலைகுலைக்கு
முக்கிடுஞ்செல்வமுவுகைசெய்யும்பொருளூட்டுநாசஞ்
சுக்கிரன்செய்திடுஞ்சோகங்கெடுக்குஞ்சுகந்தருமே.

(இ-ள்.) சுக்கிரன்: சென்மத்து அத்தலாபம், ௨-ம் இடம் இலட்சுமீகரம், ௩-ம் இடம் வியாதிநாசம், ௪-ம் இடம் நன்மை, ௫-ம் இடம் அத்தலாபம், ௬-ம் இடம் நிலைகுலைவு, ௭-ம் இடம் வியாதி, ௮-ம் இடம் பிரியம், ௯-ம் இடம் அத்தலாபம், ௰-ம் இடம் அத்தசேதம், ௧௧-ம் இடம் மிக்கபோகம், ௧௨-ம் இடம் சுகம். எ-று. (௭)

விசேஷகோசரம்.

சனிசிகிவேந்தன்புதன்கதிர்வெள்ளிசேய்சந்திரன்பாம்
பெனுமிவர்சென்மமுதற்றீயரீராறெட்டுச்சென்மம்
வினைதனநாசமரணமிடர்போக்குவேந்தன்சுன்சேய்
பனிதன்பகைசெய்குவரென்றுநூலவர்பன்னினரே.

(இ-ள்.) விசேஷித்துச் சொன்னபடி: சென்மத்துச் சனி, ௨-ம் இடம் கேது, ௩-ம் இடம் வியாழன், ௪-ம் இடம் புதன், ௫-ம் இடம் ஆதித்தன் ௬-ம் இடம் சுக்கிரன், ௭-ம் இடம் செவ்வாய், ௮-ம் இடம் சந்திரன், ௯-ம் இடம் இராகு, இவர்கள் மிகவுஞ் சரீரபீடை, அத்தசேதம்பண்ணுவார்கள். ௧௨-ம் இடத்தும் ௮-ம் இடத்தும் சென்மத்தும் வியாதி, அத்தநாசம், மரணம், சத்துருபயம், நிலைகுலைத்தல் இவற்றைப் பண்ணுவார்கள்; வியாழன், சனி, செவ்வாய், ஆதித்தன். எ-று. (௮)

கோசரவேதை.

ஆதித்தன், சந்திரன்.

குடங்கலைபாழ்மகணன்றினன்சீயங்குளிர்தனுமீன்
றடஞ்செறிகோளிலதேன்மறிதண்டுமகள்துலைசா
ரிடங்கலைநன்றுமதியரிவிற்கயலேறுடுதேள்
கொடுங்குளிர்தன்னிற்புதனொழிந்தோர்நிற்பிற்குற்றங்களே.

(இ-ள்.) கோசரவேதையறியும்படி: ஆதித்தன் ௧௧-ம் இடம் நல்லன் ௫-ம் இடம் சுத்தமாகில்; ௰-ம் இடம் நல்லன் ௪-ம் இடம் சுத்தமாகில்; ௩-ம் இடம் நல்லன் ௯-ம் இடம் சுத்தமாகில்; ௬-ம் இடம் நல்லன் ௧௨-ம் இடம் சுத்தமாகில். சந்திரன்: சென்மம் நல்லன் ௫-ம் இடம் சுத்தமாகில்; ௩-ம் இடம் நல்லன் ௯-ம் இடம் சுத்தமாகில்; ௬-ம் இடம் நல்லன் ௧௨-ம் இடம் சுத்தமாகில்; ௭-ம் இடம் நல்லன் ௨-ம் இடம் சுத்தமாகில்; ௧௧-ம் இடம் நல்லன் ௮-ம் இடம் சுத்தமாகில்; ௰-ம் இடம் நல்லன் ௪-ம் இடம் சுத்தமாகில். இவ்விடங்களிற் புதனொழிந்த கிரகங்கள் நிற்பாராகிற் பொல்லார். சந்திரன் புதன் நிற்பின் நல்லர். எ-று. (௯)

புதன், வியாழன்.

மங்கைகுடங்கலைதேள்விடைநண்டின்மானல்லன்மற்றோர்
தங்குஞ்சிலைமீன்றுலையாடரிதண்டிற்கோளிலதேற்
செங்கண்விடைகுடஞ்சீயஞ்சிலைதுலைசீவனல்லன்
பொங்குமீன்றேள்குளிர்மான்றடியிற்கோள்புகாவிடிலே.

(இ-ள்.) புதன்: ௬-ம் இடம் நல்லன் ௯-ம் இடம் சுத்தமாகில்; ௧௧-ம் இடம் நல்லன் ௧௨-ம் இடம் சுத்தமாகில்; ௰-ம் இடம் நல்லன் ௭-ம் இடம் சுத்தமாகில்; ௮-ம் இடம் நல்லன் சென்மஞ் சுத்தமாகில்; ௨-ம் இடம் நல்லன் ௫-ம் இடம் சுத்தமாகில்; ௪-ம் இடம் நல்லன் ௩-ம் இடம் சுத்தமாகில். வியாழன்: ௨-ம் இடம் நல்லன் ௧௨-ம் இடம் சுத்தமாகில்; ௧௧-ம் இடம் நல்லன் ௮-ம் இடம் சுத்தமாகில்; ௫-ம் இடம் நல்லன் ௪-ம் இடம் சுத்தமாகில்; ௯-ம் இடம் நல்லன் ௰-ம் இடம் சுத்தமாகில்; ௭-ம் இடம் நல்லன் ௩-ம் இடம் சுத்தமாகில். எ-று. (௰)

செவ்வாய், சனி, சுக்கிரன்.

மூன்றுறுபன்னொன்றிற்சேய்சனிநல்லர்முன்னொன்குமும்மூன்
றேன்றுயவஞ்சிற்கோணிற்றலின்றேலெட்டுக்கோன்மறியா
வான்றுதவில்லரிகும்பமொடாயவருந்தடிபெண்
டோன்றுதவாறேழுபத்தொழித்தானல்லன்சுக்கிரனே.

(இ-ள்.) செவ்வாயுஞ் சனியும்: ௩-ம் இடம் நல்லர் ௧௨-ம் இடஞ் சுத்தமாகில்; ௬-ம் இடம் நல்லர் ௯-ம் இடம் சுத்தமாகில்; ௧௧-ம் இடம் நல்லர் ௫-ம் இடம் சுத்தமாகில். சுக்கிரன்: சென்மம் நல்லன் ௮-ம் இடம் சுத்தமாகில்; ௨-ம் இடம் நல்லன் ௭-ம் இடம் சுத்தமாகில்; ௩-ம் இடம் நல்லன்

சென்மஞ் சுத்தமாகில்; ச-ம் இடம் நல்லன் உ-ம் இடம் சுத்தமாகில்; ரு-ம் இடம் நல்லன் கூ-ம் இடம் சுத்தமாகில்; அ-ம் இடம் நல்லன் ரு-ம் இடம் சுத்தமாகில்; கூ-ம் இடம் நல்லன் கக-ம் இடம் சுத்தமாகில்; கக-ம் இடம் நல்லன் ௩-ம் இடம் சுத்தமாகில்; கஉ-ம் இடம் நல்லன் சு-ம் இடம் சுத்தமாகில். வித்தக்கிரகங்கள் நல்லவிடங்களிற் பொல்லார். சுக்கிரன் சு-ம் இடம் எ-ம் இடம் க௦-ம் இடம் மிகவும் பொல்லான். மற்றவிடங்களில் நல்லன். எ-று. (கக)

வித்தக்கோட்கள்.

சனியுங்கதிருந்தனித்தனிவித்தியர்சந்திரற்கு
நணிவித்தியர்மாலொழிந்தவரல்லாதவர்க்கல்லவ
ரினிதுறும்வித்தமிடர்தருமாமெதிர்வித்தம்வந்தாற்
கனியிதழ்முத்தனவெண்ணகையாய்வித்தக்கோட்கதியே.

(இ-ள்.) சனியும் ஆதித்தனுந் தனித்தனியே வித்தக்கோட்களாவர். சந்திரனுக்குப் புதனையொழிந்த கோட்கள் வித்தியர். அல்லாதவர்க்கு இக்கோட்களெல்லாம் வித்தக்கோட்களாவர். கோளும் வித்தக்கோளும் மாறிநிற்கில் பொல்லாக்கோளும் நற்கோளாய்ப் பலந்தரும். அவை வருமாறு:— சந்திரலக்கினமாகிய சென்மராசிக்கு ஒன்பதாமிடத்தில் ஆதித்தன் நிற்க, மூன்றாமிடத்திற் கோளுண்டாகினும், பன்னிரண்டாமிடத்தில் ஆதித்தன் நிற்க, ஆறாமிடத்திற் கோளுண்டாகினும், நாலாமிடத்தில் ஆதித்தன் நிற்க, பத்தாமிடத்திற் கோளுண்டாகினும், ஐந்தாமிடத்தில் ஆதித்தன் நிற்க, பதினொராமிடத்திற் கோளுண்டாகினும், ஆதித்தன் பலந்தரும். மற்றுமுள்ள கிரகங்களுக்கும் இப்படியே விபரீதமாகப் பார்த்துக்கொள்க. எ-று. (கஉ)

கிரகதீமையைக் கிரகங் கெடுக்குமெனல்.

பாம்பால்வருவபுதன்கெடுக்குஞ்சனிசேய்புகர்பொன்
றேம்பாமதியுத்தரகெதியாங்கதிர்தீமையெல்லாஞ்
சோம்பாதொழிவர்முறைமுறையேயெனச்சொல்லுவராங்
கர்ம்பார்திருத்தோளிணைப்கணிதக்கலைகற்றவரே.

(இ-ள்.) இராகுவால் வருங் குற்றம் புதன் கெடுக்கும். இவ்விருவராலும் வருங் குற்றம் சனி கெடுக்கும். இம்மூவராலும் வருங் குற்றஞ் செவ்வாய் கெடுக்கும். இந்நால்வராலும் வருங் குற்றஞ் சுக்கிரன் கெடுக்கும். இவ்வைவராலும் வருங் குற்றம் வியாழன் கெடுக்கும். இவ்வறுவராலும் வருங் குற்றம் சந்திரன் கெடுக்கும். இவ்வெழுவராலும் வருங் குற்றம் உத்தரகெதியான ஆதித்தன் கெடுக்கும். எ-று. (கங)

கிரகசாரசங்கியை.

செப்புபரிதிக்குமுப்பான்செவ்வாய்க்கொருநாற்பத்தைந்தாந்
தப்பின்மதிக்கிரண்டேகால்பதினெட்டுச்சாமனுக்காய்
வைப்பர்கவிக்கிருபத்தைந்துநாட்பொன்வருடமொன்றாங்
கொப்பில்சனிக்குமிரண்டரைபாம்புகட்கொன்றரையே.

(இ-ள்.) ஆதித்தன் ஒருமாதம், செவ்வாய் ஒன்றரைமாதம், சந்திரன் இரண்டேகால்நாள், புதன் பதினெட்டுநாள், சுக்கிரன் இருபத்தைந்துநாள், வியாழன் ஒருவருடம், சனி இரண்டரைவருடம், இராகு கேது ஒன்றரைவருடம் ஓரிராசியிலே நிற்பர். எ-று. (கச)

வக்கிராதிசாரம்.

பத்துத்தினம்புகர்மாலவர்க்குப்பதினைந்துபூமற்
கொத்துறுமொன்றரைமாதங்குருவிற்குயர்சனிக்கு
வைத்துறுமாதங்கண்மூன்றதிசாரத்தில்வக்கிரத்தின்
முத்தனவெண்ணகையாய்முன்னிலோரைபலத்தனவே.

(இ-ள்.) கோட்கள் அதிசாரவக்கிரமானால், புதனுக்குஞ் சுக்கிரனுக்கும் பத்துநாள், செவ்வாய்க்குப் பதினைந்துநாள், வியாழனுக்கு ஒன்றரைமாதம், சனிக்கு மூன்றுமாதம், இப்படி அதிசாரவக்கிரத்தில் வந்தால், வக்கிரித்துப் போகிற முன்னிராசியிற் பலமாம். எ-று.

கிரகபதங்களுக்கெல்லாம் மேலாயிருக்கையால் உயர்சனி என்றார். (கரு)

கோசரப்படலமுற்றிற்று.

ஆ செய்யுள் - ககூச.

உதயாரூடக்கவிப்புப்படலம்.

இராசிநாழிகை.

சிங்கந்தடிகலைதேளஞ்சுபாதந்தெரிவைதுலை
யங்கசன்பூங்கணைசாபங்கடகமொரைந்தரையாம்
புங்கவஞ்சாடிமுக்காலுடனாலுபுருவைகய
றங்கியநாலுடன்காலுழிகையென்பர்தாழ்குழலே.

(இ-ள்.) இராசிநாழிகையறியும்படி: சிங்கம், மிதுனம், மகரம், விருச்சிகம் இவை ஐந்தேகால்நாழிகை. கன்னி, துலாம் ஐந்துநாழிகை. தனு, கர்க்கடகம் ஐந்தரைநாழிகை. இடபம், கும்பம் நாலேமுக்கால்நாழிகை. மேடம், மீனம் நாலேகால்நாழிகை. எ-று. (க)

கிரகவீதி.

நாடொறுஞாயிறுநண்ணியவோராதியாறும்பக
னீடியவாறுமிரவென்றுதயநெறியறிவாய்
மேடநல்வீதிவிடைமுத்துனன்குமிதுனவீதி
யோடியதேளாதியொண்விடைவீதியொழிந்தநான்கே.

(இ-ள்.) யாதாயினும் ஓரிராசியில் ஆதித்தன் நின்றால், அவன் நின்ற இராசிமுதல் ஆறு இராசி பகலென்றும், ஏழாமிராசியாய் இவனத்தமிக்கிற இராசிமுதல் ஆறிராசி இரவென்றும் அறியப்படும். முகூர்த்த மறியுமிடத்து: இவன்நின்ற இராசியின் நாழிகையை அம்மாதத்துக்குள்ள நாளுக்கீந்து பெற்ற நாழிகையை நீர்க்கீழ்ச்சென்ற நாழிகையெனக் கழித்து நின்றநாழிகையுடனே அயலான இராசிநாழிகையையேற்றி முகூர்த்தமறியப்படும். இராமுகூர்த்தமறியுமிடத்து: ஆதித்தன்நின்ற இராசியையும் அத்தமன இராசியையுங் கூட்டி அம்மாதத்தினுக்கீந்து பெற்ற பலத்தைப் பாதிசெய்து ஏழாம் இராசியிலேகளைந்து நீக்கி நின்ற இராசியில் நாழிகைமுதல் அயலான இராசியை யேற்றி நட்சத்திரவுச்சவிதியான் முகூர்த்தமறியப்படும். ஆதித்தன் இடபமுதல் நாலிராசியினும் நிற்குங்காலம் மேடவீதியிலே சரிக்குமென்றும், விருச்சிகமுதல் நாலிராசியினும் நிற்குங்காலம் மிதுன வீதியிலே சரிக்குமென்றும், ஒழிந்த மீனம், மேடம், கன்னி, துலாம் இவை நாலிராசியினும் நிற்குங்காலம் இடபவீதியிலேசரிக்குமென்றும், அல்லாத கோட்களும் இவ்விராசிகளிலே நின்றால் இவ்வீதியிலே சரிக்குமென்றும் அறியப்படும். எ-று. (௨)

ஆருடசக்கரம்.

வடக்குக்கிழக்குறநான்கோர்வட்டத்துளெட்டானதிக்கிற்
கிடத்தருமாடாதியேந்தவடுப்பொக்குமெண்டிக்கினிற்
சுடர்க்கதிர்சேய்பொன்புதன்சுக்கிரன்சனிசோமனரா
வடற்பரிவேடம்புகைவினுட்பம்வீதியாரூடமே.

(இ-ள்.) ஒத்த நிலத்திலே கிழக்குநோக்கியிருந்து சதுரமாக ஒருவட்டத்தையிட்டு, அதிலே கிழக்கும் வடக்குமாக நான்கிரேகை கீறிப்பார்க்க, இருபத்தைந்து அறையாம். இதில் வடகீழ்மூலை யறையைவிட்டு இதின் தென்திக்கிலறை மேடம். இதன் தென்மேலையறை இடபம். இதன் தென்கீழ்மூலையறைமிதுனம். இதன் தென்மேல்மூலையறை கர்க்கடகம். இதன் வடமேல்மூலையறை சிங்கம். இதன்தென்மேல்மூலையறை கன்னி. இதன் வடமேல்மூலையறை துலாம். இதன் வடகீழ்மூலையறை விருச்சிகம். இதன் வடமேல்மூலையறை தனு. இதன் வடகீழ்மூலையறை மகரம். இதன் தென்கீழ்மூலையறை கும்பம். இதன் வடகீழ்மூலையறை மீனம். இப்படிச்சேர, மும்மூன்றிராசியும் அடுப்புக்கூட்டம்போல அறியப்படும். இச்சக்கரத்தினடுவில் வீதியிற் கீழ்த்தலையறையிலே ஆதித்தன். இப்படிச் சுற்றும்புறம்பும் வீதியில் அக்கினிமூலையிற் செவ்வாய். தெற்குவீதியில் வியாழன். நிருதிமூலையிற் புதன். மேற்குவீதியிற் சுக்கிரன். வாயுமூலையிற் சனி. வடக்குவீதியிற் சந்திரன். ஈசானமூலையில் இராகு. இப்படிப் பன்னிரண்டிராசியும், எட்டுக்கோளும்நிறுத்தி நடுவிலறை பிரமத்தானத்துக் கிருப்பாகவும், இதற்கீசானத்துப் பரிவேடம், இதற்கு அக்கினி தூமம், இதற்கு நிருதி இந்திரதனு, இதற்கு வாயு நுட்பம். இப்படி இருபத்தைந்தறையும் இருபத்தைந்துகோளுக்குமிடமாக நியமிக்கப்பட்டது ஆருடசக்கரமாம். எ-று. (௩)

கவிப்பு.

எய்தியவாரூடமாதியிரவிதன்வீதியந்தஞ்
செய்ததொகையையுதயாதிநீக்கச்செழுங்கவிப்பாம்
வெய்துறுகோளிங்குறில்விதியல்லக்காலங்கண்மூன்றிற்
பெய்துரைநற்கோளிவற்றுறினன்றென்பர்பெய்வளையே.

(இ-ள்.) யாவனொருவன் ஒரு காரியங் கேட்க வந்தவனுற்றதிசையையறிந்து, அந்தந்தத் திக்கிற்கு அடைத்த ஆரூட இராசி முதலாக ஆதித்தன் சரிக்கிற வீதியளவும் எண்ணின தொகையை உதயவிராசிமுதலாகக் கழித்துக் கண்டுற்றவிராசி கவிப்பாம். இப்படி உதயத்தாற் சென்றகாலமும், ஆரூடத்தால் நிகழ்காலமும், கவிப்பால் வருங்காலமுஞ்சொல்லப்படும். சொல்லுமிடத்து இம்மூன்றிராசியினுங் கேந்திரத்திரிகோணங்களினுஞ் சுபக்கிரகங்கள் நிற்றல் நோக்குதல்செய்யில் அந்த இராசிவகையாற் காலங்கள் நன்றென்றும், தீக்கோளாகில் அக்காரியந் தீதென்றுஞ் சொல்லப்படும். எ-று.

உதயாரூடக்கவிப்புப்படல முற்றிற்று.

ஆ செய்யுள் - ௧௬௮.

நட்பாட்சியுச்சபகைநீசப்படலம்.

நவாங்கிசகடிகாதி ஆட்சி.

பார்மகன்வெள்ளிபுதன்மதிபானுக்கணக்கன்சுங்கன்
சீர்தருஞ்செவ்வாய்வியாழஞ்சனிகாரிசீவனென்று
பேர்பெறுங்கோளாட்சிமேடங்கலைதுலைபேசுங்குளி
ரார்வுறுமேடாதிநான்கினவாங்சகத்தாதிபரே.

(இ-ள்.) மேடச்செவ்வாய், இடபசுக்கிரன், மிதுனபுதன், கர்க்கடகசந்திரன், சிங்காதித்தன், கன்னிபுதன், துலாசுக்கிரன், விருச்சிகச்செவ்வாய், தனுவியாழன், மகரச்சனி, கும்பச்சனி, மீனவியாழன் எனக் கோட்களுக்கு ஆட்சியானவாறு கண்டுகொள்க. இவற்றின் நவாங்கிசமறியுமிடத்து மேடத்துக்குஞ் சிங்கத்துக்குந் தனுவுக்கும் மேடமுதலொன்பது. இடபத்துக்குங் கன்னிக்கும் மகரத்துக்கும் மகரமுதலொன்பது. மிதுனத்துக்குந் துலாத்துக்குங் கும்பத்துக்கும் துலாமுதலொன்பது. கர்க்கடகத்துக்கும் விருச்சிகத்துக்கும் மீனத்துக்கும் கர்க்கடகமுத லொன்பது. இப்படி ஒன்பதுகோளும் நவாங்சகாதிபரென்றறியப்படும். எ-று. (௧)

உச்சம் அத்யுச்சம் நீசம் அதிநீசம்.

மறிவிடைமான்மகண்ணள்ளிமீன்வாணிகன்ஞாயிறுதி
செறிவுறுமுச்சந்தசங்கனல்செய்யமறுவிரட்டி

நெறியுறுபக்கநிறைநாளளவுநிறைந்திருபா
னறிவுறுமத்யுச்சமாமதற்கேழ்நீசமன்னவையே.

(இ-ள்.) ஆதித்தனுக்கு மேடமுச்சம். இதிற் பத்தாம்பாக மத்யுச்சம். சந்திரனுக்கு இடபமுச்சம். இதில் மூன்ருூம்பாக மத்யுச்சம். செவ்வாய்க்கு மகரமுச்சம். இதில் இருபத்தெட்டாம்பாக மத்யுச்சம். புதனுக்குக் கன்னியுச்சம். இதில் பதினைந்தாம்பாக மத்யுச்சம். வியாழனுக்குக் கர்க்கடகமுச்சம். இதில் பதினைந்தாம்பாக மத்யுச்சம். சுக்கிரனுக்கு மீனமுச்சம். இதில் இருபத்தேழாம்பாக மத்யுச்சம். சனிக்குத் துலாமுச்சம். இதில் இருபதாம்பாக மத்யுச்சம். இப்படி உச்சராசியு மத்யுச்சபாகையும் அறியப்படும். சொன்னவடைவே உச்சத்துக்கு எழாமிராசி நீசமென்றும் அதிற்சொன்ன பாகை அதிநீசமென்றும் அறியப்படும். எ-று. (௨)

மூலத்திரிகோணம்.

சிங்கம்விடைகொறிகன்னிசிலைதுலைகும்பமென்றே
செங்கதிராதிமூலத்திரிகோணமிதற்குமூன்றேழ்
தங்கியபன்னொன்றுபத்தாறுசார்ந்தவர்சத்துருக்க
ளங்கல்லவருறவென்றனரோர்சாராசாரியரே.

(இ-ள்.) மூலத்திரிகோணராசியாவன: ஆதித்தனுக்குச் சிங்கம். சந்திரனுக்கு இடபம். செவ்வாய்க்கு மேடம். புதனுக்குக் கன்னி. வியாழனுக்குத் தனு. சுக்கிரனுக்குத் துலாம். சனிக்குக் கும்பம். இவ்விராசிகளுக்கு ௩-ம் எ-ம் ௧௧-ம் ௧௦-ம் ௬-ம் இராசியுடையவர்கள் சத்துருக்கள். அல்லாதவர்கள் உறவென்ருூர் சாராசிரியர் சொன்னூர். எ-று. (௩)

இதுவுமது.

ஆர்க்குந்திரிகோணத்தீராறிரண்டொன்பதைந்தெட்டுநான்
கேர்க்குந்திறத்துச்சமேய்ந்தவர்நட்பென்றிருதிறத்துஞ்
சேர்க்குங்குணத்தவர்மத்திமராவர்திரண்டிணையொத்
தீர்க்கிடைபோகாதிடைக்கிடரானவெழின்முலையே.

(இ-ள்.) முன்சொல்லிய ஆதித்தன் முதலாய கோட்களுடைய மூலத்திரிகோண இராசிக்கு ௧௨-ம் ௨-ம் ௬-ம் ௫-ம் ௮-ம் ௪-ம் இடங்களில் நிற்குமிராசி உச்சவிராசியாம். இவற்றை ஆட்சியாகவுடைய கோள் நட்பு அல்லாது சொல்லு நட்பு நட்பல்லவென்பது. ஆட்சியில் ஓரிடத்து நட்பும் ஓரிடத்துப் பகையுமாய் நிற்குங் கோள் மத்திமராவர். எ-று. (௪)

தற்கால சத்துரு மித்துரு.

ஒருவரொருவர்க்கிரண்டினின்மூன்றிலொருபதினிற்
றருபதினொன்றினன்கீராறினிற்சாரிற்சாலநட்பா
மிருவகையானுமிசைதருநட்பதிநட்பதென்று
திருமகணூயகன்ருூடொழுநாரணன்செப்பினனே.

(இ-ள்.) ஒருவர் ஒருவருக்கு ௨-ம் ௩-ம் ௧௦-ம் ௧௧-ம் ௪-ம் ௧௨-ம் இடங்களில் நிற்பாராகில் தற்கால மித்திரராவர். இப்படி இருக்காலும் முக்காலுஞ் சொல்லப்பட்ட இராசிகளிலதிபதி அதிமித்திரமென்றும் அதிசத்துருவென்றும் அறியப்படும். எ-று. (௫)

நட்பாட்சியுச்சபகைநீசப்படலமுற்றிற்று.

ஆ செய்யுள் - ௨௦௩.

சட்டுவர்க்கப்படலம்.

உதிக்கின்றவோரையுங்கூருமிரண்டுமூன்ருென்பதுமே
மதிக்குமீராறுடன்முப்பதுமாமாறின்வர்க்கமென்று
விதிப்படிநாளும்விளங்கும்வகைவித்தரித்துரைப்ப
துதிப்படுவேல்விழியம்போருகமுகத்தூயணங்கே.

(இ-ள்.) சட்டுவர்க்கமாவன: உதிக்கின்ற இராசியையுடையவனும், இதனை இரண்டுகூருகவுண்பானும், இதனை மூன்றுகூருகவுண்பானும், இதனை ஒன்பதுகூருக வுண்பானும், இதனை பன்னிரண்டுகூருக வுண்பானும், இதனை முப்பதுகூருக வுண்பானும், சட்டுவர்க்காதிபராவர். எ-று. (௧)

ஒற்றித்தவோரையொழியவன்றிங்களிரட்டிதன்னி
லற்றமதிக்கதிரோராதிபருதயத்தொடைந்து
முற்றியவொன்பதுமாந்திரேக்காணமுறையுதயம்
பற்றியதாதியென்பன்னிரண்டாமங்சகப்பயனே.

(இ-ள்.) ஒற்றித்தராசியின் நாழிகையை இரண்டுகூறிட்டால் முதற்கூறு ஆதித்தன். இரண்டாங்கூறு சந்திரன். இரட்டித்த ராசியை இரண்டுகூறிட்டால் முதற்கூறு சந்திரன். இரண்டாங்கூறு ஆதித்தன். இது ஓரை. உதயராசியை மூன்றுகூறிட்டால் முதற்கூறு உதயராசியையுடையவனது. இரண்டாங்கூறு ஐந்தாமிராசியை யுடையவனது. மூன்ருூங்கூறு ஒன்பதாமிராசியை யுடையவனது. இது திரேக்காணம். நவாங்சகம் முன்பு ஆட்சிசொன்ன சூத்திரத்திலே சொல்லப்பட்டது. உதயராசியைப் பன்னிரண்டுகூறிட்டால் அந்த ராசியையுடையவன் முதலாக அடைவே துவாதசாங்சக மறியப்படும் எ-று. (௨)

பூதம்விளுத்திசையாழ்கடல்பூங்கணையென்றுவிய
ஞதிகுசன்சனியந்தணன்மால்புகரங்சகவூ
ணேதுசமனிடையொண்புகராதியெதிர்நடக்குங்
கோதில்கோட்கூற்றிற்கயல்குளிர்தேளந்தங்குற்றமென்னே.

(இ-ள்) திரிங்சாங்சகம் ஒற்றித்த ராசியை முப்பதுகூறிட்டால் முதல் ஐந்துகூறு செவ்வாயுண்ணும், பின்பு ஐந்துகூறு சனியுண்ணும். பின்பு எட்டுக் கூறு வியாழனுண்ணும், பின்புஏழுகூறு புதனுண்ணும், பின்பு ஐந்துகூறு சுக்கிரனுண்ணும். இதனைக்கோட்கூறென்று கொள்ளப்படும். இரட்டித்த ராசியை முப்பதுகூறிட்டால் எதிரேறாக முதற் சுக்கிரனுக்கு ஐந்துகூறும், புதனுக்கு எழுகூறும், வியாழனுக்கு எட்டுக்கூறும், சனிக்கு ஐந்துகூறும், செவ்வாய்க்கு ஐந்துகூறுமறியப்படும். இக்கோட் கூற்றிற் கர்க்கடகத்துக்கும் விருச்சிகத்துக்கும் மீனத்துக்குங் கடையிலுற்ற கூறு மிக்க தோஷங்களைப் பண்ணுமென அறிக. இது லக்கினச் சட்டுவர்க்கம். என்னே என்றதனல் இராசியில் வந்தாலும் நவக்கிரகத்துக்கும் இப்படியே சட்டுவர்க்க மறியப்படும். எ-று. (௩)

சட்டுவர்க்கப்படல முற்றிற்று.

ஆ செய்யுள் - ௨௦௬.

மகாதெசைப்படலம்.

கார்த்திகையுத்தரமுத்தராடம்முதலாய்க்கதிரோ
னேர்த்தசுடராதிபர்தெசைக்கென்பரெண்பெற்றவாண்டைச்
சேர்த்துறமூன்றிற்பெருக்கிச்செழுஞ்சுடர்தாக்கநாளாம்
பேர்த்துறுமாதெசைமுன்னூற்றறுபதுநாட்பெறவே.

(இ-ள்.) மகாதெசையெண்ணுமிடத்து கார்த்திகை முதலாகவும் உத்தரமுதலாகவும் உத்தராடமூதலாகவும் ஆதித்தன்முதற் சுக்கிரனீறாக அடைவே தெசாதிபராம். இப்படி நாளுக்குற்ற தெசையுடையவன் முதலாக அடைவே அறியப்படும். மேற்சொல்லப்புகுகின்றசூத்திரத்திலே நாளுக்குண்ணுங் கோளடைவும் கோளின்சுடருமறியப்படும். சுடராவது ஆண்டாம். அந்நாளறியுமிடத்து ஒருவன் தெசையான ஆண்டை மூன்றூற் பெருக்கினது வர்த்தனையென்று பெயராம். இந்த வர்த்தனையை முதலுற்றகோளின் சுடராதி ஒன்பதுகோளுக்குந் தத்தங் கதிர்களாற் பெருக்க நாளாம். இது அந்தரதெசையென்றறியப்படும். பேர்த்துறுமென்றதனல் அந்தரதெசையின் நாளைவைத்து அவரவர்தெசைக்கு அவரவர் கதிராற் பெருக்கி நூற்றிருபதுக்கீந்து நின்ற சேடத்தை அறுபதிலே பெருக்கித் திரும்பவுமீந்து நின்ற சேடத்தை அறுபதிற்பெருக்கித் திரும்பவுமீய அந்தரதெசைக்கு நாளும் நாழிகையும் விநாழிகையுமாம். இப்படியே சூட்சுமதெசையு மறியப்படும். இந்தப் பெருக்கமெல்லாம் முந்நூற்றறுபது நாளென்றறிக. எ-று. (௧)

அருக்கனுக்காறுமதிக்குப்பத்தேழ்சேய்க்கரவினுக்கு
நிரைத்தபதினெட்டுமந்திரிக்கீரெட்டுநீலனுக்காங் [ழ்
குரைத்தபத்தொன்பதுபுந்திக்குப்பன்னேழொண்கேதுவுக்கே
கருத்துறுவெள்ளிக்கிருபதுமாதெசையின்கதிரே.

(இ-ள்.) மகாதெசைக்குக் கதிர்கொள்ளுமிடத்து ஆதித்தனுக்கு - ௬, சந்திரனுக்கு - ௧௦, செவ்வாய்க்கு-௭, இராகுவுக்கு - ௧௮, வியாழனுக்கு - ௧௬, சனிக்கு-௧௯, புதனுக்கு - ௧௭, கேதுவுக்கு - ௭, சுக்கிரனுக்கு - ௨௦. இவை மகாதெசைக்கதிராம். எ-று. (௨)

அந்தரதெசை.

சென்றவக்காற்காண்டுந்திங்களுந்நாளுஞ்செலவிட்டபி
னென்றாமுழுமாண்டிராசபயந்துன்பமெய்துமென்க
நன்றுமதிநரபாலர்பாற்பூசனைநட்புடைமை
குன்றுங்குசன்கொடுநோய்விரணங்கள்கொடுத்திடுமே.

(இ-ள்.) யாவனொருவன் சென்மநட்சத்திரத்திற் சென்ற காலமறிந்து அதில் அதற்குள்ள நாழிகையுஞ் சென்ற நாழிகையும் அறிந்து நின்ற நிலை கெதகடிகையென்று தீட்டிவைக்க; கதிரின்றொகையான நூற்றிருபதினை அந்நாளின் நாழிகைக்கீய்ந்து பெற்ற பலங் கெதியாம். இதனாலே கெதகடிகையைப் பெருக்கிக் கண்ட வற்சராதிகளை ஒன்றான வற்சரத்திலே கழிந்துநின்ற சேடம் ஆயுஷியமாம். தெசைபிரிக்கும்படி: கண்ட ஆயுஷியத்தைப் பன்னிரண்டாற்பெருக்கி நூற்றிருபதுக்கு ஈய்ந்து பெற்றபலத்தைத் தத்தங் கதிர்களாற் பெருக்கி ஆண்டும் மாதமும் நாளும் அறியப்படும். ஆதித்தன்தெசையில்: இராசபயம், வியாதி, தனச்சேதமுண்டாம். சந்திரன் தெசையில்: இராசபூச்சியம், நன்மை, வெந்துலாபமுண்டாம். செவ்வாய்தெசையில்: காரியசேதம், வியாதி, சொறி, சிரங்கு, தழும்பு உண்டாம். எ-று.

தெசாபலன்.

பன்னகநோய்வெப்புமாதனநாசம்பயம்பகையாம்
பொன்னவனேலெப்பொழுதுநன்றும்பலபோகமுண்டாஞ்
சுன்னவன்சோம்பலிடரிரந்தூண்டளைசுற்றம்விவா
மன்னுறுமால்கல்விவாழ்வுடன்போகமகப்பெறலே.

(இ-ள்.) இராகுவின்தெசையில்: வியாதி, சுரம், அர்த்தநாசம், பயம், சத்துருபீடை உண்டாம். வியாழன்தெசையில்: பலபோகங்கள் உண்டாம். சனிதெசையில்: சோம்பல், வியாதி, பிச்சையிரப்பு, சிறைப்பாடு, விலங்கு, வெந்துநாசமுண்டாம். புதன்தெசையில்: கல்வி, வாழ்வு, பலயோகம், புத்திரலாபமுண்டாம். எ-று. (௪)

இதுவுமது.

தக்கசிகிதெசைதன்னிலைகுன்றறளைபழிநோய்
சுக்கிரனன்மைமிகவிளைக்குந்துயரங்கெடுக்கு

மக்கட்பெறலுகியுண்டாக்குமகாதெசைமானனையாய்
திக்குநி[illegible]ரத்தனன்றென்கடுவைககிறையே.

(இ-ள்.) கேதுவின்தெசையில்: தானசலனம், சிறைப்பாடு, வ[illegible] அவகீர்த்தி, பாவம், வியாதி, காரியச்சேதம் உண்டாம். சுக்கிரன்தெ[illegible] மிக்க லாபம், வியாதிநாசம், பலபோகம், புத்திரலாபமுண்டாம். எ-று.

மகாதெசைப்படல முற்றிற்று.

ஆக செய்யுள் - ௨௧௧.

காலசக்கரப்படலம்.

அறைந்தனர்சக்கரத்தாழியும்பன்னிரண்டாருமாக்கிச்
சிறந்தகீழ்பாற்கொறிகுண்டைதென்பாற்குளிர்சிங்கமேல்பாற்
குறைந்ததுலைதேள்வடபாற்கலைகுடங்கோணநான்கும்
பிறந்தனமீன்றடிபெண்வில்லெனக்காலசக்கரமே.

(இ-ள்.) சக்கரத்தேராகிய ஒருவட்டத்தையிட்டு இதன் நடுவே கிழக்கு மேற்காகவும் வடக்குத் தெற்காகவும் இவ்விரண்டிரேகையும் மூலைகளில் ஒவ்வோரிரேகையுமாகக் கீறிற் பன்னிரண்டு கதிராய் இருபத்தொரு சக்கரமாம். இதிலே நேர்கிழக்கு நேர்தெற்கு நேர்மேற்கு நேர்வடக்கு இவற்றிலே நிற்கும் இராசியாவன: இடபம் சிங்கம் விருச்சிகம் கும்பம்; இதற்கு வலத்திராசியாவன: மேடம் கர்க்கடகம் துலாம் மகரம் என்பன; இதற்கு நாற்கோணத்திராசியாவன: மிதுனம் கன்னி தனு மீனம்; இப்படிக் கீறி நிறுத்தினது காலசக்கரமாம். எ-று. (௧)

வலநாளிடநாள்.

தலைநாட்கழையத்தமூலம்புரட்டைமுன்மூன்றுமேடம்
வலநாளுருடேர்மகமுற்றின்மாயனுளாதிமூன்று
நிலையாமிடந்தேண்முதலெதிர்நேர்ந்தகாறேகமந்த
முலையாவுயிர்வலம்வாமத்தினுக்குயிர்மெய்யென்பவே.

(இ-ள்.) அச்சுவினி, புனர்பூசம், அத்தம், மூலம், பூரட்டாதிமுதலாக மும்மூன்றுநாள் வலநாள். இவை மேடாதி மீனந்தமாக எண்ணப்படும். உரோகிணி, மகம், விசாகம், திருவோணம்முதலாக மும்மூன்றுநாள் இடநாள். இவை விருச்சிகமுதல் தனுவந்தமாக எண்ணப்படும். வலநாளுக்கு முந்தினபாதம் உடல்; முடிந்தபாதம் உயிர். இடநாளுக்கு முந்தினபாதம் உயிர்; முடிந்தபாதம் உடல் என்று அறியப்படும். (௨)

கோட்கதிர்.

சன்னுக்குநாலுசுடர்க்கைந்துசுங்கற்கீரெட்டுச்சேய்க்கேழ்
பொன்னுக்குப்பத்துமதிக்குமூவேழுபுதற்கொன்பதா
மென்னப்படுஞ்சுடரின்பரிசாண்டுதிங்கட்டினமாய்ச்
சின்னப்படுத்தியுயிர்மெய்யறிந்துரைதேமொழியே.

(இ-ள்.) காலசக்கரத்துக் கோட்களுக்குக் கதிர் கொள்ளுமிடத்துச் சனிக்கு - ௪, ஆதித்தனுக்கு - ௫, சுக்கிரனுக்கு - ௧௬, செவ்வாய்க்கு - ௭, வியாழனுக்கு - ௧௦, சந்திரனுக்கு - ௨௧, புதனுக்கு-௯, இவற்றை ஆண்டாகக் கொள்ளப்படும். இதனைச் சுடராற்பெருக்கி உற்றவிராசிக்கு அடைத்த கால் ஒன்பதின் சுடர்த்தொகைக்கு ஈய்ந்து பெற்ற பலத்தைத் தத்தஞ் சுடராற் பெருக்கிக்கொள்ள மாதமும் நாளும் நாழிகையும் அறியப்படும். எ-று. ஆண்டு - ௩௬௦ - நாள். (௩)

இலக்கினதெசை.

பிறந்தவிராசியினுற்றநவாங்சகம்பெற்றுடையோர்
சிறந்தனராவருயிரின்றெசைக்குத்திருவனையா
யிறந்திடுகாலமிதனாலறிந்ததிசைவிடத்தே
யுறைந்திடுபோம்பிடையேயுறிலாவியுகுமென்பரே.

(இ-ள்.) யாவனொருவன் பிறந்தபொழுது நின்ற உதயராசியின் நவாங்கிசத்தையுடைய இராசியில் ஒன்பதுகாலின் சுடர்த்தொகையால் ஆயுள் அறியப்படும். வலநாளில் இடநாள் உண்ணுமிடத்தும், இடநாளில் வலநாள் உண்ணுமிடத்தும் தத்தென்றறியப்படும். தத்துமிடத்து இடைப்பட்ட இராசிகளிலே இராகு நின்றானாகில் அக்காலத்தின் மரணமாம். எ-று. (௪)

பஞ்சதெசை.

உடலின்றெசைநாளின்காலானுரையுதயாங்சகத்தாற்
படருந்தெசையேபிராணன்பரிதிசெலவிற்சீவ
னடருந்திதியின்செலவாலறிபமனோதெசையை
விடவாளரவின்செலவாலறிமிருத்துத்தெசையே.

(இ-ள்.) மேற்சொல்லிய முறையால் நாளின் காலாலே சரீரதெசை அறியப்படும். செனனகாலத்து உதிக்கின்ற இராசியின் நவாங்கிசத்தாற் பிராணதெசை அறியப்படும். செனனகாலத்து ஆதித்தன் நின்ற இராசிவசத்தாற் சீவதெசை அறியப்படும். சாந்திரமாதத்துத் திதி முப்பதில் நடக்கின்ற திதிவகையால் வந்த இராசி நவாங்கிசத்தால் மனோதெசை அறியப்படும். தற்காலத்து இராகுநின்ற இராசி நவாங்கிசத்தால் மிருத்துதெசை அறியப்படும். இப்படியே பஞ்சதெசைகளும் அறிவது. எ-று. (௫)

இதுவுமது.

செய்யோன்புகர்புந்திதிங்கட்கதிர்புதன்வெள்ளிசேபொன்
மெய்யேவிளங்கும்பரிவெங்கனற்குமிகுமுதற்கால்

கையோமகசிரமாதிரையிற்கடைக்காலிற்குமாம்
பைசேரரவல்குலாய்பரமாயுவைநூறென்பரே.

(இ-ள்.) மேடச்செவ்வாய் ஆண்டு-௭, இடபசுக்கிரன் ஆண்டு-௧௬, மிதுனபுதன் ஆண்டு-௯, கர்க்கடகசந்திரன் ஆண்டு-௨௧, சிங்காதித்தன் ஆண்டு-௫, கன்னிபுதன் ஆண்டு-௯, துலாசுக்கிரன் ஆண்டு-௧௬, விருச்சிகச்செவ்வாய் ஆண்டு-௭, தனுவியாழன் ஆண்டு-௧௦, இப்படி அச்சுவினி கார்த்திகை மூதற்காலுக்கும்; மிருகசீரிடம், திருவாதிரை நாலாங்காலுக்கும் ஆகப் பரமாயு நூறும். எ-று.

இதுவுமது.

மிக்ககலைமந்தன்மீனந்தேள்வெள்ளிபுதன்கடக
மர்க்கன்றடியிவையாதிதழற்கிரண்டாயகாற்குந்
தக்கநன்மான்றலையாதிரைக்குச்சாருமூன்றாயகாற்
கொக்கவுறுமாயுவெண்பத்தைந்தென்பரொளிவளையே.

(இ-ள்.) மகரச்சனி ஆண்டு - ௪, கும்பச்சனி ஆண்டு - ௪, மீனவியாழன் ஆண்டு - ௧௦, விருச்சிகச்செவ்வாய் ஆண்டு-௭, துலாச்சுக்கிரன் ஆண்டு - ௧௬, கன்னிபுதன் ஆண்டு-௯, கர்க்கடகசந்திரன் ஆண்டு-௨௧, சிங்காதித்தன் ஆண்டு-௫, மிதுனபுதன் ஆண்டு-௯, இப்படி அச்சுவினி கார்த்திகை இரண்டாங்காலுக்கும், மிருகசீரிடம் திருவாதிரை மூன்றாங்காலுக்கும் ஆகப் பரமாயு எண்பத்தைந்தாம். எ-று. (௭)

இதுவுமது.

விடைமறிமீன்குடம்புல்வாய்வின்மேடம்புகர்புதனென்
றடைவினதைப்பசிகார்த்திகைமூன்றாங்காற்காதிரைக்கு
நடைபெறுமான்றலைநாட்களிரண்டாயகாலினுக்கும்
படவரவல்குனல்லாய்பரமாயுவெண்பத்துமூன்றே.

(இ-ள்.) இடபசுக்கிரன், மேடச்செவ்வாய், மீனவியாழன், கும்பச்சனி, மகரச்சனி, தனுவியாழன், மேடச்செவ்வாய், இடபசுக்கிரன், மிதுனபுதன் என்ற ஒன்பதுகாலும், அச்சுவினி கார்த்திகை மூன்றாங்காலுக்கும், மிருகசீரிடம் திருவாதிரை இரண்டாங்காலுக்குந் தெசாதிபராம்; பரமாயு எண்பத்துமூன்று. எ-று. (௮)

இதுவுமது.

திங்கட்கதிர்மால்புகர்சேய்குருச்சனிகாரிசிவ
னங்கட்பரியிற்குமாரற்குமந்தப்பாதத்தினுக்குஞ்
செங்கைமுதற்காற்குந்தேரினாலாங்காற்குஞ்சேர்ந்தவாண்டு
சங்கச்சரிவளையாயெண்பத்தாறென்பர்சான்றவரே.

(இ-ள்.) கர்க்கடகசந்திரன், சிங்காதித்தன், கன்னிபுதன், துலாச்சுக்கிரன், விருச்சிக்ச்செவ்வாய், தனுவியாழன், மகரச்சனி, கும்பச்சனி, மீனவியாழன் என்ற ஒன்பதுகாலும் அச்சுவினி கார்த்திகை நாலாங்காலுக்கும், திருவாதிரை முதற்காலுக்கும், ரோகிணி நாலாங்காலுக்குந் தெசாதிபராம்; பரமாயு எண்பத்தாறு. எ-று. (௯)

இதுவுமது.

தேட்டுலைமால்குளிர்சிங்கந்தடிவிடைசேய்செழுமீ
னூட்டும்பரணிமுதற்காலினுக்குநரிப்புறத்தி
னூட்டுமுதற்காற்குமுற்றவராவருவந்தவாழ்நாள்
தீட்டிடினூறென்றுசெப்பிடுசெப்பேந்திளமுலையே.

(இ-ள்.) விருச்சிகச்செவ்வாய், துலாச்சுக்கிரன், கன்னிபுதன், கர்க்கடகசந்திரன், சிங்காதித்தன், மிதுனபுதன், இடபசுக்கிரன், மேடச்செவ்வாய், மீனவியாழன் என்ற ஒன்பதுகாலும், பரணி முதற்காலுக்கும், மிருகசீரிடமுதற்காலுக்குந் தெசாதிபராம்; பரமாயு நூறு. எ-று. (௧௦)

இதுவுமது.

குடங்கலைவிற்கொறிகுண்டைதடிகுளிர்வெய்யவன்மா
றிடங்கொள்பரணிக்கிரண்டாயகாற்குஞ்செழுமுருகே
ரிடம்படுமூன்றாயகாலிற்குமெண்பத்தைந்தாண்டென்பரால்
வடம்படவிம்மிமதர்த்தெழுகொங்மைதிருநுதலே.

(இ-ள்.) கும்பச்சனி, மகரச்சனி, தனுவியாழன், மேடச்செவ்வாய், இடபசுக்கிரன், மிதுனபுதன், கர்க்கடகசந்திரன், சிங்காதித்தன், கன்னிபுதன் என்ற ஒன்பதுகாலும், பரணி இரண்டாங்காலும், ரோகிணி மூன்றாங்காலுக்குந் தெசாதிபராம்; பரமாயு எண்பத்தைந்து. எ-று. (௧௧)

இதுவுமது.

துலைசேய்தனுச்சனிசுன்மீன்விருச்சிகஞ்சுங்கன்புந்தி
யலைசேர்பரணியின்மூன்றாயகாலிற்கதிபதிக
ணிலைசேர்சகடத்திரண்டாயகாலிற்குநேர்வராண்டு
சிலைசேர்திருநுதலாய்செப்புமெண்பத்துமூன்றென்பரே.

(இ-ள்.) துலாச்சுக்கிரன், விருச்சிகச்செவ்வாய், தனுவியாழன், மகரச்சனி, கும்பச்சனி, மீனவியாழன், விருச்சிகச்செவ்வாய், துலாச்சுக்கிரன், கன்னிபுதன் என்ற ஒன்பதுகாலும், பரணியின் மூன்றாங்காலுக்கும், ரோகிணி இரண்டாங்காலுக்குந் தெசாதிபராம்; பரமாயு எண்பத்துமூன்று. எ-று.

இதுவுமது.

குளிர்மதிசிங்கந்தடிவிடைகொச்சைமீன்கும்பஞ்சுருக்
களிபெறுவில்லிதனைத்தும்பரணிகடைக்காலினுக்கு
மொளியுருடேரின்முதற்காலினுக்குமுரைப்பராண்டு
தெளிவுறுமெண்பதொடாறென்றுரைசெய்சிலைநுதலே.

(இ-ள்.) கர்க்கடகசந்திரன், சிங்காதித்தன், மிதுனபுதன், இடபசுக்கிரன், மேடச்செவ்வாய், மீனவியாழன், கும்பச்சனி, மகரச்சனி, தனுவியாழன் என்ற ஒன்பதுகாலும், பரணி நாலாங்காலுக்கும், ரோகிணி முதற்காலுக்குந் தெசாதிபராம்; பரமாயு எண்பத்தாறு. எ-று. (௧௩)

வலநாளிடநாள்தத்து.

இவ்வண்ணமெண்ணும்வலநாட்கிதனையெதிருறவே
யவ்வண்ணமெண்ணுமிடநாளுக்காயுவென்றாழ்குசனு
மைவண்ணமேனியர்மன்னுந்தெசைதீதுமற்றையவர்
மைவண்ணவாளரவல்குனல்லாய்நன்மைபண்ணுவரே.

(இ-ள்.) வலநாளுக்கு முன்பு தெசாதிபராகச் சொல்லிய ஒன்பதின்மரும் முறையே கொள்ளப்படும். இடநாளுக்கு எதிரேறுகக் கொள்ளப்படும். இராசிகள் அடைவாயுங் கீழ்மேலாயும் வருமிடத்தும், அடைவுகுறைந்து வருமிடத்துந் தத்தென்றறிக. ஆதித்தனுஞ் செவ்வாயுஞ் சனியும் இராகுவும் கேதுவும் உண்ணுங்காலந் தீதென்றும், சந்திரன் புதன் வியாழன் சுக்கிரன் உண்ணுங்காலஞ் சுபமென்றும் அறிக. எ-று. (௧௪)

இதுவுமது.

உற்றதெசையினிலாண்டினைநாளாக்கியொன்பதுகோள்
பெற்றதவ்வாண்டினுக்கீவைப்பெறுசுடராற்பெருக்கி
மற்றவைமாதமுநாளுங்கடிகையுமாகவைத்துக்
கொற்றவனுதியறிந்துதெசாபலங்கூறுவரே.

(இ-ள்.) வேண்டிய நட்சத்திர பாதத்துக்குரிய தெசாதிபனுடைநாளாகப் பெருக்கி அந்த இராசிக்குரிய தெசாதிபர் பரமாயுவுக்கு ஈய்ந்து பெற்ற பலத்தை அடைவேயுண்கின்ற தெசாதிபருடைய கதிர்களாற் பெருக்கி வரிசையாயேறிட்டு நின்றது ஆண்டும் மாதமும் நாளும் நாழிகையுமாம். மாதமாக்குமிடத்திற் சென்மமாதத்திற் றினமாதி கழித்துக் கொள்ளப்படும். கொற்றவனுதி என்பதனுல் உற்ற இராசியிற் சென்மலக்கின நவாங்கிசாதி தெசாதிபராம். இப்படி வலநாளுக்குக் கொள்க. இடநாளுக்கு மாறி எதிரேறுகக் கொள்ளப்படும். எ-று. (௧௫)

ஐவகைப்பலன்.

ஓதுந்தெசையையுடையவன்முன்னென்பதுமடைவூண்
பேதம்பெறுநட்பினுச்சத்தினட்சியிற்பேறுமிகுந்
தீதொன்றிடும்பகைநீசத்துநல்லகோடீக்கிரக
மேதம்பகைபெறினிவ்வகையேயறியேந்திழையே.

(இ-ள்.) உண்ணுகின்ற கோளினுடைய இராசிக்கால் ஒன்பதாய் வந்த கோட்கள் ஊட்டுமிடத்து ஐந்துவிதமாக ஊட்டப்படும். நட்பினும் உச்சத்தினும் ஆட்சியினும் பாபக்கோளேயாயினும் சுபக்கோளேயாயினும் நன்மையைப் பண்ணுவர். பகையினும் நீசத்தினும் இவர்கள் தீங்கு சத்துருபயம் தனச்சேதம் பண்ணுவர். எ-று. (௧௬)

இதுவுமது.

உச்சத்தினிற்பலநான்மடங்காமோதுநட்பின்லந்தால்
மெச்சப்படுத்துமிரட்டியென்றேவேறுமாட்சியினி

னச்சப்படுமொன்றுநற்கோள்பகைநீசநண்ணிற்றீங்கோ
டெச்சத்திழவரிபீடைதனச்சேதஞ்சாவிடரே.

(இ-ள்.) சுபக்கோள் உச்சத்து நின்றபொழுது பலம் நான்மடங்காம். நட்பின் நின்றபொழுது இரட்டியாம். ஆட்சியின் நின்றபொழுது சொல்லு நன்மையேயாம். பகை நீசத்து நின்றபொழுது மனப்பீடை புத்திரநாசம் சத்துருபயந் தனச்சேதம் மரணம் வியாதி இவற்றைப் பண்ணுவர். எ-று.

இதுவுமது.

பகையிலிரட்டிதமக்குரைக்கும்பலனீசத்தினில்
வகைபெறுநான்மடங்காநட்பின்மாதனம்வாகனங்கண்
மிகவுடைத்துச்சத்துவேந்தருண்மிக்கபோகமுண்டாந்
தகைபெறுமாட்சியிற்றீக்கோடமக்கெனச்சாற்றினரே.

(இ-ள்.) பாபக்கிரகங்கள் பகையின் நின்றபொழுது தமக்குச் சொன்ன பலங்களை இரட்டிக்கக் கொடுப்பர். நீசத்து நின்றபொழுது நான்மடங்காகக் கொடுப்பர். நட்பின் நின்றால் அத்தலாபம் வாகனம் மிகவும் உண்டாம். உச்சத்துநின்றால் இராசப்பிரசாதம் உண்டாம். ஆட்சியின் நின்றால் தத்தமக்குச்சொன்ன உத்தமபலங்களைக் கொடுப்பர். எ-று. (௧௮)

தெசாபலன்.

அருக்கன்றெசையிலருவினைதாபமரசர்பயம்
வருத்துதரநோயிரத்தபித்தமாமதிதெசையிற்
கருப்பநற்பெண்பேறுகன்னியர்கூட்டங்கலன்கலிங்கந்
திருப்பொலிவின்பஞ்செயந்தனப்பேறுதிருந்திழையே.

(இ-ள்.) ஆதித்தன்தெசையில்: வியாதி தாபம் இராசபயம் உதரநோய் இரத்தபித்தரோகம் பைத்தியம் இவையுண்டாம். சந்திரன்தெசையில்: கெர்ப்போற்பத்தி புத்திரிலாபம் விவாகம் வஸ்திராபரணம் அழகு தேகசௌக்கியம் விசயம் தனதானியசம்பத்து இவையுண்டாம். எ-று. (௧௯)

இதுவுமது.

கொடுங்குசனுணிற்குருவெழல்வெப்புக்கொடுமைபித்த
மிடும்பைநிலைகேடறுத்தல்சுடும்பிணியென்பமேதைக்
கிடம்பெறுமில்லெழிலின்பம்புதல்வர்ப்பேறெண்ணறித
றிடம்பெறுகல்விதிருவோடுறைதல்செழுங்குயிலே.

(இ-ள்.) செவ்வாய்தெசையில்: வசூரி சுரம் பாபம் பித்தரோகம் சத்துருபயம் விரோதம் தானசலனம் அறுத்தல் சுடுவியாதி இவையுண்டாம். புதன்தெசையில்: நிலைபேறு கிருகப்பிரவேசம் அழகு தேகசௌக்கியம் புத்திரலாபம் கணிதமுதலிய வித்தியாப்பியாசம் ஐசுவரியம் இவையுண்டாம். எ-று. (௨௰)

இதுவுமது.

பீதகனுணிற்பெரும்புகழ்பிள்ளையணிவியன்போர்
மாதரைச்சேர்தல்வலிசயம்வண்மைவனப்புவெள்ளி
காதலர்ப்பேறுதனலாபநூல்கலைகற்றலணி
நீதியிற்பூணனிலம்பெறனிச்சயநேரிழையே.

(இ-ள்.) வியாழன்தெசையில்: சற்கீர்த்தி புத்திரலாபம் ஆபரணம்பூணல் தனலாபம் வித்யாலாபம் யுத்தம் புகழ் ஸ்திரிசேர்வை விசயம் பிரபலம் தருமம் அழகு ஒழுக்கம் இவையுண்டாம். சுக்கிரன்தெசையில்: விவாகம் புத்திரலாபம் அத்தலாபம் வித்தியாலாபம் ஆபரணம் வாகனம் பூமிப்பேறு இவையுண்டாம். எ-று. (௨௧)

இதுவுமது.

கோம்பிவருந்தெசையிற்குற்றமீட்டல்குடிபறித்தல்
சோம்பியிருத்தறுயரிற்கிடத்தறன்சுற்றம்வீத
லாம்பரிசாமிவைநட்பாதியையவகையாலறிக
தேம்பியிடைநுடங்கத்திரண்டோங்குஞ்செழுமுலையே.

(இ-ள்.) சனிதெசையில்: பாபார்ச்சிதம் தேசம்விட்டுப்போதல் மடியாயிருத்தல் வியாதி தரித்திரம் வெந்துநாசம் இவையுண்டாம். இப்படிச் சொல்லிய பலாபலங்கள் நட்பு ஆட்சி உச்சம் பகை நீசம் பார்த்துச் சொல்லப்படும். எ-று. (௨௨)

கிரகபலிதம்.

ஆதியிற்செய்கதிரம்புலிசுன்னநந்தத்தாசான்வெள்ளி
யோதுநடுவினிலொண்புந்திபாம்பெப்பொழுதுநன்மை
சேதந்தரும்பரிசிப்படிமாதெசைகாலதெசை
கோதில்சீர்க்கோசரக்கோட்டிறமுங்குறிக்கொண்மயிலே.

(இ-ள்.) மகாதெசை காலசக்கரதெசை கோசரம் இவைகளில் ஆதித்தனும்செவ்வாயும் ஆதியினும், சந்திரனும் சனியும் அந்தத்தினும், பிருகஸ்பதியுஞ் சுக்கிரனும் மத்தியத்தினும், புதன் இராகு கேது எப்பொழுதும் பலாபலத்தைக் கொடுப்பர். எ-று. (௨௩)

காலசக்கரப்படல முற்றிற்று.

ஆ. செய்யுள் - ௨௩௪.

கடிமணப்படலம்.

சோதிடனிலக்கணம்.

சத்தியஞ்சாந்தம்பொறைகொடைபூசைசகலவுயிர்
வைத்திடுமெய்யன்புசேர்ந்தவனாகிமறைவிழியா
முத்தமவோரைகணிதமுகூர்த்தமொடுபிறநூல்
சுத்தமதாகவுணர்ந்தோனிலந்தனிற்சோதிடனே.

(இ-ள்.) உண்மை அமைதி பொறுமை கொடை கடவுள்வழிபாடு உயிர்களிலிரக்கம் என்னுங் குணங்கள் நிறைந்தவனாய், வேதங்களுக்குக் கண்ணாகிய ஓரை கணிதம் முகூர்த்தம் என்பவற்றைக் கூறும் நூல்களையும், மற்றைய நூல்களையும் ஐயந்திரிபற அறிந்து வல்லவனாய் உள்ளவனே நிலவுலகத்திற் சோதிடனென்று கொள்ளத்தக்கவன். எ-று. (௧)

இதுவுமது.

குலத்தினொழுக்கத்தின்மீதரும்வேதாங்கக்கோளினெண்ணு
மிலக்கணநூலும்விதிபெறுநூலுமியல்பினோதிக்
கலைத்துறைநீத்தருணன்விதியாமவர்க்குத்தனங்கள்
பலத்துடனல்கிப்பின்காரியங்கேட்கைபலனென்பரே.

(இ-ள்.) நற்குலமும் நல்லொழுக்கமுமுடையவனாய், நான்குவேதங்களையும், அவற்றினங்கங்களையும், அவற்றுள்ளும் விசேடமாக இலக்கணநூலையும், கிரியாக்கிரமவிதிகளை விளக்கும் நூல்களையும் முறையாய் ஓதியுணர்ந்தவன் கல்விக்கரைகண்ட பிரமணையொத்த சோதிடனாவன். அவனை வழிபட்டுத் தக்ஷிணைகொடுத்து வேண்டியவற்றைக் கேட்டலே சித்தியைத் தருமென்பர். எ-று. (௨)

மணப்பொருத்தம்.

நாட்கணமாகேந்திரநற்றிரிதீர்க்கம்யோனியோரை
கோட்குறவேவசியங்கூறலானகயிறிரண்டும்
வாட்படுசெங்கண்வகிர்படுபூநுதன்மாமதனா
ணுட்படுகொங்கைமயிலேயறைந்தனர்நல்லவரே.

(இ-ள்.) மனுடருக்குச் சகல சாத்திரங்களினும் எடுத்துப் பிரதானமாகச் சொல்லப்பட்டது விவாகம். ஆதலால் அதற்கங்கமான தினமுதலிய தசப்பொருத்தத்தினை முன்னர்ச் சொல்வேன். எ-று. (௩)

தசப்பொருத்தம்.

மன்னுந்தினங்கணமாகேந்திரமங்கைதீர்க்கம்யோனி
யுன்னுமிராசியிராசிக்கதிபதியோர்வசியந்
துன்னுங்கயிறுடன்வேதையெனும்பத்துஞ்சொல்லுமென்பர்
பன்னுங்கலைபலவல்லோர்பொருத்தங்கள்பார்ப்பவர்க்கே.

(இ-ள்.) தினம் கணம் மாகேந்திரம் ஸ்திரீதீர்க்கம் யோனி இராசி இராசிக்கதிபதி வசியம் இரச்சு வேதை என்ற பத்துப்பொருத்தமும் அடைவே விளங்கச் சொல்வேன். எ-று. (ச)

தினம்.

ஆன்றதினமூன்றுகண்டத்திரண்டுநான்காறெட்டொன்பா
னேன்றநாட்கொண்டாங்கிரண்டொன்பதிலெட்டொழித்துமூ
ன்றேன்றிடுநாலுடனைன்பதொழித்துடன்சொல்லுறுநா[ன்றிற்
ளான்றபெண்ணுண்முதலாடவனுள்வரையாவமைத்தே.

(இ-ள்.) நட்சத்திரம் இருபத்தேழையும் மூன்று கண்டமாகக்கொண்டு, இதில் முதற்கண்டம் இரண்டாங்கண்டம் மூன்றாங்கண்டம் என்றறிந்து, பெண்ணுள்முதற் புருஷநாளீறாக எண்ணுவது. எண்ணுமிடத்து முதல் ஒன்பதில் உ-ம் ச-ம் சு-ம் அ-ம் கூ-ம் நாட்கள் உத்தமம். இரண்டாம் ஒன்பதில் அ-ம் நாளொழித்து மற்றைய நாட்கள் கொள்ளலாம். மூன்றும் ஒன்பதில் ச-ம் கூ-ம் நாளொழித்து மற்றைய நாட்கள் கொள்ளலாம். எ-று. (ரு)

இதுவுமது.

ஏழைந்துமூன்றுடன்சென்மங்களெட்டாயவோரையிற்குத்
தாழுந்தினங்கள்சனனமுன்னுட்டக்கவைநாசிகஞ்
சூழ்கின்றபன்னிரண்டீரேழ்சுபமலமுன்னஞ்சொல்லி
யாழ்கின்றகாணீத்தன்மத்திமமுத்தமமல்லவையே.

(இ-ள்.) விசேடித்துப் பெண்ணுள்முதற் புருஷநாள்வரை எண்ணினல் முதல் கூ-ல் எ-ம் ரு-ம் ங-ம் நாட்களும், சென்மத்திரயங்களும், சந்திராட்டமமான இராசிக்கடைத்த உவ-நாளும், உஎ-ம் நாளும், உ-ம் கூ-ல் ங-ம் நாளான கஉ-ம் நாளும், ரு-ம் நாளான கச-ம் நாளும், அ-ம் கால்கிடந்த வைநாசிகநாளுந் தவிரப்படும். இரண்டாம் கூ-ல் ங-ம் ரு-ம் எ-ம் நாட்கள் முன்பு குணகுணத்திற் சொன்னபடியே தோஷாங்கிசங் கழித்துக்கொள்ளுதன் மத்திமம். இவையொழிந்த நாட்களெல்லாம் உத்தமம். எ-று. (சு)

கணம்.

அத்தமகசிரஞ்சோதியரிபரிதாலங்கல
மொத்திருபூசமுந்தெய்வகணமாமுருளடுப்பு
முத்திரமூன்றுடனுதிரைபூரமூன்றெண்ணுதலா
யித்திறமானிடர்க்கல்லாதிராக்கதர்க்கேய்ந்தனவே.

(இ-ள்.) அத்தம் மிருகசீரிடம் சுவாதி திருவோணம் அச்சுவினி அனுஷம் ரேவதி புனர்பூசம் பூசம் இவை ஒன்பதும் தெய்வகணம். ரோகிணி பரணி உத்தரத்திரயம் திருவாதிரை பூரத்திரயம் இவை ஒன்பதும் மனுஷகணம். ஒழிந்த கார்த்திகை ஆயிலியம் மகம் சித்திரை விசாகம் கேட்டை மூலம் அவிட்டம் சதயம் இவை ஒன்பதும் இராக்ஷதகணம். எ-று. (எ)

இதுவுமது.

ஒன்றானதேற்கணமுத்தமமத்திமந்தேவர்மக்கள்
பின்றாததமமிராக்கதர்தேவர்பிறைநுதலாய்
வன்றாளரக்கருமானிடரும்வருமேன்மரண
மென்றார்கணிதங்களெல்லாமுணர்ந்தவியல்பினரே.

(இ-ள்.) கணப்பொருத்தஞ் சொல்லுமிடத்து: பெண்ணாளும் புருஷநாளும் ஒருகணமாகில் உத்தமம். பெண்ணுள் தெய்வகணமும் புருஷநாள் மனுஷகணமுமாயின் மத்திமம். இது மாறிநிற்கில் உத்தமம். பெண்ணுள் இராக்ஷதகணமும் புருஷநாள் தெய்வகணமுமாகில் தீது. இது மாறிநிற்கில் அதமம். பெண்ணுள் இராக்ஷதகணமும் புருஷநாள் மனுஷகணமுமாயினும் இது மாறிநிற்பினும் மரணமாம். எ-று. (அ)

மாகேந்திரமும் ஸ்திரீதீர்க்கமும்.

நான்கேழுபத்துப்பதின்மூன்றுநாலுனுபத்தொன்பது
தான்கேளிருபத்திரண்டிருபத்தஞ்சுதானுறுமேல்
வான்றிகழ்மாகேந்திரம்பெண்ணினுண்முதன்மைந்தனஞ்ஞா
ளேன்றபன்மூன்றுக்குமேற்றிரிதீர்க்கமிசையுறுமே.

(இ-ள்.) பெண்ணுள்முதற் புருஷநாள்வரையும் எண்ணினல் ச, எ, க0, கங, கசு, ககூ, உஉ, உரு, இவற்றுளொன்றாயிருந்தால் மாகேந்திரப்பொருத்தமுண்டாம். இது பெண்ணுள்முதலாக உத்தமம் மத்திமம் அதமம் என்றெண்ணவும் பெறும். பெண்ணுள்முதற் புருஷநாள் பதின்மூன்றிற்கு மேற்படில் ஸ்திரீதீர்க்கப் பொருத்தமுண்டாம். இது ஒன்பதுக்கு மேற்படின் மத்திமம். எ-று. (கூ)

யோனி.

பரிகரியாடரவம்பெண்பணிநாய்பூனைதகராண்
வெருகெலியாகுவிடைமேதிவன்புலிபோத்துப்புலி
கருவளர்மான்கலைநாய்கவியாமந்திகாரிகைமா
பெருமகனுகயம்பேசினர்யோனிபரிமுதலே.

(இ-ள்.) யோனிப் பொருத்தங் கூறுமிடத்து: அச்சுவினி குதிரை, பரணி யானை, கார்த்திகை ஆடு, ரோகிணி பாம்பு, மிருகசீரிடம் பெண்பாம்பு, திருவாதிரை நாய், புனர்பூசம் பூனை, பூசம் ஆண்ஆடு, ஆயிலியம் ஆண்பூனை, மகம் எலி, பூரம் பெண்எலி, உத்தரம் எருது, அத்தம் எருமை, சித்திரைஆண்புலி, சுவாதி ஆண்எருமை, விசாகம் புலி, அனுஷம் மான், கேட்டை கலைமான், மூலம் ஆணாய், பூராடம் குரங்கு, உத்தராடம் மலட்டுப்பசு, திருவோணம் பெண்குரங்கு, அவிட்டம் பெண், சதயம் பெண்குதிரை, பூரட்டாதி புருஷன், உத்தரட்டாதி பசு, ரேவதி பெண்யானை. எ-று.

உத்தராடத்திற்குக் கீரி என்றும், அவிட்டத்திற்குப் பெண்சிங்கம் என்றும், பூரட்டாதிக்கு ஆண்சிங்கம் என்றுங் கூறுவாருமுளர். (க0)

இதுவுமது.

மானுமறிபரிநாய்மக்கள்பூனைமதகரியே
தானுகினன்றெலிநாயராப்பூனைபுலிசத்துருக்
கானரவமெலிபூனைநாய்கருதும்பகையாந்
தேனார்மொழியாய்குரங்கெவற்றிற்குஞ்சிறந்தநட்பே.

(இ-ள்.) மான், பசு, ஆடு, குதிரை, நாய், மனுஷர், பூனை, யானை இவை அன்னியயோனி நன்றாம். எலி, நாய், பாம்பு, பூனை, புலி இவை அன்னியயோனி சத்துருவாம். பாம்பு, எலி, பூனை, நாய் இவை தம்மில் அநாதி விரோதிகளாம். சகல யோனிகளுக்கும் குரங்கு நட்பாம். எ-று. (கக)

இராசி.

தன்னினமாயிடில்யோனிநன்றாமோரை தானுமொன்றே
நன்னெறியாம்பெண்முதலாடவனோரைநண்ணவெண்ணி
லொன்னலராயிடுமாறுக்குமேற்படி யுத்தமமா
மின்னிடையாய்கேளிரண்டஞ்சுமாறுமிகப்பிழையே.

(இ-ள்.) யோனி ஓரினமாகில் ஸ்திரீபுருஷர்கள் தயவாயிருப்பர். ஆகையால் யோனிப்பொருத்தம் நன்றாம். இராசிப்பொருத்தங் கூறுமிடத்துப் பெண்ணிராசி முதற் புருடனிராசி யீறாகவெண்ணினால் ஆறிராசிக்கு மேற்படிற் பொருந்தும்; கீழ்ப்படிற் பொருந்தாது. இவற்றில் இரண்டாமிராசி ஐந்தாமிராசி ஆறாமிராசியாயின் மிகவும் பொருந்தாது. ஸ்திரீபுருஷர்கள் இராசி ஒன்றாகிற் பொருந்தும். எ-று. (கஉ)

இராசியதிபதி.

அந்தணன்வெய்யவற்காசான்புதன்மதிக்காங்குசற்குப்
புந்தியும்வெள்ளியுநட்புப்புதற்குக்கதிர்பகைசேய்
மந்திரிக்குப்பகைவெள்ளிக்கிரவிமதிபகையாஞ்
சந்திரசூரியர்சேய்சனிக்குப்பகைதாழ்குழலே.

(இ-ள்.) ஆதித்தனுக்கு வியாழன், சந்திரனுக்கு வியாழனும் புதனும், செவ்வாய்க்குப் புதனுஞ் சுக்கிரனும் நட்பு; அன்னியர் சத்துரு. புதனுக்கு ஆதித்தன், வியாழனுக்குச் செவ்வாய், சுக்கிரனுக்குச் சந்திராதித்தர், சனிக்குச் சந்திராதித்தர் செவ்வாய் சத்துரு. அன்னியர் மித்துரு. ஸ்திரீபுருஷர்களுடைய இராசிக்கதிபதி மித்துருவாகிற் பொருந்தும். சத்துருவாகிற் பொருந்தாது. எ-று. (கங)

வசியம்.

மறிக்கரிதேண்மால்விடைக்குத்துலாநண்டுவான்றடிக்கு
வெறிக்குங்குழன்மகனண்டிற்குவிற்றேள்விறலரிக்குச்
செறிக்குந்துலைதெரிவைக்குமிதுனங்கயறலைக்குக்
குறிக்குங்கலைதேடனக்குக்குளிர்கன்னிவைசியமே.

(இ-ள்.) மேடத்துக்குச் சிங்கம் விருச்சிகம், இடபத்துக்குத் துலாம் கர்க்கடகம், மிதுனத்துக்குக் கன்னி, கர்க்கடகத்துக்குத் தனு விருச்சிகம், சிங்கத்துக்குத் துலாம், கன்னிக்கு மிதுனம் மீனம், துலாத்துக்கு மகரம், விருச்சிகத்துக்குக் கர்க்கடகங் கன்னி இவை வசியமாம். எ-று. (கச)

இதுவுமது.

விற்கெழின்மீனங்கலைக்காடுகும்பங்குடந்தனக்குப்
பொற்புறமேழகமீனத்தினுக்குப்பொருமகரஞ்
சொற்படுவைசியமாமாறிநிற்பிற்றுடியிடையாய்
நற்பருநூல்களையந்துரைசெய்தனநானிலத்தே.

(இ-ள்.) தனுவுக்கு மீனம், மகரத்துக்கு மேடம் கும்பம், கும்பத்துக்கு மேடம், மீனத்துக்கு மகரம், இவை வசியமாம். இப்படிப் பார்த்து ஸ்திரியுடையராசிக்கு வசியமானராசி புருஷராசியாயின் உத்தமம். புருஷனுடையராசிக்கு வசியமானராசி ஸ்திரிராசியாயின் மத்திமம். இருவருடையராசியும் இவ்வாறு வராதிருந்தால் வசியமில்லை. எ-று. (கரு)

இரச்சு.

வட்டங்கணுன்கிடைவிட்டங்கண்மூன்றுருறவகுத்தாங்
கிட்டெண்ணிரலைபுறமானவாழியிதனில்வைத்து
மட்டுண்குழலிக்குமைந்தற்குமாயநாளோர்வட்டத்துக்
கிட்டினமங்கலிகிட்டாவிடினல்லமங்கலியே.

(இ-ள்.) ஒரு வட்டத்தையிட்டு இதன் புறம்பாக மூன்றுவட்டத்தையிட்டு இதிலே தன்னிலொக்கக் கதிர்போல மூன்றுவிட்டத்தையிடின் அது இரச்சுச் சக்கரமாம். இதன் புறம்பில் வட்டத்தில் ஒருவிட்டத்தின் தலை தொடங்கி அச்சுவினிமுதலாக உள்ளேபுக ஐந்துநாளெண்ணிப், பின்பு பிரதக்கிணமாகத் திருவாதிரைமுதல் நாலுநாட் புறப்படவெண்ணிப், பின்பு மகமுதல் ஐந்துநாள் உள்ளேபுகவெண்ணிப், பின்பு சோதிமுதல் நாலுநாட் புறப்படவெண்ணிப், பின்பு மூலமுதல் ஐந்துநாள் உள்ளே புகவெண்ணிப், பின்பு சதயமுதல் நாலுநாட் புறப்படவெண்ணி, இப்படி இருபத்தேழு நாளுமெண்ணி நின்ற உச்சமத்தியத்திலே மிருகசீரிடம் சித்திரை அவிட்டம் கூடக்கிடக்க எண்ணுவது. அஃதாவது: மிருகசீரிடம் சித்திரை அவிட்டம் சிரோரச்சு. ரோகிணி திருவாதிரை அத்தம் சோதி திருவோணம் சதயம் இவ்வாறுநாளுங் கண்டரச்சு. கார்த்திகை புநர்பூசம் உத்தரம் விசாகம் உத்தராடம் பூரட்டாதி இவ்வாறுநாளும் உதரரச்சு. பரணி பூசம் பூரம் அனுஷம் பூராடம் உத்தரட்டாதி இவ்வாறுநாளும் ஊருரச்சு. அச்சுவினி ஆயிலியம் மகம் கேட்டை மூலம் ரேவதி இவ்வாறு நாளும் பாதரச்சு. இப்படி நாலுவட்டமும் நடுவுந் தலை கழுத்து வயிறு ஊரு காலெனப்படும்; இவையிலே வட்டத்தில் ஒருவிட்டத்திலே ஸ்திரீபுருஷர்கள் நாட்கிடக்கில் இரச்சுப்பொருந்தாது. பின்னமாகிற் பொருந்தும். எ-று. (கசு)

வேதை.

வேதைக்கயிற்றின் விதியுமிவ்வாழியின்மேல்விளங்கப்
பேதித்தவிட்டத்தலைக்கேயிருவர்தந்நாளும்பெறில்
வாதைப்படுத்துமிரண்டுகயிறும்வலம்பற்றியே [மே.
சோதித்துள்ளேந்தும் புறத்தொரு நான்குமாய்ச் சூழெண்ணு

(இ-ள்.) மேலே சொல்லப்பட்ட சக்கரவட்டத்துற்ற விட்டத்தலையிலே அச்சுவினியை வைத்து இரச்சுவுக்கெண்ணினதுபோல பிரதக்கிணமாக உள்ளேபுக ஐந்துநாளும் புறப்பட நாலுநாளுமாக எண்ணுவது. இப்படி எண்ணிவந்தால் ஒருவிட்டத்தலையிலே இருவர்நாளும் எதிர்த்துவரின் வேதைக்கயிறு பொருந்தாது. அவை வருமாறு: அச்சுவினியும் கேட்டையும், பரணியும் அனுஷமும், கார்த்திகையும் விசாகமும், ரோகிணியும் சுவாதியும், மகமும் ரேவதியும், பூரமும் உத்தரட்டாதியும், உத்தரமும் பூரட்டாதியும், அத்தமும் சதயமும், மூலமும் ஆயிலியமும், பூராடமும் பூசமும், உத்தராடமும் புனர்பூசமும், திருவோணமும் திருவாதிரையும், மிருகசீரிடம் சித்திரையும் அவிட்டமும், இவை ஒன்றினுக்கொன்று வேதைநாட் பொருந்தாது. எ-று. (௧௭)

ஏகதினதுணதணம்.

ஏகநாளுத்தமமென்பவிராசிப்பொருத்தமுண்டே
னுகம்புட்சோதிபதங்கேட்டைவிற்சுண்ணநற்பரணி
யேகநாளெப்பரிசாயினுமாகாவிரண்டோரைக்குப்
பாகம்படுநாட்களாகாதென நூல்கள்பன்னினவே.

(இ-ள்.) ஸ்திரீபுருஷர்கள் நாள் ஒன்றாய் இராசி கூறுபட்ட நாளானால் முதற்கூறு புருஷனும், பிற்கூறு பெண்ணுமாயின் மிகவுத்தமம். இது மாறி நிற்பிற் பொருந்தாது. ஆயிலியம் அவிட்டம் சுவாதி பூரட்டாதி கேட்டை மூலம் சதயம் பரணி இந்நாட்கள் எப்பரிசாயினும் ஆகாது. அன்றியும் இரண்டு இராசி கூறுபட்ட நாட்கள் ஆகாவென்றும், முழுநாளெல்லாம் மிகவும் நல்லதென்றுஞ் சில நூல்கள் கூறும். எ-று. (௧௮)

பொருத்தவிசேஷம்.

பொருந்தாதயோனியரக்கர்கணம்பெண்பொல்லாதனவாய்
வருந்தாவிலோரையுறின்மரபேநட்புமாட்சியுமா
யிருந்தாலதிபதியேநன்றிரச்சுக்கணமியோனி
செருந்தார்குழலாய்தினமோதைவசியஞ்சேரினன்றே.

(இ-ள்.) பகையான யோனி ஸ்திரி இராக்ஷதகணம். இராசி ௬, ௯, ௫, ௮, ௨, ௧௨, ௩, ௧௧, ௪, ௧௦, இவை மிகவும் பொருந்தாது. இவை வந்தபொழுது சந்திரன் நவாங்கிசாதிபதி உறவாதல் இராசியதிபதி ஏகாதிபத்தியமாதல் உறவாதல் உண்டாயிருக்கில் இந்தத் தோஷங்கட்கபவாதமுண்டாம். சொன்ன தசப்பொருத்தத்துள் இரச்சுவும் கணமும் யோனியும் தினமும் இராசியும் வசியமும் பிரதானம். எ-று.

சிலர் தினமுங் கணமும் யோனியும் அதிபதியும் இரச்சுவும் பிரதானமென்பர். (௧௯)

இதுவுமது.

பத்துப்பொருத்தத்துளாறுத்தமமாகப்பண்புடைய
சுத்தசகுனநன்றாயிருவோருந்துணிவுரைப்ப
முத்தொத்தவாணகையாய்கோட்கணன்மைமுறையினிற்ப
வொத்தபருவத்துவந்துமணஞ்செய்கையுத்தமமே.

(இ-ள்.) சொல்லப்பட்ட தசப்பொருத்தத்துட் பிரதானமாக எடுத்த பொருத்தம் ஆறுக்குமேற்பட, நல்ல நிமித்தங்களுமுண்டாயிருக்க, ஸ்திரீபுருஷர்பக்ஷத்து வெந்துக்கள் துணிவுரைகூறவும், கிரகங்கள் நல்ல தானங்களில் நிற்கவும், பெண்ணுக்கு இரட்டித்தவயதும் புருஷனுக்கு ஒற்றித்தவயதும் இருவருக்கும் ஒத்த பருவமாகவும் இருக்க விவாகஞ்செய்தல் உத்தமம். எ-று. (௨௦)

அங்குரவிதி.

கெற்பமுதலாவினையாறினுக்குங்கிளர்ந்தொழித்துப்
பொற்பங்குரவினையாவினுக்கும்புகன்றார்கணாலோர்
சொற்பங்கிரவுசுபமெனச்சௌளகத்திற்குப்பக
னிற்பந்தமென்பர்முளைவார்த்தலம்பொனிரைவளையே.

(இ-ள்.) கெர்ப்பாதானம் புங்ஸவனம் ஸீமந்தம் விட்டுணுபெலி சூதிகாக்கிருகம் சாதகன்மம் இவ்வாறுக்கும் அங்குரார்ப்பணந் தவிரப்படும். ஏனைய மங்கல காரியங்களுக்கெல்லாம் அங்குரார்ப்பணங்கொள்ளுமிடத்து இராக் கொள்ளப்படும். சௌளகன்மத்துக்குப் பகலில் நிச்சயமாகக் கொள்ளப்படும். எ-று. (௨௧)

இதுவுமது.

ஏன்றெனதேவருக்கொன்பதுமேழுமியல்வருணத்
தான்றவர்தங்களுக்கைந்தினுமூன்றினுமொன்றினுமென்
றோன்றுமிருபிறைநீத்துச்சுபரெட்சிநோக்கம்பெறிற்
சான்றவரங்குரமல்லும்பகலுஞ்சயமென்பரே.

(இ-ள்.) தேவோற்சவத்துக்கு முன்னே ஒன்பது ஏழு நாளென்ன அங்குரார்ப்பணம் பண்ணப்படும். விவாகத்துக்கு முன்னே ஐந்து மூன்று நாளென்னக் கொள்ளப்படும். அன்றித் தற்காலத்துங் கொள்ளப்படும். இந்த இரண்டு உற்சவத்துக்கும் இந்நாட்களுக்குள்ளே அமாவாசை வரில் நாட்குறைத்துக்கொள்ளுதல் சத்தியாங்குரமாகக் கொள்வது. சுபக்கிரகோதயமாதல் பார்வையாதலுண்டாகில் இரவிலாயினும், பகலிலாயினும் கொள்ளப்படும். எ-று.

ஏழுமியல்வருணத்தான்றவர் என்கையால் பிராமணருக்கு ஏழுநாளும், க்ஷத்திரியருக்கு ஐந்துநாளும், வைசியருக்கு மூன்றுநாளும், சூத்திரருக்குத் தற்காலத்தினும் அங்குரார்ப்பணஞ் செய்யப்படும். (௨௨)

வாயசபெலி, பஞ்சமிருத்திகை, கெவுளி.

நாட்டினர்நன்றுமணவணிக்குச்சொன்னநாளோரையி
னீட்டியமுன்பொழுதாயெழில்வாயசம்பஞ்சகமன்
கோட்டியிற்பார்த்தலிரவினுமாகுங்குறிபல்லிநெய்
தீட்டியவேல்விழியாயந்திமாலைசிறப்புறவே.

(இ-ள்.) விவாகத்துச் சொன்ன திதி வாரம் நாள் இராசிகளிலே விடியற்காலம் பூருவாணத்திலே வாயசபெலியும் பஞ்சமிருத்திகையும் பரிசிக்கப்படும். பஞ்சமிருத்திகை பரிசிக்கை கிருகத்திலே இரவினுமாகும். கெவுளி பார்க்குமிடத்துச் சந்தியாகாலத்திலே பார்க்கப்படும். எ-று. (உங)

விவாகமாதம்.

மாசிபுரட்டாதிமார்கழியாடிமணவணிக்குப்
பேசினர்தீதெனப்பீதகனுறெட்டுமூன்றுபத்து
மேசுறுசென்மத்துநாலினுமீராறினுமிசையி
னுசமுடைத்தென்பர்நல்லுயிர்மெய்யிற்குநன்னுதலே.

(இ-ள்.) மாசி புரட்டாதி மார்கழி ஆடி இம்மாதங்களில் விவாகஞ்செய்யலாகாது. அல்லாத மாதம் எட்டினுங்கொள்ளலாம். ஸ்திரீபுருஷருடைய சந்திரலக்கினத்துக்குஞ் சென்மலக்கினத்துக்கும் வியாழன் ஆறுமிடம் எட்டாமிடம் மூன்றுமிடம் பத்தாமிடம் சென்மம் நாலாமிடம் பன்னிரண்டாமிடம் இவற்றிலே நின்றால் விவாகம் பண்ணலாகாது. பண்ணினால் அமங்கலமாம். எ-று. (உச)

இதுவுமது.

ஆவணியைப்பசிமத்திமமல்லாதவையனைத்து
நாவணிவல்லவர்நன்றெனவோதினர்முன்புசொன்ன
பாவணிபஞ்சாங்கமுநல்லவாகப்பரிந்தெடுத்துப்
பூவணிபூங்குழலார்பாணிபற்றப்புகன்றனரே.

(இ-ள்.) விவாகத்துக்கு: ஆவணியும் ஐப்பசியும் மத்திமம். அல்லாத ஆறுமாதமும் உத்தமம். வியாழன் அனுகூலமான ஆண்டில் உத்தமமாதங்களிற் பஞ்சாங்கயோகம் நன்றாகப் பாணிக்கிரகணத்துக்குச் சொன்ன தோஷங்களெல்லாம் பார்த்து நன்மையுண்டாக விவாகம் பண்ணுவது. எ-று. (உரு)

விவாககாலநியதி.

மூலமகமத்தமுத்தரமூன்றுமுடிவுருடேர்
தாலம்விளக்குமதிநன்றுதண்டுவிற்பின்னரையுங்
கோல்கன்னிநன்றுங்குடங்குளிர்மீன்கலைசேவரியுஞ்
சீலமுடைத்தேழிடஞ்சுத்திகொள்சீர்மணவணிக்கே.

(இ-ள்.) மூலம் மகம் அத்தம் உத்தரத்திரயம் ரேவதி ரோகிணி அனுஷம் சுவாதி மிருகசீரிடம் இந்நாட்களில், மிதுனம் தனுவிற் பிற்கூறு துலாம்கன்னி இந்த இலக்கினங்கள் உதயமாக விவாகம்பண்ணுதல் உத்தமம்.

கும்பம் கர்க்கடகம் மீனம் மகரம் இடபம் சிங்கம் இவை சுபக்கிரகத்துடனே உதிக்கின் மிகவும் நன்றாம். ஏழாமிடஞ் சுத்தமாக விவாகம்பண்ணப்படும். எ-று. (உசா)

இதுவுமது.

ஐயவுயிர்க்கைந்துநான்கிரண்டொன்பதெட்டேழ்பத்தந்தஞ்
செய்யவரவஞ்சனிகதிர்சேய்தீயர்சேரிவற்றில்
வையஞ்செறிகதிர்பத்துமதிநான்கிரண்டொன்பதைந்
துய்யவொருபதுநன்றென்மணவணிக்கொண்ணுதலே.

(இ-ள்.) விவாகத்துக்குச் சொல்லப்பட்ட இலக்கினத்துக்கு உ, ச, ரு, எ, அ, கூ, க0, கஉ, இந்தவிடங்களில் ஆதித்தன் செவ்வாய் சனி இராகு கேது நிற்கிற் பொல்லார். இவ்விடங்களில் ஆதித்தன் க0-ம் இடத்தில்நிற்கலாம். சந்திரன்: உ, ச, ரு, கூ, க0, இவ்விடங்களில் நிற்பின் நல்லன்; அல்லாதவிடங்களிற் பொல்லான். எ-று. (உஎ)

இதுவுமது.

எட்டொடாறேழினிற்றீயன்புகர்புந்தியேழொடெட்டு
மொட்டியபன்னிரண்டுந்தீயனும்பர்கோனாறுமேழுஞ்
சுட்டியபன்னிரண்டும்மெட்டுமாகான்சுபருதய
நட்டுறுமேன்முகமானவிவ்வோரையுநன்றென்பரே.

(இ-ள்.) சுக்கிரன்: சா, எ, அ, இந்தவிடங்களில் ஆகான். புதன்: எ, அ, கஉ, இந்தவிடங்களில் ஆகான். வியாழன்: சா, எ, அ, கஉ, இந்த விடங்களில் ஆகான். சுபக்கோள் உதயமாகின் மிகவும் நன்றாம். முன்பு ஆகாவென்ற இராசிகள் ஒரு சுபக்கோளுடன் உதிப்பினும், மேனோக்கின இராசியாய் உதிப்பினும் நன்றாம். எ-று. (உஅ)

இதுவுமது.

மதியுதயத்தினிற்சேயஞ்சிற்பத்தின்மால்பன்னிரண்டிற்
கதிரவனாலைந்திற்காரியுநான்கிற்கழற்புகர்பாம்
பெதிருறுமெட்டினிலெக்கோளுமேழிலீராறினிற்பொன்
பதியுறினன்றல்லமங்கையர்செங்கையைப்பற்றிடவே.

(இ-ள்.) முன்பு ஆதித்தன் முதலான கோட்களுக்குச் சொல்லப்பட்ட தோஷமான இடங்களிலே விசேஷித்துத் தவிரப்படும் இடங்களாவன: அபரபக்கத்துச் சந்திரன் உதயம்; செவ்வாய் ரு, க0; புதன் கஉ; ஆதித்தன் ச, ரு; சனி ச; சுக்கிரன் இராகு அ; வியாழன் கஉ; இந்தவிடங்களில் இவர்கள் நிற்கில் மிகவும் ஆகார். சுபக்கோளாயினும் பாபக்கோளாயினும் ஏழாமிடத்தில் நிற்கில் ஆகார். எ-று. (உகூ)

பொல்லாவிடங்களினிற்குங் கிரகதோஷாபவாதம்.

விலைமகள்சுங்கன்வியாழந்துறமகள்வெய்யவனேன்
மலமுறுகைம்பெண்குசன்றுட்டைநீலன்மலடிமிடி-

தலைமகடிங்கடிருவிலிமால்சாவுநோயரவ
நிலையுறுவான்சிகிநின்றநிலைக்குவியாதிகளே.

(இ-ள்.) விசேஷித்துப் பொல்லாதென்றவிடங்களில் நின்ற கிரகங்களால் வருந் தீமைகளாவன: சுக்கிரன் நிற்கில் பரத்தை; வியாழன் நிற்கில் துறவி, ஆதித்தன் நிற்கில் விதவை, செவ்வாய் நிற்கில் விஷமி, சனிநிற்கில் மலடி, சந்திரன் நிற்கில் தரித்திரி, புதன் நிற்கில் திருவிலி, இராகு நிற்கில் மரித்தல் வியாதி, கேது நிற்கில் தீராவியாதியாம். எ-று.

இந்தத் தோஷங்களுக்குச் சுபக்கோள் பெலவானாய் நல்ல விடங்களிலே நிற்றல் நோக்குதல் உதித்தல் செய்யில் அபவாதமுண்டாம். (௫௦)

இதுவுமது.

சந்திரனெட்டியெட்டாறுமீராறுந்தவிரப்படு
மந்திரியாறெட்டினன்றும்வளர்மதியெட்டிவந்தாற்
சுந்தரமாமவன்பத்தாயநாளுஞ்சுபங்கொடியோர்
முந்தெழுகாலமணவணிக்குத்தீதுமொய்குழலே.

(இ-ள்.) அபரபக்கத்துச் சந்திரன் உதயம், ௬, ௮, ௧௨, இவ்விடங்கள் தவிரப்படும். பூரணசந்திரன் உதயமானால் வியாழன் ௬, ௮, இவ்விடங்களில் நின்றாலும் நன்றாம். புருஷனுடைய பத்தாம்நாள் விவாகம் பண்ணலாம். ஒழிந்த சென்மமும், இருபதாம்நாளும் ஆகாது. பாபக்கிரகோதயந் தவிரப்படும். எ-று. (௫௧)

இதுவுமது.

கன்னிதன்சென்மங்கண்மூன்றுங்கடிமணத்திற்குநன்றாம்
பொன்னவன்புந்திபுகரெழிற்போகம்பொலிவுடைத்தா
மன்னியகேதுவும்வாளரவும்மெழின்மாதுமன்னு
மின்னுயிர்சேர்விடுவரென்றோதினரிந்நிலத்தே.

(இ-ள்.) பெண்ணினுடைய சென்மத்திரயங்கள் பாணிக்கிரகணத்துக்கு மிக நன்று. சுபக்கோள் உதயமாகின் மிக்க போகங்களையுடையளாம். இராகு கேதுக்கள் உதயமாகின் இருவருக்கும் மிருத்துபயமாம். எ-று.

விவாகத்துக்காகாதநாள்.

கண்டகந்தூணஞ்சகடஞ்சமவிழிகம்பம்வேதந்
தண்டபஞ்சார்க்கஞ்சடசீதிதிங்களிற்சூனியங்கள்
விண்டருமாசிவிடமதிகத்திங்கள்வெள்ளிகுரு
வொண்டிறற்பாடுகடிமணஞ்செய்யவொழிந்தனவே.

(இ-ள்.) கண்டகம் தூணம் கண்டகத்தூணம் சகடம் சமதிருட்டி விட்கம்பம் கிரகவேதை பஞ்சார்க்கம் சடசீதி மாதசூனியம் நாளிலக்கினம் ஆசிவிடம் அதிகமாதம் குருசுக்கிராத்தமயம் இவை விவாகத்துக்குத் தவிரப்படும். எ-று. (௫௩)

நாலாநீர்.

நன்மணஞ்செய்துற்றநாளுக்குநாலினிலஞ்சிலேழிற்
பொன்புகர்மால் குணமுண்டாயபோதிற் பொன்னுடையொன்
யன்புடையாளொடுடுத்தணிநீராடியாரணநூல் [றை
சொன்முறையன்பிற்றணைமுலைபுல்கிடச்சொல்லினரே.

(இ-ள்.) விவாகதினத்துக்கு ௪, ௫, ௭, இந்நாட்களிலே, புத குரு சுக்கிரர் சுபராசியிலேநிற்க, அநுகூலம்பெற்ற சுபதினத்திலே, தன்மனையாளுடனே ஏகவஸ்திரமுடுத்து முழுகி அலங்காரஞ்செய்து, பின்பு கர்ப்பாதானத்துக்குச்சொல்லிய விதிப்படி ஸ்திரீசங்கமஞ்செய்வது. எ-று. (௫௪)

கடிமணப்படல முற்றிற்று.

ஆ செய்யுள் - ௨௬௮.

தெருட்சிப்படலம்.

நேரபலனுந் திதிபலனும்.

சுத்தவுதயமுமுச்சியும்பாடுஞ்சொலுமுறையே
யுத்தமமத்திமமதமமிம்முறையல்லினுங்கொண்
மைத்துறுகண்ணார்முதற்பூப்பினுமுவாமுற்றிதியுஞ்
சித்திரையாறுந்திருவிழப்பிக்குந்திருந்திழையே.

(இ-ள்.) இருதுவிலக்கணங் கூறுமிடத்து உதயமுதல் ௧௦-நாழிகைக்குள்ளானல் உத்தமம். நடுப்பத்துநாழிகை மத்திமம். பின் பத்துநாழிகை அதமம். இரவும் இப்படிக் கொள்ளப்பெறும். திதிகளில் அமாவாசை பூரணை பிரதமை சதுர்த்தி சஷ்டி அஷ்டமி நவமி துவாதசி சதுர்த்தசி இவை ஆகா. ஏனையவை நன்றாம். எ-று. (௧)

நக்ஷத்திரபலன்.

ஓதினரீராறுமுத்தமமுத்தராடம்முதலா
யாதிரைநாண்முதலேழ்பிணிநான்கத்தமாதியாக
நீதியிலாதவிலைமகளாநெடுமங்கலநாண்
சேதமுமாம்பனைநாண்முதற்பூப்பிற்றிருந்திழையே.

(இ-ள்.) உத்தராடமுதற் பன்னிரண்டுநாளில் தெருட்சியானல் உத்தம ஸ்திரீ. திருவாதிரைமுதல் ஏழுநாளும் வியாதி. அத்தமுதல் நாலுநாளும் வேசி. அனுஷமுதல் நாலுநாளும் விருத்தகாலம் விதவையாம். எ-று.

"அத்தமோடுசித்திரையமர்ந்தவாழ்வுகுன்றிடும்" என்பாருமுளர். (௨)

இதுவுமது.

எரிமகந்தாலம்புள்ளாதிநாணான்கிலெழிற்றிருவீ
றரியமகப்பேறுநல்லவள்பூப்பிலுயர்புனர்தம்
வருசித்திரையாடிநாவாய்முதனாலின்மான்மலடாந்
திரிபிச்சையுண்ணுந்திருவிலிவேசிசிலைநுதலே.

(இ-ள்.) கார்த்திகை மகம் அனுஷம் அவிட்டம் முதலிய நாலுநாட்களில் இருதுவானால் ஸ்ரீவதி சௌபாக்கியவதி புத்திரவதி சினேகவதி என்று பெயருடையள். புனர்பூசம் சித்திரை உத்தராடம் ரேவதி முதலிய நாலுநாட்களில் இருதுவானால் மலடி பிச்சையுண்ணி விதவை வேசி என்று பெயருடையள். எ-று. (௩)

இலக்கினபலன்.

திருந்தியபூப்பிற்றுலைதடிகும்பஞ்செழுமகரம்
பொருந்தியசிங்கத்திற்போகத்தளாம்பொறிதேண்மறிமீன்
வருந்திருவில்லவளேறலவன்பரதாரமண்மே
லருந்ததியாகுமகளுநியாநிற்பினாயிழையே.

(இ-ள்.) பிரதமார்த்தபந் தோன்றின இலக்கினம் துலாம் மிதுனம் கும்பம் மகரம் சிங்கமானால் போகவதியாம். தனு விருச்சிகம் மேடம் மீனம் திருவிலியாம். இடபம் கர்க்கடகம் பரதாரமாம். கன்னியாகின் அருந்ததி போன்ற கற்பாம். எ-று. (௪)

வாரபலன்.

ஆயும்பருதிபிணிமதிகற்பாரலேல்விதவை
தூயமகப்புந்திமந்திரிபோகவதிதுகடூ
ரேயும்புகர்பெருநன்மைகளுட்டுமிரவிமகன்
மாயும்வினைபீடைவாரோதயம்பணிவான்பிணியே.

(இ-ள்.) இரஜசு ஆதித்த வாரோதயமாயின் வியாதி, புத்திரநாசம். திங்கள் பதிவிரதை. செவ்வாய் விதவை. புதன் புத்திரவதி. வியாழன் போகவதி. வெள்ளி மிக்கபோகவதி. சனி துஷ்டை, வியாதி பீடையாம். இராகு கேது உதயமாகின் மிக்க வியாதி பீடையாம். எ-று.

சாமர்த்தியம், இருது, தெருட்சி, இரஜசு, பிரதமார்த்தபம், பூப்பு என்பன ஒருபொருட் சொற்கள். (௫)

தெருட்சிப்படல முற்றிற்று.

ஆ. செய்யுள் - ௨௭௩.

கர்ப்பாதானப்படலம்.

பூத்தவந்நாண்முதனான்கும்பொருந்தாபுணரினிரை
பார்த்தபுமான்பெண்மகவுகுழவிசாம்பண்புடைத்தா
யார்த்தவந்நாண்முதலீராறுநன்றென்பராங்கவற்றிற்
சேர்த்தகுநாட்செப்புவன்செய்யதாமரைக்கட்டிருவே.

(இ-ள்.) இருதுவான நாள்முதல் நாலுநாளுங் கர்ப்பாதானம் பண்ணலாகாது. பண்ணினால் முதல் நாள் புருஷனுக்கும் இரண்டாம்நாள் ஸ்திரிக்கும் மூன்றாம்நாள் கர்ப்பத்துக்கும் நான்காம்நாள் பிறந்த புத்திரனுக்கும் அரிட்டமுண்டாம். நீராடிச் சுத்தமான ஐந்தாம் நாள்முதற் பன்னிரண்டாம் நாளளவுங் கர்ப்பாதானம் பண்ணப்படும். அதற்காகியநாள் மேலே சொல்வேன். எ-று. (௧)

கர்ப்பாதானத்துக்குநாள்.

திருவோணமத்தம்பனைதொழுச்சோதிசெக்குத்திரங்க
ளுருண்மூலமுத்தமஞ்சித்திரைமான்றலையாழவிட்டங்
குருநாட்களைமத்திமங்குற்றமற்றதிதிகுளிர்யாழ்
கருமீன்றுலைவிடைவில்லரிபெண்ணிற்கருப்பெய்கவே.

(இ-ள்.) திருவோணம் அத்தம் அனுஷம் ரேவதி சுவாதி சதயம் உத்தரத்திரயம் ரோகிணி மூலம் இவை உத்தமம். சித்திரை மிருகசீரிடம் அச்சுவினி அவிட்டம் புனர்பூசம் பூசம் இவை மத்திமம். பக்கச்சித்திரையொழிந்த நல்ல திதிகளிலே, கர்க்கடகம் மிதுனம் மீனம் துலாம் இடபம் தனு சிங்கம் கன்னி இவை உதயமாகக் கர்ப்பாதானம் பண்ணலாம். எ-று. (௨)

இதுவுமது.

அல்லாதவோரையனைத்தும்பகலுந்தவிரப்படுஞ்
சொல்லாருதயத்துமெட்டினுங்கோணிற்பிற்றோகைநல்லாய்
பொல்லாதவாரமுவாவும்புகன்றிலராதானத்திற்
கெல்லாவிதானமுமித்தாரணியிலிசைத்தவரே.

(இ-ள்.) ஏனைய இராசிகள் உதயமும், பகலுந் தவிரப்படும். உதயமும் எட்டாமிடமுஞ் சுத்தமாக, ஞாயிற்றுக்கிழமை செவ்வாய்க்கிழமை சனிக்கிழமை இரவும், பூரணை அமாவாசையும் ஒழிந்த நாட்களிற் கர்ப்பாதானம் பண்ணப்படும். எ-று. (௩)

கெர்ப்பக்குறி.

வெய்யோன்மதிசேய்புகர்தத்தங்காலின்விளங்கிநிற்க
வையவுயிர்க்கைந்தினொன்பதிற்சீவனமர்ந்துநிற்பப்
பெய்தகருப்பம்வளருநன்றாண்பிள்ளையாமலடிற்
பையரவல்குனல்லாய்பலியாதெனப்பன்னினரே.

(இ-ள்.) ஆதித்தனும் சந்திரனும் செவ்வாயும் சுக்கிரனும் தத்தம் அங்கிசங்களிலே நிற்க, வியாழன் இலக்கினத்துக்கு ஐந்தாம் ஒன்பதாம் இடங்களில் நிற்கக் கர்ப்பாதானம் பண்ணினால் அக்கர்ப்பம் பூரணமாகவளர்ந்து ஆண்பிள்ளையாகப் பிறக்கும். இந்த யோகம் மலடியான ஸ்திரியிடத்திற் பயன்படாது. எ-று. (ச)

இதுவுமது.

ஒற்றையிராசியிலாணங்சகமுதயங்கதிர்பொன்
பெற்றமதியுறிலாண்சமவோரையிற்பெண்ணங்சகத்
துற்றிவர்நின்றிடிற்பெண்சனியெட்சியிற்கொற்றையில்லி
னிற்புறிலாண்பெண்சமத்திற்புகர்மதிசேய்நிற்கிலே.

(இ-ள்.) புருஷராசியான ஒற்றித்தராசியிற் புருஷநவாங்கிசத்து ஆதித்தன் வியாழன் சந்திரன் முதலியோர் நிற்க உண்டான கர்ப்பம் ஆண்பிள்ளையாம். 'இப்படிச் சொல்லிய கிரகங்கள் பெண்ராசியான இரட்டித்தராசியில் பெண்ணவாங்கிசத்து நிற்கிற் பெண்ணாம். உதயத்துக்கு ஒற்றித்தராசியிற் சனிநிற்பினும் ஆணாம். இரட்டித்தராசியிற் சனிநிற்பிற் பெண்ணாம். உதயத்துக்கு இரட்டித்தராசியிற் சுக்கிரன் சந்திரன் செவ்வாய் நிற்கிற் பெண்ணாம். ஒற்றித்தராசியில் இவர்கள் நிற்கில் ஆணாம். எ-று.

இதுவுமது.

சமத்திற்குருநின்றுசனன்றெழுப்பத்தாம்வியனேரையி
லிமத்தின்பகைநிற்பினுணென்றறியிந்துசூரியரை
யமைச்சனுெழியப்புதன்சனிநோக்கிலலியதென்று
நமக்குமுனிவர்க்கும்வாசிட்டர்நூனன்கறிவித்ததே.

(இ-ள்.) சமராசியில் வியாழன் பெலமாய்நிற்க, அவனுக்குப் பத்தாம் ராசியான ஒற்றித்தராசியில் ஆதித்தன் நிற்கில் ஆண்பிள்ளையாம். இவர்களிருவரும் மாறிநிற்கிற் பெண்ணாம். சந்திராதித்தரை வியாழன் நோக்காது புதன் சனி நோக்கினும், இவர்களுடன் கூடி நிற்பினும் அலியாம். எ-று.

இதுவுமது.

சொல்லுயிர்க்கைந்தின்மதிசுடரேழினிற்சுங்கன்மூன்றி
னல்கிற்கருப்பமில்லைமதிநட்புச்சமெய்தினன்றுஞ்
சில்தினஞ்சென்றுகெடும்பகைநீசஞ்சிதைந்துகெடும்
வல்லுடனாட்சிவயிற்றினெடுங்காலம்வாழ்வுறுமே.

(இ-ள்.) கர்ப்பாதான லக்கினத்துக்கு ஐந்தாமிடத்திற் சந்திரனும், ஏழாமிடத்தில் ஆதித்தனும், மூன்றாமிடத்திற் சுக்கிரனும் நிற்பிற் கர்ப்பந்தங்காது. சந்திரன் பெலவானாய் நட்பு உச்சம் பெற்றுநிற்கிற் கர்ப்பம் ஒருகுறைவின்றி வளரும். சந்திரன் பெலவீனனாய்ச் சமகேந்திரத்துநின்றாற் கர்ப்பம் உருபிகரித்துச் சிலநாளிலே கெடும். நீசத்துநின்றாற் கர்ப்பம் நாச

மாம். சந்திரன் பெலவானாய் ஆட்சியில் நின்றால் உதரத்திலே நெடுங்காலமிருக்கும். எ-று.

சந்திரனுக்குச் செவ்வாய் வியாழன் சுக்கிரன் சனி சமன் ஆகையாற் பகையென்றார். சந்திரனுக்கு இராகு கேது பகை. ஆதித்தன் புதன் நட்பு என்று காண்க. (எ)

இதுவுமது.

வியனிலத்துப்புதன்சேய்பொன்னுறிற்கர்ப்பம்வேறிரண்டா
மயனிலத்துப்புகரம்புலிநிற்கிலரிவையிணை
வியனிலத்துஞ்சமத்தும்மேவுமெய்யுயிர்மிக்கபெண்ணு
ணியல்புறுகோட்டிறத்தாண்பெண்ணிணைபெறுமேந்திழையே.

(இ-ள்.) ஒற்றித்தராசியிற் புதனுஞ் செவ்வாயும் வியாழனும் நிற்க உண்டான கர்ப்பம் இரண்டாம். இரட்டித்தராசியிற் சுக்கிரனுஞ் சந்திரனும்நிற்கிற் பெண் இரட்டையாம். இரட்டித்தராசியில் நின்ற சந்திரனையும் இலக்கினத்தையும் ஆண்கோள் நோக்கில் ஆண்பிள்ளை இரண்டாம். ஒற்றித்தராசியில்நின்ற சந்திரனையும் ஒற்றித்தலக்கினத்தையும் பெண்கோள் நோக்கிற் பெண் இரட்டையாம். இப்படி இலக்கினமுஞ் சந்திரனும் மாறிநிற்கிற் பெண்ணொன்று ஆணொன்றாம். எ-று. (அ)

இதுவுமது.

சனிகதிர்ச்சான்றவராங்கெழவில்லிடைச்சந்திரனை
நினைவுறப்பார்த்திடினீங்குங்கருப்பநிலையுயிர்க்கேழ்
மனைவயிற்சேய்கதிரேற்கருச்சத்திரத்தான்மரிக்கு
நனியுயிர்நல்லுடலிற்றீக்கோணின்றிடினாசமென்னே.

(இ-ள்.) இலக்கினத்துச் சனியும் ஆதித்தனும் நிற்க, இவர்களுடைய ஆட்சியிராசியில் நின்ற அபரபக்கத்துச் சந்திரனைச் சனியும் ஆதித்தனும் நோக்கிற் கர்ப்பம் பிரயோசனமாய்ப் பிறவாது. இலக்கினத்துக்கு ஏழாமிடத்துச் செவ்வாயும் ஆதித்தனும் நிற்கிற் கர்ப்பஞ் சத்திரத்தினாலே பீடைப்படும். இலக்கினத்துஞ் சந்திரனுடனும் பாபக்கோள் நிற்கிற் கர்ப்பம் வயிற்றிலே நசியும். எ-று. (கூ)

கர்ப்பாரிட்டம்.

கதிர்மதிசிங்கத்தெழக்காரிசேய்நோக்கிற்கண்ணூனனு
மதிகதிரீராறில்வாழிற்குருடனலவனெழ
மதிசனிசேய்நோக்கிலூமனென்மீனத்துமந்தன்செய்யோன்
மதியெழத்தோன்றுமகார்முடமென்றுவகுத்தனரே.

(இ-ள்.) சந்திரனாதல்ஆதித்தனாதல் சிங்காங்கிசத்துநின்று அதுவே இலக்கினமாகச் சனியுஞ் செவ்வாயும் நோக்கில் ஊனமுண்டான கண்ணுடையனாம். செவ்வாயாதல் சனியாதல்நோக்கிய சந்திராதித்தர் இலக்கினத்துக்

குப் பன்னிரண்டாமிடத்திலேநிற்கில் இருகண்ணுங் குருடனும். கர்க்கடகம் இலக்கினமாகக் கர்க்கடகாங்கிசத்து நின்ற சந்திரனைச் சனியுஞ் செவ்வாயும் நோக்கில் ஊமனும். சந்திச் செவிடனுமாவன். மீனலக்கினமாக மீனங்கிசத்துச் சனியுஞ் செவ்வாயுஞ் சந்திரனும் நிற்கின் முடவனும்.

ஆதித்தன் வலக்கண்; சந்திரன் இடக்கண் என்றறிக. (கO)

இதுவுமது.

கலையிற்கடையிற்றிரேக்காணநின்றெழுக்காரிகதிர்
குலையப்படுந்திங்களுேக்கிற்குறளெனக்கூறியவை
நிலைபெற்றுயாரும்வினவியகாலத்துநேருதயஞ்
சிலையொத்தவாணுதலாய்கொண்டுசிந்தனைசெப்புகவே.

(இ-ள்.) மகரத்துக் கன்னிபுதன் திரேக்காணம்உதயமாக, இதனைச் சனியும் ஆதித்தனும் அபரபக்கத்துச் சந்திரனும் நோக்கிற் கர்ப்பங் குறளாய்ச் செனிக்கும். இப்படிச்சொல்லிய கர்ப்பசிந்தனையை யாவராயினும் ஒரு கர்ப்பத்துக்கு வந்து கேட்டால் அப்போதையின் ஆரூடத்தையும் உதயத்தையும் பார்த்துப் பலமறிந்து அவர்கட்குக் கர்ப்பக்குறி சொல்லுக. (கக)

இதுவுமது.

குறைமதிதன்காலிற்சேய்சனிகூடியுதயமுறிற்
பொறைதருபிள்ளைபிறக்குமுனன்னைசாம்பொற்கதிரோ
னுறைதருகாலிலவனேரையுற்றிடவுள்ளதீக்கோள்
கறைகொண்டுநோக்கிடிற்றந்தைமுன்சாமென்கனங்குழையே.

(இ-ள்.) அபரபச்கத்துச் சந்திரனுடைய அங்கிசத்துச் செவ்வாய் சனியுடன் கூடி அதுவே இலக்கினமாகிற் பிள்ளை பிறப்பதன்முன்னே மாதா மரிக்கும். ஆதித்தன் அங்கிசத்துச் சிங்கவிலக்கினமாகப் பாபக்கிரகம் நோக்கிற் பிள்ளை பிறப்பதன்முன்னே பிதா மரிக்கும். எ-று. (கஉ)

இதுவுமது.

ஆழ்கின்றமெய்யுயிர்க்காறுடன்மூன்றுபன்னொன்றிற்றீயோ
ரேழைந்தினுன்கிரண்டொன்பதுபத்தினிசையினல்லோர்
வாழ்வொன்றிடுங்கர்ப்பம் வாணுதலாய்சொல்லின்வல்லவெல்
சூழ்கின்றகோள்வலிமெய்யுயிரின்வலிகொண்டுசொல்லே[லாஞ்

(இ-ள்.) கர்ப்பாதானலக்கினத்துக்குஞ் சந்திரலக்கினத்துக்கும் ங, சு, கக, இவ்விடங்களிற் பாபக்கிரகங்கள் நிற்பினும், உ, ச, ரு, எ, கூ, கO, இவ்விடங்களிற் சுபக்கிரகங்கள் நிற்பினும், கர்ப்பம் நன்றாக வளர்ந்து யாதொரு தோஷமுமின்றியே பிறக்கும். இப்படி உபயலக்கினத்துக்குங் கிரகங்களின் பெலமறிந்து சொல்லுவது. எ-று. (கங)

கர்ப்பம் மூன்றுவருஷம் பன்னிரண்டுவருஷஞ்சென்று பிறத்தல்.

சுன்னினதோரையிற்சுன்னங்சகமெழத்தொக்கசனி
முன்னியவேழின்முடிவுறின்மூவாண்டினிற்பிறக்கு

நன்னிலவில்லினவன்காலெழுவெழினுண்மதியேற்
பன்னிரண்டாமாண்டில்வந்துதிக்கும்பிள்ளைபான்மொழியே.

(இ-ள்.) சனியுடைய இராசியான மகரகும்பங்களிற் சந்திரன் நின்று சனியங்கிசம் உதயமாக, இலக்கினத்துக்குச் சனி ஏழாமிடத்து நிற்க உண்டான கர்ப்பம் மூன்றுமாண்டிலேபிறக்கும். சந்திரனுடைய இராசியான கர்க்கடகத்திற் சந்திராங்கிசம் உதயமாக, இலக்கினத்துக்கு ஏழாமிடத்துச் சந்திரன் நிற்க உண்டான கர்ப்பம் பன்னிரண்டாமாண்டிற் பிறக்கும். எ-று.

கர்ப்போற்பத்திமுதற்சேனனமளவுமுண்டாகுமங்கம்.

செறிவுறுநீராந்திரளுமுளைபெறுமென்புசேருங்
குறியுறுதோலாமயிருதிக்குங்கூறுமார்வமுட
னறிவுறுந்தாகமசையுமவனியிடைப்பிறக்கு
நெறியுறுமாதநிரையறிநல்லநிரைவளையே.

(இ-ள்.) கர்ப்பமானது முதல்மாதம் தாமரையிலையிற்பட்டநீர்போலிருக்கும், இரண்டாம்மாதம் ஒருகட்டியாம், மூன்றும்மாதம் அங்கங்கள் முளைக்கும், நாலாம்மாதம் அத்திபற்றும், ஐந்தாம்மாதம் தோல்பற்றும், ஆறும்மாதம் உரோமம் முளைக்கும், ஏழாம்மாதம் அறிவுண்டாம், எட்டாம்மாதம் பசிதாகமுண்டாம், ஒன்பதாம்மாதம் அசைந்து பெயர்ந்து கிலேசமுண்டாம், பத்தாம்மாதம் பூமியிற் பிறக்கும். எ-று. (கரு)

இதுவுமது.

திங்கட்கொருவர்புகர்குசன்சீவன்செழுங்கதிரோ
னங்கண்மதிசனிமாலுதயாதிபரம்புலியும்
வெங்கட்சுடருமுறையினிற்காப்பரென்மிக்கதீக்கோள்
பங்கப்படுமுயிரால்வருங்காலம்பயமென்பரே.

(இ-ள்.) முன்சொன்ன மாதங்களுக்குச் சுக்கிரன் செவ்வாய் வியாழன் ஆதித்தன் சந்திரன் சனி புதன் இலக்கினதிபதி சந்திரன் ஆதித்தன் இவர்கள் பதின்மரும் அடைவே மாதாதிபர்களாய் அந்தக் கர்ப்பத்தை இரட்சிப்பார்கள். இவர்கள் யாதாயினும் ஒரு பாபக்கிரகத்தாற் பீடைப்படும்போது கர்ப்பமும் பீடைப்படும். எ-று. (கசு)

கர்ப்பாதானப்படல முற்றிற்று.

ஆகச் செய்யுள் - உஅகூ.

மகளிர்விணைப்படலம்.

புங்ஸவனம்.

தருங்கதிர்மாதமூன்றிற்சாருமோணத்துப்பூசத்துநாட்
டிருந்துநல்யோகத்துத்திங்களுதிப்பநல்வெள்ளிநோக்க
வருந்திக்குளிர்கன்னியாழிணைவாட்டிவருமோரையிற்
பொருந்தியவட்டமசுத்தியிற்புங்சவனஞ்செயுமே.

(இ-ள்.) ஆதித்தகெதியான மூன்ரும் மாதத்திலே திருவோணத்திலாதல் பூசத்திலாதல், சுபயோகமான தினத்திலே, சந்திரோதயத்துச் சுக்கிரன் நோக்குண்டாக, கர்க்கடகம் கன்னி மிதுனம் ஒழிந்த இராசிகள் உதயமாக, அட்டமசுத்தியுண்டாகப் புங்சவனஞ் செய்யலாம். எ-று. (க)

சீமந்தம்.

இரவிதன்மாதநான்காறெட்டிடையிருபூசங்கல
மரியுருளுத்தரமூன்றத்தமரன்றலைநன்றணிதே
டெரியுறசிங்கமொழிந்தெட்டுச்சுத்தியிற்சீமந்தமுன்
பரவியபஞ்சாங்கயோகநன்ருனதிற்பண்ணுகவே.

(இ-ள்.) ஆதித்தகெதியால்வந்த நாலாம்மாதம் ஆரும்மாதம் எட்டாம் மாதத்திலே, புகர்பூசம் பூசம் ரேவதி திருவோணம் ரோகிணி உத்தரத்திரயம் அத்தம் மிருகசீரிடம் என்னும் நட்சத்திரங்களிலே, விருச்சிகம் சிங்கம் ஒழிந்த இராசிகளில், அட்டமசுத்தியுண்டாக, முன்சொன்ன பஞ்சாங்கயோகம் நன்ருயிருக்கச் சீமந்தம் பண்ணுவது. எ-று. (உ)

விஷ்ணுபலி.

எட்டாயதிங்களிலெய்துருளோணந்துவாதசியி
னட்டார்தருசத்தமியிவைமேனல்லகோளுதிப்பச்
சிட்டார்தருவிதிச்சீமந்தநூலிற்சிறந்தவற்றின்
மட்டார்துளவணிமாயவன்ருள்கள்வணங்கென்பரே.

(இ-ள்.) எட்டாம் மாதத்திலே, ரோகிணி திருவோண நட்சத்திரங்களில், துவாதசி சத்தமித் திதிகளில், சுபக்கோளுதயமாக, சீமந்தத்திற்குச் சொன்ன இராசிகளிலே, அட்டமசுத்தியுண்டாக விஷ்ணுபலி செய்வது. எ-று. (ங)

சூதிகாக்கிருகம்.

கழைபணைமான்றலைசித்திரைசோதிகலங்காரியாழ்
தொழுமரிதேருத்தரங்கள்புதன்சனிசோமன்குரு
மழையிவைநன்றுகுடந்தேளிருத்தையைவாட்டியெட்டுத்
தழைவுறுசுத்தியிற்பிள்ளைப்பெறில்லஞ்சமைக்கென்பரே.

(இ-ள்.) புனர்பூசம் அனுஷம் மிருகசீரிடம் சித்திரை சுவாதி ரேவதி அத்தம் அச்சுவினி திருவோணம் ரோகிணி உத்தரத்திரயம் என்னும் நட்சத்திரங்களிலே, திங்கள் புதன் வியாழன் வெள்ளி சனி வாரோதயங்களில், கும்பம் விருச்சிகம் ஒழிந்த இராசிகளில், இருத்தையொழிந்த பக்கத்து, அட்டமசுத்தியுண்டாகப் பிள்ளைப்பெறுதற்கு இல்லமுண்டாக்குவது. எ-று. (ச)

கோமூத்திரிசக்கரம்.

வடக்குறவைந்துங்கிழக்குறவெட்டுமிரேகைவைத்து
விடைக்கிறைதிக்கினுக்காறின்விளக்குவைத்தீரொன்பானு
ளடைத்தகிண்மான்றலைநான்கிடக்கீழராவாதியாறுங்
கொடுத்துவலத்துறக்கொள்வகோமூத்திரிசக்கரமே.

(இ-ள்.) தெற்குவடக்காக ஐந்திரேகையும் கிழக்குமேற்காக எட்டிரேகையும் கீற இருபத்தெட்டு அறையாம். இதில் வடகீழ்மூலை அறை முதலாக வலமே ஆருமறையிற் சுவாதியை வைத்துக் கிரமமாகப் பதினெட்டு நாளளவாக எண்ணுவது. எண்ணுமிடத்து: உத்தராடம் அபிசித்து திருவோணம் என்று எண்ணுக. பின்பு ரோகிணியைவைத்த அறைக்குக் கீழாக மிருகசீரிடத்தைவைத்து வடக்கிலறை நான்கினுமெண்ணி இதன்கீழாக ஆயிலியத்தை வைத்துத் தெற்கடைய ஆறறையிலும் ஆறுநாள் வைப்பது. இது கோமூத்திரிசக்கரமாம். எ-று. (ரு)

இதுவுமது.

இவ்வகையில்லத்திசையுறுகோட்டகத்தெய்துநாளிற்
செவ்வியநாணிலைபிள்ளைப்பெறுதற்கிடந்திருவே
யெவ்வகையானுமிருக்கைசயனமினிதருந்து
மவ்விடந்தன்னுட்கனுகூலமாகவமைக்கநன்றே.

(இ-ள்.) முன் உண்டாக்கிய இல்லத்திலே கோமூத்திரிசக்கரத்தை அகத்திலே அமைத்து இவ்விடத்து அனுகூலமான நாள் உறையுமிடத்திலே பிள்ளைப்பெறுதற்கிடம் இருக்குமிடம் சயனிக்குமிடம் உண்ணுமிடம் முதலியவைகளைத் தன்னுடைய நாளுக்கு அனுகூலமாக அமைக்கப்படும். எ-று. (சு)

மகளிர்விணைப்படல முற்றிற்று.

ஆகூ செய்யுள் - உகரு.

சாதகப்படலம்.

சாதகன்மம்.

நிலத்தினிற்பிள்ளைபிறத்தலுமுத்தரநீரிலாடித்
திலத்துடன்செஞ்சாலிபொன்பாற்பசுவுஞ்செழுநிலனு
நலத்துறுநான்மறையோர்க்கீந்துநற்கோளுதிப்பத்தத்தங்
குலத்துறவோருடன்பிள்ளையைக்காணக்குறித்தனரே.

(இ-ள்.) புத்திரன் பூமிகேதனனானபோதே பிதாவானவன் வடக்குத் திக்கிலுள்ள ஜலத்திலே ஸ்நானஞ்செய்து வந்து, எள்ளும் நெல்லும் பொன்னும் பாற்பசுவும் நல்ல பூமியும் வஸ்திரமும் சற்பிராமணருக்குத் தானம்பண்ணி, தற்காலத்துள்ள சுபமுகூர்த்தத்திலே சாதகன்மஞ்செய்து, தன்குலத்திலுள்ள வெந்துக்களுடனே புத்திரதரிசனஞ்செய்வது. எ-று.

அரிட்டம்.

திடவுயிர்க்கைந்தினும்பத்தினுஞ்செஞ்சுடர்திங்கள்சேயோன்
முடவனுநிற்றந்தைதாய்மாதுலன்பிள்ளைதான்முடியும்
படவரவுற்றிடிற்பிள்ளைசாமாறிற்பனிமதிக்காங்
கடுதிறற்கோளேழினின்றிடிலன்னையுயிர்விடுமே.

(இ-ள்.) சென்மலக்கினத்துக்கு ஐந்தாமிடத்தும், பத்தாமிடத்தும், ஆதித்தன் சந்திரன் செவ்வாய் சனி இவர்கள் நிற்கில் அடைவே பிதாவரிட்டம், மாதாவரிட்டம், மாதுலாரிட்டம் சுதாரிட்டமுண்டாம். இராகுவாகிற் சுதாரிட்டமாம். இலக்கினத்துக்கு ஆறுமிடத்துச் சந்திரன் நிற்க, இவனுக்கு ஏழாமிடத்துப் பாபக்கிரகங்கள் நின்றால் மாதாவுக்கு அரிட்டமுண்டாம். எ-று. (உ)

இதுவுமது.

கொடியோருதயத்தும்பாட்டினுநிற்கிற்சேய்கூற்றுவன்பாற்
கடிதேயணைவுறுங்காரியுயிர்க்குவியனிலத்து
நெடிதேநிலாச்சமவோரையினிற்பவிராப்பிறப்பின்
வடிவாமகவுடன்றந்தையுந்தாயுமரிக்குவரே.

(இ-ள்.) பாபக்கிரகங்கள் உதயத்தும் ஏழாமிடத்தும் நிற்பிற் சுதாரிட்டமுண்டாம். உதயராசிக்கு ஒற்றித்தராசியிலே சனிநிற்கச், சந்திரன் இரட்டித்தராசியில் நிற்ப, இராப்பிறப்பின், பிள்ளைக்கும் பிதாவுக்கும் மாதாவுக்கும் அரிட்டமுண்டாம். எ-று. (ங)

இதுவுமது.

வெய்யோன்வியனிற்சமத்தினில்வெள்ளிபகலுதிப்ப
வெய்துங்குழவிதன்மாதாப்பிதாவும்யமனிடைவாய்

கையொன்றிநிற்பர்கதிரெட்டிற்காரிசேயேழினிற்ப
வுய்வில்லையாமகவுக்கென்றுகூறுகவொள்ளிழையே.

(இ-ள்.) உதயராசிக்கு ஒற்றித்தராசியிலே ஆதித்தன் நிற்ப, சமத்தானத்திலே சுக்கிரன் நிற்ப, பகற்பிறப்பின் மாதாவுக்கும் பிதாவுக்கும் அரிட்டமுண்டாம். ஆதித்தன் எட்டாமிடத்தும், சனியாதல் செவ்வாயாதல் ஏழாமிடத்தும் நிற்பிற் சுதாரிட்டமுண்டாம். எ-று. (ச)

இதுவுமது.

இந்துவுதித்திடச்சேய்படிற்சேயெழவிந்துபடி
லுந்துமகவுடன்மாதாமரிக்குமுதயத்தினு
மைந்தினுமேழினுமந்தத்துமொன்பதொடட்டமத்துஞ்
சந்திரன்றீயவர்தம்மொடெழிற்பிள்ளைசாமென்பரே.

(இ-ள்.) சந்திரன் உதிப்பச் செவ்வாய் ஏழாமிடத்தாதல், செவ்வாய் உதிப்பச் சந்திரன் ஏழாமிடத்தாதல் நிற்கப் பிள்ளை பிறக்கின் பிள்ளைக்கும் மாதாவுக்கும் அரிட்டமுண்டாம். சென்மலக்கினத்துக்கு ரு, எ, அ, கூ, கஉ, இவ்விடங்களிற் சந்திரன் பாபக்கிரகத்துடன் கூடிநின்றாற் பிள்ளைக்கு அரிட்டமுண்டாம். எ-று. (ரு)

இதுவுமது.

உத்தரமூலமகமைப்பசியினுறுமுதற்கால்
சித்திரைமுன்னரைகேட்டையராத்தொழூச்சேர்கடைக்கா
லத்தம்பரணிமூன்றாகியகாலிவற்றாயிழையாய்
தத்தமிராசியெழிற்றந்தைசாமெனச்சாற்றினரே.

(இ-ள்.) உத்தரம் மூலம் மகம் அச்சுவினி இவை முதற்கால்; சித்திரை முன்னரை; கேட்டை ஆயிலியம் ரேவதி இவை நாலாங்கால்; அத்தம் பரணி மூன்றாங்கால்; இந்நாட்களில் இக்காலிற் சந்திரோதயமாகப் பிள்ளை பிறக்கிற் பிதாவுக்கு அரிட்டமுண்டாம். எ-று. (சு)

இதுவுமது.

கேட்டையைவிட்டுமதிகுருகேறவிற்கிட்டியெழ
நாட்டியகாலைவரும்பிள்ளையைநற்கோள்காண்கிலவேற்
காட்டியநூன்முறையாற்றந்தையெட்டாண்டுகாணப்பெறான்
றீட்டியவேல்விழியாய்சிவனேடெழிற்றீதில்லையே.

(இ-ள்.) கேட்டையற்று மூலம்புகுந்ததென்றளவிலே சந்திரன் உதயமாகப் பிள்ளை பிறக்கிற் பிதாவுக்கு அரிட்டமுண்டாம். இந்தச் சந்திரனைச் சுபக்கிரகம் நோக்காதாகிற் பிள்ளையைப் பிதா எட்டாண்டளவுங் காணப்பெறான். வியாழன் உதயமாகில் தோஷமில்லை. எ-று. (எ)

இதுவுமது.

பொறியெழப்பூராடத்துமலவனெழப்பூசத்தினு
நெறியுறத்தோன்றிநிகழ்வுறுகாலினிரைநிரையே
யறிவுறுதந்தைக்குமன்னைக்குஞ்சேய்க்குமம்மாமனுக்குஞ்
செறிவுறுநாசம்வருமெனவோதினர்தேமொழியே.

(இ-ள்.) பூராடத்துத் தனு உதயமாகவும், பூசத்துக் கர்க்கடகம் உதயமாகவும், நான்குகாலினும் பிள்ளை பிறக்கின் முறையே பிதாவரிட்டம் மாதாவரிட்டம் சுதாரிட்டம் மாதுலாரிட்டம் உண்டாம். எ-று. (அ)

இதுவுமது.

தந்தைமகவுதமையன்மாதாப்பிதாத்தம்பிதக்க
மைந்தனனைமாதுலனவ்வையையன்வருமாதுல
னிந்தநிரையேமறியாதியெட்சிக்கிசைந்தரிட்ட
முந்தைமுனிவரர்நூன்முறையேமொழிமொய்குழலே.

(இ-ள்.) மேடாதி மீனந்தமான இராசிகள் சென்மலக்கினமானல், மேடம் சிங்கம் கும்பம் பிதாவரிட்டம், இடபம் துலாம் சுதாரிட்டம், மிதுனம் தமையனரிட்டம், கர்க்கடகம் விருச்சிகம் மகரம் மாதாவரிட்டம், கன்னிமேற்பிறக்கும் பிள்ளையரிட்டம், தனு மீனம் மாதுலாரிட்டமென்று சொல்லப்படும். எ-று. (கூ)

இதுவுமது.

கொடியோரிருவர்க்கிடையுயிர்மெய்யினுங்கோட்டிதிநாட்
கடிதாயவங்சகத்தந்தங்களினுமதிகண்டகப்
படியேயுறுகினுமந்தமெட்டாறினைப்பற்றிடினு
முடலோடுயிரினைச்சுன்னேக்கினுஞ்சேயுயிர்விடுமே.

(இ-ள்.) சென்மலக்கினமும் சந்திரலக்கினமும் இரண்டு பாபக்கிரகங்களுக்கு நடுவாகினும், ஒல்லாததிதி, பாபநட்சத்திரம், பாபரங்கிசம் இவற்றின் அந்தங்களிலே பிறக்கினும், அபரபக்கச் சந்திரன் கேந்திரங்களிலே நிற்பினும், இவன் இரண்டு பக்கத்தினும் சு, அ, கஉ, இவ்விடங்களில் நிற்பினும், சனி சந்திரலக்கினத்தையும் உதயலக்கினத்தையும் நோக்கினுஞ் சுதாரிட்டமுண்டாம். எ-று. (க0)

இதுவுமது.

சித்திரைப்பக்கம்வியாகாதம்விதிபாதஞ்சூலம்விட்டி
வைத்தபரிகம்வைதிருதிகண்டாதிகண்டம்வச்சிர
நித்தயோகம்விட்டிநீடுதிவாரோகமிருத்துவினி
லொத்தவுதயத்துதித்தமகவீயுமொளிவளையே.

(இ-ள்.) பக்கச்சித்திரையாகிய திதிகள், வியாகாதம் விதிபாதம் சூலம் பரிகம் வைதிருதி கண்டம் அதிகண்டம் வச்சிரம் என்ற நித்திய யோகங்கள், விட்டிக்கரணம், திவாரோகம், தினமிருத்து இவைகளிலே குரூரராசியுதயமாகப் பிறந்த பிள்ளை வாலிபத்தில் மரிக்கும். எ-று. (கக)

இதுவுமது.

ஆலக்கடிகையிலர்க்கன்மதியாரல்காரியல்லார்
காலிற்பிறக்கிற்கருதடைவேதந்தைதாய்மாதுல
னேனுற்றமுன்னவர்தாம்வீவரீரைந்துமூவைந்தோரைந்
தானுற்றபக்கமுடிவின்வரிற்றந்தைசாமென்பரே.

(இ-ள்.) நாட்களின் விஷகடிகைகளிலே, ஆதித்தன், அபரபக்கச் சந்திரன், செவ்வாய், சனி இவர்கள் அங்கிசங்களிற் பிள்ளைபிறக்கில் அடைவே பிதாவுக்கும், மாதாவுக்கும், மாதுலனுக்கும், தமையனுக்கும் அரிட்டமுண்டாம். திதிகளிற் பஞ்சமியினும் தசமியினும் உவாக்களினும் முடிவிலுற்ற இரண்டுநாழிகையாகிய திதிகெண்டாந்தத்திலே பிள்ளைபிறக்கிற் பிதாவுக்கு அரிட்டமுண்டாம். எ-று. (கஉ)

இதுவுமது.

அரவிந்திரன்றேணியந்தத்திற்பின்னவற்றுதியினில்
விரவுங்கடிகையிரண்டிற்பிறந்திடில்வீயுங்குடி
யுருவொன்றுமிந்நாளினுற்றவவ்வோரையீறுதியினின்
மருவுநவாங்சகத்தேவரினக்குலமாய்வுறுமே.

(இ-ள்.) ஆயிலியம் கேட்டை ரேவதி நட்சத்திரங்களின் நாலாங்காலிற் கடையிரண்டு நாழிகையும், அச்சுவினி மகம் மூலம் இவற்றின் முதற்காலின் முதலிரண்டு நாழிகையும், நாட் கெண்டாந்தமென்று பெயராம். இதிற் பிள்ளை பிறந்தால் அக்குடி கெடும். இந்நாளின் உற்றராசி நவாங்கிசமுறையிலே அந்தியாங்கிசத்திலும் பிரதமாங்கிசத்திலும் பிள்ளைபிறந்தால் அவ்வங்கிஷங் கெடும். எ-று.

சிலர், திதிகெண்டாந்தத்திற் பிதாவுக்கும், நாட்கெண்டாந்தத்திற் குடிக்கும், இராசிகெண்டாந்தத்தில் வங்கிஷத்துக்கும் ஆகாதென்பர். (கங)

இதுவுமது.

ஆட்சியின்மேலாம்வரியரவங்கேதைந்தொன்பதினு
மேட்சியினுநிற்கவெய்துமகவெழிற்றந்தையினைச்
சூட்சியிற்றுன்கொல்லுஞ்சுன்னுயிர்க்கேழினிற்சூரியனுந்
தேட்கிறைநாலினுநின்றிடிற்சேய்பொன்றுகைதிடமே.

(இ-ள்.) பெலவான்களாயிருந்த இராகு கேதுக்கள், ஐந்தாமிடத்தினும், ஒன்பதாமிடத்தினும், உதயத்தினும் நிற்கிற் பிதாவுக்கு அரிட்டமுண்டாம். சனி உதயத்து நிற்க, ஆதித்தன் எழாமிடத்து நிற்க, செவ்வாய் நாலாமிடத்து நிற்கப் பிறந்த பிள்ளை மரணமாம். எ-று. (கச)

இதுவுமது.

சுக்கிரற்கெட்டினிற்றீயவராண்டொன்றிற்சோமன்கதி
ருக்கிரச்சுன்னுடனுற்றெழிலாண்டொன்பதின்மரிக்கும்
வக்கிரச்சேய்க்கெட்டிற்பொன்றீயர்நோக்குமதிமூவாண்டி
லக்கினான்காறெட்டுறவுயிர்சேய்நோக்கிலாண்டிரண்டே.

(இ-ள்.) சுக்கிரனுக்கு எட்டாமிடத்துப் பாபக்கிரகங்கள் நிற்கில் அரிட்டம் ஓராண்டளவாம். சந்திரனாதல் ஆதித்தனாதல் சனியுடனே இலக்கினத்து நிற்கில் ஒன்பதாண்டளவும் அரிட்டமுண்டாம். செவ்வாய்க்கு எட்டாமிடத்து வியாழன் நிற்க, சந்திரனைப் பாபக்கிரகங்கள் நோக்கில் அரிட்டம் மூன்றுண்டளவாம். செவ்வாய்க்கு நாலாமிடத்தாதல், ஆறுமிடத்தாதல், எட்டாமிடத்தாதல் சனி நிற்க, இலக்கினத்தைச் செவ்வாய் நோக்கில் இரண்டாண்டளவும் அரிட்டமுண்டாம். எ-று. (௧௫)

இதுவுமது.

இருசுடர்க்காறந்தமெட்டிற்குசனிற்பினுண்டிருமூன்
றரவஞ்சதுட்டயத்தெண்ணிரண்டாறெட்டிடமுநல்லோர்
வருகுளிரெட்சிமதிநோக்கிலாண்டுநாலுண்மரிக்கும்
பொருசிகியெட்சியிற்றிங்களிரண்டினுட்பொன்றிடுமே.

(இ-ள்.) ஆதித்தனுக்கும் சந்திரனுக்கும் ஆறுமிடம் பன்னிரண்டாமிடம் எட்டாமிடமாதல் செவ்வாய் நிற்கில் ஆறுண்டளவும் அரிட்டம். இராகு கேந்திரங்களிலே நிற்கிற் பதினாறுண்டளவும் அரிட்டம். சுபக்கிரகம் ஆறுமிடம் எட்டாமிடம் நிற்கக், கர்க்கடகசந்திரனிலக்கினமாகில் நாலாண்டளவும் அரிட்டம். கேது உதயமாகில் இரண்டுமாதமளவும் அரிட்டம். எ-று.

இதுவுமது.

கேந்திரத்துந்திரிகோணத்துந்தீயவர்கிட்டவாறெட்
டாய்ந்தவந்தத்துநற்கோணிற்பவர்க்கோதயத்துவந்தோன்
வீய்ந்திடுமெந்தத்துயிரொன்பதெட்டில்வெய்யோன்மதிய
மேய்ந்தபுகர்சேயெழவருசேயுமிறந்திடுமே.

(இ-ள்.) கேந்திரத்தானங்களினும், திரிகோணத்தினும் பாபக்கிரகங்கள் நிற்கச், சுபக்கிரகங்கள் ஆறுமிடம் எட்டாமிடம் பன்னிரண்டாமிடம் நிற்க, ஆதித்தன் உதயமாகப் பிறந்த பிள்ளைக்கு அரிட்டமுண்டாம். பன்னிரண்டாமிடம் இலக்கினம் ஒன்பதாமிடம் எட்டாமிடங்களில் முறையே ஆதித்தன் சந்திரன் சுக்கிரன் செவ்வாய் நிற்கப் பிறந்த பிள்ளைக்கும் அரிட்டமுண்டாம். எ-று. (௧௭)

இதுவுமது.

நாலாயதீயவர்நற்கண்டமாயினுநல்லுயிரின்
மேலாயவேழினில்வக்கிரித்தேறினுமெய்யுயிரின்
பாலாயெழினுமெட்டாறின்மதியினைப்பார்த்திடினுஞ்
சேலாயகண்மடவாய்பிள்ளைசாதறிடமென்பரே.

(இ-ள்.) ஆதித்தனும் செவ்வாயும் சனியும் அபரபக்கச் சந்திரனும் கேந்திரங்களிலே நிற்பினும், இவர்களிற் செவ்வாய் சனி இரண்டாமிடத்து நின்று வக்கிரித்து உதயலக்கினத்துக்கு வரினும், அன்றி இவர்கள் எட்டாமிடத்து நின்று வக்கிரித்து எழாமிடத்துக்கு வரினும், இவர்கள் உதயலக்கினத்திலேனுஞ் சந்திரலக்கினத்திலேனும் நிற்பினும், எட்டாமிடம் ஆறுமிடம் நின்ற சந்திரனை நோக்கினும் பிள்ளைக்கு அரிட்டமுண்டாம். எ-று. (௧௮)

இதுவுமது.

மதியிருபாலினுந்தீக்கோளுடனேழினாலிற்பத்திற்
பதியுறுநல்லவுயிர்க்கிருபாலினுமேழ்பத்தினும்
விதியுறுந்தீயவர்நிற்பினுந்தாயுடன்வீயுமகார்
மதியெழவேழினிற்றீயவர்நிற்பினுமாண்டிடுமே.

(இ-ள்.) சந்திரன் உதயலக்கினத்தும் எழாமிடத்தும் நாலாமிடத்தும் பத்தாமிடத்தும் நிற்ப, இவனுக்கு இரண்டுபக்கத்தினும் பாபக்கிரகங்கள் நிற்பினும், சென்மலக்கினத்துக்கு இரண்டுபக்கத்தும் எழாமிடத்தும் பத்தாமிடத்தும் பாபக்கிரகங்கள் நிற்பினும் மாதாவும் பிள்ளையும் மரிப்பர். அபரபக்கச் சந்திரன் உதயமாக, ஒரு பாபக்கிரகம் எழாமிடத்துநிற்பினும் பிள்ளைக்கு அரிட்டமுண்டாம். எ-று. (௧௯)

அரிட்டாபவாதம்.

சொன்னவரிட்டங்கள்யாவையுஞ்சந்திரசூரியர்கள்
மன்னியவுச்சத்துநட்பாட்சியினும்வர்க்கோத்தமத்துந்
தன்னிகரில்லாதநல்லவர்தம்முடன்சார்விடத்து
நன்னெறிநூலவர்நன்றெனவோதினர்நன்னுதலே.

(இ-ள்.) முன்சொன்ன அரிட்டங்களெல்லாம் சந்திராதித்தர் நட்பாட்சியுச்சத்து நல்ல தானங்களிலே நிற்பினும், அன்றி வர்க்கோத்தமத்து நிற்பினும், சுபக்கோளுடன் கூடிநிற்பினும் பரிகாரப்படும். எ-று. (௨௦)

இதுவுமது.

நல்லகதியின்வளர்மதியாயினுநற்கோளுடன்
புல்லியெழினுங்குளிர்விடையேறினும்போரரவஞ்
சொல்லியமூன்றுறுபன்னொன்றினிற்பினுந்தூயமறை
வல்லவர்வாழ்த்தினுமாதேயரிட்டங்கண்மாய்ந்திடுமே.

(இ-ள்.) சுபகேதனனாய் சந்திரன் பூரணனாய் நல்லவிடங்களிலே நிற்பினும், சுபக்கிரகங்களுடனே கூடிநிற்பினும், அன்றி உச்சத்தும் ஆட்சியினும் நிற்பினும், இராகு ௩, ௬, ௧௧, இவ்விடங்களில் நிற்பினும், அரிட்டம் பரிகாரப்படும். அன்றியும் பிராமணருடைய ஆசியினாலும் பரிகாரப்படும். எ-று.

இதுவுமது.

குருவலிபெற்றுத்தம்முச்சத்தும்வர்க்கத்துங்கோணத்தினுந்
தருமுதயத்துஞ்சதுட்டயத்துந்நிற்கிற்சாலநன்றும்
பொருமழைக்கோளேழவற்றிற்புதனுன்கொழிந்துநிற்ப
வருமகவுக்கரிட்டம்மில்லையென்றனர்வாணுதலே.

(இ-ள்.) வியாழன் பெலவானாய், உச்சத்தினும் ஆட்சியினும் வர்க்கோத்தமத்தும் திரிகோணத்தும் உதயத்தும் கேந்திரத்தும் நின்றாற் சகல அரிட்டமும் நீங்கும். சுக்கிரன் ஏழாமிடமும், புதன் நாலாமிடமும் ஒழிந்து, கேந்திரங்களிற் பெலவான்களாய் நிற்பினும் பிள்ளைக்கு அரிட்டம் இல்லையாம். எ-று. (௨௨)

அனபாயாதியோகம்.

மதிக்கிருபானுநற்கோளெழில்வாழ்வுடனுயுமிகும்
விதிக்குமனபைசுனபைதுருதுரைவேறுயிர்க்கேழ்
மதிக்கிருபக்கத்துநற்கோளெழவரும்பிள்ளைமண்மே
லதிப்படவாழுமென்றேயமரேசனறைந்தனனே.

(இ-ள்.) சந்திரனுக்குப் பன்னிரண்டாமிடத்துச் சுபக்கிரகங்கள் நின்றால் அனபாயோகம் என்றும், இரண்டாமிடத்துநின்றால் சுனபாயோகம் என்றும், இரண்டுபக்கத்தினும்நின்றால் துருதுராயோகம் என்றும் பெயராம். இதில் அனபாயோகத்திற் பிறந்தால் மிகுந்த வாழ்வும், சுனபாயோகத்திற் பிறந்தால் ஆயுள்விருத்தியும், துருதுராயோகத்திற் பிறந்தால் ஆயுராரோக்கியமும், ஐசுவரியமும், சந்தானவிர்த்தியும் உண்டாம். சென்மலக்கினத்துக்கு ஏழாமிடத்து நின்ற பூரணசந்திரனுக்கு இரண்டுபக்கத்தினும் சுபக்கிரகங்கள் நிற்பினும் இவ்வாறே கொள்ளப்படும். எ-று.. (௨௩)

இராசயோகம்.

அதமன்சமனுத்தமனெனவம்புலியர்க்கனுக்கு
விதமொன்றுகேந்திரமாதிமூன்றுரையின்மேலிட்டறி
சிதைவின்றியைந்துகோளுச்சமெழச்சிங்கநின்றெழுமேன்
மதிதங்கியகுடைமன்னர்க்குமன்னுமிம்மாநிலத்தே.

(இ-ள்.) ஆதித்தனுக்கு ௧, ௪, ௭, ௧௦-ம் இடங்களாகிய கேந்திரங்களிலே சந்திரன் நிற்கும் பலன்: ஆதித்தனோடு கூடநிற்கில் அதமம்; ஆதித்தனுக்கு இரண்டில்நிற்கில் மத்திமம்; ஆதித்தனுக்கு மூன்றில்நிற்கில் உத்தமம். இது இலக்கின கேந்திரம். இனி ஆதித்தனுக்கு ௪-ம், ௭-ம், ௧௦-ம் இடங்களாகிய சதுர்த்தகேந்திரம், சப்தமகேந்திரம், தசமகேந்திரங்களுக்கும் இவ்வாறே பார்க்கப்படும். இதனாலே பிதுரார்ச்சிதத்தின்றன்மை அறியலாம். சிங்கலக்கினம் உதயமாக ஐந்துகிரகம் உச்சத்துநிற்கில் அரசர்க்கரசனை சார்வபௌம சக்கிரவர்த்தியாம். எ-று. (௨௪)

இதுவுமது.

பூமன்கதிர்சனிபொன்புகர்மாலுச்சம்பற்றத்துங்கந்
தாமங்கொருவருதித்தெழவல்லோர்நட்பாட்சியுறக்
கோமன்னர்தம்வகைகோட்டிறத்தாலறிநீசம்பகை
தாமங்குறிற்றரைமன்னவராதறகாதென்பரே.

(இ-ள்.) செவ்வாயும் ஆதித்தனும் சனியும் வியாழனும் சுக்கிரனும் உச்சத்திலே நிற்கப் பிறந்தவன் சக்கிரவர்த்தியாம். உச்சத்திலே ஒரு கிரகம் நின்று அதுவே இலக்கினமாக, அல்லாதவர் நட்பாட்சியிலே நிற்கப் பிறந்தவனும் இராசாவாம். இவற்றில் முன்சொன்ன ஐந்துகிரகங்களில், ஒருகோள் உச்சத்தும் இரண்டுகோள் இலக்கினத்தும் இரண்டுகோள் நட்பாட்சியினும் நிற்கப் பிறந்தவனும் இராசாவாம். இந்நாலுவகையின் வர்க்கமான பதினாறு படியினும் பிறந்தவனும் இராசாவாம். இவ்வண்ணமே பகை நீசங்களில் நிற்கப் பிறந்தவன் இராசபுத்திரனாயினும் மிடியனாம். எ-று.

மாலுச்சம் என்றதற்குப் பெருமையையுடைய உச்சமெனக் கொள்க.

இதுவுமது.

வெள்ளியும்மாலுமதியும்பதினொன்றினிற்கவெய்யோ
னொள்ளியமேடத்தெழக்குருவுச்சத்துவந்துநிற்பின்
வள்ளியமன்னவனுமெனவோரைவகுத்துரைத்த
தெள்ளியநூன்முறைதென்கடுவைக்கிறைசெப்பினனே.

(இ-ள்.) சுக்கிரனும் புதனும் சந்திரனும் பதினொராமிடத்து நிற்க, ஆதித்தன் உச்சகேதனாக, வியாழன் உச்சமாய் அதுவே இலக்கினமாகவாயினும், சிங்கலக்கினமாகவாயினும் பிறந்த பிள்ளை உதாரனுமாய்ச் சூரனுமாய் ஏகவிராசாவாம். இவ்வாறான இராசயோகங்களெல்லாம் ஓராசாத்திரப்படி பார்த்துச் சொல்லுவது. எ-று. (௨௫)

சாதகப்படல முற்றிற்று.

ஆ. செய்யுள் - ௩௨௧.

மைந்தர்வினைப்படலம்.

பஞ்சாயுதம்.

சாதகநாட்கைந்திற்சாந்திநீராட்டிநற்கோளுதிப்ப
மேதகுபஞ்சாயுதவடம்பூட்டிநல்வேதியர்கள்
பூதபசாசணுகாவகைகாத்திடப்பொன்னணையாய்
காதல்சேர்காப்பிட்டுப்பின்னரைஞாண்கட்டலாமென்பரே.

(இ-ள்.) பிள்ளை பிறந்த ஐந்தாம்நாள் பிள்ளையைச் சுத்த சலத்தினாலே முழுக்காட்டிச் சுபக்கோள் உதயமாகப் பஞ்சாயுத சூத்திரத்தை நாபியளவாகத் தரித்துத் தெய்வப்பிராமணர் ஆசீர்வாத மந்திரத்தினாலே பூத பசாசு வராதபடி காவல்பண்ணிக் காப்புத்தரித்துப் பின் அரைஞாணுங் கட்டுவது. எ-று. (௧)

நாமகரணம்.

தோன்றியநாளினுக்கீரைந்தீராறினிற்றாயவில்லின்
மான்றலைசோதிபுள்ளத்தமகமோணஞ்சுண்ணம்பனை
மூன்றுசேருத்தரம்பூசமிரண்டுருண்மூலஞ்செங்கை
யேன்றவிதிற்றிராசியிற்பிள்ளைக்கிடல்பெயரே.

(இ-ள்.) பிள்ளைபிறந்த பத்தாநாளாதல் பன்னிரண்டாநாளாதல் கிருகசுத்திபண்ணிச் சுபக்கிரகோதயமாக நாமகரணஞ்செய்வது. இந்நாட்கழிந்தால் மிருகசீரிடம் சுவாதி அவிட்டம் அத்தம் மகம் திருவோணம் சதயம் அனுஷம் உத்தரத்திரயம் புனர்பூசம் பூசம் ரோகிணி மூலம் திருவாதிரை இந்நாட்களிலே, முன் சொன்னபடியே பஞ்சாங்கயோகம் நன்றாக, திரராசி உதயமாக நாமகரணஞ்செய்யலாம். எ-று.

க்ஷத்திரியருக்குப் பதினாறுநாளினும், வைசியருக்கு இருபத்திரண்டாநாளினும், சூத்திரருக்கு முப்பத்தொராநாளினும் பெயரிடுவது. (௨)

இதுவுமது.

எட்டைந்துசுத்திபெறவேழினற்கோளிசைவுபெற
வொட்டியகாலினட்பாட்சியுச்சக்கோளுதிப்பவவை
வெட்டனவோடுமிகுபுகழாமல்லனமிடியாம்
பட்டமுநாமகரணமும்பண்ணிற்பனிமொழியே.

(இ-ள்.) நாமகரணம் பண்ணுமிடத்து: முன்சொன்ன நாளிற் திரராசியுதயமாக, எட்டாமிடமும் ஐந்தாமிடமும் சுத்தமாக, சுபக்கோள் ஏழாமிடத்தாதல் நட்பாட்சியுச்சத்துச் சுபாங்கிசங்களிலேயாதல் நின்று உதிப்பப் பெயரிட்டால் நன்மையுண்டாம். பகை நீசத்துநின்று உதிப்பப் பெயரிட்டால் தரித்திரமாதல், வியாதியாதலுண்டாம். பட்டப்பெயரிடுமிடத்தும் இந்நாளிலே, இந்தயோகத்திலே கொள்வதும், பகை நீசத்துக் கொள்ளாதொழிவதும் பெறப்படும். எ-று. (௩)

தொட்டிலேற்றுதல்.

பூகேதமாயநாட்கீரைந்தீராறிற்பொருந்தீரெட்டி
னாகியமுப்பத்திரண்டாயநாளினற்கோளணைந்த
வோகைமுகூர்த்தத்துமேன்முகவோரைநாணற்பக்கத்துத்[ரே.
தோகைநல்லாய் பிள்ளையைத்தொட்டிலேற்றெனச் சொல்லின

(இ-ள்.) பிள்ளை பூமிகேதனமான ௧௦, ௧௨, ௧௬, ௩௨, இந்நாட்களிலே, சுபக்கிரகம் உதயமாக, ஊர்த்துவமுகராசி நட்சத்திரங்களிற், பஞ்சாங்கயோகம் நன்றாகப் பிள்ளையைத் தொட்டிலேற்றுவது. எ-று. (௪)

பால்பருக்குதல்.

கங்குலாறைந்துகழிந்தவந்நாளிற்கலைமதிக்குப்
பொங்கியபூசனைமுற்றுவித்துப்புவிமாமகளைச்
செங்கையிற்கூப்பிநற்கோளெழச்சேய்க்குச்சிறந்தவன்பாற்
சங்குவாய்வைக்கத்தகுமென்றுசாற்றினர்சான்றவரே.

(இ-ள்.) பிள்ளை பிறந்த முப்பத்தொராநாட் சந்திரபகவானையும், பூமிதேவியையும் அருச்சனைபண்ணிச் சுபக்கிரகோதயமாகச் சங்கிற் பால்வார்த்துப் பருக்குவது. எ-று. (௫)

இதுவுமது.

அத்தமகமுருளுத்தரமூன்றிருபூசமரி
சித்திரைசோதிபரிமதிசெக்குப்புள்ளந்தம்பனை
யுத்தமந்தியவர்வாரோதயம்யோகினியெதிருந்
தத்துமீன்றேளெட்சியுஞ்சங்குபாற்குத்தகாதென்பரே.

(இ-ள்.) முப்பத்தொராநாட் கழிந்தால், அத்தம் மகம் ரோகிணி உத்தரத்திரயம் புனர்பூசம் பூசம் திருவோணம் சித்திரை சுவாதி அச்சுவினி மிருகசீரிடம் சதயம் அவிட்டம் ரேவதி அனுஷம் இந்நாட்களிலே, ஞாயிறு செவ்வாய் சனி ஒழிந்தவாரங்களில், நல்லதிதிகளிலே, யோகினி எதிரும் இடமுமின்றி நிற்ப, மீனம் விருச்சிகம் ஒழிந்த இராசிகளிற் சங்கிற் பால்வார்த்துப் பருக்கலாம். எ-று. (௬)

கன்னவேதை.

பிறந்தநாட்கீராறினீரெட்டிற்பின்றிங்களாறெட்டினிற்
சிறந்தகழைகுருமான்றலைசித்திரைசெங்கையோணந்
திறம்பெருமுத்தரமத்தந்தொழுப்புட்சேய்காதுகுத்த
வறைந்தனர்சிங்கந்தேள்கும்பமுமாகாதென்றாயிழையே.

(இ-ள்.) பிள்ளை பிறந்த பன்னிரண்டாநாளாதல், பதினாறுநாளாதல், சாவணமாதவகையால் ஆறுமாதம் எட்டாமாதங்களிலேயாதல், புனர்பூசம் பூசம் மிருகசீரிடம் சித்திரை திருவாதிரை திருவோணம் உத்தரத்திரயம் அத்தம் ரேவதி அவிட்டம் இந்நாட்களில், சிங்கம் விருச்சிகம் கும்பம் ஒழிந்த இராசிகளிலே, பஞ்சாங்கயோகம் நன்றாகக் காதுகுத்துவது. எ-று. (௭)

இதுவுமது.

இருவகைநாட்டிதியெட்டிடத்தெக்கோளுந்தீதுபின்னாய்
வருபொழுதாய்ப்பக்கயோகநன்றாய்வகுப்புற்றவோரை
தருதினமூர்த்தமுகமுத்தமமெனத்தாழ்குழலாய்
கருதுறகாதுகுத்தக்கலைவல்லவர்காட்டினரே.

(இ-ள்.) ஒருவாரத்திற் பகலிலே இரண்டுநாளும் இரண்டுதிதியும் வந்தால் அந்நாள் தவிரப்படும். அட்டமசுத்தியுண்டாக, அபராணத்திலே, பஞ்சாங்கயோகம் நன்றாக, ஊர்த்துவமுகமான இராசியும், நாளும் உத்தமமாகக் கொண்டு கன்னவேதனம் பண்ணுவது. எ-று. (அ)

சந்திரகோதரிசனம்.

நாலாயதிங்களினுண்டிக்குரைக்குநாளோரையினின்
மேலாமுருகற்கும்வேதியர்க்கும்மிக்கபூசைபண்ணிப்
பாலாவிபான்மதிக்குக்கொடுத்துப்பின்புபாலனுக்கு
மாலாமதியையுடுவுடன்காட்டவழகிதென்னே.

(இ-ள்.) பிள்ளை பிறந்த நாலாம்மாதத்தில், மேலே அன்னப்பிராசனத்துக்குச் சொன்ன திதி வார நாள் இராசிகளிலே, தேவாதிதேவனாகிய சுப்பிரமணியப்பெருமானையும் பிராமணரையும் பூசித்து, சந்திரபகவானுக்குப் பாலவிகொடுத்துப் பிள்ளைக்குச் சந்திரனையும் நட்சத்திரங்களையும் பசுவையுங் காட்டுவது. எ-று. (௯)

அன்னப்பிராசனம்.

ஆறினுமெட்டினும்பத்திநுந்திங்களீராறிடத்துந்
தேறியநாட்செல்லச்சித்திரைமான்றலைகுன்றுபுட்டே
ரூறியகையிருபூசங்கலைம்விளக்குத்தரங்கள்
கூறியபெண்ணையாழோணமூண்டிக்கெனக்கூறினரே.

(இ-ள்.) சாவணமாதவகையால் ஆறுமாதம் எட்டாமாதம் பத்தாமாதம் பன்னிரண்டாமாதங்களில் அன்னப்பிராசனஞ் செய்யப்படும். தேறியநாட் செல்லவென்றமையால், ௧௫௦, ௨௧௦, ௨௭௦, ௩௩௦, இந்நாட்சென்றபின் சித்திரை மிருகசீரிடம் சதயம் அவிட்டம் ரோகிணி அத்தம் புநர்பூசம் பூசம் ரேவதி சுவாதி உத்தரத்திரயம் அனுஷம் அச்சுவினி திருவோணம் இந்நாட்களிலே அன்னப்பிராசனஞ் செய்யலாம். எ-று. (௧௦)

இதுவுமது.

கயறேட்கொறிதிங்களெட்சியொன்பானிற்கணக்கனேழிற்
புயலெட்டிடஞ்சேயிவைபொருந்தாவென்பருண்டிதனக்
கியல்புறுபத்தாமிடஞ்சுத்தியாகமுன்னேயிசைத்த
நயமுறுநாளோரைநன்றானவல்லிற்கொணன்னுதலே.

(இ-ள்.) மீனம் விருச்சிகம் மேடம் ஒழிந்த இராசிகளில், அபரபக்கச் சந்திரோதயமும், ஒன்பதாமிடத்துப் புதனும், எழாமிடத்துச் சுக்கிரனும், எட்டாமிடத்துச் செவ்வாயும் ஒழிந்த முகூர்த்தத்திலே, பத்தாமிடஞ்சுத்தமாக, முன்சொன்னபடியே பஞ்சாங்கயோகம் நன்றாக, இராக்காலத்து அன்னப்பிராசனஞ் செய்வது. பகற்காலத்தினும் செய்யலாம். எ-று. (௧௧)

ஆண்டுநிறைவு.

காண்டகுமாண்டுகழிந்தநற்றிங்கள்கதிர்ச்செலவாற்
பூண்டநன்னாளிற்புனிதப்புனலாட்டிப்பூசுரர்க்கு
வேண்டுவநல்கிவிதிவழியேநல்லகோளுதிப்ப
வாண்டுநிறைவுசிற்றாடையுடுத்திடலாமென்பரே.

(இ-ள்.) ஆதித்தகெதியாலே ஓராண்டுசென்ற சென்மமாதஞ் சென்ம நட்சத்திரத்திலே, பஞ்சாங்கயோகம் நன்றாகப் பொருந்தினநாளிலே, சுத்தசலத்தினாலே பிள்ளையை முழுக்காட்டிப், பிராமணருக்குப் போசனங்கொடுத்து, இவ்விதானநூல் சொல்லுகிறபடியே சுபக்கோள் உதயமாக, ஆண்டு நிறைவிற் சிற்றாடையுடுத்திப் பொன்னரைஞாணுந் தரிப்பது. எ-று. (௧௨)

சௌளம்.

ஆண்டொன்றினுமூன்றாமைந்தினுமுக்காலகன்றகாலை
வேண்டுவர்சௌளகம்வெள்ளிவியாழமொளிபெறவுங்
காண்டகுசேய்சனிவெள்ளிகதிரொழிநீதேழிடத்துப்
பூண்டனரட்டமசுத்திபுகல்வர்புகரொழித்தே.

(இ-ள்.) சௌளம் பண்ணுமிடத்து ௧, ௩, ௫, வயதாகிய நாலாங்கூற்றிலே, சுக்கிரன் பிருகஸ்பதி அத்தமயமின்றி நிற்க, மேற்சொல்லும் இலக்கினத்துக்கு எழாமிடத்துச் செவ்வாய் சனி சுக்கிரன் ஆதித்தன் நில்லாதொழிய, அட்டமசுத்தியுண்டாகக் கொள்வது. எ-று.

சுபலக்கினமிருந்தாற் பகலிலே இருபத்தைந்துநாழிகையளவுஞ் சௌளகன்மஞ் செய்யலாம். சிலர், எட்டாமிடத்துச் சுக்கிரன் நிற்கலாமென்றும், ஒன்பதாமிடஞ் சுத்தமாகவேண்டுமென்றும் சொல்வர். (௧௩)

இதுவுமது.

பூசமிரண்டத்தமோணம்புட்சித்திரைதோணிபரி
வீசுமகசிரமுத்தமஞ்சுண்ணம்விளக்குருடோர்
மாசின்மூன்றுத்தரமத்திமமாகுமயிர்வினைக்குப்
பேசுங்கதிருத்தரகதிநன்றிராப்பேசிலரே.

(இ-ள்.) புநர்பூசம் பூசம் அத்தம் திருவோணம் அவிட்டம் சித்திரை ரேவதி அச்சுவினி மிருகசீரிடம் இவை உத்தமம். சதயம் சுவாதி ரோகிணி உத்தரத்திரயம் இவை மத்திமம். மாசிமாதமொழிந்த உத்தராயண மாதங்களிலே, பஞ்சாங்கயோகம் நன்றாகச் சௌளகருமஞ் செய்வது. இரவிற் செய்யலாகாது. எ-று. (௧௪)

இதுவுமது.

கன்னிதுலைதடிநள்ளிமீன்சேகலைநன்றுவிற்றேண்
மன்னரிமேடநற்கோளுறிலாமென்மயிர்வினைக்கு
நன்னெறிகும்பநவின்றிலர்நான்குவருணத்திநுக்
குன்னுங்கதிர்சேய்சனிநன்றுநன்னுதலொண்மதியே.

(இ-ள்.) கன்னி துலாம் மிதுனம் கர்க்கடகம் மீனம் இடபம் மகரம் இவை நன்று. தனு விருச்சிகம் சிங்கம் மேடம் இவை சுபக்கோள் நிற்கிற் செய்யலாம். சுபக்கோளுதயமாயினுங் கும்பம் ஆகாது. பிராமணருக்கு ஆதித்தவாரோதயமும், க்ஷத்திரியருக்குச் செவ்வாய் வாரோதயமும், வைசியருக்கும் சூத்திரருக்கும் சனிவாரோதயமும் நன்று. எ-று. (௧௫)

அக்ஷராரம்பம்.

இரவிவடக்குறுமாதங்களின்மாசினீத்தெழிலார்
பரிவுறுபக்கத்தரனரிதோணிபணைபுநர்தங்
கரிமுதன்மூன்றுபரியுத்தமமெழுத்தோதுதற்காண்
டரவல்குலாயஞ்சிலைமெட்டுச்சுத்தியிலாந்திரத்தே.

(இ-ள்.) அக்ஷராரம்பம் பண்ணுமிடத்து உத்தராயணத்து மாசிமாதமொழிய நாலுவயசுசென்று ஐந்தாம்வயசிலே, பூருவபக்கத்துப் பகற்காலத்திலே, பஞ்சாங்க சுத்தியுண்டாக, திருவாதிரை திருவோணம் ரேவதி அனுஷம் புநர்பூசம் அத்தம் சித்திரை சுவாதி அச்சுவினி இந்நாட்களிலே, திரராசி உதயமாக, எ-ம், அ-ம் இடங்கள் சுத்திபெற அக்ஷராரம்பம் பண்ணுவது. எ-று. நாலாமிடஞ் சுத்தியாகவேண்டுமென்பாருமுளர். (௧௬)

வித்தியாரம்பம்.

ஆதிரையோணம்பணையிருபூசமவிட்டமத்தஞ்
சோதிமதிபரிசித்திரைசுண்ணநன்றுகுந்தோணி
யோதுமுருளுத்தரமூன்றுமத்திமமோரைதிரந்
தீதுதிரயோதசிசத்தமிகல்விக்குச்சிற்றிடையே.

(இ-ள்.) வித்தியாரம்பத்துக்குத் திருவாதிரை திருவோணம் அனுஷம் புநர்பூசம் பூசம் அவிட்டம் அத்தம் சுவாதி மிருகசீரிடம் அச்சுவினி சித்திரை சதயம் இவை உத்தமம். ரேவதி ரோகிணி உத்தரத்திரயம் இவை மத்திமம். திரராசி உதயமும், பக்கங்களில் திரயோதசி சத்தமி ஒழிந்த சுபதிதிகளும் நன்றாம். எ-று. (௧௭)

இதுவுமது.

முன்னுரைகல்விக்குப்பஞ்சாங்கயோகமுகூர்த்தநோக்கு
நன்னெறியாகப்புதனங்சவாரமுமெட்சிநண்ண
வன்னியர்நான்கட்டமசுத்தியாகவணியிழையாய்
பொன்னவன்பூம்புகர்வாரோதயங்களும்போற்றுவரே.

(இ-ள்.) முன்பு குணகுணப்படலத்துச் சொன்னபடியே பஞ்சாங்க யோகம் முகூர்த்தநோக்கு நன்றாகப் பார்த்துப், புதனுடைய வாரோதயாங்கிசம்பெற, ச-ம், அ-ம் இடங்கள் சுத்தியாக வித்தியாரம்பம் பண்ணுதல் உத்தமம். வியாழன் வெள்ளி வாரோதயங்களும் நன்றாம். எ-று. (௧௮)

பலநூல்கற்றல்.

சோதிடஞ்சோதியில்யோகங்குன்றிற்றுடைதாளமத்தத்
தாதிரைதன்னின்மல்லைப்பசியிற்பரிநூல்சித்திர

மோதுவர்சித்திரையிற்றன்மமோணத்தினுயுநன்னூல்
காதலவிட்டத்துக்கற்கவென்றோதினன்கார்க்கியனே.

(இ-ள்.) சோதிடசாத்திரஞ் சுவாதியினும், யோகசாத்திரஞ் சதயத்தினும், அத்திரசாத்திரமும் பரதசாத்திரமும் அத்தத்தினும், மல்லுவித்தை திருவாதிரையினும், அசுவசாத்திரம் அச்சுவினியினும், சிற்பசாத்திரம் முதலானவை சித்திரையினும், தர்மசாத்திரந் திருவோணத்தினும், வைத்தியசாத்திரம் அவிட்டத்தினும் கற்கவேண்டுமென்று கார்க்கியர் கூறினர். எ-று. (௧௯)

சரசுவதியோகம்.

மதிமகன்காலின்மதிகதிர்மன்னன்மாலெட்சிவாரம்
பதியுறிற்பாரதியோகமென்பார்க்கவன்மால்கதிரோன்
விதிகேந்திரமுறத்தண்டெழமேற்றிரயோதசியிற்
புதனுத்தரத்திடைப்பொன்னவன்காலுமென்பூங்கொடியே.

(இ-ள்.) புதனுடைய இராசியிற் புதனங்கிசத்துச் சந்திரனும் ஆதித்தனும் பிருகஸ்பதியும் புதனும் நின்று உதயமாகப் புதனுடைய வாரத்து அருணோதயகாலஞ் சரசுவதியோகமாம். புதன்கிழமை உத்தரம் நாலாங்காலின் மிதுனம் உதயமாக, வெள்ளி புதன் வியாழன் ஆதித்தன் இவர்கள் கேந்திரத்திலே நிற்கப், பூருவபக்கத் திரயோதசி வரினும் சரசுவதியோகமாம். எ-று. (௨௦)

இதுவுமது.

வெள்ளிவியாழம்புதனத்தியுச்சம்வெண்டிங்கள்விடை
யுள்ளுநவாங்சகம்வாரமுதயமாமோரையினிற்
றெள்ளுறுநாமகள்யோகமதாஞ்சீவன்செய்யகாலி
னள்ளியினெட்சிபெறுமவன்வாரமுநன்றென்பரே.

(இ-ள்.) வெள்ளி வியாழன் புதன் இவர்கள் அத்தியுச்சபாகையிலே நிற்ப, சந்திரன் இடபத்துநிற்க, இவர்கள் அங்கிசத்து இவர்கள் வாரோதய இராசிவரிற் சரசுவதியோகமாம். வியாழன் உச்சத்துநின்று உதயமாக, வியாழன் வாராங்கிசம்வரினுஞ் சரசுவதியோகமாம். எ-று. (௨௧)

கோசக்கிரகம்.

ஈசன்சதயம்புள்ளிந்துபணையத்தமுத்தரங்கள்
பூசமரிநிலையோரையுநன்றுபொல்லாதவார
மேசுந்திதிவிட்டிதீதுநல்யோகம்பெறவிசையுங்
கோசங்கொளநன்றுநற்கோள்குறித்தெழக்கோமளமே.

(இ-ள்.) திருவாதிரை சதயம் அவிட்டம் மிருகசீரிடம் அனுஷம் அத்தம் உத்தரத்திரயம் பூசம் திருவோணம் இந்நாட்களிலே, திரராசியுதயமாக, பாவவாரம் பொல்லாதபக்கம் விட்டியொழிந்து பஞ்சாங்கயோகம் நன்றாகச் சுபக்கிரகோதயத்திற் கோசக்கிரகஞ் செய்வது. எ-று. (௨௨)

உபநயனம்.

தாழ்விலுபநயனம்விதிகெற்பவாண்டாதிக்குமே
லேழெட்டுமொன்பதும்பத்தினுமேய்ந்தவுடற்குயிருக்
கூழ்கொண்டமந்திரியேழைந்திரண்டுபன்னொன்றபத்துஞ்
சூழுண்டவொன்பதுமுற்றுறுகாலஞ்சுபமென்பரே.

(இ-ள்.) உபநயனம் பண்ணுமிடத்துக் கர்ப்பாதானம் முதலாக ௭, ௮, ௯, ௧௦, இவ்வயதில், சந்திரலக்கினத்திற்குஞ் சென்மலக்கினத்திற்கும் பிருகஸ்பதி ௨, ௫, ௭, ௯, ௧௦, ௧௧, இவ்விடங்களில் நிற்கும் ஆண்டில் உபநயனஞ் செய்வது. எ-று. (௨௩)

இதுவுமது.

அல்லாவிடத்திற்குருவுறிற்சேய்க்கந்தரம்வினையாம்
பொல்லாவிடமொன்றுறிற்பொன்னுமாடையும்பொன்னவற்கு
நல்காவிதியவற்குநவக்கோளுக்கும்பூசைபண்ணி
வில்லார்நுதலாய்விதிவகைநூலிடவேண்டுவரே.

(இ-ள்.) வியாழன் உபயலக்கினத்துக்கும் ஆகாதென்ற இடங்களில் நிற்க உபநயனம் பண்ணினால் வியாதியாதல், அவமிருத்துவாதலுண்டாம். புத்திரனுக்கு ஒரு இலக்கினத்துக்கு நல்லனாய் ஒரு இலக்கினத்துக்குத் தீயனாயிருக்கிற் பிருகஸ்பதிக்குப் பிரீதியாகப் பொன்னும் பீதாம்பரமுந் தானம்பண்ணி உபநயனம் பண்ணலாம். எக்காலத்தும் பிராமணபூசையும், நவக்கிரகசாந்தியுஞ் செய்துகொள்ளவேண்டும். எ-று. (௨௪)

இதுவுமது.

பன்னிரண்டாறு நான்கெட்டொடு மூன்றுயிர்மெய்யிற் பைம்
மன்னிலுபநயித்தோன்பிணியாதல்மரித்தறிடஞ் [பொன்
சுன்னுங்குருதியுஞ்சென்மத்துமந்தத்துஞ்சூழிலங்கஞ்
சின்னம்படுகைதிடமென்றனர்கடிருந்திழையே.

(இ-ள்.) பிருகஸ்பதி முன் சொல்லப்பட்ட உபயலக்கினத்துக்கும் ௩, ௪, ௬, ௮, ௧௨, இந்தவிடங்களினும், சென்மலக்கினத்துஞ் சந்திரலக்கினத்தும் நிற்க உபநயனம்பண்ணுகில் வியாதியாதல், மரணமாதல் உண்டாம். இரண்டிலக்கினத்துக்குஞ் சனி செவ்வாய் சென்மத்தும் பன்னிரண்டாமிடத்தும் நிற்கில் அங்கவீனமுண்டாம். எ-று. (௨௫)

இதுவுமது.

மன்னவர்பன்னொன்றில்வைகாசியானியினூலிடலாம்
பன்னிரண்டாமாண்டிலாவணியாடிபகர்வணிகர்க்
குன்னுமறையவர்க்காண்டேழினூலிடலுத்தமமாம்
பொன்னனையாய்நன்றெனப்போற்றுவார்களிப்பூதலத்தே.

(இ-ள்.) க்ஷத்திரியருக்குப் பதினொராம் வயதில் வைகாசி ஆனியிலும், வைசியருக்குப் பன்னிரண்டாம் வயதில் ஆடி ஆவணியிலும், பிராமணருக்கு ஏழாம் வயதில் வசந்தகாலமாகிய சித்திரை வைகாசியிலும் உபநயனம் பண்ணலாம். எ-று' (௨௬)

இதுவுமது.

பொன்னவன்மீனம்பொருசிலைநண்டுபொருந்துமாண்டு
தன்னிகரில்லையவனட்புறினுந்தகுந்தகாத
வின்னலுறும்பகைநீசத்துறின்பமாம்வசந்த
மன்னதனுக்கிருபக்கப்பருவமுமாமென்பரே.

(இ-ள்.) வியாழன்: மீனம் தனு கர்க்கடகத்து நிற்பினும், மித்திரபவனங்களிலே நிற்பினும், உபயலக்கினத்துக்கும் அநுகூலமல்லாத மாதத்தினுஞ் செய்யலாம். பகை நீசத்து நிற்கும் ஆண்டு தவிரப்படும். உபயலக்கினத்துக்கும் அனுகூலனாயிருக்கிற் சத்துரு நீசங்களில் நின்றகாலமுஞ் சாந்திபண்ணி உபநயனஞ் செய்யலாம். பிராமணருக்கு வசந்தகாலம் உத்தமம். மாசி பங்குனி ஆனி ஆடியும் ஆகும். எ-று. (௨௭)

இதுவுமது.

சித்திரையத்தம்பனிசோதிதிங்கட்புட்டோர்புநர்த
முத்தரமூன்றுத்தமம்பூசமோணம்பரிசதய
மத்திமமீங்கிவற்றின்னின்றகோளங்சகங்கள்சுபம்
வைத்தனனன்றென்றுபநயித்தற்குநம்வாசிட்டனே.

(இ-ள்.) சித்திரை அத்தம் அனுஷம் சுவாதி மிருகசீரிடம் அவிட்டம் ரோகிணி புநர்பூசம் உத்தரத்திரயம் இவை உத்தமம். பூசம் திருவோணம் அச்சுவினி சதயம் இவை மத்திமம். இந்நாட்களிற் சுபாங்கிசங்களிலே உபநயனம் பண்ணலாம். எ-று. (௨௮)

இதுவுமது.

இருவகைப்பக்கத்துநன்றிரண்டேழைந்துமாறுமூன்றும்
பெருமதியிற்பதின்மூன்றும்பத்தேகாதசியும்பெறு
மிருள்செறிபக்கத்திலாதியுநன்றென்றினவ்வளையாய்
கருதுறுநூல்வினைக்குக்கலைவல்லவர்காட்டினரே.

(இ-ள்.) பூருவபக்கத்தும் அபரபக்கத்தும் துதியை பஞ்சமி சத்தமி சட்டி திருதியையும், பூருவபக்கத்துத் திரயோதசி தசமி ஏகாதசியும், அபரபக்கத்துப் பிரதமையும் நன்று. அல்லாதவை ஆகாவாம். எ-று. (௨௯)

இதுவுமது.

குற்றங்குணங்களையெண்ணிக்குறைதிகமானநாளிற்
பெற்றந்தடிமீன்சிலைகுளிர்பெண்ணொழச்சுத்தியெட்டின்
மற்றும்புகர்புந்திமந்திரியங்சகமெட்சிநன்றாய்ச்
சொற்றனர்நூல்வினைக்கம்புலியங்சகஞ்சொல்லிலரே.

(இ-ள்.) முன்பு குணகுணப்படலத்துச் சொன்னபடியே குணதோஷம் நிரூபித்துக் குணாதிகமான நாளில், இடபம் மிதுனம் மீனம் தனு கர்க்கடகம் கன்னி இந்தராசிகள் உதயமாக, அட்டமசுத்தியுண்டாக, வெள்ளி புதன் வியாழன் இவர்களுடைய வாரோதயாங்கிசங்களிலே உபநயனம் பண்ணலாம். சந்திரவாரோதயாங்கிசங்கள் விசேஷித்துத் தவிரப்படும். எ-று.

இதுவுமது.

உதயத்துமந்தத்துமாறெட்டினுமதியும்பர்குருப்
புதனெட்டுமாறும்புகரேழுமாறெட்டும்பொன்னனையாய்
சிதைவிக்குமாண்பினைத்தீயவர்மூன்ருறுபன்னொன்றினி
லிதமுற்றகாலநன்றல்லாவிடங்களிடர்தருமே.

(இ-ள்.) சந்திரன்: உதயம், ௬, ௮, ௧௨, இவ்விடங்களில் நிற்கில் ஆகாது. புதனும் வியாழனும்: ௬, ௮. இவ்விடங்களில் நிற்கில் ஆகா. சுக்கிரன்: ௬, ௭, ௮, இவ்விடங்களில் நிற்கில் ஆகாது. பாபக்கிரகங்கள்: ௩, ௬, ௧௧, இவ்விடங்களில் நிற்கில் உத்தமம்; அல்லாதவிடங்களில் நிற்கில் ஆகாவாம். எ-று. (௫௧)

இதுவுமது.

சந்திரவட்டமம்வைநாசிகஞ்சென்மமேமைந்தந்த
மந்தணர்நூலிடற்காகாதனவென்பரல்லவற்றின்
முந்தியமூன்றுமொழிந்தனநாட்களுமுத்தமமா
மந்திரிவாசிட்டன்கார்க்கியனூன்முறைவைத்தனரே.

(இ-ள்.) சந்திராட்டமமும், வைநாசிகமும், சென்மத்திரயமும், விபத்து நட்சத்திரமும், வதநட்சத்திரமும், பிரத்தியக்நட்சத்திரமும், இருபத்தேழாம் நட்சத்திரமும் பிராமணர்முதலிய மூன்றுவருணத்தார்க்கும் உபநயனத்துக்கு ஆகாவாம். அல்லாத சம்பத்துநட்சத்திரமும், க்ஷேமநட்சத்திரமும், சாதக நட்சத்திரமும், மித்திரநட்சத்திரமும், பரமமித்திரநட்சத்திரமும் உபநயனத்துக்கு மிகவும் நன்ரும். எ-று. (௫௨)

வேதாரம்பம்.

வாரணமாதிமூன்றைப்பசிபூசங்கள்வாரணம்புள்
நாரணனீசன்பனைபுருளுத்தரநாவாய்நன்ரு
மேரணிமுற்றிதிநன்றெட்டிருத்தையுவாவொழிந்தாங்
காரணமோதமுன்கல்விக்குரைத்தவுமாமென்பரே.

(இ-ள்.) அத்தம், சித்திரை, சுவாதி, அச்சுவினி, புனர்பூசம், பூசம், சதயம், அவிட்டம், திருவோணம், திருவாதிரை, அனுஷம், ரோகிணி, உத்தரத்திரயம், ரேவதி இந்நாட்களிற், பூருவபக்கத்திலே அட்டமி இருத்தை உவாவொழிந்த திதிகளிலே, சரராசி உபயராசி உதயமாக வேதாரம்பம் பண்ணலாம். இவ்விடத்துச் சொல்லிச் சொல்லாதன வித்தியாரம்பத்துக்குச் சொன்னபடியே கொள்க. எ-று. (௫௩)

உபாகருமம்.

வடிக்கதிர்நண்டரிதோகைசேர்சாந்திரமாதங்களி
னடக்குறும்வேதவுரைநூனவின்றநாளைற்கோளெழத்
துடக்குறுமாரணமென்றுசொன்னார்துடிநேரிடையாய்
முடிப்பதுபின்பொழுதாந்திங்கள்வாரோதயமுறவே.

(இ-ள்.) ஆதித்தன் கர்க்கடகம் சிங்கம் கன்னி இவற்றிலே நிற்கச் சாந்திரமாதங்களிற் பூரணையிலே தத்தஞ் சூத்திரங்களிற் சொன்ன நாளிலே, சுபக்கிரகோதய நோக்குண்டாக உபாகருமம் பண்ணுவது. சுக்கிரன் அத்தமயமின்றியிருக்கில் உபாகருமத்துக்குச் சிங்கமாதம் உத்தமம். யாதாயினும் ஒரு வித்தையை முடிக்குமிடத்து அபராணத்திற் சந்திரவாரோதயத்திலே முடிப்பது. எ-று. (௫௪)

விரதம், சமாவர்த்தனம்.

மறைநூன்முறையேவிரதமுடித்துமயிர்வினையின்
முறையேயகாலத்துருடோர்முகுந்தன்மூன்றுத்தரங்க
டுறைசேர்பனையிருபூசமத்தந்தோணிமான்றலையிற்
கொறிமீனரிதேளொழிந்தெட்டுச்சுத்திகொள்கோமளமே.

(இ-ள்.) வேதோத்தமான நாலு விரதங்களையும் அவரவர் சூத்திரஞ் சொன்னபடியே உத்தராயணத்திலே விவாகத்துக்கு முன்னே சௌளத்திற்குச் சொன்ன நாளினும் முகூர்த்தத்தினும் முடிப்பது. பின்பு சமாவர்த்தனம்பண்ணுமிடத்து ரோகிணி திருவோணம் உத்தரத்திரயம் அனுஷம் புனர்பூசம் பூசம் அத்தம் ரேவதி மிருகசீரிடம் இந்நாட்களிலே, மேடம் மீனம் சிங்கம் விருச்சிகம் ஒழிந்த இராசிகளிலே, அட்டமசுத்தியாகப், பகற்காலத்திலே ஆகாசம நின்மலமாயிருக்கச் செய்வது. எ-று. (௫௫)

இதுவுமது.

போற்றியபஞ்சாங்கயோகம்பொருந்தவருணங்களிற்
சாற்றியமூவருக்குஞ்சமாவர்த்தனமற்றொழிந்தோர்க்
கேற்றினர்நல்லவிழையுடுத்தறகுமென்றெண்ணின்மிக்கோர்
கூற்றெனச்சொல்லினன்றென்கடுவைக்கிறைகோமளமே.

(இ-ள்.) சமாவர்த்தனம் பண்ணுமிடத்துப் பஞ்சாங்கயோகம் நன்ருகக் குணாதிகமான சுபமுகூர்த்தத்திலே மூன்றுவருணத்தார்க்குஞ் சமாவர்த்தனக்கிரியை முடிப்பது. ஒழிந்தோர்க்குப் புண்ணியதீர்த்தங்களின் மூழ்கி இரண்டு நவவஸ்திரமுடுத்துப் பத்திரகாளிபூசைசெய்து மீளுவதென்று பல சாத்திரங்களினுஞ் சொல்லப்பட்டது. எ-று. (௫௬)

மைந்தர்வினைப்படல முற்றிற்று.

ஆ செய்யுள் - ௫௬.

ஏர்மங்கலப்படலம்.

பூமிப்பிரவேசம்.

சித்திரைபூசமகம்பனைசோதிசிவம்பரணி
யுத்தரமூன்றுவிடைகன்னிதேணன்றுறநவமி
பத்திரைநீத்துவியாழன்மதிபுந்திபார்மகனுட்
சுத்தநல்லெட்சியிற்பூப்பிரவேசந்துடியிடையே.

(இ-ள்.) சித்திரை பூசம் மகம் அனுஷம் சுவாதி திருவாதிரை பரணி உத்தரத்திரயம் இந்நாட்களிலே, இடபம் கன்னி விருச்சிகம் இவ்விராசிகள் உதயமாக, நவமி பத்திரை ஒழிந்த திதிகளிலே, வியாழன் திங்கள் புதன் செவ்வாய் இவ்வாரோதயங்களிற் பூமிப்பிரவேசஞ் செய்க. எ-று.

ஏர்ப்பூட்டல்.

தேரிருபூசங்கலந்தேட்கடையத்தமுத்தரங்கண்
மூரிதடிகுளிர்மீன்கலைசென்மங்கண்மூன்றுநன்று
மேர்வினைசெய்யிலிசையுஞ்சிறப்பெழிலார்கடுவைப்
பேரறிவாளர்பெருவளம்போலப்பிறைநுதலே.

(இ-ள்.) ரோகிணி புநர்பூசம் பூசம் ரேவதி மூலம் அத்தம் உத்தரத்திரயம் இந்நாட்களிலே, இடபம் மிதுனம் கர்க்கடகம் மீனம் மகரம், சென்மலக்கினம், சென்மத்திரயம், சுபவாரோதயங்கள் சம்பவிக்க உழுதல் நன்றாம். எ-று. (உ)

இதுவுமது.

கன்னியர்முன்னாகநன்னாளிலேகிக்கார்வண்ணனுடன்
மன்னிலமாதைவணங்கிப்படைச்சான்மூன்றைந்துவரத்
தென்னெனவண்டடைபூங்குழன்மாதேசெழுநிலத்துப்
பொன்னுறமேர்ப்பூட்டப்போகம்விளைக்குஞ்செழும்புவியே.

(இ-ள்.) கன்னிகைகள் முன்னாக முன் ஏர்ப்பூட்டச் சொன்ன நாளிலே தனது காணியிற்போய் அவ்விடத்திலே விஷ்ணுமூர்த்தியையும் பூமிதேவியையும் வணங்கி ஏர்ப்பூட்டிக் கிழக்குறவாதல் வடக்குறவாதல் மூன்றுபடைச்சால் ஐந்துபடைச்சால் உழுதுவிடப் பூமிதேவி மிக்க போகங்களைக் கொடுப்பள். எ-று. (ங)

கலப்பைச்சக்கரம்.

இரவிநிலைத்திடுநாண்முன்பின்மூன்றுமிருநுகத்தில்
விரவிடுமாறுமுழறீது * மேழியிலோரிரண்டும்
பரவுபின்னணிபடைவாயிலாறும்பலன்மத்திமந்
திரமுறுமேர்க்கானடுவீரைந்தாகுந்தினமினிதே.

* சிலர் மேழியில் மூன்றுநாள் என்பர்.

(இ-ள்.) கலப்பைபோலவரைந்து ஏர்முடியின் நடுவில் ஆதித்தன்நின்ற நாளைவைத்து வலமாகவெண்ணி இதனுடன் மூன்றுநாளும் நுகத்தில் ஆறுநாளும் ஆகாவாம். மேழியில் இரண்டுநாளும், பின்னணியின் மூன்றுநாளும், கொழுவின் மூன்றுநாழும் மத்திமம். ஏர்க்கால் நடுவிற் பத்துநாளும் உத்தமம். எ-று. (ச)

நெல்விதைத்தல்.

காலம்பெறவானியாடியிற்காதல்செஞ்சாலிவித்தன்
மூலங்கலமகமுற்றில்விளக்குருள்பூசமத்தந்
தாலமரிசுண்ணமுத்தரமூன்றுத்தமம்புநர்தஞ்
சீலந்தரும்பரிமான்றலைசெங்கைபுண்மத்திமமே.

(இ-ள்.) ஆனி ஆடி மாதத்திலே யாவர்க்கும் விருப்பமுடைய நெல்லு விதைப்பது. விதைக்குமிடத்து மூலம் ரேவதி மகம் விசாகம் சுவாதி ரோகிணி பூசம் அத்தம் அனுஷம் திருவோணம் சதயம் உத்தரத்திரயம் இவை உத்தமம். புநர்பூசம் அச்சுவினி மிருகசீரிடம் திருவாதிரை அவிட்டம் இவை மத்திமம். எ-று. (ரு)

இதுவுமது.

விடைகலைசீயங்குளிர்மீனநன்றுவியன்றுலைசா
றடியிவைமத்திமமட்டமசுத்திகொள்சாலிவித்தற்
சுடரவன்கால்வாரமெட்சியுமுத்தமஞ்சுங்கனேழிற்
கடியனென்றூர்குருவெட்சிநன்றுங்குழற்காரிகையே.

(இ-ள்.) இடபம் மகரம் சிங்கம் கர்க்கடகம் மீனம் இவை உத்தமம்; துலாம் கும்பம் மிதுனம் இவை மத்திமம்; அட்டமசுத்தியுண்டாக நெல்லு முதலிய தானியங்கள் விதைக்க நன்று; ஆதித்தன் வாரோதயாங்கிசம் உத்தமம்; நெல்லுவிதைக்க ஏழாமிடத்துச் சுக்கிரன் ஆகாது. பிருகஸ்பதி உதயத்திலிருத்தல் உத்தமம். எ-று. (சு)

இதுவுமது.

ஆசையிற்கேகவடைத்ததினத்திலணிதிதியிற்
பேசுறும்வாரத்தில்யோகினிபின்வலம்பெற்றகாலை
யேசுறுதிக்கையடைத்தவிராசிதிரமொழியப்
பேசுவர்நல்லோர்பெருவிதைக்கேகப்பிறைநுதலே.

(இ-ள்.) மேல் யாத்திரை சொல்லுமிடத்துத் திக்குகளுக்கு அடைத்த திதி வார நாட்களிலே, யோகினி பின்னும் வலமுமாகத், திக்குக்களை அடைத்த இடபம் சிங்கம் விருச்சிகம் கும்பம் ஒழிந்த இராசிகளிலே நெல்லு முதலானவற்றை விதைக்கப் போவது. எ-று. (எ)

இதுவுமது.

காரிதன்வாரத்திடையாம்பொழுதிற்கருந்தானியம்
பாரித்துவித்தலும்பார்மகன்வாரத்தவனெட்சியி

னேரொத்தகொள்வித்தனெல்வித்தல்ஞாயிறெழவவன்றன்
வாரத்துநன்றாங்கொடிவைத்திடமூலநன்றென்பரே.

(இ-ள்.) சனிக்கிழமையிலே மத்தியானகாலத்திற் சனி உதயமாகக் கறுப்புத்தானியம் விதைக்கலாம். செவ்வாய்க்கிழமையிலே செவ்வாய் உதயமாகக் கொள்ளு விதைக்கலாம். ஞாயிற்றுக்கிழமையிலே சூரியோதயமாக நெல்லு விதைக்கலாம். மூலத்திற் கிழங்கு கொடி வைக்கலாம். எ-று.

கொடி என்றமையால் வெற்றிலைக்கொடி வைக்கவும் பெறுமென்க. (அ)

பலபயிரிடல்.

கரும்பாங்கரும்பிற்கமுகாம்பரியிற்பயறுநன்றாம்
வருந்துமறுவையிற்சோதியிற்பூமரமாஞ்சகடத்
தரும்பார்பலவாம்பரணிவழுதுணையாம்பனையிற்
செருந்தாருழுந்தாங்கரியனவித்திடச்செக்குநன்றே.

(இ-ள்.) புநர்பூசத்திற் கரும்பு நடுவது, அச்சுவினியிற் கமுகு வைப்பது, சித்திரையிற் பயறு விதைப்பது, சுவாதியிற் பூமரம் வைப்பது, ரோகிணியிற் பலா வைப்பது, பரணியில் வழுதுணை நடுவது, அனுஷத்தில் உழுந்து விதைப்பது, சதயத்திற் கருந்தானியங்கள் விதைப்பது. எ-று.

இதுவுமது.

பனையாம்பனையிற்படர்கிழங்காங்குருகிற்கடுகுந்
தினையாஞ்சதயத்திற்செப்பியநாளெட்சியிற்கிழங்கு
வினையாமதோமுகநாளின்மேனோக்கினமேன்முகத்தாம்
பனையாம்படருவனபக்கவானனத்தாமென்பரே.

(இ-ள்.) அனுஷத்திற் பனைவிதையிடுவது. மூலத்திற் படர்கொடி கிழங்கிடுவது. சதயத்திற் கடுகுந் தினையும் விதைப்பது. இவ்விடத்துச்சொன்ன நாட்கள் உதயமாகவும் இந்தமரங்கள் பயிர்கள் வைக்கவும் பெறும். முன் சொல்லிப்போந்த அதோமுகநாளிலே, அதோமுகமான இராசியுதயமாகக் கிழங்குநடுவது. மேன்முகமான நாளிலே மேன்முகமான இராசி உதயமாகப் பனைமுதலிய மரங்கள் வைப்பது. திரயமுகமானநாளிலே திரயமுகமான இராசியுதயமாகப் படர்கொடிமுதலியன வைப்பது. எ-று. (௧௦)

நாற்றுநடுதல்.

வித்திற்கடைத்தவந்நாளினின்மேன்முகவோரையெழ
வொத்தபிறையொடிருத்தையுவாவட்டமியொழித்துச்
சுத்ததிதியிற்சுபரெட்சியிற்சொன்னவோரையினின்
முத்தனவெண்ணகையாய்நடச்சொன்னார்முனிவரரே.

(இ-ள்.) விதைக்கச் சொன்னநாளிலே, ஊர்த்துவமுகமான இராசிகளுதயமாக, பூருவபக்கத் திருதியைவரையுள்ள திதியும் இருத்தையும் உவாவும் அட்டமியும் ஒழிந்த நல்லபக்கத்திலே, சுபக்கோளுதயமாக, விதைக்கச்சொன்ன இலக்கினத்திலே நெல்லு நாற்று நடலாம். எ-று. (௧௧)

கதிரறுத்தல்.

பன்னுங்கதிர்களறுத்தற்குச்சோதிபனைமகம்யாழ்
மன்னிருபூசமுலக்கைபுண்மான்றலைதோணிமூல
முன்னுமுறமத்தமுத்தரமூன்றருடேர்சதயம்
பின்னுமறுவைபுதன்சனிபொன்பெறும்பெண்ணணங்கே.

(இ-ள்.) சுவாதி அனுஷம் மகம் அச்சுவினி புநர்பூசம் பூசம் திருவோணம் அவிட்டம் மிருகசீரிடம் ரேவதி மூலம் விசாகம் அத்தம் உத்தரத்திரயம் ரோகிணி சதயம் சித்திரை இந்நாட்களிலே, புதன் வியாழன் சனி இவ்வாரோதயங்களிலே நெற்கதிரெடுப்பது. எ-று. (௧௨)

இதுவுமது.

மேடமுந்தேளும்விரும்பிலர்மிக்கபுதன்வியாழ
னோடியவாரோதயநாலிலம்பொனவின்றபொன்கா
ணீடியநாளிலக்காலமறுக்கநன்றாநிரையே
தேடியகாயிலைபூப்பறித்தற்குமீன்றேண்மறியே.

(இ-ள்.) மேடம் விருச்சிகம் ஒழிந்த இராசிகளிலே, புதன் வியாழன் வாரோதயங்களிலேயாதல், நாலாமிடத்து வியாழன் நிற்க, வியாழன் அங்கிசத்தாதல் நெற்கதிரெடுப்பது. மீனம் விருச்சிகம் மேடம் முறையே காய் இலை பூ பறிப்பது. எ-று. (௧௩)

தானியப்பிரவேசம்.

ஓணம்பரணிமகஞ்சிவனத்தமுருண்முறத்திற்
கோணரவம்புதன்நீள்குருவாரோதயங்குளிகன்
றாணுப்பெறுமோரைநண்டேழினிற்பொன்றகுமிரண்டு
பேணப்படுஞ்சுத்திநெல்லறுத்திற்புகப்பேரிதமே.

(இ-ள்.) திருவோணம் பரணி மகம் திருவாதிரை அத்தம் ரோகிணி விசாகம் இந்நாட்களிலே, புதன் வியாழன் சனி இவர்கள் வாரோதயங்களிலே, திரராசிகளும் கர்க்கடகமும் இராகு குளிகோதயமுமாக, வியாழன் ஏழாமிடத்து நிற்க, இரண்டாமிடஞ் சுத்தியாக நெல்முதலிய தானியங்களை வீட்டுக்குக் கொண்டுவரலாம். எ-று. (௧௪)

தானியசங்கிரகம்.

உலையாதமுற்றில்பரணியிலோணத்தினிற்கடையி
னிலையானகாலினெறிகுளிர்தேளெழநெற்கொடுபோய்க்
குலையாதகூட்டிற்குருபடுங்காலையிற்கூடவிட
மலையாமெனப்பலசோதிடநூன்முறைவைத்தனவே.

(இ-ள்.) விசாகத்தினும் பரணியினும் திருவோணத்தினும் நாலாங்காலிலே, கர்க்கடகம் விருச்சிகம் உதயமாக, வியாழன் ஏழாமிடத்திலே நிற்க நெல்லுமுதலிய தானியங்களைக் கூடை, பத்தாயம் முதலியவற்றிலேயிட மலைபோலப் பெருக்கமுண்டாம். எ-று. (௧௫)

புதிதுண்ணல்.

பறவைகலம்பரியோணம்பனையுத்தரங்கண்மூல
மறுவைவிளக்கிருபூசமகமத்தமுற்றில்சுண்ணஞ்
செறிசகடமான்றலைநன்றுமேடமீன்றேளொழியப்
பெறுமுதயத்துப்புதிதுண்ணலாமென்பிறைநுதலே.

(இ-ள்.) அவிட்டம் ரேவதி அச்சுவினி திருவோணம் அனுஷம் உத்தரத்திரயம் மூலம் சித்திரை சுவாதி புநர்பூசம் பூசம் மகம் அத்தம் விசாகம் சதயம் ரோகிணி மிருகசீரிடம் இந்நாட்களிலே, மேடம் மீனம் விருச்சிகம் ஒழிந்த இராசிகளிலே, சுபக்கிரகவாரோதயமாகப் புதிதுண்ணலாம். எ-று.

இதுவுமது.

அன்னவிதியிற்கடைத்தவையாவுமணியிழையாய்
தன்னுடைநாளொழிந்தல்லாதசன்மமும்பத்திடத்துப்
பொன்னொழித்துச்சுத்தியும்புதிதுண்ணப்பொலிவுடைய
நன்னிலவெட்சியுநற்கோளுறுமீனுநன்றென்பரே.

(இ-ள்.) மேலே சொல்லிச் சொல்லப்படாதவை அன்னப்பிராசனத்துக்குச் சொன்னபடியே கொள்க. சென்மநட்சத்திரமொழிந்த பத்தாநாளும், இருபதாநாளும், வியாழன் ஒழிந்த பத்தாமிடஞ் சுத்தியும், பூருவபக்கச் சந்திரோதயமும், சுபக்கிரகம் நிற்கும் மீனமும் புதிதுண்ணவாம். எ-று.

ஏர்மங்கலப்படல முற்றிற்று.

ஆ செய்யுள் - ௩௭௪.

தேவப்பிரதிட்டைப்படலம்.

விஷ்ணுப்பிரதிட்டை.

திருத்தகுமன்னர்க்குமூர்க்குந்தலைவற்குஞ்செய்யகண்ணுய்
பொருத்தம்பெறமாசியாடிபுரட்டாதிமார்கழியும்
வருத்தம்பெறநீத்துவான்பூகர்பொன்னெளிவாய்த்தநாளிற்
கருத்துறுகண்ணனைத்தாபிக்கலாமென்கனங்குழையே.

(இ-ள்.) இராசாவுக்கும் ஊருக்கும் யசமானுக்கும் பொருந்த, மாசி ஆடி புரட்டாதி மார்கழி ஒழிந்த மாதங்களிலே, வியாழன் சுக்கிரன் அத்தமயமில்லாத காலத்திலே விஷ்ணுவைப் பிரதிட்டை செய்பலாம். எ-று. (௧)

இதுவுமது.

தோணிபனைகுன்றுபுட்கரஞ்சோதிம்திசகடஞ்
சோணமிருபூசஞ்சித்திரையுத்தரந்தூயபக்கம்

பேணுநல்வாரமிருமாண்பிராசிதேணீத்ததிரங்
காணுநான்கட்டமசுத்தியிற்ரூபனங்கண்ணனையே.

(இ-ள்.) ரேவதி அனுஷம் சதயம் அவிட்டம் அத்தம் சுவாதி மிருகசீரிடம் ரோகிணி திருவோணம் புநர்பூசம் பூசம் சித்திரை உத்தரத்திரயம் இந்நாட்களிலே, சுபதிதிகளிலே, சுபவாரங்களிலே, உபயராசியாதல் விருச்சிகம் ஒழிந்த திரராசியாதல் உதயமாக, ௪-ம் ௮-ம் இடங்கள் சுத்தியாக விஷ்ணுவைப் பிரதிட்டை செய்வது. எ-று. (௨)

சிவப்பிரதிட்டை.

மாசியொழியவுறுமுத்தராயணகாலநன்ரு
மாசில்சீர்த்தெக்கணத்தைப்பசியாவணியாங்கரனைப்
பேசுவர்தாபனமட்டமராசியொழிந்துபெற்ற
தேசுறுசென்மங்கடாபனத்திற்குச்சிறப்புடைத்தே.

(இ-ள்.) சிவப்பிரதிட்டை பண்ணுமிடத்து: தைமுதலான உத்தராயணத்து மாசியொழிந்த ஐந்துமாதத்தினுஞ் செய்யப்படும். ஆடிமுதலான தக்ஷிணாயனத்து ஆவணியிலும் ஐப்பசியிலுஞ் செய்யலாம் என்பர். முன்புசொல்லப்பட்ட அரசர்முதலியமூவருக்குஞ் சந்திராட்டமந்தவிர்ந்து, அனுகூலமான நாளினும், சென்மத்திரயங்களினுஞ் செய்யப்படும். எ-று. (௩)

இதுவுமது.

பரிமதிசோதியுருள்பனையுத்தரமூன்றுமத்த
முரிதொழுப்பூசங்கரும்புத்தமம்புள்ளுமூலமக
மரியரன்குன்றிவைமத்திமமானபஞ்சாங்கநன்ருந்
திரமெழவீசனைத்தாபிக்கலாமென்சிலைநுதலே.

(இ-ள்.) அச்சுவினி மிருகசீரிடம் சுவாதி ரோகிணி அனுஷம் உத்தரத்திரயம் அத்தம் ரேவதி பூசம் புநர்பூசம் இவை உத்தமம். அவிட்டம் மூலம் மகம் திருவோணம் திருவாதிரை சதயம் இவை மத்திமம். இந்நாட்களிலே, பஞ்சாங்கயோகம் நன்ருகக், குணதிகமான திரராசியிலே சிவப்பிரதிட்டை பண்ணுவது. எ-று. (௪)

இதுவுமது.

மேவியவட்டமசுத்தியின்மிக்கநற்கோளெட்சியிற்
றேவரைத்தாபிக்கநன்ருமுபயமுஞ்சீருடைத்தாந்
தேவியர்தங்கட்குபயநல்லோரையைச்செப்புவராந்
தாவில்சீர்ச்சத்தியைத்தாபிக்கலாந்திரந்தாழ்குழலே.

(இ-ள்.) சிவப்பிரதிட்டையும், மற்றுமுண்டான பிரதிட்டையும் பண்ணுமிடத்து: அட்டமசுத்தியும், சுபக்கிரகோதயநோக்கும் உண்டாகக் கொள்வது. உபயராசியும் ஆகும். தேவிமாரைப் பிரதிட்டை பண்ணுமிடத்து உபயராசி பிரதானம். மூலசத்தியைப் பிரதிட்டை பண்ணுமிடத்துத் திரராசியிலே கொள்ளப்படும். எ-று. (௫)

சகலப்பிரதிட்டை.

மூன்றுத்தரங்கள்குருத்தேரரியின்மூளரியனை
யேன்றகுருகினின்மாதிருவைக்கரியிற்கதிரை
யான்றவரவையியக்கரைத்தாலத்தறுமுகனை
யேன்றவிசாகத்திலிந்துவையிந்துவிற்றூபிப்பரே.

(இ-ள்.) உத்தரம் உத்தராடம் உத்தரட்டாதி பூசம் ரோகிணி திருவோணம் இவற்றிலே பிரமாவையும், மூலத்திலே சத்தமாதர்களையும், அத்தத்திலே ஆதித்தனையும், அனுஷத்திலே நாகதேவரையும் இயக்கரையும், விசாகத்திலே சுப்பிரமணியக்கடவுளையும், மிருகசீரிடத்திலே சந்திரனையும் பிரதிட்டை செய்வது. எ-று. (௬)

இதுவுமது.

திருவினுக்குத்தரம்பூமிக்குத்தோரரிணையயழலாங்
கரிமுகற்குச்செங்கைசேட்டைக்குக்கேட்டையீர்காரியருக்
கருளூறுமாதிரைபாரதிக்குத்தோணியம்பிகைக்குத்
தெரிவுறுபூரஞ்செழுமண்டதேவர்க்குச்சித்திரையே.

(இ-ள்.) இலக்குமியை உத்தரத்தினும், பூமிதேவியை ரோகிணியினும், துர்க்காதேவியைக் கார்த்திகையினும், விநாயகரைத் திருவாதிரையினும், சேட்டாதேவியைக் கேட்டையினும், சாத்தாவையுங் கேத்திரபாலனையுந் திருவாதிரையினும், சரசுவதியை ரேவதியினும், உமாதேவியைப் பூரத்தினும், அண்டதேவரைச் சித்திரையினும் பிரதிட்டை செய்வது. எ-று. (௭)

இதுவுமது.

கூறியகுற்றமனைத்தையுமோர்ந்துகுணதிகத்து
ளாறியவேழிற்கதிர்புகர்மால்சனியந்தத்தினி
லூறவர்திங்களதோமுகவெட்சியொழியவானத்
தேறியவானனத்தோரையிற்றூபனநன்றென்பரே.

(இ-ள்.) முன்சொல்லியபடியே குணதோஷம் ஆராய்ந்து குணதிகமான நாள், இராசிகளிலே, எழாமிடத்து ஆதித்தன் சுக்கிரன் புதன் சனி இவர்கள் நிற்க, பன்னிரண்டாமிடத்துப் பாபக்கிரகங்களும், சந்திரோதயமும், அதோமுகராசியும் ஒழிந்த இலக்கினத்திலே, ஊர்த்துவமுகராசி உதயமாகச் சகல பிரதிட்டைகளும் பண்ணலாம். எ-று. (௮)

இதுவுமது.

திரத்தினிற்றிங்கணற்காலிற்றிரமெனிற்சீர்பெருகுந்
தரத்துச்சநட்பின்மதிநன்றுதாபனத்திற்குநற்கோள்
வரத்துச்சநட்பாட்சியுற்றிரண்டெட்சியின்மன்னிவாழு
முரித்தகண்டத்தொன்பதைந்தினிலாயத்திலுற்றனன்றே.

(இ-ள்.) சந்திரன் திரராசியிலே சுபாங்கிசத்தே நிற்பத், திரராசியிற் சுபோதயமாகப் பிரதிட்டைசெய்யின் மிகவும் நன்று. சந்திரன் நட்பாட்சியுச்சத்திலே நிற்கவும் பிரதிட்டை பண்ணலாம். சுபக்கிரகங்கள் நட்பாட்சியுச்சத்திலேநிற்கவும், உதயம் இரண்டு, கேந்திரம், ௫, ௯, ௧௧, இவ்விடங்களில் நிற்கவும் பிரதிட்டை பண்ணுவது. எ-று. (௯)

இதுவுமது.

நற்கோண்மதிபகைநீசத்துறினுநாற்கண்டத்திடை
புற்கோளெழினுஞ்சனிபூமன்வெய்யவன்போரரவஞ்
சொற்கூடுதயத்திரண்டினின்றுற்றுயர்மூவருக்கு
முற்கூறுதீயவர்மூன்றுறுபன்னொன்றநன்றென்பரே.

(இ-ள்.) சுபக்கோளுஞ் சந்திரனும் பகை நீசத்து நிற்பினும், நாற்கண்டங்களிலே பாபக்கிரகங்கள் நிற்பினும், சனியுஞ் செவ்வாயும் ஆதித்தனும் இராகுவும் உதயத்தும், இரண்டாமிடத்தும் நிற்பினும் நன்றல்ல. அக்காலத்துப் பிரதிட்டைசெய்தால் இராசாவுக்கும், ஊருக்கும், எசமானுக்குந் துயரமாம். பாபக்கிரகங்கள் ௩, ௬, ௧௧, இவ்விடங்களில் நிற்பின் மிகவும் நன்றாம். எ-று. ஆதித்தனுதயம் ஆகுமென்பாருமுளர். (௰)

இதுவுமது.

அரியரன்வெய்யோன்கணபதிகந்தனயன்வடுகன்
றரைமகள்சூலிபகவதிமோடிபொன்சாவித்திரி
பெரியவர்தங்கட்குப்பேசியதாபனமல்லவர்க்குத்
தருமுறையாகமத்தின்படிகொள்கதளிரடியே.

(இ-ள்.) விட்டுணு சிவன் சூரியன் விநாயகர் சுப்பிரமணியக்கடவுள் பிரமன் கேத்திரபாலன் பூமிதேவி துர்க்கை ஈசுவரி சேட்டாதேவி இலக்குமி சரசுவதி இவர்களுக்குப் பிரதிட்டைசெய்யுமிடத்து முன்சொன்னபடியே செய்யவும். ஏனைய தேவதைகட்கு ஆகமங்களிற் சொன்னபடியே பிரதிட்டை செய்வது. எ-று. (௧௧)

இதுவுமது.

சிங்கங்கதிர்க்குந்தடிசிவனுக்குங்குடம்விதிக்கு
மங்கையரிக்குமலைமகளுக்குங்கலைமகட்குந்
தங்குஞ்சிலைமீன்சரஞ்சாத்தனுக்கும்வடுகனுக்குஞ்
செங்கயற்கண்ணுயுபயங்கடாபனந்தேவியர்க்கே.

(இ-ள்.) சிங்கம் உதயமாகச் சூரியனையும், மிதுனம் உதயமாகச் சிவனையும், கும்பம் உதயமாகப் பிரமனையும், கன்னி உதயமாக விட்டுணுவையும், தனு மீனம் உதயமாக ஈசுவரியையும் இலக்குமியையும் சரசுவதியையும், சரராசி உதயமாகச் சாத்தாவையும் கேத்திரபாலனையும், திரராசி உதயமாக மற்றுமுள்ள தேவர்களையும், உபயராசி உதயமாக மற்றுமுள்ள தேவிமாரையும் பிரதிட்டை செய்வது. எ-று. (௧௨)

தேவப்பிரதிட்டைப்படல முற்றிற்று.

ஆக செய்யுள் - ௩௮௬.

தேவவழிபாட்டுப்படலம்.

துவசாரோகணம்.

மாததினத்தினுமன்னவனுளினுமூர்த்தினத்துஞ்
சீர்தருசங்கிரமத்தினுந்தீர்த்தமதாகமுன்பே
மேதகுமூவொன்பதிரொன்பதோரொன்பதில்விளங்கக்
கோதினன்னூன்முறையேகொடியேற்றுககோமளமே.

(இ-ள்) மாதநட்சத்திரத்தினும், இராசாவின் நட்சத்திரத்தினும், கிராம நட்சத்திரத்தினும், சங்கிரமதினங்களினும் தீர்த்தமாக நிச்சயித்து, இதற்கு முன்னே இருபத்தேழாம்நாளாதல், பதினெட்டாம்நாளாதல், ஒன்பதாம் நாளாதல் தேவர்களுக்குத் தத்தஞ் சாத்திரங்களிற் சொன்னபடியே கொடியேற்றுவது. எ-று. (௧)

இதுவுமது.

திங்கட்செயனல்லவாசுத்திரமொழித்துத்திருநா
ளங்கத்தெழுசசியந்தணனேக்கச்சரமுதிப்பத்
துங்கக்கொடியேறவுந்தூயநீராடிடைப்பொழுதிற்
றங்குந்திரமெழவுஞ்சாலநன்றென்பர்சான்றவரே.

(இ-ள்.) திருநாளெழுந்தருளப் பண்ணுமிடத்துச் சந்திரன் சுபராசி கேதனனகச் சரராசி உபயராசி உதயமாகவும், கொடியேற்றுமிடத்துச் சந்திரன் சுபராசிகேதனனக வியாழன் நோக்கச் சரராசி உதயமாகவும், தீர்த்தம் பிரசாதிக்குமிடத்து மத்தியானகாலத்திலே திரராசி உதயமாகவுஞ் செய்யலாம். எ-று. (௨)

இதுவுமது.

சோதிபனையத்தம்பண்டிமூன்றுத்தரஞ்சோணைபரி
யாதியிலட்டமியந்தஞ்சதுர்த்தசியாரல்வார
மாதிருவிற்கிவைதீர்த்தமதாகவகுத்துமுன்னே
யோதுவரேழ்தினஞ்சாந்திசெவ்வாயினிலூண்பலியே.

(இ-ள்.) சுவாதி அனுஷம் அத்தம் ரோகிணி உத்தரத்திரயம் திருவோணம் அச்சுவினி, பூருவபக்கத்து அட்டமி, அபரபக்கச் சதுர்த்தசி, செவ்வாய்க்கிழமை இவை தீர்த்தநாளாகக் கற்பித்து, முன்னே எழுநாட் பிராட்டியுற்சவம் நடக்கவும், செவ்வாய்க்கிழமை நாட்பெலியிடவுமாம். எ-று. (௩)

பவித்திரதமனகம்.

ஆடியிலாவணியிற்புரட்டாதியிலட்டமியி
னுடுஞ்சதுர்த்தசியினயந்தாரரற்குப்பவித்திரமும்
பாடியசித்திரையிற்காமபக்கத்துப்பௌரணையி
னீடுதயத்துத்தமனகஞ்சாத்துநிரைவளையே.

(இ-ள்.) சௌரமாதங்களால்வந்த ஆடி ஆவணி புரட்டாதியிலே, பூருவபக்கத்து அட்டமியிலாதல் சதுர்த்தசியிலாதல், சுபோதயமாக ஈசுவரனுக்குப் பவித்திரஞ் சாத்துவது. சித்திரைமாதத்துத் திரயோதசியிலாதல் பூரணையிலாதல் சுபோதயமாகத் தமனகஞ் சாத்துவது. எ-று. (௪)

இதுவுமது.

குளிரரிகன்னியிற்கூடியசாந்திரமாதங்களி
லொளிகொடுவாதசியோணத்திடையுவாவுற்றநற்கோ
டெளிவுறுமேன்முகவோரையிற்சீர்கொள்பவித்திரநூல்
துளவணிமாயற்குச்சாத்தநல்லோர்சொற்றுணிந்தனவே.

(இ-ள்.) சாந்திரமாதங்களால்வந்த ஆடி ஆவணி புரட்டாதியிலே, பூருவபக்கத் துவாதசியிலாதல், பூரணை திருவோணத்திலாதல், சுபக்கிரகோதயமாக, ஊர்த்துவமுகராசியிலே விஷ்ணுவுக்குப் பவித்திரஞ் சாத்துவது. எ-று. (௫)

ஸ்ரீ ஜயந்தி.

திங்களுரோகிணிசேர்ந்தெழச்செங்கதிர்சிங்கமேறப்
பங்கப்படுமட்டமியிலிப்பார்பொறைதீர்வதற்கு
மெங்கட்பிறவிகெடுத்தற்கும்யாதவர்தங்குலத்துச்
செங்கட்டிருநெடுமாலவதாரமுன்செய்தனனே.

(இ-ள்.) சௌரமாதவகையால் ஆதித்தன் சிங்கத்தில் நிற்பச், சாந்திரமாதவகையால் வந்த ஆவணிமாதத்து அபரபக்கத்து அட்டமியும், புதன்கிழமையும், ரோகிணியுங் கூடிய நாள் சந்திரோதயமாகக் கிருஷ்ணவதாரமான நாளாம். இதிலே ஸ்ரீஜயந்தி உற்சவம் செய்வது. எ-று. (௬)

கிருத்திகாதீபம், வசந்தோற்சவம்.

கார்த்திகைக்கார்த்திகையிற்கடைக்காலினிடையுவாவிற்
சேர்த்தேறெழத்தீபமேற்றுகசித்திரைச்சித்திரையிற்
பார்த்ததிரயோதசியிற்பௌரத்திற்பகனல்லகோண்
மூர்த்தம்பெறவசந்தங்கொள்கவென்றனர்மொய்குழலே.

(இ-ள்.) கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நாலாங்காலிலேயாதல் ரோகிணியிலாதல் பூரணையிற் பிரதானமாக இடபலக்கினத்துத் திருக்கார்த்திகைத் தீபமேற்றுவது. சித்திரைமாதத்துச் சித்திரையிலேயாதல் திரயோதசி பூரணையிலேயாதல் பகலிலே சுபோதயமாக வசந்தோற்சவங் கொள்வது. எ-று. (௭)

ஏகாதசிவிரதம்.

இரவிதனுவுற்றிடுநாள்வளர்பிறையேகாதசி
பரணியிற்செய்யவன்வாரத்திலேவரிற்பண்புடையோர்
விரவுறுமேகாதசிவிரதம்விதியார்விரதந்
தகுதிதிவெய்யோனுதயாதியிலேசரித்துமென்றே.

(இ-ள்.) ஏகாதசிவிரதங் கொள்ளுமிடத்து: ஆதித்தன் தனுவிலே நிற்பப் பூருவபக்கத்து ஏகாதசி கொள்ளப்படும். இது செவ்வாய்க்கிழமையிலாதல் பரணியிலாதல் வருமாகில் அவ்வாண்டு தவிரப்படும். திதிபிரதானமான விரதங்கள் சூரியோதயத்துண்டான திதியையே கொள்ளப்படும். எ-று.

இராப்பகற்கொள்ளும் விரதம்.

அட்டமிநோன்புமமாவாசையும்பதினான்குநான்குஞ்
சுட்டும்விரதஞ்சுடரவனுதிகொள்பூரணமு
முட்டெளிவோணம்பிறந்தநாளாதிரையுற்றநோன்புஞ்
சிட்டரிராவுளநாளினிற்கொள்ளென்றுசெப்புவரே.

(இ-ள்.) அட்டமி அமாவாசை சதுர்த்தசி சதுர்த்தி இவைகளில் அனுட்டிக்கும் விரதங்கள் சூரியோதயத்துண்டான தினங்களிலே கொள்ளப்படும். பூரணை திருவோணம் சென்மநட்சத்திரம் திருவாதிரை இவைகளில் அனுட்டிக்கும் விரதங்கள் இராத்திரியுண்டான தினங்களிலே கொள்ளப்படும். எ-று. (௯)

திதி, நட்சத்திரப்பிரதானம்.

உதயாதியிலுடைத்தாந்திதியேதிதிநாளிரவி
புதையாவிரவிலுண்டாயதுவாம்புகல்கின்றவிவை
சிதைவாங்கடிகையொராறுக்குளேற்றிருவேகாதசி
யுதயாதியிலோர்கலையுளதாந்தினமோதுவரே.

(இ-ள்.) திதி விரதங்கள் உதயாதியிலே கொள்ளப்படும். நட்சத்திர விரதங்கள் இராத்திரியிலுண்டான திவசத்தைக் கொள்ளப்பெறும். இதில் இரட்டிக்கச் சொன்னதில் பகல் ஆறு நாழிகைக்குள் திதியற்றாலும், இரவு ஆறுநாழிகைக்குள் நட்சத்திரமற்றாலும் அற்றைத்திவசந் தவிர்ந்து முதல் நாளிலே கொள்ளப்படும். ஏகாதசிவிரதம் சூரியோதயத்தில் ஒரு கலை நின்று மேற்றுவாதசி கூடினும் அன்று விரதங்கொள்ளப்படும். தசமி கூடினது வற்சிக்கப்படும். எ-று. கலை-நாலரை விநாழிகை. (௧௦)

அர்த்தோதய மகோதயம்.

நாட்டுங்கதிர்மதியோணத்தெழவாரஞாயிறுக
மீட்டும்விதிபாதமேவியநாளைநல்வேதியர்கள்
காட்டுமத்தோதயமென்றுரைத்தார்களங்கன்றினத்திற்
றீட்டுமகோதயஞ்செவ்வாய்க்கருங்கட்சிலைநுதலே.

(இ-ள்.) ஆதித்தனுஞ் சந்திரனும் மகரராசியிலே திருவோணத்திலே நிற்க, ஞாயிற்றுக்கிழமையும் வியதிபாதயோகமுங் கூடின் அர்த்தோதயம். இவ்வ சோமவாரத்திற்கூடின் மகோதயமெனப்படும். எ-று. (௧௧)

தேவவழிபாட்டுப்படல முற்றிற்று.

ஆ செய்யுள் - ௩௬௭.

யாத்திரைப்படலம்.

யாத்திரைக்காகாதநாள்.

பாம்பாதிரைமுற்றில்கேட்டைபரணிமுப்பூரமாா
றீம்பான்முதற்சட்டியட்டமிசேய்சனிசேரிருத்தை
சாம்பாலவிட்டிபகையானநாட்களிற்றக்கவழி
போம்பாவிமீளாயமலோகஞ்சென்றுபுகுமென்பரே.

(இ-ள்.) ஆயிலியம் திருவாதிரை விசாகம் கேட்டை பரணி பூரம் பூராடம் பூரட்டாதி கார்த்திகை, பிரதமை சட்டி அட்டமி இருத்தை, செவ்வாய் சனிவாரம், விட்டிக்கரணம், பகைநாள் இவைகளில் யாத்திரைபோனவன் தன்னூருக்குத் திரும்பிவரான்; யமலோகத்தை அடைவான். எ-று. (௧)

திசையாத்திரை.

புரவிபனையத்தம்புட்டோணிமான்றலைபூசமோண
முரணுறுமோரைகட்கெல்லாமுரைத்தனர்யாத்திரைக்குச்
சுரமுறுமூங்கில்குருகுருடோர்சுண்ணமத்திமமாந்
தரமுறுமல்லவைசாற்றியதிக்கிற்குத்தக்கனவே.

(இ-ள்.) அச்சுவினி அனுஷம் அத்தம் அவிட்டம் ரேவதி மிருகசீரிடம் பூசம் திருவோணம் இவ்வெட்டுநாளினும் எல்லாத் திக்கிற்கும் யாத்திரை போகலாம். புனர்பூசம் மூலம் ரோகிணி சதயம் இவை மத்திமம். அல்லாத நாட்கள் யாத்திரைக்குச் சொன்ன திக்குகளிற் போகலாம். எ-று. (௨)

இதுவுமது.

அங்கிமகம்பனைபுண்முதனாளடைவேழுஞ்செவ்வாய்
திங்களுடன்சுன்புதனுடன்சீவன்கதிர்வெள்ளியுந்
தங்குங்கிழக்குமுதற்றயிரெட்டேன்பாலுண்டுபோகை
மங்கலநேர்கிழக்கும்வடக்குஞ்செலுமற்றுமின்னே.

(இ-ள்.) கார்த்திகைமுதல் ஏழுநாள் கிழக்கும், மகமுதல் ஏழுநாள் தெற்கும், அனுஷமுதல் ஏழுநாள் மேற்கும், அவிட்டமுதல் ஏழுநாள் வடக்கும் போகலாம். வாரங்களில் செவ்வாய் கிழக்கும், திங்களுஞ் சனியுந் தெற்கும், புதனும் வியாழனும் மேற்கும், ஞாயிறும் வெள்ளியும் வடக்கும் போகலாம். போகுமிடத்து: கிழக்குத் தயிர்புசித்தும், தெற்கு எள்ளுத்தின்றும், மேற்குத் தேனுண்டும், வடக்குப் பால்புசித்தும் போக நன்று. இங்கே சொன்ன நாளுங் கிழமையும் அடைத்த திக்குகள் கிழக்கும் மேற்கும் வடக்குந் தெற்கும் ஒக்கும். எ-று. (௩)

திசையிற்கழிக்குநாள்.

கிழக்கட்டமிசோணைகேட்டைதிங்கட்கேடியாத்திரைக்குச்
சழக்குறுதெற்குப்பரிபதஞ்சட்டிவியாழமேற்கு

முழக்குமுருள்பூசமுற்றிதிவெள்ளிவடக்குத்தரம்
வழக்கத்தம்புந்திதுவாதசிவாட்டினன்வாசிட்டனே.

(இ-ள்.) திருவோணம் கேட்டை அட்டமி திங்கட்கிழமை இவற்றிற் கிழக்கும், அச்சுவினி பூரட்டாதி சட்டி வியாழக்கிழமை இவற்றில் தெற்கும், ரோகிணி பூசம் பிரதமை வெள்ளிக்கிழமை இவற்றில் மேற்கும், உத்தரம் அத்தம் துவாதசி புதன்கிழமை இவற்றில் வடக்கும் யாத்திரை போகலாகாது. எ-று.

இவற்றைத் திக்குச்சூலமென்று யாவரும் நீக்கினர் என்க. (௪)

இதுவுமது.

அருக்கன்புகர்கிழக்கங்காரகன்றெற்கணிமதிசுன்
வருத்துறுமேற்குப்புதன்மந்திரிவடக்குப்பொருந்தா
வுரைத்தசரங்களுபயங்களூர்த்தமுகவோரைநாட்
சிரத்துதயங்களும்யாத்திரைக்காமென்பர்தேமொழியே.

(இ-ள்.) ஞாயிறு வெள்ளி கிழக்கும், செவ்வாய் தெற்கும், திங்கள் சனி மேற்கும், புதன் வியாழன் வடக்கும் போகலாகாது. சரராசியும், உபயராசியும், ஊர்த்துவமுகராசியும், நாளும், சிரோதயராசியும் யாத்திரைக்குச் சிரேட்டமாம். எ-று. (௫)

இதுவுமது.

ஒன்பதுமாதியுமந்தமும்பல்லாதவொற்றைப்பக்க
மின்பந்தருஞ்சமத்தீரைந்திரண்டுமினிமைதரு
மன்புறுபங்குனிகார்த்திகையாடியிலாயபோக்குத்
துன்பந்தருமென்றுதொன்னூலுணர்ந்தவர்சொல்லினரே.

(இ-ள்.) திதிகளில்: நவமியும் பிரதமையும் பூரணையும் ஒழிந்த ஒற்றித்த திதிகள் யாத்திரைக்கு நன்று. இரட்டித்த திதிகளில் தசமியும் துதியையும் நன்று. இவையல்லாத திதிகள் ஆகாவாம். பங்குனி கார்த்திகை ஆடி இம்மாதங்கள் விசேஷித்துத் தவிரப்படும். எ-று. (௬)

இதுவுமது.

பிறந்தவிராசியுமூன்றாறுபன்னொன்றிரண்டிற்போக [தத்
வறைந்துயிரைந்தொன்பதேழ்நான்கிரண்டு பன்னொன்றொடுந
துறைந்தநற்கோளேழ்நான்கிற்புகர்மாலொழிந்தைந்துசுந்தி
சிறந்தனபோகைக்குத்தீக்கோண்மூன்றாறுயஞ்சேர்கைநன்றே.

(இ-ள்.) சென்மராசியிலும், ௨, ௩, ௬, ௧௧, இவ்விராசிகளிலும் யாத்திரை போகலாம். போகுமிடத்து உதயம், ௨, ௪, ௫, ௭, ௯, ௧௧, ௧௨, இவ்விடங்களிற் சுபக்கிரகங்கள் நிற்கலாம். இவற்றிற் சுக்கிரன் ஏழாமிடத்தும் புதன் நாலாமிடத்தும் ஒழியக் கொள்வது. பஞ்சமசுத்தியுண்டாக, பாபக்கிரகங்கள் ௩, ௬, ௧௧, இவ்விடங்களில் நிற்க யாத்திரைபோவது. எ-று. ()

யாத்திரைக்கு நட்சத்திரபட்சணம்.

உழுந்தெட்டயிர்யவையூனுதிரம்புடோனெய்பாம்பூனெட்
கொழுஞ்சோறுசாமைதினைவண்ணவோதனநெல்லிகொட்டே
செழும்பால்கிழங்குநீரத்தநெற்றேன்குளம்பாலிரத்த [ன்
மெழும்பயறைப்பசியாதிநாளுக்குண்டுபோகென்பரே.

(இ-ள்.) அவசியம் யாத்திரைபோகுமிடத்து அச்சுவினிமுதல் ரேவதியீறாக இருபத்தேழு நட்சத்திரங்களுக்கும் இருபத்தேழு பதார்த்தத்தைப் புசித்துப் போகலாம். அவையாவன: உழுந்து எள்ளு தயிர் யவை மாமிசம் இரத்தம் புடோல் நெய் சர்ப்பமாமிசம் எள்ளு சுத்தான்னம் சாமைச்சோறு தினைச்சோறு சித்திரான்னம் நெல்லி கொள்ளு தேன் பால் கிழங்கு தண்ணீர் தருப்பணம் நெல்லு தேன் சர்க்கரை பால் இரத்தம் பயறு என்பன. இவற்றைப் புசித்தல் பரிசித்தல் நினைத்தல்செய்து போகலாம். எ-று. (௮)

யாத்திரைக்குத் திதிவாரபட்சணம்.

எருக்கரிசிநெய்நெற்சோறுபொன்னீர்மதுத்தானியநீர்
கருத்துறுகோமயம்பாலவிகன்னனற்பால்பருப்பு
நிரைத்ததிதிக்குக்கிழமைக்குப்பாறயிர்நீர்பருப்புப்
பொரிப்பலினக்கறிபாற்சோறுபிண்ணுக்கருந்திப்புகே.

(இ-ள்.) பிரதமை முதலிய பதினைந்துதிதிக்கும்: எருக்கிலை அரிசி நெய் நெல்லு சோறு பொன்சலம் தேன் தானியம் சலம் கோமயம் பால் பாற்சோறு கருப்புக்கட்டி பால் பருப்பு இவற்றைத் தின்று யாத்திரை போவது. ஞாயிறு முதலிய கிழமைக்கு: பால் தயிர் சலம் பருப்பு பொரித்த பலவினக்கறி பாற்சோறு பிண்ணுக்கு இவற்றைத் தின்று போவது. எ-று.

யாத்திரைக்குச் சரம்.

நாசியின்மீதெழுகாலிடைநன்றுதீதாகும்வலம்
வாசிட்டர்பார்க்கவரங்கிராப்பாரத்துவாசிகட்குங்
காசிபர்தங்கட்கெதிர்வெள்ளியிலென்பர்கண்ணன்கழல்
பேசிவணங்கிப்பின்யாத்திரைபோகப்பெருநலமே.

(இ-ள்.) யாத்திரை போவதற்கு நிச்சயித்த முகூர்த்தத்திற்கு முன்னரே கிழக்குநோக்கியிருந்து சுவாசத்தைவிட்டால் அமுதபாகமாகிய இடையிலே இயங்குமாகில் யாத்திரைபோக மிகவும் நன்று. விஷபாகமாகிய பிங்கலையிலே இயங்குமாகில் யாத்திரைபோதல் தீது. எதிர்வெள்ளியும், இடக்கண்வெள்ளியும் ஆகாவாம். பிராமணரில் வாசிட்டர் பார்க்கவர் அங்கிரா பாரத்துவாசர் காசிபர் இந்த வர்க்கத்தார் போகுமிடத்துச் சுக்கிர தோஷமில்லை; பிரீதியாம். அல்லாத இருஷிகோத்திரத்தாருக்கும் மற்றுமுள்ள மூன்றுவருணத்தாருக்கும் உண்டு. பரமகுருவான நாராயணனைத் துதித்து நமஸ்கரித்துப் போகின் மிகவும் நன்றாம். எ-று. (௧௦)

யாத்திரைக்குக்காலநிர்ணயம்.

பதிபுக்கவொன்பான்றினத்தினிற்போதல்பதியைவிட்ட
விதிபுக்கவொன்பான்றினத்தினின்மேவுதன்மிக்கபொல்லாங்
கதின்மிக்கமாதமுமாண்டுமெவ்வண்ணமாகாபுகரோ
னெதிர்புக்கவோரூர்க்கிசைத்தாரினிதென்றினவளையே.

(இ-ள்.) ஒரூருக்குப் புகுந்த ஒன்பதாநாட் புறப்படலாகாது. புறப்பட்ட ஒன்பதாநாள் தன்னூரிலும் வரலாகாது. ஒன்பதாம் மாதமும், ஆண்டும் அப்படியே தவிரப்படும். எதிர்வெள்ளியும், இடக்கண்வெள்ளியும் ஒரூர்க்கில்லையாம். எ-று. (௧௧)

ஸ்திரீயாத்திரை.

கதிரோன்குடங்குளிர்கன்னிசேர்நாளுங்கடவுள்குரு
விதியொளிகுன்றியவெள்ளியும்வெள்ளிமால்வாரங்களு
மெதிர்வெள்ளியும்முத்தரமுமுற்பக்கமுமெய்துகாலம்
பதியின்றிமாதர்கடாம்வழிபோகப்பகர்ந்திலரே.

(இ-ள்.) ஆதித்தன்: கும்பம் கர்க்கடகம் கன்னியில் நிற்கும் மாதமும், குரு சுக்கிர அத்தமனகாலமும், புதன் வெள்ளி வாரமும், எதிர்வெள்ளியும், உத்தரமும், பிரதமையும் தனது நாயகனின்றி ஸ்திரீகள் யாத்திரை போகலாகாது. எ-று.

எதிர்வெள்ளியறியுமிடத்து மேடஞ் சிங்கந் தனு கிழக்கு, இடபங் கன்னி மகரந் தெற்கு, மிதுனந் துலாங் கும்பம் மேற்கு, கர்க்கடகம் விருச்சிகம் மீனம் வடக்கு, இந்தராசிகளிலே நவக்கிரகங்களும் நிற்குங்காலம் இந்தத் திக்கிலே நோக்கமென்றறிக. எ-று. (௧௨)

கோயாத்திரை.

தலைநாண்முதலைந்துகேட்டைசதயம்விசாகமக
மூலையாதவோணமிரேவதிபூரமூன்றுத்தரங்கள்
சிலைமீன்கலையாழ்மறிதேளெழத்திங்கள்சிவன்வார
நிலையார்புகரெட்டினிற்கக்கோயாத்திரைநேர்ந்தனரே.

(இ-ள்.) அச்சுவினி பரணி கார்த்திகை ரோகிணி மிருகசீரிடம் கேட்டை சதயம் விசாகம் மகம் திருவோணம் ரேவதி பூரம் பூராடம் பூரட்டாதி உத்தரம் உத்தராடம் உத்தரட்டாதி இந்நாட்களிலே, தனு மீனம் மகரம் மிதுனம் மேடம் விருச்சிகம் இவ்விராசிகள் உதயமாக, திங்கள் வியாழன் வாரோதயங்களிலே, சுக்கிரன் எட்டாமிடத்து நிற்கப் பசுமுதலிய நாற்கால்விலங்குகள் யாத்திரை போகலாம். எ-று. (௧௩)

சலயாத்திரை.

நாரணனத்தம்பனைமான்றலைபுள்ளுநாவாய்சோதி
தாரணிபாய்மாவிவற்றிற்சரமெழத்தக்ககோட்க

ளேரணியாகவியாத்திரைபோகவெடுத்தவற்றி
னீரணியாத்திரையாமென்றனர்பொன்னிரைவளையே.

(இ-ள்.) திருவோணம் அத்தம் அனுஷம் மிருகசீரிடம் அவிட்டம் ரேவதி சுவாதி அச்சுவினி இந்நாட்களிலே, சரராசி உதயமாகச், சுபக்கிரகங்கள் நன்றாயிருக்கச், சுபயாத்திரைக்குச் சொன்ன வகையும் பார்த்துச் சலயாத்திரை போவது. எ-று. (௧௪)

கூபதடாகாரம்பம்.

நல்லவர்வாரநற்பக்கமுடைகுளமத்தநாவாய்
சொல்லுமகம்பனைமான்றலைசோணைசுண்ணங்குருத்தேர்
வல்லுறுமுத்தரமூன்றேறுமீன்சாடிமானண்டினிற்
கல்லுங்கிணறுகுளஞ்சுத்தியெட்டிற்கனங்குழையே.

(இ-ள்.) சுபவாரமுஞ் சுபதிதியுங் கூடின பூராடம் அத்தம் ரேவதி மகம் அனுஷம் மிருகசீரிடம் திருவோணம் சதயம் பூசம் ரோகிணி உத்தரத்திரயம் இந்நாட்களிலே, இடபம் மீனம் கும்பம் மகரம் கர்க்கடகம் இவ்விராசிகள் உதயமாக, அட்டமசுத்தியுண்டாகக் கிணறு குளங் கல்லலாம். எ-று. (௧௫)

இதுவுமது.

ஈசன்பிரமன்வருணன்புரந்தரன்சோமனென்ற
வாசைகடன்னிற்கிணறுகுளங்கல்லனன்றல்லவை
வாசங்கமழ்பூங்குழன்மடவாய்வன்றுயருடைத்தாய்
நாசம்வருமென்றுநன்னூலுணர்ந்தவர்நாட்டினரே.

(இ-ள்.) ஊருக்கும் அகத்திற்கும் வடகிழக்கு நடுவு மேற்கு கிழக்கு வடக்கு என்று சொல்லப்பட்ட திக்குக்களிற் கிணறு குளங் கல்ல நன்று; அல்லாத திக்குகளிற் கல்லினால் வியாதி பீடை தனச்சேதம் மரணபயம் உண்டாம். எ-று.

அகத்தினுக்குப் பிரமத்தானம் ஆகாதென்பாருமுளர். (௧௬)

பர்வதபாதாளயோகம்.

அதிபெறுமுச்சத்துநீசத்துமர்க்கனிருந்துதிப்பப்
பதிபெறுயோகம்பருப்பதம்பாதாளமென்பரேரி
நதிகரைகட்டல்குழித்தனன்றாய்வளையாயடைவே
பதியலையாழ்கடலாமென்றறிஞரறைந்தனரே.

(இ-ள்.) ஆதித்தன் அத்தியுச்சபாகையிலே நிற்ப, மேடத்துப் பத்தாம்பாகம் உதயமாகிற் பருப்பதயோகமாம். இதில் ஏரி குளங் கிணறு ஆறு கரைகட்ட மலைபோல வளர்ந்து நிலைக்கும். ஆதித்தன் நீசத்து நிற்ப, துலாத்துப் பத்தாம்பாகம் உதயமாகிற் பாதாளயோகமாம். இதிலே கிணறு குளம் ஏரி ஆறு கல்லச் சமுத்திரம்போலப் பெருகும். எ-று. (௧௭)

கிரயவிக்கிரயம்.

கலஞ்சதயோணமுறமிருபூசங்களிறுசுண்ண
நலம்பரிபூரநரிப்புறம்விற்கேட்டையுத்தரங்கள் [றே
குலஞ்செங்கைகொண்டுகொடுத்தற் கிருத்தையொழித்து மீன்
ஞலந்தயாமேறரிகோனல்லவாரோதயமுறுமே.

(இ-ள்.) ரேவதி ரோகிணி திருவோணம் விசாகம் புநர்பூசம் பூசம் அத்தம் சதயம் அச்சுவினி பூரம் மிருகசீரிடம் மூலம் கேட்டை உத்தரத்திரயம் திருவாதிரை இந்நாட்களிலே, இருத்தையொழிந்த திதிகளிலே, மீனம் விருச்சிகம் மிதுனம் இடபம் சிங்கம் துலாம் இவை உதயமாகச் சுபவாரோதயங்களிலே கொள்ளக் கொடுக்க நன்றாம். எ-று. (கக)

இதுவுமது.

முறமகம்பூரங்கள்சித்திரைமூலம்பரணியாரல்
செறியரவம்வெள்ளிசேய்முற்றிதியினுவாவிற்றனம் [ருளும்
பிறர்கைக்கொடேல்கொடுக்கிற் பெருஞ்செல்வமுங் கைப்பொ
பறிபடுமென்பிறர்கைப்பொருள்கொள்ளிற்பலன்பெரிதே.

(இ-ள்.) விசாகம் மகம் பூரத்திரயம் சித்திரை மூலம் பரணி கார்த்திகை ஆயிலியம் இந்நாட்களிலும், வெள்ளி செவ்வாய்வாரங்களிலும், பிரதமை உவாக்களிலும் பொருள் கொடுக்கலாகாது. கொடுத்தால் கையில் உள்ளபொருளும் போகும். பிறரிடத்தில் வாங்கினால் மிகவும் வந்து கைகூடும். எ-று.

இராசபிரபுதேரிசனம்.

கேட்டைபராவரன்பூரங்களோடுகிழவனல்ல
வீட்டுநன்னாளினற்கோளஞ்சகவாரமெட்சிநண்ண
நாட்டுந்திரமுபயம்மெழநாவிநறுங்குழலாய்
சூட்டும்பெரியோர்களைக்காணலாமென்றுசொல்லினரே.

(இ-ள்.) கேட்டை ஆயிலியம் திருவாதிரை பூரம் பூராடம் பூரட்டாதி பரணி கார்த்திகை இவையொழிந்த சுபநாட்களிலே, சுபவாரோதயாங்கிசங்களிலே, திரராசி உபயராசி உதயமாக, இராச பிரபு தெரிசனம் பண்ணுவது. எ-று. (உ0)

யாத்திரைப்படலம் முற்றிற்று.

ஆ. செய்யுள் - சகள.

அரசர்வினைப்படலம்.

இராசாபிஷேகம்.

உத்தரமூன்றுருள்பூசநாவாய்கழைகேட்டையோண
மத்தம்பரிபனைமான்றலைநன்றரியாடிடபஞ்
சத்தந்தருந்தேட்டடியுத்தமங்குளிர்மீன்சிலைசான்
மத்திமமன்னவர்மாமுடிசூட்டவகுத்தனரே.

(இ-ள்.) உத்தரத்திரயம் ரோகிணி பூசம் ரேவதி புநர்பூசம் கேட்டை திருவோணம் அத்தம் அச்சுவினி அனுஷம் மிருகசீரிடம் இந்நாட்களும், சிங்கம் மேடம் இடபம் விருச்சிகம் மிதுனம் இவ்விராசிகளும் உத்தமம். கர்க்கடகம் மீனம் தனு கும்பம் மத்திமம். இவற்றில் இராசாக்கள் பட்டாபிஷேகம் பண்ணுவது. எ-று. (க)

இதுவுமது.

வெள்ளிகதிர்மதிமால்குருவேந்தர்முடிபுனைதற்
கொள்ளியவாரமுதயமென்றூர்சுத்தியேழுமெட்டுந்
தள்ளிவிதித்தனர்சாற்றியபஞ்சாங்கந்தூய்மைபெறக்
கள்ளவிழ்பூங்குழலாய்கலைவல்லவர்காதலித்தே.

(இ-ள்.) வெள்ளி ஞாயிறு திங்கள் புதன் வியாழன் இவர்கள் வாரோதயங்களிலே எ-ம், அ-ம் இடங்கள் சுத்தியாகப் பஞ்சாங்கயோகம் நன்றாக இராசாக்கள் பட்டாபிஷேகம் பண்ணுவது. எ-று. (உ)

திருவாண்டெழுத்திடல்.

முறைபடுமானியிலாடியின்முக்கணனாளினற்கோள்
செறிவுடனேக்கச்சிறப்புடையெட்சியிற்சேயிழையாய்
நிறைபுனறாவிமறையோர்வழுத்தநெறிமுறையே
யறைகழன்மன்னர்திருவாண்டெழுத்திடலாமென்பரே.

(இ-ள்.) ஆனி ஆடிமாதத்திலே, திருவாதிரைநாளிற் சுபக்கிரகநோக்குண்டாக, ஊர்த்துவமுகராசி உதயமாகப், பிராமணரால் அபிஷேகம் பண்ணி, ஆசீர்வசனம்பெற்று இராசாக்கள் திருவாண்டெழுத்திடுவது. எ-று.

வாகனமேறல். ஆயுதம்பயிலல்.

ஆதிமகம்பனையுத்தரமூன்றிருபூசமத்தஞ்
சோதியறுவைமகசிரமாரோணிபண்டிசுபஞ்
தீதுசனிகுசன்வாரமுமில்லுஞ்சிவிகைமுத
லோதியவாகனமேறவுமாயுதமோதவுமே.

(இ-ள்.) அச்சுவினி மகம் அனுஷம் உத்தரத்திரயம் புநர்பூசம் பூசம் அத்தம் சுவாதி சித்திரை மிருகசீரிடம் திருவோணம் ரோகிணி ரேவதி

இந்நாட்களிற், செவ்வாய் சனி ஒழிந்த வாரத்திலே, மேடம் விருச்சிகம் மகரம் கும்பம் இவை ஒழிந்த இராசிகளிலே சிவிகைமுதலிய வாகனமேறவும், ஆயுதம்பயிலவும் பெறும். எ-று. (ச)

யுத்தயாத்திரை.

உரைபுனையுத்தரமூன்றைப்பசியத்தமோணம்புள்ளு
நிரைபனைதோணிமகசிரஞ்சித்திரைநீடுபூசந்
திரவுதயம்பெறநற்றிதிவாரஞ்சிறப்புமிக
வரசர்தண்டேவுதற்காமென்றுவைத்தனனந்தணனே.

(இ-ள்.) உத்தரம் உத்தராடம் உத்தரட்டாதி அச்சுவினி அத்தம் திருவோணம் அவிட்டம் அனுஷம் ரேவதி மிருகசீரிடம் சித்திரை புநர்பூசம் பூசம் இந்நாட்களிலே, இராசியிலே. நல்ல திதிவாரோதயங்களிலே அரசர்கள் யுத்தஞ்செய்வதற்குச் சேனைகளை அனுப்பலாம். எ-று. (ரு)

யுத்தஞ்செய்தல்.

செருச்செயநாட்பரிசித்திரைகேட்டைசதயஞ்செங்கை
மருத்துமுப்பூரங்கலமாமூலமகம்பரணி
யிருட்பெறுபக்கத்திருத்தைசயைவிட்டிசேயிரவி
குருச்சனிவாரமிராசியுங்கால்களுங்கூறுவரே.

(இ-ள்.) யுத்தஞ்செய்யுமிடத்து: அச்சுவினி சித்திரை கேட்டை சதயம் திருவாதிரை சுவாதி பூரத்திரயம் ரேவதி ஆயிலியம் மூலம் மகம் பரணி, அபரபக்கத்து இருத்தை திருதியை அட்டமி திரயோதசி, விட்டிக்கரணம், செவ்வாய் ஞாயிறு வியாழன் சனி இவர்கள் வாரோதயாங்கிசங்களிலே யுத்தம் பண்ணுவது. எ-று. (சா)

மாணவி.

ஆணுதவைப்பசிகார்த்திகையில்வளரட்டமியிற்
றூணுந்துவாதசியிற்றக்கமூர்த்தத்துச்சந்திரனோர்
மீனுடுமுத்தராடத்தெழமிக்ககோணேக்குப்பெற
மாணவிகொளன்பகளிற்றுக்கும்வாசிக்கும்வாணுதலே.

(இ-ள்.) ஐப்பசி கார்த்திகை மாதத்தில், பூருவபக்கத்து அட்டமியிலாதல் துவாதசியிலாதல், சுபமுகூர்த்தத்திலே, உத்தரட்டாதியிலே, சந்திரோதயமாக, சுபக்கோள்நோக்க யானை குதிரை மாணவி கொள்வது. எ-று.

மீனுடுமுத்தராடம் என்றது உத்தரட்டாதியை என்க. (எ)

கேஜசாந்தி:

மகமிருபூசமூன்றுத்தரமாயனுட்சித்திரைபுட்
பகடுவிளக்குப்பனைபரிநாவாயிற்பைம்பொன்வெள்ளி
சுகமதிமாலெட்சிவாரத்திராசியிற்சுத்தமெட்டின்
மிகநல்லபக்கத்துவேழகன்மங்கள்விளம்பினரே.

(இ-ள்.) மகம் புநர்பூசம் பூசம் உத்தரத்திரயம் திருவோணம் சித்திரை அவிட்டம் அத்தம் சுவாதி அனுஷம் ரேவதி அச்சுவினி இந்நாட்களிலே, வியாழன் வெள்ளி திங்கள் புதன் இவர்களுடைய வாரம் இராசி அங்கிசம் உதயமாக, இவர்கள் நோக்குப்பெற, அட்டமசுத்தியுண்டாக, நல்ல திதிகளிலே யானைக்குச் சாந்திபண்ணுவது. எ-று. (அ)

அசுவசாந்தி.

ஐப்பசிபுட்பனைநாவாய்முறமத்தமாரல்கழை
செப்பருமான்றலைசோதியிந்நாளிற்றிரமுதிப்பத்
துப்புறுபக்கத்துநற்கோளெழத்துரகங்களினுக்
கொப்புறுகன்மங்கள்யாவுஞ்செய்கென்றனரொண்ணுதலே.

(இ-ள்.) அச்சுவினி அவிட்டம் அனுஷம் ரேவதி விசாகம் அத்தம் கார்த்திகை புநர்பூசம் மிருகசீரிடம் சுவாதி இந்நாட்களிலே, திராசி உதயமாகப், பூருவபக்கத்து நல்ல திதிகளிலே, சுபக்கோள் நோக்கக் குதிரைக்குச் சாந்திபண்ணுவது. எ-று. (கூ)

சுவாதிசம்பாதயோகம்.

ஞாயிறுசோதியினண்ணியநாட்களைநன்குணர்ந்து
தூயவர்சோதிசம்பாதமென்றார்தொக்கவான்பிணியா
லோய்வுறுமெல்லாவுயிர்களுமாங்கவற்றிற்றுயர்நோய்
பாய்பரிமாக்கொள்ளுமாங்கதற்குச்சாந்திபண்ணுகவே.

(இ-ள்.) ஆதித்தன் சுவாதியிலே நிற்குநாள் சுவாதிசம்பாதயோகம் எனப்படும். அக்காலத்திலே சகல பிராணிகளுக்கும் வியாதியுண்டாகும். அவற்றுட் குதிரை மிகவும் நோய்கொள்ளும். இதற்கு அவ்வச்சாத்திரஞ் சொன்னபடியே சாந்தி பண்ணுவது. எ-று. (க0)

அரசர்வினைப்படல முற்றிற்று.

ஆ செய்யுள் - சஉஎ.

நல்வினைப்படலம்.

வாஸ்துகன்மம்.

பங்குனியாதிவலமாகமுத்திங்கள்பச்சிமத்தே
தங்குந்தலையாயிடங்கீழ்ப்படவாத்துமன்சரிக்கு
மங்கவனனைத்தேவாயில்கொள்ளுமவன்கிடக்கை
துங்கமுகடிடமொங்குவனுந்தியிற்றாணமே.

(இ-ள்.) வாஸ்த்துபுருஷன்நிலையைச்சொல்லுமிடத்து: பங்குனிமுதன் மூன்றுமாதமும் மேற்கே தலையுங் கிழக்கே காலும் வடக்கே முகமுமாகக் கிடக்கும். ஆனிமுதன் மூன்றுமாதமும் வடக்கே தலையுந் தெற்கே காலுங் கிழக்கே முகமுமாகக் கிடக்கும். புரட்டாதிமுதன் மூன்றுமாதமுங் கிழக்கே தலையும் மேற்கே காலுந் தெற்கே முகமுமாகக் கிடக்கும். மார்கழிமுதன் மூன்றுமாதமுந் தெற்கே தலையும் வடக்கே காலும் மேற்கே முகமுமாகக்கிடக்கும். இவன் கிடந்த கிடைக்கு முகடிட்டு இவன் முகத்துக்கு நேரே வாயிலும்விட்டு வயிற்றிலே கர்ப்பம்வைத்தல் தூணுட்டுதல் செய்யலாம். எ-று. இந்தமாதங்கள் சௌரமாதவகையாற் கொள்ளப்படும். (௧)

வீடுகட்டக் குடிபுக விலக்கியகாலம்.

வில்லுறுகன்னிதடிமீனின்வெய்யவன்மேவுநாளு
மில்லுடையாள்பிள்ளையுண்டாயிருப்பினும்வாத்துவிடச்
சொல்லிலர்மந்திரிசுங்கனொழிருன்றிற்றீதிற்புகப்
புல்லுறுமாதங்குளிர்சால்பொறிபெண்புகலிலரே.

(இ-ள்.) ஆதித்தன்: தனு கன்னி மிதுனம் மீனம் இவற்றில் நிற்குங்காலமும், தன்னுடைய மனைவி கர்ப்பமுண்டாயிருக்குங் காலமும், குரு சுக்கிரன் அத்தமன காலமும் வீடுகட்டலாகாது. குடிபுகுமிடத்து: கர்க்கடகம் கும்பம் தனு கன்னி இந்நான்குமாதமுந் தவிரப்படும். அல்லாத எட்டுமாதமுங் குடிபுகலாம். இதில் உத்தராயணமாதம் நன்று. தக்ஷிணாயனமாதம் மத்திமம். எ-று. (௨)

மனைப்பொருத்தம்.

வாத்துவுக்கீடாம்வியனுமுழத்தின்மனையெடுக்கப்
பார்த்திடலாயம்பெருக்கவியங்குறைபக்கம்வாரந்
தீத்திறமன்றிவியன்யோனிநற்றினமும்பொருந்தக்
கோர்த்தனரங்சகமாறேழெட்டொன்றுங்கொடிதெனவே.

(இ-ள்.) வாஸ்த்துபுருடனுக் கீடாக ஒற்றித்த முழத்திலே மனை கோலப்படும். மனையெடுக்குமிடத்து ஆயம்மிகுந்து வியங்குறைந்து ஒற்றித்த யோனியும் நாட்பொருத்தமும் உண்டாக, திதியும் வாரமுஞ் சுபமாக, ௧, ௬, ௭, ௮, இவையொழிந்த அங்கிசத்திலே கொள்வது. எ-று. (௩)

கிருகசத்தமவர்க்கம்.

அகலத்தைமூன்றினுமாயத்தையெட்டினுமாக்கிவைத்தாங்
கிகமொத்தவெட்டாலுமூவொன்பதினுலுமீய்ந்தநிலை
நிகரொத்தயோனியுநாளுமாநீளத்தைநாலின்மாறிப்
பகரொத்தவொன்பதிற்கீயநவாங்சகம்பான்மொழியே.

(இ-ள்.) அகலத்தை மூன்றிற்பெருக்கி எட்டுக்கீய யோனியாம். நீளத்தை எட்டிற்பெருக்கி இருபத்தேழுக்கீய நாளாம். சுற்றளவை நாலிற்பெருக்கி ஒன்பதுக்கீய நவாங்கிசமாம். எ-று. (௪)

இதுவுமது.

ஆயத்தையெட்டினுமொன்பதினுந்தாக்கியாறிரண்டிற்
கேயுற்றபத்திற்குமீய்ந்திடவாயம்வியங்களென்பர்
தேயுற்றசுற்றென்பதெட்டாற்பெருக்கிச்செழுமுப்பதி
னேயுற்றவேழிற்கழிப்பத்திதிவாரமென்றனரே.

(இ-ள்.) சுற்றளவை எட்டிற்பெருக்கிப் பன்னிரண்டுக்கீய ஆயமாம். இதை ஒன்பதிற்பெருக்கிப் பத்துக்கீய வியமாம். சுற்றளவை ஒன்பதிற்பெருக்கி முப்பதுக்கீயத் திதியாம். எட்டிற்பெருக்கி ஏழுக்கீய வாரமாம். இப்படி மனைக்கு ஏழுபொருத்தமுமறிவது. எ-று. மனைக்குப் பத்துப் பொருத்தஞ் சொல்வாருமுளர். (௫)

கிருகாரம்பம்.

பொருந்துமகமத்தம்யாழுத்தரங்கள்புனர்தம்பூசந்
திருந்துசகடம்பனைமான்றலைதிருவோணங்கல
மிருஞ்சித்திரைசோதிநன்றரிதேட்குட்மேறுத்தமம்
வருந்துமுபயங்கண்மத்திமமாமனைகோலுதற்கே.

(இ-ள்.) கிருகாரம்பஞ்செய்யுமிடத்து: மகம் அத்தம் அச்சுவினி உத்தரத்திரயம் புனர்பூசம் பூசம் ரோகிணி அனுஷம் மிருகசீரிடம் திருவோணம் ரேவதி சித்திரை சுவாதி இந்நாட்களும், சிங்கம் விருச்சிகம் கும்பம் இடபம் இவ்விராசிகளும் உத்தமம். உபயராசி மத்திமமாம். எ-று. (௬)

பிரதமேட்டிகை.

நாளுங்கரணமும்யோகமும்வாரமுநற்றிதியுங்
கோளுங்குணம்பெறமேன்முகநாளோரைகூட்டமுற
வாளுமுயிரினுக்கோரெட்டீராறிலமர்ந்துநிற்குங்
கோளின்றிவாத்துவகுப்பநன்றாமென்குயின்மொழியே.

(இ-ள்.) பஞ்சாங்கயோகமுங் கிரகங்களும் நன்றாக, ஊர்த்துவமுகநாளிலே, ஊர்த்துவமுகராசி உதயமாக, ௮, ௧௨, இவ்விடஞ் சுத்தியாக வாஸ்த்துவுக்குப் பிரதமெட்டிகையிடுவது. எ-று. (௭)

தம்பத்தாபனம், கதவு.

சந்திரனெட்சியுங்கால்களுநீத்தனர்தம்பநாட்டச்
சிந்தனைசெய்துதிரத்தையடைத்தார்செறிகதவிற்
குந்துமகமுருளுத்தரமூலஞ்சதயஞ்சயை
மந்தன்கிழமையுமந்திரியெட்சியும்வைத்தனரே.

(இ-ள்.) அபரபக்கத்துச் சந்திரோதயமும் சந்திராங்கிசமும் ஒழிந்த சுபக்கோள் உதயம்பெறத், திரநாட்களிலே, திரராசி உதயமாகத் தம்பம்நாட்டுவது. மகம் ரோகிணி உத்தரம் மூலம் சதயம் இந்நாட்களிலே, திருதியை அட்டமி திரயோதசித் திதிகளினும், சனிக்கிழமையினும், வியாழன் உதயாங்கிசத் திரேக்காணங்களினுங் கதவு நிலை நாட்டுவது. எ-று. (௮)

வாயிற்பொருத்தம்.

ஏறுதடிகுளிருத்தரங்கீழரியேமைதுலை
வீறுறுகீழ்த்திசைதெற்காம்விருச்சிகம்வின்மகரஞ்
சீறியதெற்குடன்பச்சிமஞ்சால்கயல்செச்சைகுடக்
காறியவுத்தரம்வாயில்விடுந்திசையாரணங்கே.

(இ-ள்.) இடபம் மிதுனம் கர்க்கடகம் இவ்விராசிகளிற் செனித்த பேருக்கு வடக்குவாயில் கிழக்குவாயிலும், சிங்கம் கன்னி துலாம் இவ்விராசிகளிற் செனித்தபேருக்குக் கிழக்குவாயில் தெற்குவாயிலும், விருச்சிகம் தனு மகரம் இவ்விராசிகளிற் செனித்தபேருக்குத் தெற்குவாயில் மேற்குவாயிலும், கும்பம் மீனம் மேடம் இவ்விராசிகளிற் செனித்தபேருக்கு மேற்குவாயில் வடக்குவாயிலும் விடுவது. எ-று. (கூ)

கிருகப்பிரவேசம்.

பூசமிரண்டுமூன்றுத்தரநாவாய்புரவியத்தம்
பேசுறுசோணைமகசிரம்பெண்ணைபெருஞ்சகட
மாசில்விளக்குமகம்புள்ளிருத்தையாறெட்டொழித்துத்
தேசுறுயோகத்துநல்லோர்குடிபுகச்செப்பினரே.

(இ-ள்.) புநர்பூசம் பூசம் உத்தரத்திரயம் ரேவதி அச்சுவினி அத்தம் திருவோணம் மிருகசீரிடம் அனுஷம் ரோகிணி சுவாதி மகம் அவிட்டம் இந்நாட்களில், இருத்தை சட்டி அட்டமி ஒழிந்த பக்கத்திலே, பஞ்சாங்க யோகம் நன்றாகக் குடிபுகலாம். எ-று. (க0)

இதுவுமது.

நிலையானவோரையினீத்தனர்தேளையுபயங்களைத்
தலையாகவைத்தனர்தக்கவிடையஞ்சகத்தவோரை
நலமாகுநற்கோளுறுதேளுநன்றாங்குடிபுகுதற்
குலையாதவாத்துவுக்குச்சொன்னசுத்தமுமோதுவரே.

(இ-ள்.) குடிபுகுமிடத்து விருச்சிகம் ஒழிந்த திராசியும் உபயராசியுமாம். அல்லாதராசி இடபாங்கிசங்களும், சுபக்கோள் நிற்கின்ற விருச்சிகமுமாம். அ, கஉ, இவ்விடஞ் சுத்தியாகக் குடிபுகலாம். எ-று. (கக)

தேவகிருகாரம்பம்.

சீயந்துலைதெறுக்காலிற்கதிருறத்தேவர்தங்கட்
கோய்வுறுகோவிலகத்துவங்கொள்கவஞ்சாதியாகத்
தேய்வின்முழத்தின்முன்செப்பியநாட்களிற்கோவில்செய்யப்
பாய்கலைமீன்மறிசேதடிமாதம்பகர்ந்தனரே.

(இ-ள்.) சிங்கம் துலாம் விருச்சிகம் இவற்றில் ஆதித்தன் நிற்க, முன்பு கிருகாரம்பத்துக்குச்சொன்ன நாளினும் இராசியினும், இராசாவுக்கும் ஊருக்கும் யசமானுக்கும் அனுகூலமான திவசத்திலே கோவிலுக்குப் பூமிப்பரீக்ஷையும் பண்ணிக் கருஷணையுமிட்டு அகத்துவம் பறிப்பது. சிற்பசாத்

திரத்திற் சொன்னபடியே கோவில் கட்டுவது. அப்படிச் செய்யுமிடத்து ஐந்துமுழம் முதலாக எ, கூ, கக, இப்படியா யீபவர்க்கீய்ந்து கொள்ளப்படும். ஐந்துமுழத்துக்குக் குறையச் செய்யுமிடத்து ஒன்றேகால் குறைத்து மூன்றேமுக்காலிலே கொள்ளலாம். இதிற் குறையுமிடத்து இராசாவுக்கும் இராச்சியத்துக்கு நன்றல்ல. எழுமொன்பதுங் காலொழிய அரையும் முக்காலுங் கொள்ளப்படும். இப்படி முழம் நிச்சயித்து ஆயம் வியம் அனுகூலமுண்டான முழத்திலே விரியக்கொண்டு அகத்துவம் பிரித்து மணலும் நீரும் விட்டு அத்திபாரத்தில் இருத்தித் தலமட்டம் பிறப்பித்துச் சங்குத்தாபனம் பண்ணிக் கிழக்கு மேற்கிரேகையும் தெற்கு வடக்கிரேகையும் அறிந்து வாசலிலே பிரதமெட்டிகையிடுவது. இடமிடத்து மகரம் மீனம் மேடம் இடபம் மிதுனம் இவற்றில் ஆதித்தன் நிற்குங்காலம் பிரதிட்டைக்குச்சொன்ன நாளினும் முகூர்த்தத்தினும் பிரதமெட்டிகையிட்டு விமானஞ் செய்வது. இம்மாதங்களிலே மூர்த்தூஷிகையுமிட்டுத் தூபிப்பிரதிட்டையும் பண்ணலாம். எ-று. (கஉ)

நவபூஷணதாரணம்.

அந்தமகசிரமாதியத்தஞ்சித்திரையனுடம்
வந்தகழைகுருத்தேர்விற்றடிமீன்விடைமகளிர்
நந்தைவளர்ச்சியுநன்றாயவாரத்துப்பூணணிய
மைந்தர்க்குநன்றுமணவணிநாணன்றுமங்கையர்க்கே.

(இ-ள்.) ரேவதி மிருகசீரிடம் அச்சுவினி அத்தம் சித்திரை அனுஷம் புநர்பூசம் பூசம் ரோகிணி இந்நாட்களிலே, தனு மிதுனம் மீனம் இடபம் கன்னி இந்தராசிகள் உதயமாகப், பிரதமை சட்டி ஏகாதசி பஞ்சமி தசமி பூரணையிலே, சுபவாரத்தில் ஆடவர் ஆபரணம் பூணலாம். விவாகத்துச் சொன்ன நாளினும், முகூர்த்தத்தினும் ஸ்திரிகள் ஆபரணம் பூணலாம். எ-று. (கங)

நவவஸ்திரதாரணம்.

உத்தரமூன்றுகலமிருபூசம்பரியுருடே
ரத்தமுதலைந்துநன்றுடரிவிற்றேண்மீன்சனிசேய்
தத்தங்கிழமையிருத்தைதவிர்ந்தாறிடஞ்சுத்தியிற்
புத்தப்புதுக்கலிங்கத்துடைநன்றென்பர்பூங்கொடியே.

(இ-ள்.) உத்தரத்திரயம் ரேவதி புநர்பூசம் பூசம் அச்சுவினி ரோகிணி அத்தம் சித்திரை சுவாதி விசாகம் அனுஷம் இந்நாட்களிலே, மேடம் சிங்கம் தனு மீனம் ஒழிந்த இராசிகளிலே, சனி செவ்வாய் வாரம்நீக்கி, இருத்தையொழிந்த பக்கங்களிலே; ஆறுமிடஞ் சுத்தியாகப் புதுப்புடைவை உடுப்பது. எ-று. (கச)

மந்திரோபதேசம்.

மாசிபெண்மார்கழியாடியுநீத்தொளிமந்திரிகள்
வீசியகாலத்தனுடம்விளக்குருளத்தமும்மீன்

பூசமிரண்டுமூன்றுத்தரஞ்சோணைபுட்கேட்டைமக
மீசனறுவைகுலமுபதேசத்திற்கேய்ந்தனவே.

(இ-ள்.) சாந்திரமாதங்களால் வந்த மாசி புரட்டாதி மார்கழி ஆடி ஒழிந்த மாதங்களிலே, குரு சுக்கிரன் அத்தமனமில்லாதகாலத்தில், அனுஷம் சுவாதி ரோகிணி அத்தம் மிருகசீரிடம் புனர்பூசம் பூசம் உத்தரத்திரயம் திருவோணம் அவிட்டம் கேட்டை மகம் திருவாதிரை சித்திரை ரேவதி இந்நாட்களிலே மந்திரோபதேசம் பண்ணுவது. எ-று. (கரு)

இதுவுமது.

உவாபதினான்கொன்பதட்டமிசேய்சனியும்மொழிந்தாங்
கவாவிற்றிரத்தையகற்றுவித்தட்டமசுத்திபெறத்
திவாவினிற்சென்மத்துஞ்சங்கிரமத்துங்கதிர்மதியை
யவாவுற்றடத்துமுபதேசநன்றாமென்னுமிழையே.

(இ-ள்.) அமாவாசை பூரணை சதுர்த்தசி நவமி அட்டமி,செவ்வாய் சனி, திரராசி இவைகள் தவிர்ந்து, அட்டமசுத்தியுண்டாகப், பகற்காலத்திலே மந்திரோபதேசம் பண்ணுவது. சென்மத்திரயத்தும் சங்கிரமகாலத்தும் கிரகணகாலத்தும் மந்திரங்கள் உபதேசம் பண்ணவுஞ் சாதிக்கவுமாம். எ-று.

சகஸ்திரசந்திரதரிசனம், சதாபிஷேகம்.

அறுபத்திரண்டுபிறையெழுமையாண்டிலாயிரமாம்
பிறையெண்பதாண்டினுமெண்டிங்களினும்பிறக்குமென்பர்
நெறியுறநீங்கியகாலத்துஞ்சென்மத்துநேரிழையாய்
செறிவுறுநாழிற்சதாவபிடேகஞ்செயுமென்பரே.

(இ-ள்.) ஆதித்தகதியால் வந்த ஆண்டு ஐந்துக்குச் சந்திரோதயம் அறுபத்திரண்டு பிறை உதிக்கும். எண்பது சௌரவாண்டும் எட்டுமாதமுஞ் சென்றவன் ஆயிரம்பிறை காண்பன். ஆதலால் அவன் புண்ணியபுருடன். சொர்க்கப்பிராப்தியாகும்பொருட்டு அவனுடைய சென்மமாதம், சென்மநட்சத்திரத்திலே சதாபிடேகம் பண்ணுவது. எ-று. (கஎ)

இதுவுமது.

திருவோணமத்தங்கலமகஞ்சோதிசெக்குத்தரங்க
ளுருடேர்வியன்றிதியொண்மதிவெள்ளிமாலும்பர்குருத்
தருமோரைவாரமுதயஞ்சதாவபிடேகத்திற்கு
மருவேறுபூங்குழலாய்நல்லவாமென்றுவைத்தனரே.

(இ-ள்.) முன்சொன்னநாட் கழிந்தால், திருவோணம் அத்தம் ரேவதி மகம் சுவாதி சதயம் உத்தரத்திரயம் ரோகிணி இந்நாட்களிலே, நல்ல பக்கங்களில், திங்கள் வெள்ளி புதன் வியாழன் இவர்களுடைய வாரோதயாங்கிசங்களிலும், இவர்களுடைய இராசியான சுபலக்கினங்களிலும், அட்டமசுத்தியுண்டாகச் சதாபிடேகம் பண்ணுவது. எ-று. (கஅ)

தைலாப்பியங்கம்.

திங்கட்புதன்சனிநன்றுத்தரங்கேட்டைசெங்கையோணை
மங்கட்செனனங்களட்டமிநந்தைபன்னான்கொடுவாக்
கங்குற்றுவாதசிசங்கிரமங்கழித்தெண்ணெய்வார்க்க
வெங்கட்பிணியர்சிறார்விருத்தர்க்குவரைவில்லையே,

(இ-ள்.) யாவனொருவன் எண்ணெயிடுமிடத்துத் திங்களும் புதனும் சனியும் நன்று. அல்லாத வாரங்களும், உத்தரம் கேட்டை திருவாதிரை திருவோணம் சென்மத்திரயம், அட்டமி பிரதமை சட்டி ஏகாதசி சதுர்த்தசி பூரணை அமாவாசை துவாதசி, இராக்காலம், சங்கிரமகாலம் இவையொழிந்த திதி நட்சத்திரங்களிலே யிடுவது. நோயர்க்கும் பாலர்க்கும் விருத்தர்க்கும் வரைவில்லையாம். எ-று.

சுமங்கல ஸ்திரீகளுக்குச் செவ்வாய் வெள்ளி வாரங்கள் ஆகுமென்பர். திங்களில் எண்ணெயிடலாகாதென்பாருமுளர். (க௯)

இருணமோசனம்.

அனுடம்விதிபாதமுத்தரட்டாதியிருத்தையாசான்
சனிநன்குதயங்குளிகனோடங்சகஞ்சாற்றுமோரை
நனிமதியெட்சியினற்பகலாற்றீட்டுளவிரணந்
தனிசுடையோர்க்குக்கொடுத்திடலாமெனச்சாற்றினரே.

(இ-ள்.) அனுஷமாதல் வியதிபாதயோகமாதல் உத்தரட்டாதியாதல் இந்நாட்களுடனே இருத்தைகளாதல் வியாழக்கிழமை சனிக்கிழமையாதல் குளிகனாதல் சனியங்கிசம் மகரம் கும்பம் உதயமாதல் வரப், பூருவபக்கத்துச் சந்திரோதயமான காலத்து, பகலிலே கடன்வாங்கினபொருள் கொடுத்துப் பற்றுச்சீட்டுப் பெறலாம். எ-று. இருணம்-கடன். (உ0)

நல்வினைப்படல முற்றிற்று.

ஆ செய்யுள் - சசஎ.

தீவினைப்படலம்.

ஔஷதமுண்ணல்.

மருந்திற்பனையத்தமுதன்மூன்றுமான்றலைபுள்ளுடனே
திருந்திருபூசமூன்றுத்தரஞ்செக்குருள்சோணைநாவா
யிரும்பரிகன்னிசரங்களிருத்தைமூன்றுறேழெட்டும்
பொருந்தியசுத்திநன்றுஞ்சேய்புகர்பொருந்தாவென்பரே.

(இ-ள்.) அனுஷம் அத்தம் சித்திரை சுவாதி மிருகசீரிடம் அவிட்டம் புனர்பூசம் பூசம் உத்தரத்திரயம் சதயம் ரோகிணி திருவோணம் ரேவதி இந்நாட்களிலே, சரராசியாதல் கன்னியாதல் உதயமாக, இருத்தைகளிலே, ரு, சு, எ, அ, இவ்விடஞ் சுத்தியாக ஔஷதமுட்கொள்ள நன்றும். செவ்வாய் வெள்ளி வாரோதயாங்கிசங்கள் ஆகாவாம். எ-று.

பூருவபக்கமும், சனிவாரமும் ஆகாவென்பாருமுளர். (க)

சத்திரவயித்தியம்.

அரவமொடாதிரைவிற்கேட்டையுமருக்கன்சனிசேய்
விரவியவெட்சியுங்கன்னிதுலாமேடநண்டெட்சியுந்
தரமுறுமட்டமசுத்தியுந்தள்ளியபக்கங்களு
மெரியெழச்சுட்டலறுத்தல்காரம்பெய்தற்கேய்ந்தனவே.

(இ-ள்.) ஆயிலியம் திருவாதிரை மூலம் கேட்டை இந்நாட்களிலே, ஞாயிறு சனி செவ்வாய் வாரோதயங்களில், கன்னி துலாம் மேடம் கர்க்கடகம் இவ்விராசிகள் உதயத்திலே, அட்டமசுத்தியுண்டாகப், பக்கச்சித்திரையென்று சொல்லிய திதிகளிலே, புண்ணறுத்தல், சுடுதல், காரமிடுதல், அட்டைவிடுதல் முதலிய சத்திரவயித்தியஞ் செய்யலாம். எ-று.

சிலர், இவையொழிந்த பாபநாட்களுமாமென்பர். (உ)

நோய்மிருத்துநாள்.

முப்பூரங்கேட்டையடுப்பாரன்முக்கணன்குன்றுபுட்கால்
பைப்பணிநாளினவமிநான்காறுயர்பன்னிரண்டுஞ்
செப்புறுசேய்சனிஞாயிறுயோகத்திற்செந்திருவே
வெப்பினையுற்றவர்தாஞ்சாவரென்றுவிதித்தனரே.

(இ-ள்.) பூரம் பூராடம் பூரட்டாதி கேட்டை பரணி கார்த்திகை திருவாதிரை சதயம் அவிட்டம் சுவாதி ஆயிலியம் இந்நாட்களும், நவமி சதுர்த்தி சட்டி துவாதசி இத்திதிகளும், ஞாயிறு செவ்வாய் சனி இவ்வாரங்களுங் கூடின யோகத்து வியாதியுண்டாகில் இறப்பர்கள். எ-று. (ங)

நோய்மாறிக்குளித்தல்.

நாவாய்கழைசோதிமூன்றுத்தரமகநாகம்பண்டி
மேவாமதிவெள்ளியோரையும்வாரமும்விட்டுநின்ற
கோவாவிருத்தைதசமியிற்கோணுட்கடையவற்றிற்
பாவாய்வினைவிட்டுநீராடற்காமென்றுபன்னினரே.

(இ-ள்.) ரேவதி புனர்பூசம் சுவாதி உத்தரத்திரயம் மகம் ஆயிலியம் ரோகிணி இந்நாட்களும், சந்திரன் வெள்ளி இராசிவாரோதயாங்கிசங்களும் ஒழிந்து, சதுர்த்தி நவமி சதுர்த்தசி தசமியில், முன்சொன்ன குரூரநாள் வாரோதயாங்கிசங்களிலே நோய்மாறிக் குளிப்பது. எ-று. (ச)

திரிபுட்கரயோகம்.

மூக்காலுங்காலுமுடைத்தாயநாட்களும்பத்திரையு
மிக்காயவெள்ளிவியாழஞ்செவ்வாயும்விளங்குகூட்டந்
தக்கார்திரிபுட்கரயோகமாமென்பர்சாதல்சுட
லக்காரியம்வரின்மூன்றுகுமென்மயிலாயிழையே.

(இ-ள்.) முக்கால்நாளான புனர்பூசம் விசாகம் பூரட்டாதியும், கால்நாளான கார்த்திகை உத்தரம் உத்தராடமும், பத்திரையான துதியை சத்தமி துவாதசியும், வெள்ளி வியாழன் செவ்வாய் வாரங்களுஞ் சேர்ந்தநாட் திரிபுட்கரயோகமாம். இந்த யோகத்தில் மரித்தல் சுடுதல் சம்பவித்தால் அந்தக்குடியிலே மூன்றுபேர் மரிப்பர். எ-று.

இந்தயோகத்துப் பலாபலம்வந்தாலும் மூன்றுவகையாக வர்த்திக்குமென்பாருமுளர். (ரு)

பாஷாணத்தாபனம், உத்தியாபனம்.

பேசும்பலிகருமஞ்செயவெண்ணிற்பிறைநுதலாய்
மாசிபுரட்டாதியாடிதைபங்குனிமாதநன்றுந்
தேசுறுமல்லாததிங்களிற்றேய்பிறையாஞ்சிறந்த
பேசிலொற்றித்ததினம்வைத்தெடுப்பார்கற்பெய்வளையே.

(இ-ள்.) தற்காலமொழிந்து உத்தரகிரியை பண்ணுகில்: மாசி புரட்டாதி ஆடி தை பங்குனி என்னும் மாதங்களிலேயாதல், மற்றைய மாதங்களில் அபரபக்கத்திலேயாதல், ஒற்றித்த தினத்திலே முடிவாகக் கல்லுவைத்தெடுப்பது. எ-று. (சு)

இதுவுமது.

கல்லுவைத்தற்கிருமாண்போரையைக்கரைந்தாரெடுக்கச்
செல்லுறுகாலஞ்சரத்தினிற்செப்பினர்சேணிற்பிறை
புல்லுமிணைகாணிற்றீதென்புகலுஞ்சிராத்தத்திற்குச்
சொல்லும்பதினோரிடஞ்சுத்திகொள்பசுரிகுழலே.

(இ-ள்.) கல்லுவைக்குமிடத்து உபயராசியும், எடுக்குமிடத்துச் சரராசியுமாம். திரராசி தவிரப்படும். அதிகமாதமென்று சொல்லப்படும் இரண்டுபிறை காணுத காலத்திலே கல்லுவைத்தெடுப்பது. இலக்கினத்துக்குப் பதினோராமிடஞ் சுத்தியாகப் பிரேதகாரியமெல்லாம் பண்ணுவது. எ-று.

சிராத்தவிதி.

வேதியர்க்குப்பதினொன்றினில்வேந்தருக்கீரெட்டினிற்
றீதில்வணிகர்க்கிருபதில்வேளாண்டிறத்துநல்லோர்க்
காதியாறைந்தினிலன்றிச்சிராத்தமபரபக்கத்
தோதினர்தீக்கோள்சரமுற்றெழக்கொள்கவொண்ணுதலே.

(இ-ள்.) பிராமணருக்குப் பதினொராநாளும், க்ஷத்திரியருக்குப் பதினுருநாளும், வைசியருக்கு இருபதாநாளும், சூத்திரருக்கு முப்பதாநாளும் ஆசௌசம் நீங்குநாளாம். இத்தினத்திலே சபிண்டீகரணசிராத்தஞ் செய்யப்படும். இந்தக்காலத்துக்குத் தினமுதலிய தோஷங்களில்லை. பிரதானமான காலமொழியக் கொள்ளின் உத்தமகாலத்திலே, அபரபக்கங்களிலே, பாபக்கிரகோதயமாகச், சரராசியிலே சிராத்தம் பண்ணுவது. எ-று.

பிராமணருக்கு கஉ-ம் நாளும், வைசியருக்கு உக-ம் நாளும், சூத்திருக்கு ங௧-ம் நாளுஞ் சிராத்தஞ் செய்யவேண்டும் என்பாருமுளர். (அ)

இதுவுமது.

வளரும்பிறைபதினன்குடனந்தையமைந்ததிதி
யளவுறுவெள்ளிதன்வாரோதயம்பார்வையோரையங்சம்
விளைவுறுசென்மம்விதாதாமுரசெலிமேவுநாவாய்
தளருமுக்காலுறுநாளுஞ்சிராத்தந்தவிர்ந்தனரே.

(இ-ள்.) பூர்வபட்சம், சதுர்த்தசி பிரதமை சட்டி ஏகாதசி திரயோதசி, வெள்ளிவாரோதயநோக்கு இராசி அங்கிசம், சென்மத்திரயம், ரோகிணி உத்தரட்டாதி பூரம் ரேவதி புனர்பூசம் விசாகம் பூரட்டாதி கார்த்திகை உத்தரம் உத்தராடம் இவை சிராத்தத்துக்கு ஆகாவாம். எ-று. (கூ)

இதுவுமது.

பொருந்தாதநாட்களும்வைநாசிகமும்புதல்வர்பெண்டிர்
தருந்தாவில்சென்மமொழிந்தவுஞ்சந்திராட்டமட்டமங்
திருந்தாத்துவாதசவோரையும்வில்லுஞ்செழுஞ்சரமும்
வருந்தாதநன்மைவருஞ்சிராத்தஞ்செயின்வாணுதலே.

(இ-ள்.) அனுகூலமில்லாத நாளும், வைநாசிகமும், யசமான் புத்திரர் பாரி இவர்களுடைய சென்மத்திரயங்களொழிந்த நாளும், சந்திராட்டமமும், உதயலக்கினத்துக்கு அ-ம், கஉ-ம் இராசியும், தனுவும், சரராசியும் சிராத்தத்துக்குச் சிரேட்டமாம். எ-று. (க0)

இதுவுமது.

நிலையானசென்மமைந்தேழ்நீத்தவோரைகுருமகம்புள்
வலமாவடுப்புமகசிரஞ்சோதிசெக்கோணம்பனை
செலநாட்களிறெரிசித்திரைமூலந்திதிநவமி
தலையாமுவாவீராறட்டமிநன்றுசிராத்தத்திற்கே.

(இ-ள்.) சென்மலக்கினமும் ஐந்தும் ஏழும் ஒழிந்த இராசிகளிலே, பூசம் மகம் அவிட்டம் அச்சுவினி பரணி மிருகசீரிடம் சுவாதி சதயம் திருவோணம் அனுஷம் பூராடம் அத்தம் கேட்டை சித்திரை மூலம் இந்நாட்களிலே, நவமி அமாவாசை துவாதசி அட்டமி இத்திதிகளிலே சிராத்தம் பண்ணுவது. எ-று. (கக)

இதுவுமது.

புகர்புதன்பொன்னவன்வாரோதயங்கால்கள்போற்றுமேலா
முகமுறுமோரைநாட்டிதென்பர்மூன்றுறுபன்னிரண்டின்
மிகநல்லகோணிற்பத்தீக்கோண்மிகுகண்டகோணத்தினிற்
றகவுறநிற்பச்சிராத்தஞ்செயநன்றுதார்குழலே.

(இ-ள்.) வெள்ளி புதன் வியாழன் என்னுஞ் சுபக்கோளினுடைய வாரோதயாங்கிசங்களும், ஊர்த்துவமுகராசி நாட்களுமாகாவாம். சுபக்கோட்கள் ங-ம், சு-ம், கஉ-ம் இடங்களினும், பாபக்கோட்கள் கேந்திரத்தினும், திரிகோணத்தினும் நிற்பச் சிராத்தம் பண்ணுவது. எ-று. (கஉ)

நாராயணபலி.

அட்டகைக்குச்சொல்லுமாதங்களினுமல்லாவிடத்தும்
பட்டதுவாதசியோணமிரண்டுவாப்பல்வளையாய்
தட்டறவைத்தனர்வெள்ளிபொன்வாரஞ்சதுர்த்தசியும்
விட்டுரைசெய்தனர்நாராயணபலிவேதியரே.

(இ-ள்.) மேலே அட்டகைக்குச் சொல்லப்படும் மாசி புரட்டாதி மாதங்களினும், அல்லாத மாதங்களினும், துவாதசி திருவோணம் அமாவாசை பூரணை இவற்றில் நாராயணபலியிடுவது. வியாழன் வெள்ளி ஒழிந்த வாரங்களிலே, சதுர்த்தசி ஒழிந்த திதிகளிலே துன்மரணமானபேருக்கு நாராயணபலியிடுவது. எ-று.

சிலர், துன்மரணமடைந்தோர்க்குச் சதுர்த்தசி சிரேட்டம் என்பர்.()

கிரகசாந்தி.

அட்டமராசிக்கடைத்தவந்நாளில்வைநாசிகத்தி
லிட்டமதாகியசென்மங்களிலினன்வாரத்தினிற்
கிட்டியமூன்றைந்தேழ்நாளிற்கிளர்முன்பொழுதிற்றனஞ்
சிட்டமறையவர்க்கீந்துகோட்பூசனைசெய்கென்பரே.

(இ-ள்.) கிரகசாந்தி பண்ணுமிடத்துச் சந்திராட்டமம், வைநாசிகம், சென்மத்திரயம், ஞாயிற்றுக்கிழமை, ங-ம், ரு-ம், எ-ம் நாளிற், பூருவான்னத்திலே சிரேட்டமான பிராமணருக்கு மகாதானம்பண்ணிக் கிரகசாந்தி செய்வது. எ-று. (கச)

இதுவுமது.

சாந்திக்குநன்றுமகமுத்தரங்கள்சதயஞ்சோதி
யார்ந்திருபூசமரியுருளத்தங்கலமனுடஞ்
சேர்ந்தவுவாவுடன்சித்திரையாம்பக்கந்தீதுசுன்சேய்
மாந்தளிர்மேனிநல்லாய்வாரநீத்தனநன்றென்பரே.

(இ-ள்.) மகம் உத்தரத்திரயம் சதயம் சுவாதி புனர்பூசம் பூசம் திருவோணம் ரோகிணி அத்தம் ரேவதி அனுஷம் இந்நாட்களிலே, உவாக்கள் பக்கச்சித்திரை ஒழிந்த திதிகளிலே, சனி செவ்வாய் ஒழிந்த வாரங்களிலே கிரகசாந்தி பண்ணுவது. எ-று. (கரு)

அட்டகை.

கன்னிகுடத்திற்கதிருறத்தேய்பிறையட்டமியிற்
பன்னுநவமியேழ்பன்னைந்தினல்விதிபாதத்தினின்
மன்னுங்கிராணம்விடுவாயயனங்கள்சங்கிரம
முன்னுரைநாட்களுமட்டகைபண்ணமொழிந்தனரே.

(இ-ள்.) மாசி புரட்டாதி மாதத்திலே, அபரபக்கத்து அட்டமி நவமி சத்தமி அமாவாசை, வியதிபாதம், கிரகணகாலம், விஷுவாயனம், சங்கிரமம் இவற்றினும், முன்பு சிராத்தத்திற்குச் சொன்ன நாளினும் அட்டகை பண்ணுவது. எ-று. (கசு)

தீவினைப்படல முற்றிற்று.

ஆ செய்யுள் - சசுரு.

உற்பாதப்படலம்.

வில்லிரவாகுதன்மேதினிகம்பித்தல்விண்ணதிர்த
லல்லிடைமீன்விழலம்மீன்பகலுறலாசையெங்குஞ்
சொல்லிற்புகைந்திடல்சூரியனேக்கிரண்டாயுதித்தல்
கொல்லியலாய்நண்பகற்கூகைபாடல்கொடிதென்பரே.

(இ-ள்.) இரவில் வில்லுண்டாதல், பூமிநடுங்கல், வானமதிர்தல், இரவில் நட்சத்திரம் உதிர்தல், நட்சத்திரம் பகலிற்றோன்றுதல், திக்கெங்கும் புகைதல், ஆதித்தன் இரண்டாய்த்தோன்றுதல், உச்சிக்காலத்திற் கூகையுறுமுதல் இவை தீது. எ-று. (ச)

சூரியனைப்பரிவேடமிடல்சூறையாடல்சுவா
வோரியரற்றல்புட்டன்னிறம்வேறுபடலுலகிற்
பாரியவான்மரம்வற்றலுண்டேலப்படிபுரக்கும்
பேரியன்மன்னவர்க்குப்பெருந்தீங்குண்டுபெய்வளையே.

(இ-ள்.) ஆதித்னை வளைத்துப் பரிவேடித்தல், சூறுவளியுண்டாதல், நாய் நரி அழுதல், பட்சிகள் நிறம்பேதித்தல், பெரிய ஆலமரம் பால்வற்றல், இவையுண்டாயின் அத்தேசத்து அரசனுக்குத் தீது. எ-று. (உ)

தேவர்சிரித்தல்சலித்தல்திரும்புதல்வேர்ப்பிளைத்தல்
நாவிலுரைத்தனடுங்குதல்செய்திடினுனிலத்திற்
காவலர்தங்கட்கிடர்பெரிதாங்கருவானுதிரந்
தூவிடினுடுந்தொடுகழன்மன்னுந்துளங்குறுமே.

(இ-ள்.) தேவர்கள் சிரித்தல், சலித்தல், திரும்புதல், வேர்த்தல், இளைத்தல் இவைசெய்யின் அரசருக்கு மிகவுந் தீது. முகில் இரத்தமழை வருஷிக்கின் அந்நாட்டுக்கும் அரசனுக்கும் தீது. எ-று. (ங)

சிகரத்தகோயில்புகைந்திடிற்றீயெழிற்பேர்படைத்துக்
ககனத்துறுமரங்காற்றின்றிவீழ்ந்திடிற்காவலர்க்குஞ்
சகமத்தனைக்குந்தடுப்பருங்கேடாந்தையாலயத்துப்
புகன்முட்டையீடலுண்டேற்புவிபாழ்க்கும்புணர்முலையே.

(இ-ள்.) உயர்ந்த கோயில் புகைந்தாலும், அக்கினி பற்றினாலும், மேலாய் வளர்ந்த மரங் காற்றின்றி விழுந்தாலும் அரசனுக்கும் உலகுக்குங் கேடாம். ஆந்தை கோயிலிற் புகினும், முட்டையிடினும் உலகங்கெடும். எ-று.

காக்கையிரவிலழைத்தல்வெழுத்திடக்காண்டலிரா
நோக்குங்குயிலுரைவான்மீனெழனூறியேயமரிற்
றுக்கிடுஞ்சேய்பொன்னைவென்றிடிற்றண்மதிமாசிமகத்
தாக்குநடுவேகிலந்நாடுபாழ்த்துணவஃகிடுமே.

(இ-ள்.) இரவிற் காகமழைத்தல், காகம் வெழுத்தல், இரவிற் குயில் கூவல், வால்வெள்ளியுதித்தல், போரிற் பிருகஸ்பதியைச் செவ்வாய் வெல்லல், சந்திரன் மாசிமகத்துக்கு நடுவே புகல் இவையுண்டாயின் அந்நாடு கெட்டு உண்டி சுருங்கும். எ-று. (ரு)

தூமம்பெருகல்பகல்மீன்விழறெக்கவானிடத்தே
பாமன்னுபாட்டெழல்பான்மதியோர்கதியிற்சரித்த
லாமன்னிமாவேறலாசையெரிதலராவழைத்த
லூமன்குரல்பல்லிடத்துமுண்டேலஃகிடுமுலகே.

(இ-ள்.) புகை மிகுத்தல், பகல் வெள்ளி விழுதல், ஆகாயத்திற் பாட்டோசையெழுதல், சந்திரன் ஓர்கதியிற் செல்லுதல், பசு குதிரையைப் புணர்தல், திக்குக்களெரிதல், சர்ப்பமழைத்தல், பலவிடத்துங் கூகைக் குரலுண்டாதல் இவையுண்டாயின் அவ்வூர் வளஞ் சுருங்கும். எ-று. (சு)

ஊர்ந்துதிரிவபறத்தல்பறப்பவையூர்ந்திடினுஞ்
சேர்ந்தெழின்மாதர்பெண்ணுணிரண்டீனினுந்தேசமெல்லாங்
கூர்ந்திடுதுன்பங்குறையுடலங்கமிகுதலன்றி
யார்ந்துருவின்றிப்பிறப்பினுமக்குடியாசுறுமே.

(இ-ள்.) ஊர்வன பறக்கினும், பறப்பன ஊர்கினும், ஸ்திரிகள் இரண்டு பெண், இரண்டு ஆண் பெறினும் அத்தேசமெங்குந் துன்பமுண்டாம். அங்கங்குறைதல், மிகுதல், உருவின்றிப் பிறத்தல் இவையுண்டாயின் அக்குடி கெடும். எ-று. (எ)

பல்குட்டியீன்பவையாடொழிந்தொன்றனையீன்றிடினு
மல்லற்படுத்துந்தன்சாதியிற்பேடுடனன்றிவேறோர்
சொல்லுற்றபேட்டினுடனேமுயங்கத்தொடர்ந்திடினும்
புல்லப்புதுப்புள்வரினும்பழம்புள்ளுப்போகினுமே.

(இ-ள்.) பல குட்டியீனும் மிருகங்களில் ஆடொழிந்து மற்றவை ஒரு குட்டி ஈன்றாலும், பட்சிகள் தன் பெடையோடன்றி வேறோர் பெடை

யோடு சேரப் புகினும், புணர ஒருபட்சி புதிதாக வரினும், முன் புணர்ந்த பட்சி போகினும் அந்நாட்டுக்குத் தீமை உண்டாம். எ-று. (௮)

மன்னவர்வாழ்பதிமாநகரங்களின்மாமறையோர்
பன்னும்பதியினிலூமனைழைந்திடிற்பாழ்படுமா
மின்னுருமேறொடுவெற்றிடிவான்பலமீன்விழினேய்
துன்னும்புவியிற்கும்வேந்தர்க்குமென்றுதுணிந்தனரே.

(இ-ள்.) அரசர், பிராமணருடைய இல்லங்களிலே கூகை கூப்பிடின் அவ்வூர் கெடும். மின்னல் முழக்கத்துடன் வெள்ளிடியிடித்தல், ஆகாயத்திநின்று நட்சத்திரம் வீழ்தல் இவையுண்டாயின் பூமண்டலத்திற்கும் அரசருக்குங் கேடுண்டாம். எ-று. (௯)

ஆந்தையிறப்பிலிருப்பிலவ்வில்லத்தவர்க்குறுநோய்
கூர்ந்துநரிபுகிற்போவர்குடிதேனீக்கூடுவைக்கிற்
பாந்தளுறையிற்பருந்தாமையிற்புகிற்பான்மொழியாய்
வேந்தர்பயமிறப்பிற்சுவர்வேறிடில்வெந்துயரே.

(இ-ள்.) ஆந்தைப்பட்சி இறந்தாலும், இருந்தாலும் அவ்வீட்டையுடையவர்களுக்கு நோயுண்டாம். வீட்டில் நரி புகுந்தாற் குடி போவர்கள். வீட்டில் தேனீ கூடுகட்டுதல், பாம்புறைதல், பருந்து ஆமை புகுதல் இவையுண்டாயின் அரசராற் பயமுண்டாம். இவை மரித்தாலும், சுவர்வெடித்தாலுந் துன்பமுண்டாம். எ-று. (௧௦)

இல்லத்துப்பூனைவிழுவின்றிநாடொறுமெப்பொழுதுஞ்
சொல்லுற்றழிற்றுன்பமில்லத்தினிற்கூரைசூழவரி
னல்லற்படுத்துமவ்வூர்க்குட்டியாமவைமுட்டையிடல்
வல்லுற்றமுட்டைகடான்குட்டியாயினுமண்கெடுமே.

(இ-ள்.) வீட்டிற் பூனை யாதொரு காரியமுமின்றி நாடோறும் எந்நேரமும் அழுதால் அவ்வீட்டுடையவர்களுக்குத் துன்பமுண்டாம். அப்பூனை வீட்டிற் கூரையைச் சுற்றி வரினுந் துன்பமுண்டாம். அவ்வூரிற் குட்டியிடுமவை முட்டையிடினும், முட்டையிடுமவை குட்டியிடினும் பூமண்டலங் கெடும். எ-று. (௧௧)

பரிவேடம்.

ஒருதிக்கிலேபற்றியெப்போதுந்தூமமிடிலந்நாடுங்
கருதப்படும்பதியுங்கெடுங்கங்குலெழுமதியைப்
பொருதுற்றவட்டத்துட்கோளுற்றினும்பொலியச்சிவந்து
பெருவட்டமாயிடினும்பெரும்பான்மைமழைபெய்யுமே.

(இ-ள்.) ஒரு திசையிற்பற்றி எந்நேரமும் புகையுண்டாகில் அந்நாடும் நகருங் கெடும். இரவிலே சந்திரனை வளைக்கும் பரிவேடத்துக்குட் கிரகங்கள் நிற்பினும், அப்பரிவேடம் மிகச் சிவந்து பெரிய வட்டமாயிடினும் பெருமழையாம். எ-று. (௧௨)

வட்டமிரண்டிடின்மன்னவனுட்டைமுனியுமென்க
வட்டமொருமூன்றுநான்காகின்மன்னவற்கேதுயராம்
வட்டமதுள்ளேகுசனுறிற்போரென்மழையிலையாம்
வட்டமதுட்சனியேற்கலகம்மென்மதியிடத்தே.

(இ-ள்.) சந்திரனை வளைத்து இரண்டு பரிவேடமிடின் அரசன் நாட்டைக் கோபிப்பன். மூன்று நாலு பரிவேடமிடின் அரசர்க்குத் துன்பமாம். பரிவேடத்துட் செவ்வாயுறிற் போராம்; மழையில்லை. அப்பரிவேடத்துட் சனியுறிற் கலகமாம். எ-று. (௧௩)

சனிதானுறவட்டஞ்சந்திரன்சாரிற்பிணிபுகரேற்
பனியேமழையில்லைப்பார்ப்பானுறுகிற்பெருமழையா
மினிதேபுதனுறிலின்னுண்முதலேழுநாளிடத்து
நனிசேர்மழையில்லையேநாசமாமென்பர்நல்லுயிரே.

(இ-ள்.) சனியை வளைத்துப் போடும் பரிவேடத்துக்குட் சந்திரன்கூடில் நோயாம். அப்பரிவேடத்துக்குட் சுக்கிரன்கூடின் மழையில்லையாம். வியாழன்கூடுகிற் பெருமழையாம். புதன்கூடுகின் நன்றாம். பரிவேடிக்கும் நாண்முதல் ஏழுநாளைக்குள் மழையில்லையாயின் பிரசைகள் நாசமாம். எ-று.

உதயத்துமத்தமத்தும்பரிவேடமிடினும்போராஞ்
சிதைவிக்குமுன்பகல்வானினைச்செய்யநட்டுச்சியினி
லதிவிட்டிபின்பகலாக்கமுயிரினுக்காங்கரவு
பதியுற்றவெங்கதிரைப்பரிவேடிக்கினன்றென்பரே.

(இ-ள்.) சூரியனை உதயகாலத்தும் அஸ்தமனகாலத்தும் பரிவேடிக்கிற் போராம். முன்னேரமாகில் அழிவாம். மத்தியானமாகில் அதிகமழையாம். பின்னேரமாகில் பிரசைகளுக்கு லாபமாம். கிரகணகாலத்தில் ஆதித்தனைப் பரிவேடிக்கின் நன்மையாம். எ-று. (௧௫)

வடக்குமழைதெற்குவாயுமிகுமன்னர்கேடுமேல்கீ
ழிடிற்பிணிகாரிலையாங்கிருபக்கத்துமந்திட்டு
மிடத்தின்மலரெழும்போதின்மழையுச்சியினரசர்
படப்போர்மலைவர்பதிசூரியன்செயல்பார்குறித்தே.

(இ-ள்.) சூரியனுக்கு வடக்குப் பரிவேடிக்கின் மழையாம். தெற்காகின் காற்றுமிகுதியாம். மேற்காகில் அரசர்க்குக் கேடாம். கிழக்காகில் நோயாம். இருபக்கத்துமாயின் மழையில்லை. அஸ்தமனகாலத்தும் விடியற்காலத்துமாயின் மழையாம். உச்சிக்காலமாயின் இராசகலகமாம். எ-று.

சிலைமறிமீனரிதேளெழுமீன்விழிற்செய்யமன்ன
ருலைவினைச்சொல்லுந்துலாங்குடநண்டுசுறுவினஃகம்
விலைகுன்றும்வீணையின்மந்திரிசாம்வெய்யநோய்கன்னியி
னிலைபெறுமேற்றின்மழையின்றியேபயிர்நீங்கிடுமே.

(இ-ள்.) தனு மேடம் மீனம் சிங்கம் விருச்சிகம் இவை உதிக்க நட்சத்திரம் எரிந்துவீழில் அரசருக்குக் கேடாம். துலாம் கும்பம் கர்க்கடகம் இவையாகில் அகமொறுக்கும். மிதுனமாகில் மந்திரி மரணமாம். கன்னியாகில் வியாதியாம். இடபமாயின் மழையின்றிப் பயிரழிவாம். எ-று. ()

தனுசுக்குறி.

குடக்குங்குணக்குங்குறித்துவிற்றோன்றிடிற் கொண்டலகுவா
சடக்கெனவூழ்த்தலென்றேயறிசாற்றியதெற்கிடினும் [ல்
வடக்கினுமன்னவர்தந்திரமந்திரத்துள்ளவர்க்குந்
திடுக்கம்வருமென்றுரைசெய்சிலைநுதற்றேமொழியே.

(இ-ள்.) மேற்கிலுங் கிழக்கிலும் விற்றோன்றின் சடுதியின் மழையென்னுந் தாமதமென்று மறிக. தெற்கிலும் வடக்கிலும் விற்றோன்றின் அரசன் சேனைக்கும் மந்திரிக்குந் தீமையுண்டாம். எ-று. (௧௮)

கூவல்குளங்களினீர்பரந்தேறினுங்குன்றினு
மேவியநீர்சுளித்துள்வாங்கினுநிறம்வேறுறினும்
வீவுறுமப்புனலுண்பவர்தாழ்மதிமேற்கொளினுங்
காவலனாடுங்கடுந்துயர்பட்டுக்கழிந்திடுமே.

(இ-ள்.) கிணறு குளங்களில் நீர் பரம்பி மிகினும், குறையினும், அந்நீர் சுளித்துள்வாங்கி நிறம் வேறாகினும், அந்நீர் உண்பவரது குறைந்த புத்தி அதிகப்படினும் அரசனுக்கும் அந்நாட்டுக்கும் அதிக துயரமுண்டாம். எ-று.

புத்தேளிர்மேனியிற்பீடத்தினிற்செஞ்சிதல்பொருந்தி
லத்தேசமும்பதியுங்கெடுமாலயத்துள்வாயிலின்
வைத்தேறுமண்டபத்தங்கணத்தும்வரினூர்கெடுமா
மொத்தேபலிபீடத்துற்றெழிலூர்பாழ்க்குமொண்ணுதலே.

(இ-ள்.) தேவவிக்கிரகங்களினும் பீடத்தினுஞ் செஞ்சிதல் பொருந்தின் அந்நாடும் அரசனுங்கெடும். கோயிலுட்டுவாரத்தினும் துசத்தம்பமண்டபத்தினும் முற்றத்தினும் பலிபீடத்தினும் அஃதுண்டாயின் அவ்வூர்கெடும். எ-று.

விட்டில்சுவாக்கோழிமேலெலிகீழெலிமிக்கிடினுங்
கெட்டிடுமில்லங்கிளர்ந்துசிகரிபறந்திடினுங்
கொட்டிடுமூட்டைமிகினுங்குடிபோக்குந்திண்ணமென்று
தட்டறவோதினர்சான்றோர்வடசொற்றளிரடியே.

(இ-ள்.) விட்டிற்பூச்சி நாய் கோழி இறப்பெலி அகழெலி இவைகள் மிகுந்தாலும், வீட்டிலுள்ள எலிகள் அவ்வீட்டை விட்டுப்போகினும், மூட்டை மிகுந்தாலும் அக்குடிபோமென்று வடமொழிப்புலவர் கூறினர். எ-று. ()

உற்பாதப்படல முற்றிற்று.

ஆ செய்யுள் - ௪௮௪.

எச்சவிணைப்படலம்.

சங்கிரமபலன்.

தன்னாளிற்பத்திலிருபதிற்சங்கிரமிக்கிற்கொலை
யிந்நாளின்மற்றிருபாலுந்தனச்சேதமின்பமெய்து
மந்நாடமக்காறின்மூன்றுறிற்பன்னொன்றினையிரண்டிற்
சொன்னார்கதிரவனேற்சூலநன்றெனத்தூய்மொழியே.

(இ-ள்.) யாவனொருவன் பிறந்தநாளினும், பத்தாம்நாளினும், இருபதாம்நாளினும் ஆதித்தன் சங்கிரமிக்கிற் பிராணபயமுண்டாம். இவற்றின் அருகினாட்களிற் சங்கிரமிக்கின் அர்த்தசேதமாம். அவற்றின் ஆறாம்நாள் நன்மையைப் பண்ணும். ஆதித்தன் ௩, ௬, ௧௦, ௧௧, இவ்விடங்களிற் சங்கிரமிக்கிற் சூலதோஷமில்லை. எ-று. (௧)

இதுவுமது.

சன்மங்களிற்சங்கிரமிக்கினசமயலிரண்டு
மின்னலொழிந்தவந்நாளிருமூன்றுமிசைந்தடைவே
பொன்னிழவுபேறுபோக்குநிலைபேறுபொற்கொடியே
மன்முனிவாமன்னருளென்றுரைக்கும்வடமொழியே.

(இ-ள்.) சென்மத்திரயங்களிற் சங்கிரமிக்கில் அது தோஷமாம். இவற்றின் முன்னும் பின்னும் அடைந்தநாள் நன்மையைப் பகைக்கும். ஒழிந்த ஆறுநாட்களுங் கூடி அடைவே தனச்சேதம் தனலாபம் யாத்திரை கிருகவாசம் இராசபயம் இராசபலம் இவையுண்டாம். எ-று. (௨)

விஷுவயனதோஷதினசங்கியை.

பத்தின்வருக்கமுமெட்டின்வருக்கமும்பத்திரெட்டுச்
சுத்தமகரங்குளிர்துலைமேடத்துச்சூலநாளாய்
வைத்தனரல்லாதமாதசூலங்கட்குநான்மூன்றென
வுத்தரகார்க்கியனாரதன்மந்திரியோதினரே.

(இ-ள்.) சங்கிரம சூலம் உத்தராயண மகரத்துக்கு நூறுநாள்; தக்ஷிணாயன கர்க்கடகத்துக்கு அறுபத்துநாலுநாள்; ஐப்பசி விஷுவத்துக்கு பத்துநாள்; சித்திரை விஷுவத்துக்கு பதினாறுநாள். அல்லாத இரவிசங்கிரமங்களுக்கு மும்மூன்றுநாள் தோஷமாம். எ-று. (௩)

இதுவுமது.

உதிக்கும்பொழுதினிற்றேசங்கெடுமுச்சியிற்பயிர்கள்
கொதித்தல்லவாமிளவுச்சியினேய்கொற்றமன்னர்கெடும்
பதிப்பறுபிற்பகற்பாழ்பகலோன்படமுன்புகேடா
மதிப்படுநன்மையிராவிடுவாயனமாயிடிலே.

(இ-ள்.) விஷுவாயனம் உதயகாலமாகின் தேசத்திற்குக்கேடுண்டாம். உச்சிப்பொழுதாகிற் பயிர்க்கேடாம். இளவுச்சியாகில் வியாதியும் இராச பீடையுமாம். பிற்பகலாகின் நாசமாம். சந்தியாகாலமாகின் தேசத்திற்கு ஆகாது. இரவாகின் மிகவும் நன்றாம். எ-று.

விஷுவமென்று மேடச்சங்கிரமத்துக்கும், துலாச்சங்கிரமத்துக்கும், விஷுவாயனமென்று மேடச்சங்கிரமத்துக்கும் பெயராம். (ச)

ஆடிப்பஞ்சமி, சித்திரைச் சங்கிரமபலன்.

பாவலராடியிற்பஞ்சமிசித்திரைச்சங்கிரம
மேவியவாரம்பலமுரைசெய்யின்வெய்யோன்முதலாய்த்
தூவல்பெருமழைபோர்பெருங்காற்றுநற்காலந்தொக்க
மேவியவெள்ளம்வினைசமதாமென்பர்வேல்விழியே.

(இ-ள்.) ஆடிமாதத்துப் பூருவபக்கப் பஞ்சமியும், சித்திரை விஷுவமும் உற்ற வாரத்தின் பலன்:- அற்பவிருட்டி, அதிவிருட்டி, யுத்தம், மகாவாதம், சுபிட்சம், பிரளயகாலம், நாசம் என்ற எழுபலனும், ஞாயிற்றுக் கிழமை முதலாக அடைவே அறியப்படும். எ-று. (ரு)

மகரசங்கிரமபலன்.

மூன்றுத்தரங்கழைமூலமுகுந்தனிற்றையயனந்
தோன்றிடினஃகஞ்சுரிகுழலாயேறுந்தொல்பரணி
யான்றமுப்பூரமராக்கேட்டையாகினகந்தாழுமற்
றேன்றவையிற்சமமாகவெல்லோருமியம்பினரே.

(இ-ள்.) உத்தரத்திரயம்புநர்பூசம் மூலம் திருவோணம் இந்நாட்களின் மகரசங்கிரமமாகில் அஃகம் ஏறும். பரணி பூரத்திரயம் ஆயிலியம் கேட்டை இந்நாட்களாயின் அஃகங் குறையும். ஒழிந்த நாட்கள் சமமாம். எ-று.(சு)

மேடசங்கிரமபலன்.

பரணிமுதனான்கும்புன்பயிராஞ்செங்கையாதிநான்குழ்
வரைவின்மழையாமகமுதலாம்பத்தில்வானம்போக்கு
முரணியநீர்மூதலொன்பதுநற்காலமென்பரென்று
மிரவியப்மேடத்திசைவுறுநாட்களினவளையே.

(இ-ள்.) பரணி முதலாக நாலுநாளும் புன்பயிராம். திருவாதிரைமுதலாக நாலுநாளும் மிகுமழையாம். மகமுதற் பத்துநாளும் மழை அற்பமாதல் அல்லது சுழித்துப் பெய்தலாம். பூராடமுதல் ஒன்பதுநாளும் சுபிட்சகாலமாம். இது சித்திரை விஷுவம் பிறந்த ஆண்டு. எ-று. (எ)

இதுவுமது.

மீனரிவிற்கொறிகன்னிவிடையெழச்சங்கிரமிக்கின்
வானமிகுமஃகமேறுமகரந்துலைகுடமே
லானசமமாமலவன்றடிதேளிலாயிழையா
யினம்படுமஃகமென்விடுவாயனமெப்பொழுதே.

(இ-ள்.) மீனம் சிங்கம் தனு மேடம் கன்னி இடபம் இவை உதயமாக விஷுவாயனம் வரில் அவ்வாண்டு மழையதிகமாய் அஃகமேறிக் காலமும் நன்றாம். மகரம் துலாம் கும்பம் உதயமாகிற் சமமாம். கர்க்கடகம் மிதுனம் விருச்சிகம் உதயமாகில் மழையும் அஃகமுஞ் சுருங்கிக் காலமும் நன்றாகாது. எ-று.

எப்பொழுதே என்றதனால் மற்றுள்ள சங்கிரமங்களுக்கும் இவ்வாறே பார்க்கப்படும். (அ)

வருணாக்கினிபிருதிவிவாயுமண்டலநாட்கள்.

வாருணமண்டலநீர்பாம்பரன்விற்செக்காடிநாவா
யாரன்முறந்தைபதமகம்பூரமடுப்பனலாந்
தேர்பனைபுட்கேட்டையோணமுரசுசெழுநிலனு
மார்வுறுமல்லாதவைவாயுமண்டலமாமென்பரே.

(இ-ள்.) பூராடம் ஆயிலியம் திருவாதிரை மூலம் சதயம் உத்தராடம் ரேவதி இவை வருணமண்டலமான நாட்களாம். கார்த்திகை விசாகம் பூசம் பூரட்டாதி மகம் பூரம் பரணி இவை அக்கினிமண்டலமான நாட்களாம். ரோகிணி அனுஷம் அவிட்டம் கேட்டை திருவோணம் உத்தரட்டாதி இவை பூமண்டலமான நாட்களாம். ஒழிந்த அச்சுவினி மிருகசீரிடம் புநர்பூசம் அத்தம் சித்திரை சுவாதி உத்தரம் இவை வாயுமண்டலமான நாட்களாம். எ-று. (கூ)

கிரகணபலன்.

உத்தமம்வாருணமண்டலநாளிற்கிராணமுறின்
மத்திமமாநிலமண்டலத்தெய்திடின்வான்பிணியி
னித்தமுநாசமுறும்வாயுமண்டலத்தேறினீல
மொத்தகண்ணாய்பசிபோர்கனன்மண்டலமுற்றிடிலே.

(இ-ள்.) வருணமண்டலமான நாளிற் கிராணமுறின் நன்றாம். பூமண்டலமான் நாளிற் கிராணமுறின் மத்திமமாம். வாயுமண்டலமான நாளிற் கிராணமுறில் வியாதி பீடையாம். அக்கினிமண்டலமான நாளிற் கிராணமுற்றால் யுத்தமுந் துர்ப்பிட்சமுமாம். எ-று. (க0)

சந்திரதரிசனம்.

மீனடிடைவெண்மதிதெற்குயரும்விடைகுடத்திற்
றூனஞ்சமமல்லவைவடக்குன்னதமாகினன்றாம்
வானார்பரிமுதன்மூன்றில்வளரும்பிரதமைவரிற்
றூனயவஃகமுயருமொக்குஞ்சாயுமென்பர்களே.

(இ-ள்.) சாந்திரமானவகையாற் பங்குனி சித்திரைமாதங்களிலே பிறை தெற்குயரும். மாசி வைகாசியில் ஒத்துநிற்கும். அல்லாத மாதங்களில் வடக்குயரும். இப்படியொழிந்து விபரீதமாய்வரின் தேசத்துக்குத் தீங்காம். அச்சுவினிமுதன் மூன்றுநாளிற் பூருவபக்கப்பிரதமைவரின் அடைவே அஃகம் ஏற்றமும் சமமும் குறைவுமாம். எ-று. (கக)

காலபலன்.

அமைச்சனுடன்சனிசேயுறினுங்கவற்கேழிடமாஞ்
சமத்தினினிற்றல்செய்தாற்றக்கதென்னிலங்காபுரிக்கு
மிமத்தினுக்குமிடையாகிலமெங்கணும்போரிநோயிற்
குமைப்புறுமஃகஞ்சிறுவிலையாலுங்குறைபடுமே.

(இ-ள்.) வியாழனுடன் சனி செவ்வாய் கூடிநின்றாலும், வியாழனுக்கு ஏழாமிடத்திலே சனி செவ்வாய் நின்றாலும், சகல போகங்களையுடைய இலங்காபுரிக்கும் பொன்மயமாகிய இமயமலைக்கும் நடுவிலுண்டாகிய கர்மபூமியின் மனுஷர்கள் போர் நோய் பசி முதலியவற்றாற் பீடைப்படுவார்கள். எ-று. (௧௨)

குருசௌரி, ஆர்சௌரியோகம்.

சிலைமீன்கலைவிடைசிங்கத்தந்தத்துச்செவ்வேந்தனுட
னிலைசேய்சனிநிற்பிற்சோறின்றிநீடுயிர்வீடுதலான்
மலைசேர்சுரங்களினுட்டினினாரின்மனையின்மன்றிற்
றலையோடுங்கொண்டுநடித்திடுங்கூளிதருக்குமிக்கே.

(இ-ள்.) தனு மீனம் மகரம் இடபம் சிங்கம் இவ்விராசிகளின் பிற்கூற்றிலே செவ்வாய் சனி வியாழனுடனே நிற்கில் குருசவுரி ஆர்சவுரி குருஆர் என மூன்று தோஷ யோகமுண்டாம். அக்காலம் சம்புத்தீவின் ஒன்பதில் ஒருகூறான பரதகண்டத்தின் மனுடர்கள் மிகுந்த துர்ப்பிக்ஷத்தினாலே இறந்துபோவார்கள். அப்போது மலைகளினும் வனங்களினும் தேசங்களினும் ஊர்களினும் மனைகளினும் மன்றுகளினும் இறந்தகபாலங்களையுந் தரித்துக்கொண்டு பிசாசுகள் கொர்வமிகுந்து பாடி ஆடும். எ-று.

இதுவுமது.

வென்றிவிடையரிதன்னடுக்கூற்றின்மீன்றேட்கடையி
நின்றுறுநீலனுடன்குருநிற்பிற்குருசௌரியா
மன்றியுந்தீயோர்மடக்கத்துந்நல்லோரதிசாரத்தும்
பொன்றிடுநல்லுயிர்போரிற்பிணியிற்பசியின்மிக்கே.

(இ-ள்.) இடபம் சிங்கம் நடுவிற்றிரேக்காணத்தும், மீனம் விருச்சிகம் கடையிற் றிரேக்காணத்தும் நின்ற சனியுடனே வியாழன் நிற்கிற் குருசவுரியென்று பெயராம். அக்காலத்திலே குரூரக்கிரகம் வக்கிரிக்கச் சவுமியக்கிரகம் அதிசாரம்பெற்றகாலத்தும் மனுஷர்கள் போரினாலும் வியாதியாலும் பசியாலும் இறப்பார்கள். எ-று. (௧௪)

இதுவுமது.

தக்கவிடைமீனரிதனுக்கோலிற்சனியுஞ்சேயும்
வக்கிரஞ்செய்திடில்வாரணமானுடர்மாப்பசுக்க
ளுக்கிடுமஃகமுலர்ந்திடும்பாம்புடனுற்றசுன்னு
மக்குணஞ்செய்யவனைத்துமூன்றாகாதொன்றுமென்பரே.

(இ-ள்.) இடபம் மீனம் சிங்கம் தனு துலாம் இவற்றினின்று சனியாதல் செவ்வாயாதல் வக்கிரித்து மேடம் கும்பம் கர்க்கடகம் விருச்சிகம் கன்னி இவற்றிலே புகுந்துநின்றால், யானை மனுஷர் குதிரை பசுமுதலியவை இறக்கும். இராகு கேதுக்களுடன் சனி கூடினாலும், வக்கிரித்து நின்றாலும் முன்சொல்லப்பட்ட பிராணிகள் மூன்றுகூறு நாசமாம். ஒருகூறிருக்கும். எ-று. (௧௫)

இதுவுமது.

பாந்தளுடன்சேய்படியநடக்கிற்படியரசர்
காந்தியமர்செய்வர்கற்றோனுடனுறிற்காலநன்றாம்
வேந்தனுடனுறில்வானம்விழாதுமிகுமழையாம்
பூந்தண்குழலாய்புகருடனிற்பினிப்பூதலத்தே.

(இ-ள்.) இராகு கேதுக்களுடன் செவ்வாய் கூடி நடக்கில் யுத்தமுண்டாம். புதன்கூடி நடக்கில் நற்காலமாம். வியாழன்கூடி நடக்கில் மழையில்லையாம். சுக்கிரன்கூடி நடக்கில் அதிகமழையாம். எ-று. (௧௬)

மகக்தூறி.

மகத்துக்குத்தெற்காய்வளர்மதியேகினகமுடியும்
பகுத்திடையேகினிரட்டிகொண்டோங்கிடும்பாங்குடைய
மிகுத்தவடக்கேகினஃகங்கடையினின்வீழுமாசி
மகத்தைமதிபிளந்தேகிடின்மன்னர்மடிவர்களே.

(இ-ள்.) மாசி மாதத்துப் பூரணசந்திரன் மகநட்சத்திரம் நாலுமீனுக்குந் தெற்கே நடக்கில் அஃகங் குறையும். முதன்மீன் இரண்டாமீன் மூன்றாமீனுடன் நடக்கில் அஃகம் இரட்டியாம். நாலாமீனுடன் நடக்கில் துர்ப்பிக்ஷமாம். நாலுமீனுக்கும் நடுவே செல்லுமாகில் இராசாக்களுக்கு மிகவுங் கேடாம். எ-று.

சிலர், நாலுமீனுக்குந் தெற்கே சந்திரன் செல்லுமாகில் அகம் வளருமென்பர். (௧௭)

மழைக்கூறி.

குருவுடன்கூடிக்குசன்முன்செலமழைகுன்றும்வெள்ளி
வருபுதன்றன்னொடுகூடின்மழைவெள்ளம்வான்சுடரோ
னிருதிறத்தோர்க்குமிடைநிற்கினில்லையிரவிபின்சேய்
பொருதெழமுன்புகர்நிற்கில்வானம்பொழிந்திடுமே.

(இ-ள்.) வியாழனுடனே செவ்வாய்கூடி ஆதித்தனுக்கு முன்னே நடக்கின் மழையில்லையாம். புதனுஞ் சுக்கிரனுங்கூடின் வெகுமழையாம். புதனுக்குஞ் சுக்கிரனுக்கும் நடுவே ஆதித்தன் நிற்கிற் பானுமத்தியமென்னும் மகாதோஷமாய் மழையில்லையாம். ஆதித்தனுக்குப்பின்னே செவ்வாய் உதிக்க முன்னே சுக்கிரன் உதிக்கில் வெகுமழையாம். எ-று. (௧௮)

இதுவுமது.

என்றுங்கதிர்பின்புவெள்ளியெழமுன்புசேயெழுநா
ளொன்றுமழையில்லையும்பர்குருக்குசனேடுதிக்கி
னின்றிடும்வானம்புதன்பகலுட்டோன்றினீலன்சேயோ
னன்றியவக்கிரமாயினும்வானமடைத்திடுமே.

(இ-ள்.) ஆதித்தனுக்குப் பின்னே சுக்கிரன் உதிக்க முன்னே செவ்வாய் உதிக்குங்காலம் மழையில்லையாம். வியாழன் செவ்வாயுடனே உதிப்பினும், புதன் பகல் உதிப்பினும், சனி செவ்வாய் வக்கிரிப்பினும் மழையில்லையாம். எ-று.

ஆதித்தனுக்கு முன்பு வருகிறதைப் புதன் பகலுட்டோன்றிலென்ருர்.

இதுவுமது.

விளக்குத்தரந்தேர்பனைவிசாகத்துச்சேய்மேவிநிற்பி
னெளிக்கும்மழைகிழக்கொண்புகர்சோதிமுதன்மூன்றினு
மளிக்குமகமுதன்மேற்கைந்தினுநிற்பினுயிழையாய்
துளிக்குமழையில்லையாமாறிநிற்பிற்சொரிந்திடுமே.

(இ-ள்.) செவ்வாய்: சுவாதி உத்தரம் ரோகிணி அனுஷம் விசாகம் இவற்றில் நிற்பின் மழை குறைவாம். சுக்கிரன் சுவாதிமுதன் மூன்றுநாட் கிழக்கே நிற்பினும், மகமுதல் ஐந்துநாள் மேற்கே நிற்பினும் மழையில்லையாம். இந்நாட்களிற் கிழக்கு மேற்கு மாறிநிற்பின் மழை மிகவுமுண்டாம். எ-று. (௨௰)

இதுவுமது.

நீரிற்புகருநெருப்பிற்கதிருநிலாக்கலைநண்
டார்விற்குடந்தேளமரின்மழைபெரிதக்காலத்துத்
தேரிற்கதிர்க்கும்புகர்க்குமுன்னேசெய்யோனேகிற்றாறி
மாரிக்கணமின்றிமண்டலமாமழையாமென்பரே.

(இ-ள்.) பூராடத்திலே சுக்கிரன் நிற்பினும், கார்த்திகையில் ஆதித்தன் நிற்பினும், சந்திரன் மகரம் கர்க்கடகம் தனு கும்பம் விருச்சிகம் இவற்றில் வருஷகாலத்து நிற்பினும் வெகுமழையாம். ஆதித்தனுக்கு முன்னேயாதல் சுக்கிரனுக்கு முன்னேயாதல் செவ்வாய்நிற்பின் மழை சுழித்துப்பெய்தல், மண்டலமழையாய்த் தூறிப்பெய்தல் செய்யும். எ-று.

சிலர், நெருப்பென்று கேட்டைக்கும் பெயராதலின் கேட்டையில் ஆதித்தன் நிற்குங்காலமும் வெகுமழையென்று சொல்வர். (௨௧)

மாதமழைக்குறி.

விடையிற்கதிருறுநாளின்விசாகமுதலைந்துநா
ளடைவிற்புயன்மாறினுடிமுதற்றிங்களைந்தடைவே
தடையுற்றிடுமானிப்பஞ்சமியிற்றக்கவாயுவிற்கால்
புடையுற்றொர்சாமமுண்டேற்புயல்பெய்யுமிப்பூதலத்தே.

(இ-ள்.) வைகாசிமாதத்து விசாகம் அனுஷம் கேட்டை மூலம் பூராடம் இந்நாட்களிலே மழை பெய்யாதாயின் ஒருமாதத்துக்கு ஒருநாளாக ஆடிமாதம்முதல் மழை குறையும். ஆனி மாதத்துப் பூருவபக்கப் பஞ்சமியிலே, வாயுமூலையிற் காற்று ஒரு சாமத்தளவுமுண்டாகில் அவ்வாண்டு வெகுமழையாம். எ-று. (௨௨)

இதுவுமது.

நந்தாவிளக்குநவமிகடைக்குளத்துப்பூரணை
யிந்தார்பதினுன்கினனுடைவாரத்தெழிலாடியின்
மந்தாரமாதன்மழையாதனுண்டேல்வளமிகுத்துச்
செந்தாமரைமங்கைநோக்குடைத்தாநாடுதேமொழியே.

(இ-ள்.) ஆடி மாதத்துச் சுவாதியும் நவமியும் உத்தராடமும் பூரணையும் சதுர்த்தசியும் ஞாயிற்றுக்கிழமையுங் கூடினும், அன்றித் தனித்துறினும் இந்நாளிலே மந்தாரம் மழை பரிவேடம் இந்திரதனு முழக்கம் இவையுண்டாகில் அவ்வாண்டு சுபிட்சகாலமாம். எ-று. (௨௩)

இதுவுமது.

மழைக்கோளரவம்புதனிடைபான்மதிமன்னுகாலந்
தழைக்குமழைபெரிதாங்கவர்தம்மொடுபோரகத்தி
லழைக்கும்புதன்புகர்கான்மழையாமாசியாதிபனி
யிழைக்கின்மழைதேண்முதலாறுதிங்களைநிருறுமே.

(இ-ள்.) சுக்கிரன் இராகு கேது புதன் இவர்களுடன் சந்திரன்கூடின் மழையுண்டாம். சந்திரனை ஒழிந்து, புதனுக்கும் சுக்கிரனுக்கும் யுத்தமுண்டாய்ப் புதன் செயிக்கிற் காற்றுண்டாம். சுக்கிரன் செயிக்கின் மழையுண்டாம். மாசிமுதல் ஆடி இறுதியாக மாதந்தோறும் மூடுபனிபெய்யில் கார்த்திகை ஐப்பசி புரட்டாதி ஆவணி ஆடி ஆனி இம்மாதங்களிலே மழை மிகவுண்டாம். ஆவணிமுதல் தை இறுதியாக மாதந்தோறும் மூடுபனிபெய்யின் மாசிமுதல் ஆறுமாதங்களினும் மழையுண்டாம். எ-று. (௨௪)

வருஷகேர்ப்பம்.

தேளரிமானிற்கதிர்சேர்பொழுதில்வான்பெய்யிற்பெய்யு
மாள்சிலைகோல்பெண்ணினுண்டேலிலையடுங்கோளதனி
ஞளூறிற்சந்தியிற்பகற்சங்கிரமிக்கினன்றலகோ
ணிரையேகின்மழைமிகவுண்டென்னிரைவளையே.

(இ-ள்.) ஆதித்தன்: கார்த்திகை ஆவணி தை இவற்றிற் சங்கிரமித்த காலத்து மழையுண்டாயின் மழை பெய்யும். மார்கழி ஐப்பசி புரட்டாதி இவற்றின் சங்கிரமகாலத்து மழையுண்டாயின் இல்லையாம். ஞாயிறு செவ்வாய் சனி இவற்றாதல், சந்தியாகாலமாதல், பகற்காலமாதல் சங்கிரமிக்கின் மழைக்குறைவுண்டாம். கிரகங்கள் நிரையே நிற்குமாயின் மிகவும் மழையுண்டாம். எ-று. (௨௫)

இதுவுமது.

நீரிற்கதிருறுநாளின்மந்தாரநிரம்பவுண்டேற்
றேரிற்கதிர்செங்கைபற்றியநாண்முதற்சேரமழை
யார்வுறப்பெய்யுமலைநாட்டிலாறேழுநாளளவில்
வாரித்திரளெழுநாளினின்வேலைமடுத்திடுமே.

(இ-ள்.) பூராடத்திலே ஆதித்தன்புக்க நாள்முதல் பதின்மூன்றுநாள் சந்திராதித்தர்களை மந்தாரமறைப்புண்டாகில் திருவாதிரை மூன்றுங்காலில் ஆதித்தன்புக்க நாள்முதல் மாதமொன்றுக்கு இரண்டேகால் நாள் வீதமாகச் சையகிரியிலே மழை பெய்யும். ஆதித்தகெதியால் பதின்மூன்று நாளளவும் சமுத்திரத்திலே மழைப் பிரளயம் பாயும். எ-று.

இந்தப்பதின்மூன்று நாளும் நிருமலமாயிருந்தால் நாள்வீதம் பார்த்து அந்தந்தமாதம் மழையில்லையென்று காண்க. (உசு)

விற்குறி, பரிவேடக்குறி.

பூரமுருளுத்தரமுதலைந்தினும்போர்வில்லிடி
லாருமணிதிசையஞ்சிருபான்பத்துமூவேழாறிற்
சேரும்பரிவேடமுத்தரம்பூரங்கலஞ்செங்கையில்
வாருமெட்டோரொன்பதிரொன்பதேழின்மழைவருமே.

(இ-ள்.) பூரம் ரோகிணி உத்தரம் அத்தம் சித்திரை சுவாதி விசாகம் இந்நாட்களிலே மழை பெய்யும்பொழுது வில்லிட்டால் ரு, சு, கO, உO, உக, இந்நாட்களுக்குள்ளே மழை பெய்யும். உத்தரம் பூரம் ரேவதி திருவாதிரை இந்நாட்களிலே சந்திராதித்தர்களைப் பரிவேடிக்கில் எ, அ, கூ, கஅ, இந்நாட்களுக்குள்ளே மழைபெய்யும். எ-று. (உஎ)

செக்கர்மேகக்குறி.

மூலமடுப்புப்பதநீரெட்டாமுதலஞ்சிற்பன்னொன்
றுஆத்தராட்முரசேழிற்கேட்டையீரைந்துமூன்றிற்
றுலநட்டுச்சியினிற்செக்கர்மேகந்தரினுமர
னேல்கொளவெண்முகிலேழ்தினத்துமழையின்றேற்றீதே.

(இ-ள்.) மூலம் பரணி பூரட்டாதி பூராடம் இந்நாட்களில் இரத்தமேகம் உண்டாகில் எட்டாநாளிலே மழை பெய்யும். அச்சுவினியில் ஐந்தாநாள், உத்தராடத்தில் பதினொராநாள், உத்தரட்டாதியில் எழாநாள், கேட்டையிற் பத்தாநாள், அனுஷத்தில் மூன்றாநாள் இவற்றிலே மத்தியானம் இரத்தமேகமுண்டாகின் மழை பெய்யும். திருவாதிரையிலே மத்தியானத்தில் வெண்முகிலுண்டாகில் எழாநாள் மழைபெய்யும். இப்படியே இந்திரசாபம் பரிவேடம் இரத்தமேகம் முதலியவற்றின் மழையில்லையாயின் தேசத்துக்குத் தீங்குண்டாம். எ-று. (உஅ)

காற்றுக்குறி.

புந்தியுடன்புகர்சந்திரன்பூமன்பொருந்தியெழ
மந்தன்படப்பன்னிரண்டிற்கதிருறின்வாயுமிகு
முந்துஞ்சரத்திற்புகர்மாலரவமெழவொழிந்தோர்
வந்துஞ்சரத்துறின்வாயுப்புடைக்குமதிநுதலே.

(இ-ள்.) புதனுடன் சுக்கிரன் சந்திரன் செவ்வாய் கூடி உதிப்பச், சனி எழாமிடத்து அஸ்தமிக்க, ஆதித்தன் பன்னிரண்டாமிடத்து நிற்பினும், சுக்கிரனும் புதனும் இராகுவும் ஒரு சரராசியில் உதிப்ப, அல்லாதார் சரராசியிலாதல், சராங்கிசத்திலாதல் நிற்பினும் பெருங்காற்றடிக்கும். எ-று.

இதுவுமது.

சுத்தக்கதிரினிலோரையொன்றுந்துய்யபாகைபத்து
மெத்தப்புகவுய்த்துமேவியமண்டலத்திற்களைந்தாற்
சத்தக்கணிதர்கள்வாயுப்புடமென்பர்சந்திரன்மா
லொத்தபுகர்பாந்தளுற்றவிடத்தேகின்வாயுவுண்டே.

(இ-ள்.) ஆதித்தனுடைய சுத்தபுடத்திலே ஓரிராசியும் பத்துப்பாகையுங் கூட்டி மண்டலராசியிற் களைந்து நின்ற சேடம் வாயுப்புடமாம். இதனையும், சந்திரன் புதன் சுக்கிரன் இராகு இவர்களுடைய புடத்தையும் வைத்தால், இவற்றில் வாயுப்புடம் மிகுந்திருக்கிற் பெருங்காற்றடிக்கும் எனக் கணிதசாஸ்திரிகள் கூறினர். எ-று. (ஙO)

பூமிக்கிரகணம்.

பட்டுக்கிடக்கச்சனிமதிநீரினைப்பற்றிநிற்ப
மட்டுற்றதார்வெள்ளிவந்தெழுங்காலைமரபில்வந்து
விட்டுக்கிடந்தநிலத்தின்மண்கொள்ளமேவார்கழியத்
தட்டின்றியேதனதாகுமென்றோதுவர்தாழ்குழலே.

(இ-ள்.) சனி எழாமிடத்து அஸ்தமயமாய் நிற்பச், சந்திரன் நாலாமிடத்து நிற்பச், சுக்கிரன் உதயத்து நிற்ப, நெடுங்காலம் விட்டுக்கிடந்த நிலத்திற் பிரவேசித்து முறைப்படி மிருத்திகை கொள்ளத் தனதாகுமென்று கூறுவர். எ-று. (ஙக)

இதுவுமது.

காரிதன்வாரோதயவோரையிற்கருதும்மிருத்தை
சேரவழக்குநிலமண்கொள்சீவன்றிறத்துமஃதாஞ்
சாருங்குடத்துக்குடக்காலினிற்சனிவாரோதய
நேருநிலத்துறுமண்ணையருந்துபநேரிழையே.

(இ-ள்.) சனிவாரத்துச் சனிராசியான மகர கும்பங்களுக்கடைத்தநாட்களிலே, சனிநவாங்கிசத் திரித்லதையில் வழக்குண்டான பூமியின் மிருத்திகையை முறைப்படி கிரகணம்பண்ணவும், வியாழக்கிழமையிலே வியாழன்ராசி

யான தனு மீனங்களுக்கடைத்த நாட்களிலே, வியாழன் நவாங்கிசத் திரித்தையினும், கும்பத்துக் கும்பநவாங்கிசத்துச் சனிவாரோதயத்தும் விவாத நிலத்து மிருத்திகையை முறைப்படி கிரகணம்பண்ணவும் தனதாகும். எ-று.

இதுவுமது.

மகத்தின்மதிக்காலின்மாமதியுற்றெழுமன்னுகாரி
பகுத்தவரவிற்றனுவெழுநக்கராய்ப்பாந்தடரு
முகூர்த்தமதாயிடமுன்னுரத்தாற்றவழ்வுற்றுவாயான்
வகுத்தவழக்குறுமண்ணுகரத்தனதாய்வருமே.

(இ-ள்.) மகநட்சத்திரத்து நாலாங்காலிற் சந்திரன் உதிப்ப விவாத நிலத்து மிருத்திகையை முறைப்படி கிரகணம்பண்ணவும், ஆயிலியத்துத் தனு உதயமாகச் சற்பமுகூர்த்தத்து நக்கினமாக மார்பாலே தவழ்ந்துபோய் விவாதநிலத்து மண்ணை முறைப்படி புசிக்கவும் தனதாகும். எ-று. (௫௩)

இதுவுமது.

பூவின்கொழுநன்கடைக்காலிற்றேள்பொறிநண்டெழவு
மேவும்விசாகத்தனுடத்துவிற்றேளலவனெழ
மாவலிசேயங்சகத்துவழக்குறுமண்ணுகரக்
காவன்மதிநாளினுங்கவன்காலெட்சியுங்கருதே.

(இ-ள்.) திருவோணத்து நாலாங்காலிலே விருச்சிகம் தனு கர்க்கடகம் உதயமாகவும், விசாகம் அனுஷம் இந்நாளில் தனு விருச்சிகம் கர்க்கடகம் உதயமாகவும், செவ்வாய் அங்கிசமாகவும், மிருகசீரிடத்துச் செவ்வாயங்கிசத்து மிதுனம் உதயமாகவும் விவாதநிலத்து மண்ணை முறைப்படி புசிக்கத் தனதாகும். எ-று. (௫௪)

சத்துருவசியம்.

அங்காரகன்கதிர்மாலணியெட்சியினென்னலரைச் [ன்
சங்காத்தங்கொள்பதம்வர்க்கோத்தமத்துத்தரும்வெள்ளிபொ
மங்காதவெட்சியுநீரின்மதிவெள்ளிபொன்னெட்சியுஞ்
சிங்காதமித்திரரார்வர்செறுநரைக்கண்டிடிலே.

(இ-ள்.) செவ்வாய் ஆதித்தன் புதன் இம்மூவரும் உதயத்தில் நிற்கவாதல், சுக்கிரன் வியாழன் வர்க்கோத்தமத்து நின்று உதயம்பெறவாதல், சந்திரனும் வெள்ளியும் நாலாமிடத்து நிற்க வியாழன் உதயத்தாதல் சத்துருக்களைக் கண்டு சினேகம்பண்ணக் குறையாத உறவாவர்கள். எ-று.

இதுவுமது.

ஆட்சியின்மேவிப்புகர்நான்கினிற்பவணிமதிய
மேட்சியினுற்றிடவிவ்விதற்கோராறினினெழிற்பொன்
மீட்சியநோக்குளதாகியகாலத்துமேவலரைத்
தாட்பலிநோக்கிடமித்திராவர்தளிரடியே.

(இ-ள்.) சுக்கிரன் ஆட்சிபெற்று நாலாமிடத்தும், சந்திரன் உதயத்தும், வியாழன் ஆறுமிடத்தும் நிற்பச் சத்துருக்களைக் கண்டு அவர்கள் பாதங்களின் நகத்தைப் பார்க்க உறவாவர்கள். எ-று. (௫௬)

விருக்ஷசேதனம்.

சனியரவுற்றெழச்சாற்றியவிட்டிவிடயோகத்தி
லினியெழிலோர்மரம்வெட்டவெட்டுண்ணுமெல்லாவிரித்தை
பனிமதிபொன்சுக்கிரன்பார்த்துநிற்குமாண்போரையினிற்
றனிசுநோய்தீரும்பகைநனிதுஞ்சிடுஞ்சாலநன்றே.

(இ-ள்.) சனி ஆயிலிய நட்சத்திரத்தோடு உதிக்க, அந்நேரம் விட்டியோகமாவது விஷயோகமாவது பொருந்த, இரித்தைகூட, சந்திரன் வியாழன் சுக்கிரன் அந்தராசியைப் பார்க்க, சத்துருவினுடைய நட்சத்திரத்துக்கு அமைந்த விருட்சத்தை விதிப்படி சேதித்தாற் பகைமுதலியன நீங்கும்; சத்துருக்களும் நாசமடைவார்கள். எ-று. (௫௭)

இதுவுமது.

வெள்ளிக்கிழமையில்வெள்ளியுதித்திடவெண்மதிய
மள்ளுறுதீக்கோளிராசியினினிற்பவங்கண்மேவித்
தெள்ளுஞ்சனியிற்றலையுவாவிற்செய்யோனுயிறெழ
வெள்ளுமரம்வெட்டமேவாரழிவரினவளையே.

(இ-ள்.) வெள்ளிக்கிழமையிலே வெள்ளி உதயமாகப் பூர்வபட்சத்துச் சந்திரன் சத்துரு நீசராசிகளிலே நிற்பச் சனி செவ்வாய் சூரியன் முதலுவாவில் நிற்க முறைப்படி எள்ளுமரத்தைச் சேதித்தாற் சத்துருக்களுக்குத் தீமை சம்பவிக்கும். எ-று. (௫௮)

தானசுத்தி.

காதன்மணம்புங்சவணமேழிற்காதுகுத்தன்முடி
யாதிமயிர்கல்விநூலெட்டில்யாத்திரையஞ்சிற்பத்தி
லோதருமூண்பன்னிரண்டெட்டினில்வாத்துவந்திற்புகன்
மேதகுமேழெட்டொடங்கமுஞ்சுத்தியாய்வேண்டுவரே.

(இ-ள்.) விவாகத்துக்கும் புங்சவனத்துக்கும் ஏழாமிடமும், கன்னவேதனத்திற்கும் முடிசூட்டன் முதலியவற்றிற்கும் சௌளத்திற்கும் வித்தியாப்பியாசத்திற்கும் உபநயனத்திற்கும் எட்டாமிடமும், யாத்திரைக்கு ஐந்தாமிடமும், அன்னப்பிராசனத்திற்குப் பத்தாமிடமும், வாஸ்துவுக்கு எட்டாமிடமும் பன்னிரண்டாமிடமும், கிருகப்பிரவேசத்துக்கு எ-ம், அ-ம், கஉ-ம் இடங்களும் சுத்தியாகக் கொள்வது. எ-று. (௫௯)

இதுவுமது.

மருந்துணூர்மூன்றினிலாடையுடாராறினலிலெட்டில்
விரும்பார்கடாபனமேவாறிரண்டிற்றனதானியம்

பொருந்தாருதயத்துமங்கையர்போகம்பதினொன்றினிற்
சுரும்பார்குழலாய்சிராத்தஞ்செய்யார்கோட்கடுன்னிடிலே.

(இ-ள்.) ஔஷதமுண்பதற்கு மூன்றாமிடமும், நவவஸ்திரந் தரிப்பதற்கு ஆறாமிடமும், தேவப்பிரதிட்டைக்கு நாலாமிடமும் எட்டாமிடமும், தனதானியங்கொள்ளற்குப் பன்னிரண்டாமிடமும், ஸ்திரிபோகத்துக்கு உதயமும், சிராத்தத்திற்குப் பதினொராமிடமும் சுத்தியாகக் கொள்வது. எ-று.

இதுவுமது.

மங்கலகாரியம்யாவிற்குமந்தமாறெட்டிடத்துந்
தங்குமதியுந்தவிரப்படுந்தளிர்மெல்லடியா
யிங்குறுசீவனெழுமேனுநன்றன்றியாத்திரைக
டங்கவதுவைகெடுஞ்சனித்தாலல்லவாய்விடுமே.

(இ-ள்.) சகல மங்கலகாரியங்களுக்கும் சந்திரன் ௬-ம், ௮-ம், ௧௨-ம் இடங்கள் தவிரப்படும். இக்காலம் வியாழன் இலக்கினத்துநின்றாலும் ஆகாது. இவ்விடங்களிற் சந்திரன்நிற்க யாத்திரைபோனால் நாசமாம். விவாகஞ் செய்யின் விதவையாம். பிராணிகள் பிறக்கினும் நாசமாம். எ-று. (௪௧)

யோகினிதிசை.

கொடிகரிதூமநாய்சீயங்கொடுவிடை-வாயுவீச
னெடுவிண்ணிரயமெனுமடைவேநிறைபக்கத்தாதி
யடைவின்வருமென்பயோகினியாந்திதிவாரநாளும்
வடுவென்பர்சூதுவழக்கொடுபோர்வழிபோதற்குமே.

(இ-ள்.) இந்திரன் குபேரன் அக்கினி நிருதி யமன் வருணன் வாயு ஈசானன் ஆகாயம் பூமி என்னும் பத்துத்திக்கிற்கும் அடைவே பூருவபக்கப் பிரதமைமுதல் தசமியந்தம் யோகினி வரும். பின்பு ஏகாதசிமுதல் அபரபக்கப் பஞ்சமியந்தம் இப்படியே வரும். பின்பு சட்டிமுதல் அமாவாசையந்தம் இப்படியே வரும். சூது வழக்கு யுத்தம் யாத்திரை இவற்றிற்குத் திதி வாரம் நட்சத்திரம் பிரதானமல்ல; யோகினி பிரதானம். எ-று. (௪௨)

யோகினிவடிவம்.

நக்கம்விரித்ததலைவெள்ளைபூசிநாணாரமின்றி
யக்கையணிந்துவெற்றோடேந்தியாருவமங்கலியாஞ்
செக்கர்நிறத்தொருசேயிழையோகினிதீயள்முன்னும்
பக்கத்திடத்தும்வலத்துடன்பின்னும்பலந்தருமே.

(இ-ள்.) யோகினி வடிவமாவது: நிருவாணமும், விரிந்த கேசமும், சர்வாங்கமும் வெண்ணீற்றுப் பூச்சும், மங்கலாபரணமின்றிச் சங்காபரணமும், கையில் வெறிய கபாலமும், தீராத அமங்கலமான சிவந்த வர்ணமும் உடைய யோகினியானவள் முன்புறமும் இடப்புறமும் ஆகாது; பின்புறமும் வலப்புறமும் நன்றாம். எ-று. (௪௩)

ஆடல்பாடலரங்கேற்றல்.

பூசம்பரணியிரேவதிபூராடம்புள்ளறுவை
யீசன்கனன்முறநற்றிதியாழ்சிங்கந்தேட்குளிர்வில்
வீசுந்துலைமீனெழமதிமால்வெள்ளிபொன்றினத்துப்
பேசுறுமாடரங்கேற்றவும்பாடவும்பெற்றனவே.

(இ-ள்.) பூசம் பரணி ரேவதி பூராடம் அவிட்டம் சித்திரை திருவாதிரை கார்த்திகை விசாகம் இந்நாட்களிலே, சுபதிதிகளில், மிதுனம் சிங்கம் விருச்சிகம் கர்க்கடகம் தனு துலாம் மீனம் இவ்விராசிகள் உதயமாகத், திங்கள் புதன் வியாழன் வெள்ளி வாரங்களில் ஆடல் பாடல் முதலியவை அரங்கேற்றலாம். எ-று. (௪௪)

அங்காதித்தன்பலன்.

அருக்கனிலைநாண்முதன்மூன்றுமூன்றுமைந்தெட்டுமெட்டு
நிரைத்ததலைவாய்வயிறுகைநீள்கழனிற்பினேரே
தரைக்கிறைவன்பண்டிதன்றனவான்றனநாசனெங்கு
மிரப்புடையோனென்றறிபிறந்தோரையினவளையே.

(இ-ள்.) அங்காதித்தன் அறியும்படி: ஆதித்தன் நின்ற நாள்முதலாக யாவனொருவன் செனித்தநாள்வரையும் எண்ணினால் மூன்றுநாள் தலையினும், பின் மூன்றுநாள் வாயினும், பின் ஐந்துநாள் வயிற்றினும், பின் எட்டுநாள் கையினும், பின் எட்டுநாள் காலினுமாகக் கணித்துப் பிறந்த நாள்முதலாகப் பலன் சொல்லுக. தலையாகிற் பூலோகத்துக்கு இராசாவாம். வாயாகில் வித்துவானும். வயிறாகில் தனபதியாம். கையாகில் தனவீனனும். காலாகிற் சகலவிடங்களினும யாசிப்பான். எ-று. (௪௫)

அங்கச்சந்திரன்பலன்.

அண்டந்தொடைகணைக்கால்பதமுச்சிகண்வாய்செவிதோ
டொண்டையுரம்வயிறங்கச்சோமற்குத்தன்னுரைபற்றிக்
கண்டனரின்பநற்காலஞ்சுகநோய்கணிகைதுன்ப
முண்டியிடரின்பமோகையிலாபநோயுற்றிடுமே.

(இ-ள்.) அங்கச்சந்திரன் அறியும்படி: சென்மராசிமுதலாகப் பன்னிரண்டிடத்துக்கும், தலை தொடை கணைக்கால் கால் உச்சி கண் வாய் செவி தோள் கழுத்து மார்பு வயிறு; இவற்றிற்கு அடைவே இன்பம் நற்காலம் சுகம் நோய் ஸ்திரிசேர்வை துன்பம் உண்டி இடர் இன்பம் பிரியம் லாபம் நோய் என்றிப்படிப் பலாபலனறிவது. எ-று. (௪௬)

அங்கச்செவ்வாய்பலன்.

அரைதொடைகாலுச்சிகண்வாயிருதோள்வயிறுநெஞ்சு
நிரையுறுதீக்குணமஞ்சாறுமால்கண்முதலங்கங்கை
தரைமகனுண்முதற்சாவிடர்சேதந்தனப்பேறுநோய்
விரவுறுபோகமகப்பேறிலாபநோய்வெள்வளையே.

(இ-ள்.) அங்கச்செவ்வாய் அறியும்படி: செவ்வாய்நின்ற நாள்முதல் இருபத்தேழும் ௩, ௩, ௫, ௬, க, உ, க, ௪, உ, என்றமுறையே அரை தொடை கால் உச்சி கண் வாய் இருதோள் வயிறு நெஞ்சு இவ்வொன்பது அங்கமும் மரணம் இடர் பொருட்சேதம் பொருட்பேறு நோய் போகம் மகப்பேறு லாபம் நோய் என்று இவ்வொன்பது பலனும் அறிவது. எ-று. ( )

அங்கப்புதன்பலன்.

பதந்தொடையண்டம்வயிறுரந்தோண்முகமுச்சியென்ற
சிதங்கணநீவினைபாவிடநான்குமாறென்றடைவே
புதன்செறிநாண்முதற்போக்குநற்போகம்புதல்வர்பேறு
விதம்படுநோய்பகைவேதனைசாவுமிகவுநன்றே.

(இ-ள்.) அங்கப்புதன் அறியும்படி: புதன்நின்ற நாள்முதல் இருபத்தேழும் க, ௩, ௩, ௨, ௫, ௩, ௪, ௬, என்ற முறையே கால் தொடை தலை வயிறு மார்பு தோள் முகம் உச்சி இந்த எட்டங்கமும் யாத்திரை போகம் புத்திரப்பேறு நோய் பகை துன்பம் மரணம் நன்மை என்று இவ்வெட்டுப் பலனும் அறிவது. எ-று. (௫அ)

அங்கவியாழன்பலன்.

தலைதோள்கழுத்துரம்பாதம்வயிறுகண்டன்னினம்பொன்
நிலைசேரநான்குநான்கொன்றைந்துமாறைந்திரண்டினுறி
னுலைவில்பெரும்போகமுண்டிமிகுதியுலப்பிறிரு
நலமிகல்பீடையிலாபஞ்சுகமென்பர்நன்னுதலே.

(இ-ள்.) அங்கவியாழன் அறியும்படி: வியாழன் நின்ற நாள்முதல் இருபத்தேழும் ௪, ௪, க, ௫, ௬, ௫, உ, என்ற முறையே தலை தோள் கழுத்து மார்பு கால் வயிறு கண் இந்த எழு அங்கமும் போகம் உண்டி செல்வம் பகை பீடை இலாபம் சுகம் என்று இவ்வேழுபலனும் அறிவது. எ-று.

அங்கவெள்ளிபலன்.

உச்சிகண்வாய்கண்டந்தோளுரமுந்தியிலிங்கமூரு
மெச்சிடுங்கால்டிமேல்விரலெங்கணும்வெள்ளிதன்னை
வைச்சிடுமீனமுதலுறுமோரைவலமிடநா
ணிச்சயமாய்வலநன்றிடந்தீதுச்சிநிற்கைநன்றே.

(இ-ள்.) அங்கவெள்ளி அறியும்படி மீனமுதலாக வெள்ளிநின்ற இராசி நாள் வலநாளோ இடநாளோவெனவறிந்து மீனம் மேடம் இடபம் மிதுனம் கர்க்கடகம் சிங்கம் கன்னி துலாம் விருச்சிகம் தனு மகரம் கும்பம் என்ற முறையே உச்சி கண் வாய் கழுத்து தோள் மார்பு வயிறு இலிங்கம் தொடை புறங்கால் உள்ளங்கால் மேல்விரல் இந்தப் பன்னிரண்டங்கமும் எண்ணி வலநாளாயின் வலப்புறமும் இடநாளாயின் இடப்புறமுமாக நிச்சயித்து, இதில் வலப்புறம் நன்று இடப்புறந் தீது உச்சி மிக நன்று என்று இப் பன்னிரண்டுபலனும் அறிவது. எ-று. (௫ ௦)

அங்கச்சனிபலன்.

ஒன்றுநான்காறுநான்கோரைந்துமூன்றிரண்டுற்றிரண்டு
மென்றும்வாய்கைகாலிடக்கைவயிறுச்சிகண்ணிலிங்கம்
பொன்றுமரணம்வழிபோக்கிடர்திருப்போற்றுநன்மை
நன்றுதீதங்கச்சனிநின்றநாண்முதனுட்டிக்கொள்ளே.

(இ-ள்.) அங்கச்சனி அறியும்படி: சனி நின்ற நாள்முதல் இருபத்தேழும் க, ௪, ௬, ௪, ௫, ௩, உ, உ, என்ற முறையே வாய் வலக்கை கால் இடக்கை வயிறு உச்சி கண் இலிங்கம் இந்த எட்டங்கமும் அழிவு மரணம் வழிப்போக்கு இடர் செல்வம் நன்மை நன்று தீது என்று இவ்வெட்டுப் பலனும் அறிவது. எ-று. (௫க)

எச்சவினைப்படல முற்றிற்று.

ஆ செய்யுள் - ௫௩௫.

விதானமாலையுரை முற்றுப்பெற்றது.

பண்டிட் சிவஞான கந்தஸ்வாமி
மணிமந்திர ஔஷத
ஜோதிடக்கனிஷ்டர்,
பழைய வண்ணாரப்பேட்டை
சென்னை.

பண்டிட் சிவஞான கந்தஸ்வாமி
மணிமந்திர ஔஷத
செட்டிகளவர்கள்,
பழைய வண்ணாரப்பேட்டை
சென்னை.

பிழை திருத்தம்.

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
அ	உ	கஉ	இருத்தை	* இரித்தை
கரு	கக	சு	வாஸ்த்து	வாஸ்து
கசு	உஎ	உ	பன்முன்று	பன்மூன்று
உரு	உஉ	உ	சூழந்த	சூழ்ந்த
உச	உரு	ச	களை	கழை
உச	உசு	ரு	பாம்போ	பாம்பொ
ருக	எசு	க	சென்மநட்	சென்மத்திரயநட்
சக	அச	உ	நாள்முத	நாண்முத
சஉ	அசு	௬	களியா	கழியா
சரு	கக	உ	ரேளின்	ரேழின்
சஎ	க0சு	௬	முண்	மூண்
௬எ	க	ச	மகள்துலே	மகடுலே
சுசு	௬	உ	வைககிறை	வைக்கிறை
சுக	கக	அ	காலும்	காலுக்கும்
எச	எ	ச	முத்திர	முத்தர
எக	உஉ	உ	ஏன்றென	ஏன்றன
அ0	உரு	சு	விவாகத்துச்	விவாகத்துக்குச்
அச	௬	உ	பருதி	பரிதி
அ௬	உ	௯	குத்திரங்	குத்தரங்
கஎ	உக	சு	ஞய்	ஞய
கரு0	க	க	வாஸ்த்து	வாஸ்து
,,	ரு	சு	வாஸ்த்து	வாஸ்து
கருக	எ	எ	வாஸ்த்து	வாஸ்து
கருச	கஎ	௬	நாழீற்	நாளிற்
கசச	கஅ	உ	கொண்டல	கொண்டல்
கசச	கக	உ	சுளித்	சுழித்
,,	,,	சு	சுளித்	சுழித்

* இப்பிழைகள் வருமிடங்களினெல்லாம் இங்ஙனந் திருத்திக்கொள்க.

பண்டிட் சிவஞான கந்தஸ்வாமி
மணிமந்திர ஔஷத
செட்டிகளவர்கள்,
பழைய வண்ணாரப்பேட்டை
சென்னை.